# ஸ்ரீகலா SRIKALA

# விழி எழுதா மொழி...




ஸ்ரீகலா SRIKALA
விழி எழுதா மொழி...
VIZHI YEZHUTHA
MOZHI
ஸ்ரீ கலா


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS ONE CLICK DOWNLOADER


தமிழ் நாவல்கள் இலவசமாக பதிவிறக்க...
TAMIL NOVELS


Download

Contents

விழி : 1

விழி : 2

விழி : 3

விழி : 4

விழி : 5

விழி : 6

விழி : 7

விழி : 8

விழி : 9

விழி : 10

விழி : 11

விழி : 12

விழி : 13

விழி : 14

விழி : 15

விழி : 16

விழி : 17

விழி : 18

விழி : 19

விழி : 20

விழி : 21

PDF தமிழ் .com
WWW.PDFTAMIL.COM

## விழி : 1

காலையில் அந்த 'மீட்டிங் ஹாலில்' கூடியிருந்த பத்து பேருக்கும் பயத்தில் வியர்த்து வழிந்தது... அனைவரும் சொல்லி வைத்தார் போன்று ஒன்று போல் கைக்குட்டையை எடுத்து தங்களது நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்து கொண்டனர்... அவர்களில் இருந்த ஒருவனுக்குக் கைக்குட்டை இல்லாததால் தனது கழுத்தில் கட்டியிருந்த டையை எடுத்து துடைத்துக் கொண்டான்... இந்த நிறுவனத்தில் வேலை பார்ப்பதற்கு வேறு எங்கேயாவது போய்க் கழுதை மேய்த்துச் சம்பாதிக்கலாம் என்று அவன் உள்ளுக்குள் நொந்து நூலாகி போனான்...

'கழுதை மேய்ச்சா உன்னால் இப்படி விலையுயர்ந்த காரில் போக முடியுமா...? இந்தக் காலத்தில் உனக்கு யார் இப்படி அள்ளி அள்ளி சம்பளம் கொடுக்கிறாங்க...' என்று அவனது மனசாட்சி அவனை அடக்கியது...

அவனுக்கு இருந்த பல 'கமிண்ட்மென்ட்'களை நினைத்து பார்த்தவன் அடுத்த நொடி எரிச்சலை தூக்கி எறிந்து விட்டு அமைதியானான்...

அந்நேரம் 'டக் டக் டக்' என்ற ஹைஹீல்ஸின் ஒலி அந்த இடத்தை நிறைத்தது... அந்த ஒலியே சொல்லாமல் சொல்லியது நிறுவனத்தின் தலைவி பவித்ரா சத்யமூர்த்தியின் வருகையை...

இராணியின் கம்பீரத்துடன் அங்கு வந்தவள் முகத்தில் அப்படியொரு அடக்கப்பட்ட ஆத்திரம் தெரிந்தது... அதில் அவளது வெண்ணிற முகம் செக்கச்செவேல் என்று சிவந்து காணப்பட்டது... கையிலிருந்த அலைப்பேசியைச் சுழற்றியபடி அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தவள் மற்றவர்களை அமரும்படி கையால் சைகை செய்தாள்...

அவளின் ஒற்றைக் கையசைவிற்கு அனைவரும் நொடியில் கட்டுப்பட்டு அடங்கி அமர்ந்தனர்... எல்லோரும் அமர்ந்ததும் அவள் தனது கணீரென்ற குரலில் பேச ஆரம்பித்தாள்...

PDF தமிழ் .com

"இந்த டெண்டர் நமக்கு எத்தனை முக்கியமானதுன்னு உங்களுக்குத் தெரியும்... இதுக்கு நாம கோட் பண்ணின அமௌண்டும் மிகக் குறைவு... அப்படி இருந்தும் இது கை மாறி போயிருக்குதுன்னா..." அவர்கள் எல்லோரது முகத்திலும் அழுத்தமான பார்வையைச் செலுத்தியவள்,

"இதற்கு யார் காரணமா இருந்தாலும் அவங்க என் தண்டனையில் இருந்து தப்ப முடியாது..." என்றாள் மிகவும் கடினமான குரலில்...

அதில் எல்லோருக்கும் தொண்டை உலர்ந்து போனது... பயத்தில் எச்சிலை விழுங்கி கொண்டு அவளது முகத்தினைப் பாவமாய்ப் பார்த்தனர்...

"இது இப்போன்னு இல்லை... எப்பவுமே நடக்கிறது... இனியும் இப்படி விட்டு கொடுத்துட்டு என்னால் இருக்க முடியாது... இப்போ நீங்க போகலாம்... இதற்கான விசாரணைக்கு நீங்க ஒத்துழைக்க வேண்டும்..." என்றவள் தனது கையை வாயிலை நோக்கி காண்பிக்க...

அடுத்த நொடி எல்லோரும் மளமளவென்று எழுந்து வெளியில் சென்றனர்... அருகில் இருந்த தனது சித்தப்பா மகள் பல்லவியிடம்,

"இந்த விசாரணைக்கான ஏற்பாடை நீ கவனி..." என்றபடி அவள் தனது அறைக்குச் சென்றுவிட்டாள்...

பல்லவி இப்போது தான் படிப்பை முடித்து விட்டுச் சகோதரியிடம் வேலையைக் கற்றுக் கொள்ள வந்திருக்கிறாள்... குடும்பத்தில் ஆண் மக்கள் யாருமில்லை... அதனால் பெண் பிள்ளைகள் அவர்கள் இருவரும் தான் தொழிலை பார்த்துக் கொள்ள வேண்டிய கட்டாயத்தில் இருந்தனர்...

பவித்ரா அவளது இருபதாவது வயதில் கல்லூரி படிப்பு முடித்துக் கொண்டு தொழிலில் முழுவீச்சில் இறங்கி விட்டாள்... தாத்தா திருவேங்கடத்தின் வழிகாட்டுதலில் இந்த இருபத்தியாறு வயதில் அவள் தொழிலில்

சாதித்தவைகளை அளவிட முடியாது... ஆணுக்கு ஆணாகக் களத்தில் இறங்கி வெற்றி ஒன்றை மட்டுமே தனது குறிக்கோளாக அவள் செயல்பட்டு வந்தாள்...

இவளை போன்று பல்லவி கிடையாது... வாழ்க்கையை அனுபவித்து வாழ வேண்டும் என்கிற கொள்கை உடையவள்... அவளுக்கு இருக்கும் வண்ண கனவுகள் ஏராளம்... அவை எல்லாவற்றையும் நனவாக்கிட விடாமல் அவளது தாத்தா மற்றும் சகோதரி இருவரும் அவளை நிறுவனத்திற்கு அழைத்து வந்து சிறை வைத்து விட்டனர்...

அறைக்குள் வந்த பவித்ராவிற்கு இன்னமும் மனம் ஆறவில்லை... அவளுக்கு நன்கு தெரியும் இது அவனது வேலை தான் என்று... அவனைத் தவிர வேறு யாராலும் அவளை வீழ்த்த முடியாது... அவள் கோபத்தில் பற்களை நறநறவென்று கடித்தாள்... அவனை மட்டும் அவளால் அசைக்க முடியவில்லையே என்கிற இயலாத கோபத்தில் விளைந்த விளைவு இது...

அதே நேரத்தில் அந்த அவனாகப்பட்ட விக்ரம் அப்படி ஒரு சந்தோசத்தில் இருந்தான்... அரசாங்க ஒப்பந்தம் கிடைத்த மகிழ்ச்சி அவனது முகத்தில் அப்பட்டமாய்த் தெரிந்தது... தன்னிடம் வேலை செய்யும் ஊழியர்களுக்கு ஒரு மாத சம்பளத்தை ஊக்க தொகையாகக் கொடுக்கச் சொல்லி உத்தரவிட்டவன் அடுத்த நொடி தனது எதிரிக்கு அழைத்தான்...

விக்ரமின் எண் தனது அலைப்பேசியில் ஒளிர்ந்ததைக் கண்ட பவித்ராவிற்கு அப்படி ஒரு எரிச்சல் வந்தது...

'எரிகிற நெருப்பில் எண்ணெய் வார்ப்பதற்காக வேணும்ன்னே ஃபோன் பண்ணுகிறான் கிராதகன்...' என்று பல்லை கடித்தாலும் அழைப்பை எடுத்து பேச தவறவில்லை அவள்...

"எஸ்... பவித்ரா சத்யமூர்த்தி ஹியர்..." என்று பிசிறில்லாது கணீரென்று ஒலித்த அவளது குரலை கேட்டதும் விக்ரமிற்குச் சப்பென்றாகி விட்டது...

PDF தமிழ் .com

அவள் கோபத்தில் தாம்தூம் என்று கத்துவாள்... அவளது கோபத்தில் தான் கொஞ்சம் குளிர் காயலாம் என்று அவன் நினைத்தான்... அவனது நினைவில் அவள் மண்ணை அள்ளி போட்டாள்... அவள் எப்போதுமே அப்படித்தான்...

"என்ன சண்டிராணி... டெண்டர் கை விட்டுப் போன கோபத்தில் இருக்கிறியா...?" என்று சீண்டலாக அவனது குரல் ஒலித்தது...

அதிலிருந்த நக்கலை புரிந்து கொண்டவளாய் பவித்ரா, "தொழில் என்று இருந்தால் ஏற்ற இறக்கம் வருவது சகஜம் தானே..." என்றாள் தனது கெத்தை சிறிதும் விட்டு கொடுக்காது...

"நீ சொல்வது போல் தொழிலில் எல்லாமே சகஜம் தான்... ஆனால் என்னுடைய கொட்டேசனை விடக் குறைவான தொகையைக் குறித்த உன் டெண்டர் தேர்ந்தெடுக்கப் படாமல் என்னுடையதை எப்படித் தேர்ந்து எடுத்தாங்கன்னு நீ கொஞ்சமாவது யோசிச்சு பார்த்தியா...?"

விக்ரமின் எகத்தாள குரலில் பவித்ரவின் புருவங்கள் இரண்டும் யோசனையாகச் சுருங்கியது...

"நீ திருடின என்னோட கொட்டேசன் பொய்யானது... உண்மையானதில் அதை விடக் குறைவாகப் போட்டிருந்தேன்... கடைசியில் நான் நினைத்த மாதிரியே நடந்துவிட்டது..." என்றான் அவன் நக்கலாய்...

"டேய்... திருடி அது இதுன்னு சொன்ன உன் பல்லை உடைப்பேன்டா..." என்று அவள் மறுமுனையில் கத்தினாள்...

அவளது பொறுமையை அவன் மிகவும் சோதித்தான்...

"ஆமாம்டி... நீ பல்லை உடைக்கும் வரைக்கும் நான் வாயை திறந்து ஆவென்று காட்டி கொண்டு இருப்பேனாக்கும்... உடைக்க வரும் உன் கையை உடைத்து விடுவேன்டி... யார் கிட்ட பேசிக்கிட்டு இருக்கேன்னு தெரிஞ்சு தான் பேசுறியா...? விக்ரம்டி... தி கிரேட் விக்ரம்..." என்று

பெருமையாகத் தனது பெயரை கூறியவனைக் கண்டு நக்கலாய் சிரித்தவள்,

"பெயரிலேயே ரம் வச்சியிருக்கிறதால் எப்போதும் குடிகாரன் போல் உளறும் உன் உளறல் பேச்சுக்களைக் கேட்க எனக்கு நேரமில்லை... நீ ஃபோனை வைடா..." என்றாள் அவள் தெனாவெட்டாக...

'தி கிரேட் விக்ரமாம்... அப்போ நான் யாராக்கும்...? நானும் தி கிரேட் பவித்ரா தான்டா முட்டாள்...' மனதிற்குள் அவனிடம் கோபமாய்ப் பொங்கினாள்...

"ஒரு திருடிக்கு இவ்வளவு ஆணவம் ஆகாதுடி... இனி என் தொழிலில் குறுக்கீடு செய்த, உன்னை ஆள் அடையாளம் தெரியாமல் அழித்து விடுவேன்..." என்றான் மிரட்டலாக...

"நீ அப்படி என்னை அழிக்கும் வரை என் கை என்ன பூப்பறித்துக் கொண்டா இருக்கும்... அதற்கு முன் நான் உன்னை அழித்து விடுவேன்டா..."

"பெண் உனக்குப் பூப்பறிக்கும் வேலை தான் சரி... உனக்கு எதற்குத் தேவையில்லாத இந்த வேலை... குடும்பப் பெண்ணா கல்யாணம் பண்ணிக்கிட்டு உன் தொழிலை உன் கணவனிடம் கொடுத்து பார்க்க சொல்லிவிட்டு நீ அடங்கி வீட்டில் உட்கார்ந்து உன் புள்ள குட்டியை வளர்த்துக்கிட்டு இரு... அதை விட்டு விட்டு உனக்கு எதுக்குடி இந்தத் தொழில் எல்லாம்...?"

அவன் அப்படிப் பேசியதில் அவளுக்கு அப்படியொரு கோபம் வந்தது...

"விக்ரம்... திஸ் இஸ் தி லிமிட்... நீ லிமிட் தாண்டி பேசற..." என்றவளின் குரல் கோபத்தில் சத்தமாய் அலறியது...

"எனக்கு எல்லை வகுக்க நீ யாரடி...? இந்த விக்ரம் காற்றைப் போன்றவன்... யாருக்கும் கட்டுப்படாதவன்... இனி இன்னொரு முறை என்னிடம் மோதி பார்... அதற்குப் பிறகு தெரியும் சங்கதி..." என்று கோபத்தோடு அவன் அழைப்பை துண்டித்தான்...

PDF தமிழ் .com

விக்ரம் பேசி முடித்ததும் அலைப்பேசியைத் தூக்கி மேசை மீது விட்டெறிந்தவளுக்கு ஆத்திரம் வந்தது... ஆனாலும் ஆத்திரத்தை அடக்கியபடி அடுத்து தான் செய்ய வேண்டிய வேலைகளை யோசிக்க ஆரம்பித்தாள்... இது ஆத்திரத்தை காட்ட வேண்டிய தருணம் அல்ல... வெற்றி வாய்ப்பை தட்டி பறிக்கும் தருணம்... அதனால் சாணக்கியத்தனமாக யோசித்தாள்...

அன்று ஞாயிறு என்பதால் கொஞ்சம் ரிலாக்சாக வீட்டில் இருந்தாள் பவித்ரா... அவளது பாட்டி பர்வதம் அவளை அழைத்தார்...

"பவிம்மா... தலைக்கு எண்ணெய் தேய்த்து விடுறேன் வாம்மா..."

"இதோ பாட்டி..." என்று உடனே அவரது காலடியில் வந்தமர்ந்தாள்...

அவள் கையில் 'எக்னாமிக் டைம்ஸ்' பத்திரிக்கை இருந்தது... அதைப் பிடுங்கி மூடி தள்ளி வைத்த பர்வதம்,

"இன்னைக்காவது எங்க கூடப் பேசிக்கிட்டு இருக்கலாமே பவி..."

எண்ணெய் தேய்ப்பதற்கு வாகா தலையை அவரிடம் நீட்டியவள், "சொல்லுங்க பாட்டி..."

"எப்போ கல்யாணம் பண்ணிக்கப் போறடா...?"

"ப்ச்... போங்க பாட்டி... இப்போ கல்யாணத்துக்கு என்ன அவசரம்...?"

"என்ன அவசரமா...? இப்பவே இருபத்தியாறு வயசாகிச்சு... உன் வயசுல எனக்கு இரண்டு குழந்தைகள் வந்து அவங்களுக்கும் பத்து வயசாகியாச்சு..."

"அது அந்தக் காலம் பாட்டி..."

"எந்தக் காலமானாலும் பெண் பெண் தானேம்மா..." என்று அவரது குரலில் ஆதங்கம் இருந்தது...

"நல்லா சொல்லுங்க அத்தை... அப்பவாவது அவளது புத்தியில் உரைக்கட்டும்..." என்றபடி அங்கே வந்தார் அவளது அன்னை கல்பனா...

"அதானே... இவள் எப்போ கல்யாணம் பண்றது...? எனக்கு எப்போ கல்யாணம் நடக்கிறது...? இப்படியே போனால் நான் காலம் முழுவதும் ஔவையாராகத் தான் இருக்கணும்..." போலியாய் வருத்தப்பட்டாள் பல்லவி...

"அடி கழுதை... மூத்தவள் இருக்கும் போது உனக்குக் கல்யாணம் கேட்கிறதா...?" தனது மகளைச் சத்தம் போட்டார் நர்மதா... பல்லவியின் அன்னை...

"யார் என் பேத்தியை என்ன சொல்றது...?" என்று கேட்டபடி அங்கே வந்தார் தாத்தா திருவேங்கடம்...

உடன் இளையமகன் விஜயமூர்த்தி வந்தார்... மூத்தமகன் சத்யமூர்த்தி இறந்துவிட்டார்... அவர் தான் தனது தந்தையைப் போன்று திறமையானவர்... அவரின் திறமை அவரது தம்பிக்குக் கிடையாது... அதனால் தான் திருவேங்கடம் தொழிலை தனது இளையமகனிடம் கொடுக்காது மூத்தமகனை போன்று திறமையாக இருந்த பேத்தி பவித்ராவிடம் கொடுத்தார்... அவரது நம்பிக்கையை அவளும் இதுவரை பொய்த்துப் போகச் செய்தது இல்லை...

அடுத்த நொடி மருமகள்கள் இருவரும் பவ்யத்துடன் எழுந்து நின்றனர்...

கணவனின் பேச்சிற்குப் பர்வதம் பயப்படவில்லை... அதனால் தைரியமாக அவரிடம்,

"நான் தான் பவியைக் கல்யாணம் பண்ண சொல்லி கேட்டுட்டு இருக்கேன்..."

"அவளுக்குக் கல்யாணம் பண்ணாமல் வேறு யாருக்கு பண்ண போறோம்..." என்ற தாத்தாவை பார்த்துப் பல்லவி,

"அப்போ நானு தாத்தா..." என்று தனது வலக்கையைத் தூக்க...

PDF தமிழ் .com

சின்னப் பேத்தியை கண்டு சிரித்தபடி அவர், "முதலில் பவி... அடுத்து நீ..." என்றவர்,

"பெண் என்பவள் அடுப்படியில் கிடந்து அவஸ்தைப்பட்டது எல்லாம் அந்தக் காலம்... இப்போ எல்லாம் காலம் மாறியாச்சு... அதற்கு ஏத்த மாதிரி நாமளும் மாறிக்கணும்... என் பேத்திக்கு எப்போ கல்யாணம் பண்ணணும்ன்னு எனக்குத் தெரியும்..." என்று அமர்த்தலான குரலில் கூறியவர் பேத்தியிடம்,

"பவி... அந்த வர்மா ரொம்பத் தொல்லை கொடுக்கிறானோ..."

"ஆமாம் தாத்தா... அவன் ஒரு பக்கம் தொல்லைன்னா, இந்த விக்ரம் மறுபக்கம் தொல்லை கொடுக்கிறான்... இவங்க ரெண்டு பேரையும் சமாளிக்கிறதுக்குள்ள எனக்குப் போதும் போதும்ன்னு இருக்கு..." என்றாள் அவள் சலிப்பாக...

"என்ன இருந்தாலும் விக்ரம் நம்ம ஊர்க்காரன்... ஆனால் வெளியூர்க்காரன் வர்மாவை உங்க போட்டிக்கு இடையில் உள்ளே விட்டுராதீங்க... கவனம்... ஜாக்கிரதை..." என்று எச்சரித்தார் திருவேங்கடம்...

அதே நேரம் இராமநாதனும் தனது பேரன் விக்ரமிடம் அதையே தான் சொன்னார்... அதைக் கவனமாகக் கேட்டுக் கொண்ட விக்ரம்,

"அவனை நான் பார்த்துக்கிறேன் தாத்தா..."

தான் சொன்னதைக் கவனமாகக் கேட்டுக் கொண்ட பேரனை பெருமையாகப் பார்த்தார் இராமநாதன்... அவரது மகன் போல் இல்லாது பேரன் தன்னைக் கொண்டு பிறந்ததில் அவருக்கு அப்படி ஒரு பெருமை... ஏனெனில் அவரது மகன் விஸ்வநாதன் இன்னமும் பொறுப்பு வராமல் கேளிக்கை விடுதி, சூதாட்டம் என்று பணக்கார விளையாட்டுக்களை நாடி விளையாடி கொண்டிருக்க,

இளையவனான விக்ரம் மட்டும் பணத்தைத் தேடி ஓடி ஓடி உழைத்துக் கொண்டிருந்தான்...

"விக்ரம்... உனக்கு முப்பத்திரண்டு வயசாகிச்சு... எப்போப்பா கல்யாணம் பண்ணிக்கப் போகிற... உன் கல்யாணத்தைப் பார்த்துட்டா நான் நிம்மதியா போய்ச் சேர்ந்திருவேன்..."

"எனக்கு மேரேஜில் இன்ரெஸ்ட் இல்லை தாத்தா... என் வாழ்க்கையை ஒரு பெண்ணின் கையில் அடகு வைக்கணுமா...? அது என்னால் முடியாது தாத்தா..." என்று நிர்தாட்சண்யமாய் மறுத்தான் பேரன்...

"அப்படி வாழ்வதிலும் ஒரு சுகம் இருக்கிறதுடா பேராண்டி..." மறைந்து போன தனது காதல் மனைவியை நினைத்து அவரது விழிகள் கசிந்துருகியது...

"எனக்குப் பிடிக்கலை தாத்தா..." என்று மறுப்பாய் கூறி விட்டு எழுந்து சென்று விட்டான் அவன்...

விக்ரம் இன்று என்றில்லை... கல்லூரி படிக்கும் காலத்தில் இருந்து அவன் அப்படித்தான்... அவனிடம் காதல் சொன்ன பெண்களை வெறுப்பேற்றியே ஓட ஓட விரட்டி இருக்கிறான்... எந்தப் பெண்ணைக் கண்டாலும் அலட்சியம்... பெண் என்பவள் ஆணிற்குக் கீழே என்கிற அகம்பாவம் கொண்டவன்... பெண் ஆணின் அடிமை என்று எண்ணும் ஆணாதிக்க மனோபாவம் கொண்டவன் அவன்...

அதனால் தான் அவனுக்கு நிகராய் திறமையாய் தொழில் நடத்தும் பவித்ராவை அவனுக்குப் பிடிக்காமல் போனது...

"அண்ணா... நீ சாமியாராய் போக வேண்டியவன்..." என்று அவனது தம்பி, தங்கை கிண்டலடிக்கும் அளவுக்கு அவன் பெண்களை வெறுப்பவன்...

அதே போல் கோபத்தில் அவன் ஒரு துர்வாச முனிவன்... அதனால் எல்லோருமே அவனிடம் சற்று ஒதுங்கி தான் இருப்பார்கள்...

PDF தமிழ் .com

அந்த ஞாயிறு பொழுதிலும் வீட்டில் சோம்பி இருக்காது தனது நிறுவனத்திற்கு வந்திருந்தான்... வந்தவன் தான் தேடிய கோப்பு கிடைக்காது தனது தம்பியை அலைப்பேசியில் அழைத்தான்...

"வினோ... கேகே இன்ட்ஸ்ட்ரி அக்ரீமென்ட் ஃபைல் எங்கே வச்சியிருக்க...? அதைப் பத்திரமா பாதுகாக்க சொல்லி உன் கிட்ட தானே ஒப்படைச்சேன்..."

"அண்ணா... நான் வெளியில் இருக்கேன்... இப்போதைக்கு என்னால் வர முடியாது..." என்று கத்திய வினோத்தின் குரலை விட அங்குப் பின்னணியில் ஒலித்த இசை சத்தமாக இருந்தது...

"காலையில் டிஸ்கோதெ போயாச்சா...? நான் அங்குக் கிளம்பி வந்தேன் வையி உன் உடம்பிலுள்ள அத்தனை எலும்புகளையும் ஒண்ணு விடாம நொறுக்கி விடுவேன்டா ராஸ்கல்... முதல்ல நீ கிளம்பி கம்பெனிக்கு வா... நாளைக்கு நாம இந்த அக்ரிமென்ட்டில் சைன் பண்ணணும்..." என்று அவன் அலைப்பேசியை அணைத்தான்...

"இவனும் லைஃபை என்ஜாய் பண்ண மாட்டான்... நம்மளையும் என்ஜாய் பண்ண விட மாட்டான்..." என்று முணுமுணுத்தபடி வினோத் அங்கிருந்து கிளம்பினான்...

இல்லை என்றால் தாத்தாவிடம் திட்டு வாங்க வேண்டி வருமே... பிறகு அவர் தனது சொத்தில் பங்கு கொடுக்க மாட்டேன் என்று சொல்லிவிட்டால் அதனால் அவன் பம்மி போனான்... இல்லை என்றால் வினோத் நடந்து கொள்ளும் விதமே வேறு...

நிறுவனத்திற்குப் போய் அண்ணன் கேட்ட கோப்பை தேடி எடுத்து கொடுத்து விட்டு அலுப்புடன் வீடு வந்து சேர்ந்தான் வினோத்...

"என்னடா கண்ணா... களைச்சு போய் வந்திருக்க..." என்று கேட்டபடி அவனது அருகில் அமர்ந்தார் ரேவதி, விக்ரமின் அன்னை...

"சித்தி... இந்த அண்ணா என்னை ரொம்ப வேலை வாங்கிறான்..." என்று சலித்தவன் அவரது மடியில் தலை வைத்து நன்றாகக் கால் நீட்டி சோபாவில் படுத்தான்...

"ஆமாம்டா... ஒத்தை ஆளா அவன் கிடந்து அவஸ்தைப்படுறான்... உங்க அப்பா கொஞ்சமும் தொழிலை பத்தி கவலைப்படுறது இல்லை... நீயும் அவரை மாதிரியே வந்து பிறந்திருக்க... பாவம் விக்கி, அவன் தனியே என்ன பண்ணுவான்..." மகனை கடிந்தபடி வந்தார் அவனது அன்னை சௌந்தர்யா...

சௌந்தர்யா, ரேவதி இருவரும் உடன் பிறந்த சகோதரிகள்... சௌந்தர்யாவிற்குத் திருமணமாகி வெகு வருடங்கள் குழந்தைகள் இல்லாததால் விஸ்வநாதனுக்கு மறுமணம் செய்விக்க நினைத்த போது சௌந்தர்யாவின் வீட்டினர் தங்களது இரண்டாவது மகளை மருமகனுக்கு இரண்டாம் தாரமாகத் தர சம்மதம் தெரிவித்தனர்... ரேவதியும் அக்காவிற்காக அந்தத் திருமணத்திற்குச் சம்மதித்தார்... அவர்களது திருமணம் முடிந்து பத்தாவது மாதத்தில் பிறந்தவன் தான் விக்ரம்... அதன் பிறகு பல வருடங்கள் கழித்துச் சௌந்தர்யாவிற்கு வினோத், மதுமதி பிறந்தார்கள்... இரு சகோதரிகளும் ஒற்றுமையுடன் இருப்பதால் குடும்பம் சண்டை சச்சரவு இல்லாது சுமூகமாக ஓடி கொண்டிருக்கிறது...

"சித்தி..." என்று கொஞ்சிய சின்னவனைக் கண்டு,

"விடுங்கக்கா... அவனாவது செல்லமாய் இருந்துட்டு போகட்டுமே..." என்றார் ரேவதி...

சின்ன வயதில் இருந்து பெரிய மனித தோரணையுடன் ஒதுங்கி கொண்ட தனது மகன் விக்ரமை காட்டிலும் எப்போதும் தனது புடவை முந்தானையைச் சுற்றிக் கொண்டு வரும் வினோத்தை ரேவதிக்கு மிகவும் பிடிக்கும்...

"என்னமோ போ ரதி... நீ செல்லம் கொடுத்து கொடுத்து தான் அவன் ரொம்பவும் கெட்டுப் போகிறான்... கொஞ்சம்

PDF தமிழ் .com

கூடப் பொறுப்பு இல்லை..."

"சித்தி... பசிக்குது சாப்பாடு போடுங்க..." என்று கூறி அவன் அன்னையின் திட்டில் இருந்து தப்பிக்க நினைத்தான்...

அவனது தந்திரம் ரேவதியிடம் வேலை செய்தது...

"நீ வா கண்ணா..." என்றபடி மகனை அழைத்துக் கொண்டு அவர் சென்றார்...

தன்னிடம் இருந்து தப்பித்துச் செல்லும் மகனை முறைத்து பார்த்தார் சௌந்தர்யா... அதை மட்டுமே அவரால் செய்ய முடிந்தது... கணவரை போன்று உல்லாச பேர்வழியாக அவன் இருப்பதைக் கண்டு அவருக்கு வருத்தமாக இருந்தது...

மறுநாள் தொழில் ஒப்பந்தத்திற்காகத் தயாராக இருந்த விக்ரமிற்கு மிகப் பெரிய அதிர்ச்சி காத்திருந்தது... ஆம், அந்த ஒப்பந்தத்தைப் பவித்ரா கைப்பற்றி இருந்தாள்... இந்த முறை அவளே அவனை அழைத்தாள்...

"என்ன விக்ரம்... ரொம்பக் கவலையா இருக்கிற மாதிரியிருக்கு...?"

"எல்லாம் உன் வேலை தான்னு எனக்குத் தெரியும்டி..." என்று பல்லை கடித்தான் அவன்...

"அதை எப்படிச் செய்தேன்னு உனக்குத் தெரியாது இல்லையா...?" என்று நிறுத்தியவள்,

"நீ ஒரு பெண்ணை வைத்து அந்த எம்டியை வளைச்சு போட்ட... அதே மாதிரி தான் நானும் ஒரு பொண்ணை வச்சு அந்தாளை வளைச்சுப் போட்டேன்... ஆணாய் நீ அவனுக்கு ஒரு நடிகையை ஏற்பாடு பண்ணி கொடுத்த... ஆனால் நான் ஒரு பொண்ணா அவனோட சென்ட்டிமென்ட்டை டச் பண்ணினேன்... அவன் அப்படியே தடாலடியாய் கவுந்துட்டான்..."

"அப்படி என்னத்தைக் காட்டி அவனை டச் பண்ணின...?" ஆத்திரத்தில் அறிவிழந்து விக்ரம் கொதிக்க...

"விக்ரம்... நாக்கை அடக்கி பேசு... அவன் பெண்ணிற்கு என் தூரத்துச் சொந்தத்தில் மணமகன் பார்த்துக் கொடுத்தேன்... அவன் எனக்கு அண்ணன் முறை வேண்டும்... கொழுத்த பணக்காரன்... அவன் மாப்பிள்ளையாக வருவது அவருக்கு என்ன கசக்கவா செய்யும்... உடனே சம்மதம் தெரிவித்து விட்டார்... இப்போது நாங்க இருவரும் உறவினர்கள்... அப்போ அவர் யாருக்கு இந்த ஒப்பந்தத்தைக் கொடுப்பார்...?" என்று நக்கலாகக் கேள்வி கேட்டவளை கண்டு ஆத்திரத்தில் அவன் அலைப்பேசியைத் துண்டித்தான்...

போயும் போயும் ஒரு பெண்ணிடம் தான் தோற்பதா...? என்று அவனுக்கு ஆத்திரமாக வந்தது... ஆனாலும் அவன் அவளிடம் தோற்றுக் கொண்டிருப்பது உண்மையே...

அதற்கு அடுத்த வந்த நாட்களில் இருவருக்கும் இடையில் ஏற்பட்ட தொழில் போட்டியில் நன்றாகக் குளிர் காய்ந்தது அந்த வர்மா தான்... அவர்கள் இருவரது தொழிலையும் மாற்றி மாற்றி அவன் வென்று கொண்டிருந்தான்...

இதைக் கேள்வியுற்ற தாத்தாக்கள் இருவரும் கவலையுற்றனர்... இறுதியில் விக்ரமின் தாத்தா இராமநாதன் தனது இத்தனை வருட பகையை மறந்து பவித்ராவின் வீட்டிற்குத் தூது அனுப்பினார்... அவரது தூது கண்டு திருவேங்கடத்திற்கு வியப்பாக இருந்த போதும் தேர்ந்த தொழிலதிபனாய்ப் புத்திசாலித்தனமாக அதைப் பயன்படுத்திக் கொண்டார்...

இருவீட்டு ஆட்களும் அவர்களது சொந்த ஊர் திருவிழாவிற்குச் சென்ற போது விக்ரமின் வீட்டில் சந்தித்துக் கொண்டனர்...

ஆடம்பரமான அந்த மாளிகையில் குண்டூசி விழுந்தாலும் சத்தம் கேட்கும் அளவுக்கு அப்படி ஒரு அமைதி நிலவியது அங்கே... அங்கே கூடியிருந்த இரு வீட்டாரின் முகங்களில் அத்தனை இறுக்கம்... ஒருவருக்கு ஒருவர் நட்பாகப் பார்த்துச் சிரிக்கக் கூடத் தோன்றாதவர்களாய் அவர்கள் தங்களுக்குள் இறுகி போய் அமர்ந்திருந்தனர்... ஏனெனில்

PDF தமிழ் .com

அவர்களது குடும்பப் பகை அப்படிப்பட்டது... தாத்தன், முப்பாட்டன் காலத்தில் இருந்து பரம்பரையாகத் தொடரும் பகை அது...

முதலில் இராமநாதன் தனது தொண்டையைச் செருமி கொண்டு பேச ஆரம்பித்தார்...

"இப்போ இருக்கிற நிலைமை பத்தி உங்களுக்கே தெரியும்... நமக்கு இடையில் எப்போதும் தொழில் போட்டி இருப்பது சகஜம் தான்... அதில் ஒருவரை ஒருவர் முந்தி கொண்டு வெற்றி பெறணும்ன்னு நாம போட்டி போட்டுக் கொண்டு இருக்கிறோம்... இத்தனை நாள் அது தான் நடந்து வந்து கொண்டிருந்தது... ஆனால் இப்போது..." என்றபடி கவலை தோய்ந்த முகத்துடன் அனைவரையும் பார்த்தவர்,

"மூன்றாவது ஒரு ஆள் நமக்கு இடையில் போட்டிக்கு வருவதை நான் விரும்பவில்லை... முதலாவதோ, இரண்டாவதோ அது நம் குடும்பத்து ஆட்கள் மட்டுமே இருக்க வேண்டும்... அடுத்தவன் இடையில் வர கூடாது... வர விடவும் கூடாது... இதைத் தவிர்க்க நாம் என்ன செய்யலாம்ன்னு நீங்களே சொல்லுங்க..."

"அவனைப் போட்டு தள்ளி விடலாம்..." என்று விஸ்வநாதன் ஆவேசமாகக் குரல் கொடுத்தார்...

"அவனைப் போட்டுத் தள்ளினால் இன்னொருவன் அந்த இடத்திற்கு வருவான்..." அதுவரை வாய்த் திறக்காத திருவேங்கடம் வாய்த் திறந்தார்...

"இதுக்கு என்ன தான் வழி...?" என்று விஜயமூர்த்தித் தயக்கத்துடன் கேட்டார்...

அப்போது மீண்டும் இராமநாதன் வாய்த் திறந்தார்...

"நான் சொல்வதை ஏற்றுக் கொள்வதாக இருந்தால் நான் ஒரு ஆலோசனை சொல்கிறேன்..."

அங்கிருந்த அனைவரும் அவரை ஆவலுடனும், எதிர்பார்ப்புடனும் பார்த்தனர்...

"விக்ரமுக்கும், பவித்ராவுக்கும் திருமணம் செய்து வைத்து நம் இரு தொழில்களையும் இணைத்து விடலாம்... அதன் பின் வேறு எவன் நமக்கு இடையில் போட்டிக்கு வருவான் என்று பார்க்கிறேன்..." என்று பெருமையோடு மீசையை நீவி விட்டுக் கொண்டார் அவர்...

"இது தான் சரின்னு எனக்கும் தோணுது..."

திருவேங்கடமும் அதை ஆமோதித்ததைக் கண்டு எல்லோரும் அதிசயமாக அவரைப் பார்த்தனர்... பின்னே கிழக்கும் மேற்கும் ஒத்து போவது என்பது நடவாத காரியம் அல்லவா...

இரு வீட்டு பெண்களின் முகமும் இருண்டு போய்ப் பேயறைந்தது போலானது... திருமணம் என்பது தொழிலுக்காக மட்டும் நடத்தப்படுவது இல்லையே... இரு வீட்டார் உறவுகளைப் பலப்படுத்தவும், இணக்க நிலையை ஏற்படுத்துவதற்கும் நடத்தப்படுவது...

இங்கே உறவுகள் பலப்படப் போவதும் இல்லை... இணக்க நிலை தோன்ற போவதும் இல்லை... மாறாகத் தொழில் மட்டுமே ஜரூராக நடக்கப் போகிறது...

மகன் போன்று மருமகன் வேண்டும் என்று பவித்ரா வீட்டுப் பெண்கள் நினைத்தனர்... மகள் போன்று மருமகள் வேண்டும் என்று விக்ரமின் வீட்டுப் பெண்கள் நினைத்தனர்... ஆனால் அவர்கள் நினைப்பதற்கு மாறாகத் தான் அவ்விருவரும் தங்களிடம் நடந்து கொள்வார்கள் என்பது அவர்களுக்கு நன்கு தெரியும்... இதை ஆண்களிடம் சொல்லி திட்டு வாங்க முடியாதே... அதனால் மௌனமாய் ஒதுங்கி நின்று வேடிக்கை பார்த்தனர்... தொழிலில் ஆண்கள் பெண்கள் பேச்சை ஒரு போதும் கேட்பதில்லை...

இந்த விசயத்தை விக்ரமிடமும், பவித்ராவிடமும் சொன்ன போது இருவருமே இந்த முடிவை ஒரே மூச்சாக எதிர்த்தனர்...

PDF தமிழ் .com

"என் மீது நம்பிக்கை இல்லையா தாத்தா... நான் யாருக்கும் தொழிலை விட்டு கொடுக்க மாட்டேன்... அது அந்தப் பவித்ராவாக இருந்தாலும் சரி, வர்மாவாக இருந்தாலும் சரி... யாரும் என்னை வெற்றி பெற முடியாது..." என்று ஆணித்தரமாக இந்தத் திருமணத்தை எதிர்த்தான் விக்ரம்...

"ஒரு பெண்ணால் என்ன செய்ய முடியும்ன்னு நினைச்சு தானே நீங்க இந்த முடிவு எடுத்திருக்கீங்க... ஆனால் நான் சாதிச்சு காட்டுவேன் தாத்தா... இதுக்காக எல்லாம் என்னால் கல்யாணம் பண்ணிக்க முடியாது..." என்று நிர்தாட்சண்யமாய் அதை மறுத்தாள் பவித்ரா...

இரு வீட்டு பெரியவர்களும் தங்களது முடிவில் நிலையாய் நின்றனர்... அது போல் சிறியவர்களையும் பேசி ஒரு முடிவுக்கு வர சொன்னார்கள்... அதன்படி மறுநாள் மாலையில் இருவரையும் நேரில் சந்தித்துப் பேச ஏற்பாடும் செய்தனர்... இருவரும் வேண்டா வெறுப்பாக அதற்குச் சம்மதித்தனர்...

மறுநாள் முழுவதும், 'இவனை எல்லாம் சொன்ன நேரத்திற்குப் பார்க்க போகணுமாக்கும்... போடா... நான் சொன்ன நேரத்தை விட ஒரு மணி நேரம் லேட்டாகத் தான் வருவேன்...' என்று மனதிற்குள் கோபமாய் விக்ரமை தாளித்தபடி தனது அலுவலக வேலையைப் பார்த்தாள் பவித்ரா சத்யமூர்த்தி...

'இவளை எல்லாம் சொன்ன நேரத்திற்குப் பார்க்க போகணுமாக்கும்... போடி... நான் சொன்ன நேரத்தை விட ஒரு மணி நேரம் லேட்டாகத் தான் வருவேன்...' என்று மனதிற்குள் கோபமாய்ப் பவித்ராவை தாளித்தபடி தனது அலுவலக வேலையில் மூழ்கி போனான் விக்ரம் விஸ்வநாத்...

அன்று மாலை இருவரும் வேண்டுமென்றே ஒரு மணி நேர தாமதத்திற்குப் பின் அந்த நட்சத்திர விடுதியை வந்தடைந்தனர்... அவரவர் காரில் இருந்து ஒரே நேரத்தில் இறங்கிய இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து திகைத்து போய் நின்றனர்...

ஆக மொத்தம் இருவரும் மற்றவரை காக்க வைக்காமல் சொன்ன நேரத்திற்குச் சரியாய் வந்து சேர்ந்தது போலிருந்தது அவர்களது நடவடிக்கை...

பாம்பின் கால் பாம்பறியும்...!!!

மொழி பேசும்...!!!

PDF தமிழ் .com

## விழி : 2

விக்ரமும், பவித்ராவும் ஒருவரை ஒருவர் பார்த்து திகைத்து நின்றது ஒரு நொடி தான், அடுத்த நொடி அலட்சியமாய்க் கார் கதவை மூடி விட்டு அந்த நட்சத்திர விடுதியின் படியில் கால் வைத்தனர் ஒன்று போல்...

விக்ரமிற்கு ஒரு பெண்ணின் பின்னால் நாய்க்குட்டி போல் செல்ல விரும்பவில்லை... பெண் என்பவள் ஆணிற்குப் பின்னே என்று அகம்பாவமாய் நினைத்து துரிதமாய் நடந்தான்...

அதே போல் பவித்ராவும் ஆணான விக்ரமை பின்பற்றி நடக்க விருப்பம் இல்லாதவளாய் அவனை முந்தி கொண்டு செல்ல நினைத்தாள்... அதாவது அவனைப் பின்தொடர அவள் விரும்பவில்லை...

அதன் காரணமாக இருவருமே இணைந்து ஒருசேர அந்த விடுதிக்குள் நுழைந்தனர்... இந்த நிலை அவர்களுக்கு என்று பதியப்பட்டு இருந்த மேசையில் வந்து அமரும் வரை நீடித்தது... ஒரே நேரத்தில் நாற்காலியில் அமர்ந்த இருவரும் ஒருவரை ஒருவர் பார்த்து முறைத்து கொண்டிருந்தனர்...

ஆனாலும் அவர்களது பார்வை மற்றவரை ஆராய்ச்சியாய் பார்க்க தவறவில்லை...

"உனக்கு ரொம்பவும் திமிர்டி... என்னைக் காக்க வைக்கணும்ன்னு தானே லேட்டா வந்த..." என்று அவனும்,

"உனக்கு ரொம்பவும் திமிர்டா... என்னைக் காக்க வைக்கணும்ன்னு தானே லேட்டா வந்த..." என்று அவளும் ஏக நேரத்தில் ஒன்று போல் கேட்டு அதற்கும் முறைத்துக் கொண்டு சிறிது இடைவெளி விட்டு அமைதியாகினர்...

"நமக்குக் கல்யாணம்..." மீண்டும் ஒரே நேரத்தில் இருவரும் ஆரம்பித்தனர்...

அப்போது கை நீட்டி அவளைத் தடுத்த விக்ரம், "முதல்ல நான் சொல்ல வந்ததைச் சொல்லிக்கிறேன்... அதுக்கு

அப்புறம் நீ பேசு..." என்றவனைக் கண்டு கோபம் கொண்டவளாய் பவித்ரா,

"அது என்ன நீ பேசி நான் கேட்கணுமா...? ஏன் நான் பேசி நீ கேட்க கூடாதா...? ஆண் என்கிற அகம்பாவமா...?" என்று படபடவெனப் பொரிய...

"ஆமாம்டி ஆண் என்கிற அகம்பாவம் தான்... பெண் என்பவள் ஆணுக்கு கீழே தான்... நீ இவ்வளவு பேசும் நேரத்தில் நான் சொல்ல வந்ததைச் சொல்லிட்டு கிளம்பி போயிருப்பேன்... உன்னைப் போல் நேரத்தை வீணடித்திருக்க மாட்டேன்... இதற்குத் தான் சொல்வது பெண் புத்தி பின் புத்தி என்று..." என்று பதிலுக்கு அவனும் கோபமாய் அவளைச் சாடினான்...

"யூ... யூ..." என்று கோபத்தில் தகாத வார்த்தைகள் வராமல் தடுமாறியவளை கண்டு நக்கலாய் சிரித்தவன்,

"நீ... நீ தான்டி... பின்னே நீ நானாகவா மாற முடியும்..." என்று கேலியாய் சிரித்தவன்,

"இங்கே பார் உன் கிட்ட பேசிக்கிட்டு இருக்க எனக்கு நேரமும் இல்லை... பொறுமையும் இல்லை... நம்ம ரெண்டு வீட்டு பெருசுங்களும் சேர்ந்து நமக்குக் கல்யாணம் பண்ண முடிவு பண்ணி இருக்காங்க... ஆனால் எனக்கு இந்தக் கல்யாணத்தில் கொஞ்சமும் விருப்பம் இல்லை..."

அவன் சொல்லும் முன் முந்தி கொண்டு, "எனக்கும் தான் விருப்பம் இல்லை... அதைப் பத்தி பேச தான் நான் இங்கே வந்ததே... மத்தபடி உன்னுடன் கொஞ்சி குழாவ இங்கே வரலை..." என்று அவளும் சளைக்காது பதிலடி கொடுத்தாள் அவனுக்கு...

அவளது பேச்சு கேட்டு அவனது விழிகள் இளக்காரமாய் அவளைப் பார்த்து வைத்தது... அவனது இளக்கார பார்வை அவளின் ஆத்திரத்தை மேலும் அதிகப்படுத்தியது...

"என்ன...?" என்றாள் அவனைப் பார்த்து தெனாவெட்டாக...

PDF தமிழ் .com

"இல்லை, உனக்கு ஏன் இந்தத் திருமணத்தில் விருப்பம் இல்லை என்று யோசித்துப் பார்த்தேன்..."

"எனக்கு உன்னைப் பிடிக்கலை... உன் மூஞ்சியைப் பார்க்க எனக்குச் சகிக்கலை..." என்று அருவருப்பும், வெறுப்புமாய்க் கூறியவளை கண்டு அவனது ஆத்திரம் எல்லை தாண்டி எகிறியது...

"ஓஹோ... நீ உன் மூஞ்சியைக் கண்ணாடியில் பார்த்தது இல்லையாடி... வீட்டுக்குப் போய்க் கண்ணாடியில் உன் உருவத்தைப் பார்த்து விட்டு வந்து என்னைப் பேசு... என் அழகுக்கு நீ கால் தூசி பெறுவியாடி... அப்படிப்பட்ட உனக்கு என் மூஞ்சி பார்க்க சகிக்கவில்லையா...? ஆனாலும் உனக்கு இந்தளவுக்குத் தற்பெருமை ஆகாது..." என்று அவனும் கோபத்தில் எகிறினான்...

ஒருவரை ஒருவர் குறை சொல்லும் அளவிற்கு இருவருமே அழகில் தாழ்ந்து போகவில்லை... இருவரும் அப்படி ஒரு அழகோடு, தேஜஸோடு இருந்தனர்... என்ன ஒன்று மற்றவரின் அழகை இருவருமே உணராது இருந்தனர்... பகை என்கிற கண்ணாடி போட்டுக் கொண்டு பார்த்ததால் மற்றவரின் அருமை அவர்களுக்குத் தெரியவில்லை...

"நான் உன்னைக் கல்யாணம் பண்ணும் அளவுக்கு உன் கிட்ட அப்படி என்ன இருக்குடி... வெளிநாட்டில் போய்ப் படித்து விட்டு வந்தியா...? இல்லை வேறு எதுவும் திறமைகள் இருக்கிறதா...? எதுவுமே இல்லை... நீ வெறும் பூஜ்யம்... ஆனால் நான் அப்படிக் கிடையாது... வெளிநாட்டில் படித்து விட்டு வந்தவன்... குதிரை ஏற்றம் முதல் இசை பயிற்சி வரை அனைத்தும் அறிந்தவன்... எல்லாவற்றிலும் முதலிடம் வேறு... ஆனால் நீ...? எல்லாவற்றிலும் என்னை விடப் பின்தங்கி இருக்கிறாய்..." என்று அகம்பாவமாய்க் கூறியவனின் கூற்று அனைத்தும் உண்மையே...

பவித்ரா தொழில் மீதிருந்த ஆசையால் தாத்தாவிடம் தொழில் கற்றுக் கொண்டு இங்கேயே ஒரு கல்லூரியில் சேர்ந்து படித்தாள்... வெளிநாடு சென்று படிக்க வசதி

இருந்த போதும் அதை அவள் செய்யவில்லை... அதைச் செய்யாதது தவறோ என்று முதன்முறையாக இன்று வருத்தப்பட்டாள்...

எல்லாம் சிறிது நேரம் தான்... பிறகு கர்வத்தோடு நிமிர்ந்து அவனைப் பார்த்தவள், "அப்படிப்பட்ட நான் தொழிலில் உன் கண்ணில் விரலை விட்டு ஆட்டுகிறேனே... அந்த ஒரு திறமை போதாதா...?" என்று திமிராய் கேட்டவளை கண்டு அவனது முகம் கன்றிப் போய்விட்டது...

"நான் உன்னை வெற்றிக் கொள்ளும் போது உன் எக்ஸ்ட்ரா டேலண்ட் எங்கே போயிருந்தது...? ஓடி பிடிச்சு விளையாட போயிருந்ததா...?" என்று கிண்டலாய் கூறி சிரித்தவளின் முகம் பின்பு சீரியசாய் மாறியது...

"இங்கே பார்... என் திறமையைப் பற்றி அலசி ஆராய்வதற்கு நான் இங்கே வரவில்லை... நீ பேசும் அளவுக்கு நான் ஒண்ணும் திறமை இல்லாதவளும் இல்லை..." என்று அவனுக்கு வார்த்தைகளால் ஒரு கொட்டு வைத்து விட்டு,

"எனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பம் இல்லை... அதைச் சொல்லி விட்டுப் போகத் தான் வந்தேன்... அதே போல் நீயும் எதையாவது சொல்லி இந்தக் கல்யாணத்தை நிறுத்தி விடு... அது தான் உனக்கு நல்லது..." என்று கோபமாய்ப் பொரிந்தவள் அவ்வளவு தான் பேச்சு வார்த்தை முடிந்தது என்பது போல் நாற்காலியில் இருந்து எழுந்தாள்...

"நானும் இதைச் சொல்லத்தான் வந்தேன்... என் வேலையை நீ எளிதாக்கி விட்டாய்... ரொம்பவும் நல்லது... காலம் முழுவதும் உன் மூஞ்சியைச் சகிக்க வேண்டி வருமோன்னு பயந்து போயிட்டேன்... இப்போ தான் சந்தோசமாக இருக்கிறது..." என்று முகம் மலர மகிழ்ச்சியுடன் கூறியவன் அங்குத் தள்ளி நின்று கொண்டிருந்த பேரரை அழைத்து,

PDF தமிழ் .com

"ரெட் வைன் கொண்டு வாங்க..." என்றவன் அவளை அலட்சியமாய்ப் பார்த்தபடி கைகள் இரண்டையும் மேலே தூக்கி சோம்பல் முறித்துக் கொண்டு நாற்காலியில் நன்றாகச் சாய்ந்து அமர்ந்தான்...

அதாவது வார்த்தையால் சொல்லாமல் செயலில் அவளிடம் 'நடையைக் கட்டு' என்கிறானாக்கும்...

"கர்மம் இந்தப் பழக்கம் வேறு இருக்கா...?" என்று முணுமுணுத்தவளை கண்டு மந்தகாச புன்னகை புரிந்தவன்,

"என்னை மாதிரி பணக்கார வீட்டு பசங்க குடிக்காம இருந்தா தான்ம்மா சாமி குத்தம்... சும்மாவே குடிப்போம்... இப்போ நீ இவ்வளவு பெரிய சந்தோசமான விசயம் சொல்லியிருக்கே... அதைக் கொண்டாடிட வேண்டாமா...?" என்றான் நக்கலாய்...

"நானும் தான் சந்தோசமா இருக்கேன்..." என்றவளை இடைமறித்து,

"அப்போ என்னோடு உட்கார்... இந்தச் சந்தோசத்தை ரெட் வைன் குடித்து நாம கொண்டாடலாம்..." என்றவனை வெட்டவா? குத்தவா? என்பது போல் கொலைவெறியோடு பார்த்தவள்,

"ச்சே... நீ மனுசனே இல்லை..." என்றவள் அங்கிருந்து வேகமாய்ச் செல்ல...

"போடி போ... நீ மட்டும் மனுசியாக்கும்... ராட்சசிடி..." என்றவனின் வார்த்தைகள் அவளைப் பின்தொடர்ந்தது...

பவித்ரா சென்றதும் தானும் கிளம்பிய விக்ரம் தான் தருவித்த ரெட் வைனை வேண்டாம் என்று மறுத்து விட்டு எழுந்து வெளியில் வந்தான்... அவன் ஒரு போதும் குடிப்பது இல்லை... புகைப்பிடித்தல், மது, மாது என்று அவனைப் பலகீனப்படுத்தும் எந்தவொரு விசயத்தையும் அருகில் விட்டது இல்லை...

தொழில் உலகில் அவன் பல பேரை பார்த்திருக்கிறான்... நிறையப் பேர் தொழிலில் திறமையாக இருந்த போதும் இந்த மாதிரி விசயங்களில் சறுக்கி விடுவார்கள்... அவனே பல பேருக்கு பலவித ஏற்பாடுகளைச் செய்து கொடுத்திருக்கிறான்... அதனால் தான் என்னமோ இந்த விசயத்தில் அவன் மிகவும் தெளிவு... அந்த ஒரு காரணத்தினால் தான் அவன் இந்தச் சிறு வயதில் தொழிலில் எல்லோருக்கும் சிம்ம சொப்பனமாக விளங்குகிறான்...

அவன் வேண்டும் என்றே பவித்ராவை வெறுப்பேற்ற தான் தனக்குக் குடி பழக்கம் இருக்கிறது என்று கூறினான்... அதை உண்மை என்று நம்பி செல்லும் அவளை நினைத்து அவனுக்கு அப்படி ஒரு சிரிப்பு வந்தது...

'நீ என்ன தான் உயர பறந்தாலும் மனதில் நீ ஒரு பெண் தான்... உன் புத்தியை மாற்ற யாராலும் முடியாது...' என்று நினைத்தவன் நேரே தனது வீட்டிற்குக் கிளம்பி சென்றான்...

போனதும் அவனது தாத்தா இராமநாதன் வாசலிலேயே அவனைப் பிடித்துக் கொண்டார்...

"என்ன முடிவு பண்ணியிருக்க விக்ரம்...?" என்று அவர் ஆவலாகக் கேட்டார்...

"ப்ச்... அவள் எனக்குச் செட்டாக மாட்டாள் தாத்தா..." என்று சலித்தவனைக் கண்டு அவரது முகம் சுருங்கி போனது...

"ஏன் பவித்ராவுக்கு என்ன...?"

"அவளுக்கு ஒண்ணும் இல்லை... ஆனால் எனக்குத் தான் அவளைப் பிடிக்கலை..."

"பவித்ரான்னு இல்லை உனக்கு எந்தப் பெண்ணையும் பிடிக்காதுன்னு எனக்குத் தெரியும்... இது ஒரு தொழில் ஒப்பந்தம் மாதிரி நினைச்சுக்கோ விக்ரம்... ஆண் பிள்ளைகள் இல்லாத வீடு... அதனால் அவர்களது தொழில் நிச்சயம் உன் கைக்குத் தான் வரும்... நீ அவள் கழுத்தில் தாலியை கட்டி விட்டால் அவள் உன் பேச்சை கேட்டு தானே

PDF தமிழ் .com

ஆகவேண்டும்... அதன் பின் உன் மனைவியிடம் இருந்து தொழிலை கைப்பற்றுவது உன் சாமர்த்தியம்..."

இதுவரை இப்படி ஒரு கோணத்தில் அவன் யோசித்துப் பார்த்ததில்லை... ஆனாலும் அவளைத் திருமணம் செய்வது என்பது அவனுக்கு அத்தனை கசப்பாக இருந்தது...

"நீங்க சொல்றது கேட்கிறதுக்கு நல்லாயிருக்கு தாத்தா... அப்படி எல்லாம் நீங்க சொல்வது போல் அவள் அவ்வளவு லேசில் தன்னோட தொழிலை விட்டு கொடுத்திட மாட்டாள்... அப்படி அடங்கி ஒரு இடத்தில் உட்காரவும் மாட்டாள்... அதுவே அவளை நான் நிராகரிப்பதற்கு, வெறுப்பதற்கான காரணம்..." என்று அவன் உறுதியாக மறுத்தான்...

"வேறுவழியில்லை விக்ரம்... பவித்ரா தான் உன்னோட மனைவின்னு நான் முடிவு பண்ணியாச்சு... உனக்கு விருப்பம் இல்லைன்னா இப்பவே இந்தக் கணமே நீ வீட்டை விட்டு போகலாம்..." என்று உறுதியாகக் கூறிய தாத்தாவை அவன் அதிர்ந்து போய்ப் பார்த்தான்...

"தாத்தா..."

அவரோ அசையாது அவனைப் பார்த்தார்... தொழிலுக்காக வேறுவழியின்றி இந்தத் திருமணத்திற்குச் சம்மதித்தான்...

அதே போல் தான் பவித்ரா வீட்டிலும் நடந்தது...

"தாத்தா... அவன் ஒரு மொடாக் குடிகாரன்... அவனை எல்லாம் நான் கல்யாணம் பண்ண முடியாது..." என்று அவள் பிடிவாதமாய் விக்ரமுடனான திருமணத்தை எதிர்த்தாள்...

"இந்தக் காலத்தில் யார் தான் குடிக்கலை பவிம்மா... நான், உன் அப்பா, சித்தப்பன் எல்லோருமே பிசினஸ் பார்ட்டி போனால் குடிக்கத் தான் செய்வோம்... இது ஒரு மேல்தட்டு மக்கள் கலாச்சாரம்... இதற்காக எல்லாம் அவனை வேண்டாம்ன்னு சொல்றது சின்னப் பிள்ளைத்தனமாக இருக்கிறதும்மா..."

"அவனைப் பார்த்தாலே எனக்குப் பத்திக்கிட்டு வருது தாத்தா..." என்று அவள் பொருமினாள்...

"அதான் ஏன்...?"

"சின்ன வயசில் இருந்து அவங்களை எதிரியாய் சொல்லி சொல்லி மனசில் பகை வளர்த்தீங்க தாத்தா... இப்போ வந்து அந்த வீட்டுப் பையனை நீ கல்யாணம் பண்ணிக்கணும்ன்னா என்னால் எப்படித் தாத்தா முடியும்...? அவன் மேல் இருக்கிற பகை தான் என் கண் முன்னால் வந்து நிற்கிறது... அவனைப் பார்த்தால் காதலோ, நேசமோ வர மாட்டேங்குது..." என்று அவள் படபடவெனப் பொரிந்தாள்...

"இங்கே பார் பவித்ரா... இது தொழிலுக்காக நடத்தப்படும் திருமணம்... இதில் நீ காதல், நேசம்ன்னு எதிர்பார்க்கிறது முட்டாள்த்தனம்... அப்படியே அது எல்லாம் வேண்டும்ன்னா உன் கழுத்தில் ஏறும் மஞ்சள் கயிறு அந்த மேஜிக்கை நிகழ்த்தும்... நான் இதுவரை கட்டி காத்த தொழில் யாராலும் கீழிறங்குவதைப் பொறுத்துக் கொள்ள என்னால் முடியாது... என் விருப்பப்படி தான் உன் கல்யாணம் நடக்கும்..." என்று தீர்மானமாய்க் கூறிய தாத்தாவை எதிர்த்து பேச முடியாது பவித்ரா தலையாட்டி விட்டு வந்தாள்...

மறுநாள் விக்ரம் அலுவலகத்தில் தனது தம்பி வினோத்தை போட்டு படுத்தி எடுத்து விட்டான்... தாத்தாவிடம் காட்ட முடியாத கோபத்தினை அவன் தம்பியிடம் காட்டினான்...

"அண்ணா... என்னாச்சு உனக்கு...? ஒரு நாளும் நீ இப்படி இருக்க மாட்டியே...?" சகோதரனின் குணம் அறிந்தவனாய் வினோத் தன்மையுடன் கேட்க...

யாரிடமாவது சொல்லி புலம்ப வேண்டும் என்று தவித்த விக்ரம் தம்பியிடம் சொல்லி புலம்பினான்...

"அவளைக் கல்யாணம் பண்ணிக்கிறதுக்குப் பதிலா நான் சந்நியாசம் வாங்கிட்டு போயிருவேன்டா... அப்படி ஒரு திமிர்

PDF தமிழ் .com

பிடித்தவள் அவள்..." என்று அவன் கோபமாய்ப் பல்லை கடித்தான்...

"இப்போ மட்டும் நீ ஃலைப்பை அனுபவிக்கவா செய்ற... இப்பவும் நீ சாமியார் தான்ண்ணா..." என்ற தம்பியை முறைத்துப் பார்த்தான் விக்ரம்...

"நான் அந்த அர்த்தத்தில் சொல்லலை..." என்று முழுப்பியவன்,

"பவித்ராவுக்கு என்ன, ரொம்ப அழகா இருக்காங்க... தொழிலை நல்லா திறமையா பார்த்துக்கிறாங்க... இதை விட உனக்கு வேறு என்ன வேணும்...?"

"அப்படின்னா நீ அவளைக் கல்யாணம் பண்ணிக்கோ..."

"அச்சோ அபச்சாரம், அபச்சாரம்... அண்ணியா வர போறவங்களைப் பார்த்து அப்படிச் சொல்லாதேண்ணா..." என்று சின்னவன் நல்ல பிள்ளையாய் கன்னத்தில் போட்டுக் கொள்ள... அதைக் கண்டு பெரியவனுக்குச் சிரிப்பு வந்தது...

"நீ சொல்றது எல்லாம் சரி தான்டா... ஆனா வீட்டுக்கு அடங்கி, எனக்குக் கட்டுப்பட்டுப் போகிற பெண் தான் எனக்கு வேண்டும்... வீட்டு வேலையைப் பார்த்துக்கிட்டு, என்னையும் பார்த்துக்கிட்டு, எங்களோட குழந்தைகளை வளர்த்துக்கிட்டு இருக்கிற சாதாரணப் பொண்ணு தான் எனக்கு வேணும்... அதுக்கு இவள் சரிப்பட்டு வர மாட்டாள்டா..."

"அடப்பார்றா... சாமியாருக்குள்ள இத்தனை ஆசைகளா....?"

"எல்லா ஆண்களோட விருப்பமும் இது தான்... எங்கே இப்போ இப்படிப் பொண்ணுங்க அமையுது... அதனால் கொடுமையேன்னு அட்ஜஸ்ட் பண்ணிக்கிட்டு வாழ்றாங்க..."

"நீ சொல்றது எல்லாம் சரி தான்ண்ணா... இதுக்கும் நீ கல்யாணம் பண்ணிக்கிறதுக்கும் என்ன சம்பந்தம் இருக்கு..."

"என்னடா நீ இப்படிச் சொல்லிட்ட...? என் மனைவியா என் கூடவே இருந்து என் உயிரை எடுப்பாள் அந்த ராட்சசி..."

"அதுக்கு நீ ஏன் இடம் கொடுக்கிற...? உனக்குக் கல்யாணம் மட்டும் தான் ஆகியிருக்கும்... மத்தபடி உன் வாழ்க்கையை நீ யாருக்காகவும் மாத்திக்காதே... உன் வாழ்க்கையை நீ வாழு... அவங்களை ஒரு கல், மண் போல் பார்த்துட்டு போயிக்கிட்டே இருண்ணா... இதுக்காக எல்லாம் நீ இவ்வளவு யோசிக்க வேண்டிய தேவையே இல்லை..." என்று இலகுவாகக் கூறிவிட்டு சென்று விட்டான் சின்னவன்...

தம்பியின் பேச்சில் விக்ரம் சற்றுத் தெளிவு அடைந்தான்... பெரியவர்களுக்காகத் தான் இந்தத் திருமணம்... மற்றபடி அவள் யாரோ...? அவன் யாரோ...? என்று தீர்மானமாய் நினைத்துக் கொண்டான்...

"அக்கா... ஏன் இப்படி இருக்கிற...?"

வழக்கமான சுறுசுறுப்பு இல்லாது ஏதோ யோசனையில் இருந்த சகோதரியை காண காண பல்லவிக்குச் சகிக்கவில்லை... அதனால் அப்படிக் கேட்டாள்...

"எல்லாம் தாத்தாவோட முடிவு நினைச்சு தான்..."

"விக்ரமுக்கு என்னக்கா... செம ஸ்மார்ட்டா இருக்கிறார்... நல்ல திறமையானவரும் கூட... அழகு, புகழ்ன்னு எல்லாமே அவருக்குக் கொஞ்சம் அதிகம் தான்க்கா..."

"ஆமாம்டி... அவனுக்கு எல்லாமே அதிகம் தான்... அதான் கொழுப்பும் அளவுக்கு அதிகமாக இருக்கு..." என்று நொடித்தாள் பவித்ரா...

"நீ ரொம்ப யோசிக்கிறக்கா... என்னைக் கேட்டிருந்தா நான் கண்ணை மூடிட்டு அவருக்குக் கழுத்தை நீட்டி இருப்பேன்..." என்றாள் பல்லவி விழிகளில் மயக்கத்துடன்...

"அடப்பாவி... உனக்கு அவன் அரைக் கிழவன்டி... உனக்கும் அவனுக்கும் பதினோரு வயது வித்தியாசம்..."

"அப்போ தான்க்கா நம்மளை அவங்க செல்லமா பார்த்துக்குவாங்க..." என்று வெட்கப்பட்டவளை கண்டு அவளது தலையில் நறுக்கென்று கொட்டினாள் பவித்ரா...

"கனவு காணாம ஒழுங்கா வேலையைக் கத்துக்கிட்டு முன்னேறும் வழியைப் பார்..."

"போக்கா... என்னத்தை முன்னேறினாலும் கடைசியில் கல்யாணம் பண்ணிக்கிட்டு குழந்தையை வளர்க்கிற ஆயா வேலையைத் தான் பார்க்க போகிறோம்... இதுக்கு எதுக்கு இத்தனை ரிஸ்க் எடுக்கணும்..." என்று கூறியவள் வெளியில் சென்றுவிட்டாள்...

அந்தக் கணம் விக்ரம் கூறிய வார்த்தைகள் அசந்தர்ப்பமாய்ப் பவித்ராவின் காதில் ஒலித்தது...

'குடும்பப் பெண்ணா கல்யாணம் பண்ணிக்கிட்டு உன் தொழிலை உன் கணவனிடம் கொடுத்து பார்க்க சொல்லிவிட்டு, நீ அடங்கி வீட்டில் உட்கார்ந்து உன் புள்ள குட்டியை வளர்த்துக்கிட்டு இரு...'

'ஒருவேளை அதற்காகத் தான் இந்தத் திருமணமோ...? என்னை அடக்கி வீட்டில் உட்கார வைத்து விட்டு தொழிலை கைப்பற்றுவது தான் அவர்களது எண்ணமோ...?'

இதை நினைக்கும் போதே அவளது மனமும், தேகமும் நடுங்கியது... அவளது உயிர்மூச்சான தொழிலை விட்டு கொடுக்க முடியுமா...? 'நோ நெவர்' என்று அவள் தனது தலையைச் சிலுப்பிக் கொண்டாள்...

'நீ என் கழுத்தில் தாலி மட்டும் தான் கட்ட முடியும் விக்ரம்... மத்தபடி என்னைக் கட்டுப்படுத்த உன்னால் முடியாது... நான் நானாகத் தான் இருப்பேன்... இல்லை என்றால் உன்னைத் தூக்கி எறியவும் தயங்க மாட்டேன்...' என்று அவள் உறுதியாகக் கூறி கொண்டாள்... அதன் பின்னரே அவளது மனம் சமாதானமாகியது...

அந்த மாத கடைசியில் விக்ரம், பவித்ரா இருவருக்குமான நிச்சய நாளை பெரியவர்கள் குறித்தனர்... சம்பந்தப்பட்ட

இருவரும் எந்தவொரு விசயத்திலும் சம்பந்தம் வைத்து கொள்ளவில்லை... அவர்கள் இருவரது ஒரே ஒரு வேண்டுகோள் ஒரு குறிப்பிட்ட நட்சத்திர விடுதியில் நிச்சயதார்த்த விழாவை வைக்க வேண்டும் என்பது மட்டுமே... அந்த விசயத்தில் இருவரது மனமும் ஒன்றாகச் சிந்தித்தது... அது ஏனென்று உணர பெரியவர்கள் தவறிவிட்டனர்...

மாப்பிள்ளை வீட்டார் பெண்ணிற்கு வேண்டிய புடவை, நகைகளை அவர்களே வாங்கிக் கொண்டனர்... அது போல் தான் பெண் வீட்டில் மாப்பிள்ளைக்கு வேண்டியதை அவர்களே தேர்வு செய்தனர்... தாமரை இலை நீர் போன்று இரு வீட்டாரும் ஒட்டாது இருந்தனர்... ஆனாலும் நிச்சய வேலைகள் ஜரூராக நடைப்பெற்றது...

நிச்சயதார்த்தம் அன்று மாப்பிள்ளையும், பெண்ணையும் காணவில்லை என்று இரு வீட்டாரும் டென்சனில் கைகளைப் பிசைந்து கொண்டிருந்தனர்... விருப்பம் இல்லாது வலுக்கட்டாயமாகத் திருமணத்திற்குச் சம்மதிக்க வைத்தது தவறோ என்று இரு வீட்டு பெரியவர்களும் மனம் வருந்தி நின்றனர்...

அதே நட்சத்திர விடுதியின் மற்றொரு ஹாலில் ஏலம் நடப்பதற்கான ஏற்பாடுகள் நடைப்பெற்றுக் கொண்டிருந்தது... அந்த ஏலத்தில் பங்கெடுப்பதற்குத் தான் வாழ்க்கையில் இணை பிரியா தம்பதிகளாக மாறப் போகின்ற, தொழில் எதிரிகளான விக்ரம், பவித்ரா இருவரும் வந்திருந்தனர்...

ஒருவரை ஒருவர் முறைத்துக் கொண்டு இரு பக்கமாய்ப் பிரிந்து சென்று அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்தவர்கள் கால் மேல் கால் போட்டபடி அலட்சியமாய் ஒருவரை ஒருவர் பார்த்து கொண்டனர்... இன்னும் சில மணித்துளிகளில் நிச்சயம் நடைப்பெற போகின்ற மயக்கம் துளி கூட இருவரது விழிகளிலும் தென்படவில்லை...

ஏலம் ஆரம்பிக்கப்பட்டது... அதன் ஆரம்ப மதிப்பு ஐம்பது லட்ச ரூபாயில் இருந்து தொடங்கப் பட்டது... எடுத்தவுடன்

அதிரடியாக விக்ரம்,

"ஒரு கோடி..." என்றான்...

அதற்கு எல்லாம் அசைவாளா இந்தப் பவித்ரா...

"ஒன்றரை கோடி..." என்றாள் சிறிதும் அசராது...

அடுத்தக் கணம் இருவரது விழிகளும் ஒன்றுடன் ஒன்று கோபமாய் மோதி கொண்டது...

கண்ணும் கண்ணும் கொள்ளை அடித்ததில் அங்கே காதல் பற்றிக் கொள்ளவில்லை... மாறாக வெற்றிக் கொள்ள வேண்டும் என்கிற பழி வெறி தான் அணையாது தீப்பற்றி எரிந்தது...!!!

மொழி பேசும்...!!!

## விழி : 3

விக்ரமும், பவித்ராவும் ஒருவரை ஒருவர் முறைத்துக் கொண்டு ஏலத்தின் மதிப்பை நன்கு ஏற்றி விட்டு கொண்டிருந்தனர் தங்களையும் அறியாது... இருவரிடத்திலும் ஒருவரை ஒருவர் வெற்றிக் கொள்ளும் தீவிர மனப்பான்மை தான் அதிகம் இருந்தது...

இறுதியாகப் பவித்ரா, "நான்கரை கோடி..." என்க...

அப்போது எதிர்பாராத விதமாக ஒரு குரல், "ஐந்து கோடி..." என்றது...

விக்ரமும், பவித்ராவும் திகைப்புற்றுப் போய்த் திரும்பி பார்த்தனர்... மகேந்திர வர்மா இருவரையும் புன்சிரிப்புடன் பார்த்தபடி அங்கு வந்து அமர்ந்தார்... திடுமென அவரை அங்கு எதிர்பார்க்காத விக்ரம் திகைப்பில் இருந்து இன்னமும் வெளிவராது போகவும் ஏலம் போடுபவர்,

"ஐந்து கோடி ஒருதரம்... ஐந்து கோடி இரண்டு தரம்..."

அவர் மூன்றாவது தடவை சொல்வதற்குள் தன்னைச் சுதாரித்துக் கொண்ட பவித்ரா, "ஐந்தரை கோடி..." என்று கூறி அந்த ஏலத்தில் வெற்றி பெற்று விட்டாள்...

பவித்ரா வெற்றி பெற்றதை தொடர்ந்து கோபத்துடன் நாற்காலியில் இருந்து எழுந்த விக்ரம் அங்கிருந்து வேகமாய் வெளியேறினான்... அவன் செல்வதை மகேந்திர வர்மா யோசனையாகப் பார்த்தார்... ஏனெனில் இன்று விக்ரம், பவித்ராவிற்கு நிச்சயதார்த்தம் நடக்கவிருப்பது அவருக்குத் தெரியும்... அது எதனால் என்றும் தெரியும்... இப்போதும் அவர்கள் இருவரும் ஒருவரை ஒருவர் முறைத்துக் கொண்டு இருப்பது கண்டு அவரது உதடுகளில் மர்மமான புன்னகை ஒன்று வந்தமர்ந்தது...

விக்ரமின் கோபம் பவித்ராவை ஒன்றும் செய்யவில்லை... 'அட போடா' என்று மனதிற்குள் அலட்சியமாகக் கூறி கொண்டவள் ஏலத்தை வெற்றிகரமாக முடித்துக் கொண்டே தனது நிச்சயதார்த்த விழாவிற்குக் கிளம்பி சென்றாள்...

"பொண்ணு நீ இப்படித்தான் லேட்டா வருவியா...?" என்று அவளைக் கடிந்தார் அவளது அன்னை கல்பனா...

"பல்லவி... பவிக்கு அலங்காரம் பண்ணி விடும்மா..." என்று கொழுந்தன் மகளை அவர் பணித்தார்...

"அக்கா... டென்சன் ஆகாதீங்க... நானும், பல்லவியும் சேர்ந்து பவியை ரெடி பண்றோம்... நீங்க போய் மத்த வேலைகளைப் பாருங்க..." என்று நர்மதா அவரை வேறு வேலைக்கு அனுப்பி வைத்தார்...

"பவிம்மா... இன்னைக்காவது நீ தொழிலை மறக்க கூடாதாம்மா...?" நர்மதா அவளிடம் கேட்க...

"அது என் சுவாசம் சித்தி... அதை எப்படி நான் மறக்க முடியும்...?"

"அம்மா... அக்கா சாப்பாடு, தூக்கம் கூட இல்லாம இருந்திருவாள்... ஆனா தொழில் இல்லாம இருக்க மாட்டாள்..."

"போடி அரட்டை..." தங்கையின் தோளில் செல்லமாய் அடித்த பவித்ரா நிச்சய விழாவிற்குக் கிளம்ப ஆயத்தமானாள்...

"டேய் அண்ணா... சட்டையை மட்டுமாவது மாத்தேன்டா..." வினோத் விக்ரமிடம் கெஞ்சி கொண்டிருந்தான்...

"இந்தச் சட்டை போதும்..." என்று விக்ரம் சிடுசிடுத்தான்...

"அண்ணா... வேணாம் இந்த விச பரீட்சை... அண்ணி நல்லா அலங்காரம் பண்ணிட்டு சும்மா தேவதை மாதிரி சபையில் வந்து உட்காருவாங்க... நீ மட்டும் இப்படி அழுது வடிஞ்சிக்கிட்டு இருக்கப் போறியா...?"

"ஏன் எனக்கு என்னடா குறைச்சல்...? அவளாவது மேக்கப் போட்டால் தான் ஏதோ பார்க்க சகிக்கிற மாதிரி இருப்பாள்... ஆனால் நான் அப்படி இல்லை... எப்போதும் அழகு தான்... அந்த மூஞ்சிக்கு எல்லாம் இது போதும்..." என்று வெடுவெடுத்தவன் அலைப்பேசியில் வந்த அழைப்பை

ஏற்றுக் காதில் வைத்தவன் தொழில் பேச்சில் மூழ்கி போனான்...

"இவனுக்குக் கல்யாணம் பண்ணி வைக்கிறதை விட எனக்குப் பண்ணி வச்சியிருக்கலாம்... கொஞ்சம் கூட ஆசையில்லாம இருக்கானே... இவனே ஒரு சாமியாரு... இதில் ஆசை எங்கே இருந்து வரும்...?" என்று வினோத் அங்கலாய்த்தபடி வேறு வேலை பார்க்க சென்றான்...

இருவரையும் ஒரே நேரத்தில் மணமேடை ஏற்றிய போது இருவரின் பார்வையும் ஒருவரை ஒருவர் வெட்டவா? குத்தவா? என்பது போல் பார்த்து வைத்தது... அவனின் கம்பீரமான அழகு அவளின் மனதினை வசீகரிக்கவில்லை... அவளின் எழில் மிகுந்த வனப்பு அவனை மயக்கவில்லை...

இருவருக்கும் கொடுக்க வேண்டிய தாம்பாள தட்டை எடுத்து கொடுத்து நிச்சய உடையை மாற்றிக் கொண்டு வருமாறு பணித்தார் அய்யர்... தட்டை கையில் வாங்கியதும் ஒருவரை ஒருவர் திரும்பி பார்க்காது முகத்தை வெட்டி கொண்டு அகன்றனர்...

"வினோத்... என்னடா இது...? இப்படி ஒரு சட்டை எடுத்து இருக்காங்க... என்னோட ரேன்ஜ் என்ன, லெவல் என்ன...? இதை எல்லாம் என்னால் போட முடியாது..." என்று சத்தியாகிரகம் செய்தான் விக்ரம்...

வினோத்தால் அவனைச் சமாளிக்க முடியவில்லை...

"தாத்தா..." என்று வெளிப்புறமாகப் பார்த்து குரல் கொடுத்தான்...

"இப்போ அவரை எதுக்குடா கூப்பிடுற...?" என்று தம்பியை முறைத்தபடி கூறியவன்,

"நீ வெளியில் போ... நான் ட்ரெஸ் மாத்தணும்..."

வினோத் வெளியேறியதும் வேறுவழியின்றி முணுமுணுத்தபடி உடையை மாற்றினான் விக்ரம்...

"அம்மா... இது என்ன புடவைன்னு இதை என்னைக் கட்ட சொல்றீங்க...? என் வாழ்க்கையில் இப்படி ஒரு புடவை நான் கட்டியது இல்லை..." பவித்ரா கோபமாய்க் கூறியபடி கையிலிருந்த நிச்சய புடவையைக் கட்டிலில் விட்டு எறிந்தாள்...

"பவி... பொண்ணா அடக்க ஒடுக்கமா நடந்துக்கோ..." கல்பனாவின் குரல் சற்று உயர்ந்தது பெண்ணைக் கண்டிக்கும் பொருட்டு...

அதைக் கேட்டதும் அவளின் ஆத்திரம் தலைக்கேறியது... ஏனெனில் அது விக்ரம் அடிக்கடி உதிர்க்கும் வார்த்தைகள் அல்லவா...

"நான் இப்படித்தான் இருப்பேன்... என்னை மாத்த முயற்சி செய்யாதீங்க..."

"பல்லவி... தாத்தாவை இங்கே கூட்டிட்டு வாம்மா..." என்று கல்பனா கூறிய அடுத்த நொடி பவித்ரா கப்சிப் என்று அடங்கிவிட்டாள்...

எலுமிச்சை நிற அந்தப் பட்டு புடவை அவளது வெண்ணிற மேனிக்கு நல்ல பாந்தமாக, அழகுற பொருந்தியிருந்தது... ஆனாலும் அது அடர் நிறமாய் வெறித்துக் கொண்டு இருப்பது போல் அவளுக்குத் தோன்றியது...

'வேணும்ன்னே என்னைப் பழிவாங்கிட்டாங்க...' என்று மனதிற்குள் அவளுக்குக் கோபம் வந்தது...

மீண்டும் இருவரையும் மேடைக்கு அழைத்து வந்து அருகருகே நிற்க வைத்தனர்... வெகு ஜாக்கிரதையாக இருவரும் சற்று தள்ளியே நின்றனர்... ஒருவர் மீது மற்றவரது விரல் நுனி பட்டால் கூடப் பாவம் ஒட்டி கொள்வது போல் அப்படி ஒரு எரிச்சல் அவர்களது முகத்தில்...

இவர்கள் தான் இப்படி என்றால் இரு வீட்டு பெரியவர்களும், சிறியவர்களும் கூட இணக்கமாகப் புன்னகைத்துக் கொள்ளாமல் இறுக்கமாய் இருந்தனர்...

எல்லாப் பெண்களையும் சைட் அடிக்கும் வினோத் கூடப் பல்லவியைக் கல்லையும், மண்ணையும் பார்ப்பது போல் பார்த்து வைத்தான்... அவனின் இளக்காரமான பார்வை கண்டு பல்லவியும் அதை விடக் கேவலமான ஒரு பார்வை பார்த்து வைத்தாள்... அதை உணர்ந்து கொண்ட வினோத்திற்குக் கோபம் பொங்கியது... அவனது கோபம் கண்டு பல்லவிக்கு ஏக குஷியாக இருந்தது...

"மோதிரம் மாத்திக்கச் சொல்லுங்க..." அய்யர் குரல் கொடுத்தவுடன் வேண்டா வெறுப்பாய் விக்ரம் பவித்ராவிற்கு என்று தனது வீட்டில் வாங்கிய மோதிரத்தை எடுத்து அவளது கை விரலில் மாட்டி விடப் போனான்...

எங்கே அவன் விரல் தன் மீது பட்டு விடுமோ என்று எண்ணிய பவித்ரா சர்வ ஜாக்கிரதையாக வலக்கை விரலை அகல விரித்து மோதிர விரலை மட்டும் தனித்து அவனிடத்தில் நீட்டினாள்... அதைக் கண்டு அவனுக்குக் கோபம் வந்தது...

"ஏய் இங்கே பாரு... ரொம்பச் சீன் போடாதே... இப்படிப்பட்ட சீனுக்கு எல்லாம் நீ வொர்த்தான ஆள் இல்லை... போயும் போயும் உன்னைப் போய் நான் தொடுவேனாடி..." என்று அடிக்குரலில் கோபமாய்க் கர்ஜித்தவன் அவளது விரல் பற்றாமலேயே மோதிரத்தை அணிவித்தான்...

அதே போல் விக்ரமிற்குப் பவித்ராவை மோதிரம் அணிவிக்கச் சொன்னதும் கொடுமையே என்று அவன் பக்கம் திரும்பியவளை கண்டு அவன்,

"நான் எப்படி உன்னைத் தொடாம மோதிரத்தை போட்டேனோ அது போல் நீயும் என்னைத் தொடாமல் மோதிரத்தை போடு..." என்று உத்தரவிட...

"நீயும் இப்படிப்பட்ட சீனுக்கு எல்லாம் வொர்த்தானவன் இல்லை... ரொம்பத்தான் ஆடாதே..." என்று முணுமுணுத்தபடி பட்டும் படாமல் அவனின் விரலில் மோதிரத்தை போட்டு விட்டாள்....

அந்த மோதிரத்தை கண்டவன் அடுத்த நொடி ஆவென்று அலறினான்... பவித்ரா அவனைப் புரியாமல் பார்த்தாள்... அவனது அன்னை ரேவதி அவனிடத்தில்,

"என்னாச்சு விக்ரம்...?" என்று கேட்க...

"இவள் பெயர் போட்ட மோதிரத்தை எல்லாம் என்னால் போட முடியாது..." என்று உறுதியாய் மறுத்தவன் அதைக் கழட்ட போனான்...

"விக்ரம்..." தாத்தாவின் கர்ஜனை குரலில் அவனின் சத்தம் அப்படியே அடங்கிப் போனது...

விக்ரம் வீட்டினர் மோதிரத்தில் 'VP' என்று இருவரது முதல் எழுத்தை ஆங்கிலத்தில் பொறித்திருந்தனர்... ஆனால் பவித்ராவின் வீட்டில் மோதிரத்தில் 'பவி' என்று இருவரது முதல் எழுத்தை தமிழில் பதித்து இருந்தனர்... அதைப் பார்த்த விக்ரம் பவித்ரா பெயரை அதில் எழுதியிருப்பதாக எண்ணிக் கோபம் கொண்டான்...

அடுத்து அய்யர் பவித்ராவிடம், "உன் ஆத்துக்காரர் காலில் விழுந்து நமஸ்காரம் பண்ணிக்கோம்மா..." என்க...

அதைக் கேட்டு பவித்ரா முறைத்த முறைப்பில் அவர் அரண்டு போனார்... அவளுக்கு மட்டும் சக்தி இருந்திருந்தால் அவரை எரித்துப் பஸ்பமாகி இருப்பாள்...

"என்னால் அது முடியாது..." என்று முணுமுணுத்தபடி விறைப்பாக நின்றாள் அவள்...

அவள் நின்ற தோரணை ரேவதியின் மனதில் கலக்கத்தை உண்டு பண்ணியது... இப்படிப்பட்ட ஒரு பெண்ணுடன் தனது மகன் எப்படிச் சந்தோசமாக வாழ்வான் என்று... அந்தக் கணம் இந்தத் திருமணம் அவசியம் தானா என்று அவருக்குத் தோன்றியது...

"இவளுக்கு இத்தனை திமிர் ஆகாது ரதி... என்ன ஒரு ஆணவம்..." சௌந்தர்யா தங்கையிடம் கொந்தளித்தார்...

ஆனால் இது கோபப்படும் விசயம் அல்லவே... அதனால் ரேவதி அமைதி காத்தார்...

"பவிம்மா..."

அவளது பாட்டி பர்வதம் அவளது தோளை ஆதரவாகத் தொட்டு விக்ரம் காலில் விழும்படி கண்களால் சைகை செய்தார்... வாழ்க்கையை வாழ்ந்து பார்த்த அனுபவம் அவரைப் பேத்தியிடம் அப்படிச் செய்யச் சொல்லியது... என்ன இருந்தாலும் கணவன், மனைவி உறவு இல்லாது போகுமா...

வேறுவழியின்றிப் பவித்ரா விக்ரமின் காலில் விழ போனாள்... அதற்காகவே காத்திருந்தார் போன்று வாயெல்லாம் புன்னகையாக இறுமாப்புடன் விக்ரம் அவளைப் பார்த்தான்... அவனது தெனாவெட்டு அவளுக்குக் கோபத்தினை ஏற்படுத்திய போதும் பாட்டி சொன்னதைத் தட்டாது செய்து விட்டு நிமிர்ந்தாள்...

"இப்பவாவது புரிந்ததா...? பெண் ஆணுக்கு அடிமை என்று..." இளக்கரமாய்க் கூறியவனின் உதடுகளில் கேலி புன்னகை நிலைத்திருந்தது...

"காலில் விழுவதால் மட்டுமே பெண் என்பவள் அடிமை ஆகிவிட முடியாது... காலை பிடிக்கும் நாங்கள் அதை வாரி விட ரொம்ப நேரமாகாது... ஐயோ பாவமே போனால் போகுதுன்னு சும்மா விட்டு விட்டேன்... இத்தனை பேர் நிறைந்த சபையில் நீ கால் வாரி விடப்பட்டு மல்லாக்க விழுந்தால் எப்படி இருக்கும் என்று யோசித்துப் பார் விக்ரம்..." என்று முக இறுக்கத்துடன் கேட்டவள்,

"ரொம்பக் கேவலமா இருக்காது..." என்று நக்கலாய் கேட்க...

"என்னடி ரொம்பத் திமிரா பேசுற... ஏலத்தை நீ எடுத்துட்டங்கிற திமிரா...?"

"ஆமாம்... அப்படித்தான் வச்சுக்கோ... அதை வெற்றிகரமா முடிச்ச மாதிரி இதையும் வெற்றிகரமா முடிக்க எனக்கு ஒரு நொடி போதும்... ஆனால் பாவம்ன்னு விடறேன்... எதுவுமே

நானாக விட்டுக் கொடுத்தால் மட்டுமே நீ என்னை ஜெயிக்க முடியும்..." என்று கூறியவள் கெத்தாய் ஒரு பார்வையை அவன் மீது வீசியதில் அவனது முகம் உயிர்ப்பு இழந்து போனது...

பார்வையாளர்களாக அமர்ந்திருக்கும் உறவினர்கள் யாருக்கும் இவர்கள் பேசுவது கேட்காது... ஆனால் அருகில் இருந்த இரு வீட்டாருக்கும் இவர்கள் பேசுவது கேட்டது... இது குறித்து ஆண்கள் பெரிதாக அலட்டி கொள்ளவில்லை... பெண்களின் முகம் தான் இருளடைந்து போனது...

"எல்லாம் சிறப்பா நடந்து முடிஞ்சிருச்சு இராமநாதன்... ரொம்பச் சந்தோசம்..." திருவேங்கடம் இராமநாதனின் கைகளைப் பிடித்துக் கொண்டு சொன்னார்... அதில் ஒருவித ஒட்டாத தன்மையே அதிகம் இருந்தது...

"என்ன சிறப்பா நடந்து முடிஞ்சிருக்கு... பெண் பார்க்கும் படலம் வச்சு பெண்ணுக்கு பாட தெரியுமா, ஆட தெரியுமான்னு கூடக் கேட்கலை... பலியாடு மாதிரி இழுத்துட்டு வந்து மேடையில் உட்கார வச்சிட்டாங்க..." என்று ஜாடைமாடையாக அலுத்துக் கொண்ட விக்ரம் தம்பியிடம்,

"வினோத்... அவரோட பேத்திக்கு பாட தெரியுமா...? ஆட தெரியுமான்னு கேளுடா..."

விக்ரம் சொன்னவுடன் வினோத்தால் அப்படி எல்லாம் எளிதாகக் கேட்டு விட முடியாதபடி திருவேங்கடத்தின் அருவாள் மீசை தடை செய்தது...

"உண்மையில் அவங்களுக்கு இதெல்லாம் தெரியுமோ என்னவோ...?" என்று மதுமதி விக்ரமின் தங்கை கிண்டலாய் தனது வருங்கால அண்ணியைப் பார்த்தாள்...

அவள் நம் நாட்டுப் பரதநாட்டியம், கர்நாடக சங்கீதம் முதல் மேற்கத்திய நடனம், பாட்டு என்று அனைத்தும் கற்று தேர்ந்த சகலகலாவல்லி...

இவர்களது கேலியை கண்டு பவித்ராவின் முகம் இரத்தமாய்ச் சிவந்து போனது அவமானத்தில்... ஏனெனில் அவளுக்குத் தெரிந்த ஒன்றே ஒன்று தொழில் மட்டுமே... அருகிலிருந்த பல்லவியும் பவித்ராவுடன் சேர்ந்து கொண்டு அவர்களை முறைத்து பார்த்தாள்...

"எங்கண்ணாவுக்கு வெஸ்டர்ன் மியூசிக்கில் இருந்து நம் நாட்டு கர்நாடக சங்கீதம் வரை அத்தனையும் அத்துப்படி..." என்றாள் மதுமதி பெருமையாக...

"அக்கா... இவள் ரொம்பத்தான் பீத்திக்கிறா..." என்று பல்லை கடித்தாள் பல்லவி...

பவித்ரா மனதிலும் அந்தக் கோபம் தான் எழுந்தது...

"அண்ணா... நீங்க பாடுங்கண்ணா..." மதுமதி விக்ரமிற்கு எடுத்து கொடுக்க...

"இங்கேயா... எதுக்கு மது...?" என்று அவன் சங்கடமாய் மறுத்தான்...

"ஒண்ணும் தெரியாதவங்களே இவ்வளவு கெத்து காட்டுறப்போ... உங்களுக்கு என்னண்ணா...?" மதுமதி அவனை உசுப்பேத்தி விட்டாள்...

"நீ பாடு விக்ரம்..." என்று இராமநாதனும் பெருமையாகப் பேரனை பாட சொன்னார்... பவித்ராவுக்கு இல்லாத திறமை தனது பேரனுக்கு இருப்பதில் அவருக்கு அத்தனை திருப்தி, கர்வம்...

அடுத்த நொடி யோசியாது விக்ரம் தனது கணீர் குரலில் பாடினான்...

"சுட்டும் விழிச்சுடர்தான் கண்ணம்மா சூரிய சந்திரரோ
வட்டக் கரியவிழி கண்ணம்மா வானக் கருமை கொள்ளோ
பட்டுக் கருநீலப் புடவை படித்த நல் வைரம்
நட்ட நடு நிசியில் தெரியும் நட்சத்திரங்களடி
சோலை மலரொளியோ உனது சுந்தரப் புன்னகைதான்
நீலக் கடலலையே உனது நெஞ்சின் அலைகளடி

கோலக் குயிலோசை உனது குரலின் இனிமையடி
வாழைக் குமரியடி கண்ணம்மா மருவக் காதல் கொண்டேன்

சாத்திரம் பேசுகிறாய் சாத்திரம் ஏதுக்கடி
ஆத்திரம் கொண்டவர்க்கே கண்ணம்மா சாத்திரம் உண்டோடி
மூத்தவர் சம்மதியில் வதுவை முறைகள் பின்பு செய்வோம்
காத்திருப்பேனோடி இது பார் கன்னத்து முத்தம் ஒன்று"

ஏனோதானோ என்று அவனது பாடலை கேட்பதற்காக அவனைப் பார்த்த பவித்ராவின் விழிகளில் ஒரு நொடி ஆச்சிரியம் எழுந்தது... மறுநொடி ஒரு அலட்சிய பார்வையை அவன் புறம் வீசியவள் உதட்டை கேலியாய் சுழித்தாள்...

விக்ரம் பாடி முடித்ததும் பெருமையாகப் பவித்ரா புறம் தனது பார்வையைச் செலுத்தியவன் அவளது அலட்சியமும், கேலியும் கண்டு யோசனையாய் புருவத்தை உயர்த்தினான்...

அதைக் கண்ட பவித்ரா அடிக்குரலில் ரகசியம் பேசுவது போல், "விக்ரமா... என்னால் சிரிப்பை அடக்க முடியவில்லை... ஆனாலும் சரித்திர சாதனை நிகழ்த்திய உன்னைப் பாராட்டாமலும் என்னால் இருக்க முடியவில்லை... வாழ்த்துக்கள் விக்ரமா..." என்று அவனைக் கிண்டல் செய்து பேசியவள் தனது கையை அவன் புறம் நீட்டினாள்...

வஞ்சபுகழ்ச்சியில் புகழ்ந்தவளை கண்டு எரிச்சல் அடைந்தவன், "எதையும் நேரிடையா பேச மாட்டியா...?" என்று பல்லை கடித்தான்...

"எப்போதும் பெண் பார்க்க வரும் போது மணப்பெண் தான் பாடுவாள்... ஆனால் நமது நிச்சய விழாவில் வித்தியாசமாய், சாதனையாய் மணமகன் பாடியிருக்கானே... இது உன் வாழ்நாள் சாதனை அல்லவா விக்ரமா..."

அவள் கூறியது 'வாழ்நாள் சோதனை' என்பது போல் அவனது காதில் விழுந்து தொலைத்தது...

அதற்கு மேல் அங்கிருக்க முடியாதபடி விக்ரம் எழுந்து விட்டான்... கழுத்தில் இருந்த பூமாலையைக் கழட்டி நாற்காலியில் கோபமாய்ப் போட்டவன் தாத்தாவிடம்,

"எனக்கு ஒரு முக்கியமான வேலை இருக்கிறது தாத்தா..." என்று கிளம்பினான்...

அவன் கிளம்புவதைப் பார்த்து பவித்ராவும், "அம்மா... நானும் வேலை வெட்டி இல்லாமல் இங்கே உட்கார்ந்து இருக்கலை... நானும் கிளம்பறேன்..." என்று அவளும் கிளம்பினாள்...

இருவரும் ஒருவரை ஒருவர் முறைத்துக் கொண்டு நட்சத்திர விடுதியை விட்டு வெளியே வந்தார்கள்... தங்களது காரில் ஏறும் வரை இந்த நிலை தொடர்ந்தது... ஓட்டுநரை தவிர்த்து விட்டுத் தாங்களே காரை எடுத்தவர்கள் அதைக் கிளப்பினர்... சாலையில் இறங்கிய பின்னர் விக்ரமின் கார் வேகமாய் அவளை முந்தி கொண்டு சென்றது...

"இதில் மட்டுமே உன்னால் முந்த முடியும்..." என்று முணுமுணுத்து கொண்டவள் நிதானமாகக் காரை ஓட்டி கொண்டு சென்றாள்... அவள் வேகமாய்க் கார் ஓட்டுவதைத் தவிர்ப்பவள்...

********************

அந்தக் கேளிக்கை விருந்தில் வேண்டா வெறுப்பாக அமர்ந்திருந்தான் விக்ரம்... வினோத் உல்லாசமாக உற்சாகமாக அதில் கலந்து கொண்டு நடனமாடி கொண்டிருந்தான்... தொழிலதிபர் ஒருவரின் பிறந்தநாள் விழா அது... காலையில் குடும்பத்தோடு பிறந்தநாளை கொண்டாடியவர், மாலையில் ஆண்களுக்கு என்று இந்தக் கேளிக்கை விருந்தை ஏற்பாடு செய்திருந்தார்...

அதைத் தவிர்க்க முடியாது வருகை தந்திருந்த விக்ரம் கையில் மது கோப்பையுடன் ஓரிடத்தில் அமர்ந்திருந்தான்... அப்போது மகேந்திர வர்மா அவன் அருகில் வந்து அமர்ந்தார்...

"ஹாய் விக்ரம்... எப்படி இருக்க...?"

"ஃபைன் மிஸ்டர். வர்மா..." என்றவன் பதிலுக்கு மரியதைக்காகவாவது அவரிடம் நலம் விசாரிக்கவில்லை...

அதில் அவரது முகம் அவமானத்தில் கருத்துப் போனது...

"உன் எதிரியான பவித்ராவுக்கும் உனக்கும் திருமணமாமே...?" அவர் கேட்டதும் அவனது விழிகள் கூர்மையானது...

"உனக்கு அவளைப் பிடிக்காது... அது போல் தான் அவளுக்கும்... இந்தத் திருமணத்தால் இருவருக்கும் சந்தோசம் இல்லையே... பின்னே எதற்கு இந்தத் திருமணம்...?"

"அதனால்...?" என்று கேள்வி கேட்டவன் அவரை ஊடுருவது போல் பார்த்து வைத்தான்...

"பேசாமல் நீ என் மகளைத் திருமணம் செய்து கொள்... நாம ரெண்டு பேரும் சேர்ந்து பவித்ராவை எதிர்க்கலாம்... அவளை இல்லாது செய்வோம்..."

அவர் சொன்னதும் ஏதோ நகைச்சுவை கேட்டது போல் வாய் விட்டு சிரித்தவன், "அப்படிப் பார்த்தால் நீங்களும் என் எதிரி தான் மிஸ்டர். வர்மா... உங்க பெண்ணைத் திருமணம் செய்தால் மட்டும் நான் எப்படிச் சந்தோசமாக இருப்பேன்...?" என்று புருவம் உயர்த்தி அவரைப் பார்த்து கேட்டவனைக் கண்டு அவரால் பதில் பேச முடியவில்லை...

"நீங்க இப்படி யோசிச்சு பாருங்களேன்... நாங்க ரெண்டு பேரும் சேர்ந்து உங்களை இல்லாமல் ஆக்கினால் எப்படி இருக்கும்...?"

அவன் பேசியதை கேட்டு அவரது முகம் செத்துப் போனது...

"எங்களுக்கு நிச்சயம் முடிந்து விட்டது... இன்னும் ஒரு மாதத்தில் திருமணம்... இப்பவே அவள் எனது மனைவி தான்... இனிமேல் இப்படிப்பட்ட அபத்தமான பேச்சு உங்களை மாதிரியான பெரியவர் வாயில் இருந்து வர வேண்டாம்... வரவும் கூடாது... மீறி வந்தால்..." என்று இடை நிறுத்தியவன்,

"நான் மனுசனா இருக்க மாட்டேன்..." என்று சீறிய விக்ரம் அடுத்த நொடி அங்கிருந்து எழுந்து சென்று விட்டான்...

மகேந்திர வர்மா அதற்கு எல்லாம் அசரவில்லை...

'நீ கேட்காவிட்டால் போ... நான் பவித்ராவிடம் பேசி கொள்கிறேன்...' என்று மனதில் நினைத்தவர் பவித்ராவிடம் பேச எண்ணினார்...

அவர் நினைத்தது போல் ஒரு திருமண நிகழ்ச்சியில் அவளிடம் பேசுவதற்கான வாய்ப்பு அவருக்குக் கிடைத்தது...

"அம்மாடி பவித்ரா... நல்லாயிருக்கியா...?"

"எனக்கென்ன மிஸ்டர். வர்மா... ரொம்ப நல்லாயிருக்கிறேன்..."

அவளும் விக்ரமை போல் அவரின் நலத்தை விசாரிக்கவில்லை... எதில் ஒற்றுமை இருக்கிறதோ இல்லையோ திமிரில் மட்டும் இந்த இரண்டும் ஒற்றுமையாக இருக்கிறது என்று அவர் மனதில் கறுவியபடி வெளியில் ஈயென இளித்து வைத்தார்...

"அப்புறம் விக்ரம் பத்தி நான் கேள்விப்பட்டது எதுவும் சரியாப்படலையேம்மா..." என்றவரை கண்டு அவளது விழிகள் சுருங்கியது...

"அவன் ஒரு சாமியார் மாதிரின்னு கேள்விப்பட்டேன்... அவனைக் கட்டிக்கிட்டு நீ என்ன சுகத்தைக் காண போகிற... பேசாம ஒண்ணு பண்ணு... நீ என் மகனை கல்யாணம் பண்ணிக்கோ... நாம ரெண்டு பேரும் சேர்ந்து விக்ரமுக்கு

சிம்மசொப்பனமா விளங்குவோம்..." என்றவரை துச்சமாகப் பார்த்தாள் பவித்ரா...

"என்ன சொன்னீங்க விக்ரம் சாமியார்ன்னா... ஒருத்தன் நல்லவனா இருந்தால் இப்படித்தான் பேசுவீங்களா...? அவன் தனக்கு வர போகும் மனைவிக்காகத் தன்னோட கற்பை காப்பாத்தி வச்சியிருக்கிறது உங்களுக்கு எல்லாம் கேலியா இருக்கா...?" என்று கோபமாய் இரைந்தவள்,

"மிஸ்டர். வர்மா... அன்னைக்கு ஏலம் உங்க கைக்குப் போகாமல் இருப்பதற்காகத் தான் நான் அதை எடுத்தேன்... இல்லைன்னா நிச்சயம் ஓரளவிற்கு மேல் விக்ரமிற்கு விட்டு கொடுத்துட்டுப் போயிருப்பேன்... எங்களுக்கு இடையில் ஆயிரம் போட்டிகள் இருக்கும்... ஆனால் எங்களுக்கு இடையில் உங்களை வர நாங்க விட மாட்டோம்... நீங்க நினைச்சாலும் அது முடியாது..." என்றவள் தனது கையிலிருந்த நிச்சய மோதிரத்தை உருட்டியபடி,

"இப்பவே நான் பாதி மிஸஸ். பவித்ரா விக்ரம்... இனிமேல் என்னிடம் இப்படி அரைவேக்காடுத்தனமா பேசாதீங்க... எங்க கல்யாண பத்திரிக்கை உங்களுக்கு வந்து சேரும்... வந்து விருந்து சாப்பிட்டுட்டு போங்க..." என்று அவள் அழுத்தம் திருத்தமாய் உரைத்து விட்டுக் கம்பீரமாக எழுந்து சென்று விட்டாள்...

வருங்காலத்தில் இரண்டு பேரும் இணைந்து தனக்கு மிகப் பெரிய எதிரிகளாக உருவெடுக்கப் போகிறார்கள் என்று நினைத்த வர்மாவிற்கு அப்போதே தலைவலிக்க ஆரம்பித்து விட்டது...

எதிரிகளாக இருந்தாலும் எண்ணங்களில் இருவரும் ஒன்றே... ஏக மனதினர் இடையே ஏக பொருத்தம் இருக்குமாம்...

விக்ரமும், பவித்ராவும் அத்தகைய பொருத்தம் உடையவர்களாக இருந்தனர்...!!!

மொழி பேசும்...!!!

## விழி : 4

விமானம் கிளம்புவதற்கு அரை மணி நேரத்திற்கு முன் தான் பவித்ரா அவசரமாக விமான நிலைத்திற்குள் நுழைந்தாள்... 'ஃபார்மாலிட்டீஸ்' எல்லாம் முடிந்து அவள் விமானத்திற்குள் நுழைந்த போது அவளது பக்கத்து இருக்கையில் விக்ரம் அமர்ந்திருந்தான்... அதுவும் ஜன்னலோரமாய்... அவனைக் கண்டதும் அவளுக்கு எப்போதும் போல் இப்போதும் கடுப்பாகியது...

"மிஸ்டர்... எழுந்து இந்தச் சீட்டுக்கு வாங்க..." என்று அவனைச் சொடக்கு போட்டு அழைத்தாள்...

அவளது அழைப்பு கேட்டுச் சாவகாசமாகத் திரும்பி பார்த்தவன், "அது என்ன எப்ப பாரு லேடிஸ்ன்னா ஜன்னல் பக்கமா தான் உட்காரணுமா...? ஆம்பிளைங்க விட்டுக் கொடுத்த காலம் எல்லாம் மலையேறி போச்சு..." என்றான் நக்கலாய்...

"அடேய் லூசு விக்ரமா... நீ உட்கார்ந்து இருக்கிறது என்னுடைய சீட்டுடா..." என்றவள் பயணச் சீட்டில் இருந்த எண்ணை அவனிடம் காண்பித்தாள்...

அதில் முகம் சுருங்கி போன விக்ரம் ஒன்றும் பேசாது எழுந்து இருக்கை மாற்றி அமர்ந்தான்... இப்போது அவள் அவனைத் தாண்டி தான் உள்ளே செல்ல வேண்டும்... அப்படிச் செல்ல அவள் எத்தனித்த போது அவன்,

"ஏய்... இரு இரு..." என்று கத்தி அவளை நிறுத்தியவன் இருக்கையை விட்டு எழுந்து தள்ளி நின்று கொண்டான்...

அவள் அவன் மீது உரசி விடுவாள் என்று எண்ணி அவன் முன் ஜாக்கிரதையாக எழுந்து நின்றது கண்டு அவளுக்கு அத்தனை கடுப்பாக இருந்தது... அவனை முறைத்துக் கொண்டே அவள் இருக்கையில் சென்று அமர்ந்தாள்... அதன் பின்னரே அவன் தனது இருக்கையில் அமர்ந்தான்...

"தொடாம தள்ளி உட்கார்..." என்று வேறு சொல்லி இன்னமும் அவளைக் கடுப்படித்தான்...

"நீ சபரி மலைக்கு மாலை போட்டு இருக்கியா...?"

"இன்னும் இரண்டு நாளில் கல்யாணத்தை வச்சிக்கிட்டு கேட்கிற கேள்வியைப் பார்..."

அவளது கேள்வி அவனுக்குக் கடுப்பாக இருந்தது... அதைக் கேட்டு நக்கலாகச் சிரித்தவள்,

"அதனால் தான் கேட்கிறேன்..."

அவள் கூறியதை கேட்டு அவனது விழிகள் இடுங்கியது... பின் அது இகழ்ச்சியாய் மலர்ந்தது...

"ஹ... உன்னை எல்லாம் நான் பெண்கள் லிஸ்ட்டில் சேர்ப்பது இல்லை..."

"விக்ரம்... உன்னை..." என்று பல்லை கடித்தவளை கண்டு அவனது புன்னகை பெரிதாக விரிந்தது...

"இப்படிப் பட்டிக்காடு போல் புடவை கட்டியிருக்கும் உன்னை எல்லாம் நான் பார்த்து ரசிக்க முடியுமா...? என்னோட ரசனையே வேறு... அல்ட்ரா மாடர்ன்னா இருக்கும் பெண்களைத் தான் எனக்கு ரொம்பப் பிடிக்கும்..." என்றான் கண்களில் ரசனை வழிய...

அதில் அவளது மனம் பெரிதாக அடிப்பட்டுப் போனது... அவனைப் போன்று எல்லாம் கல் மனதாய் அவளால் இருக்க முடியவில்லை... தொழிலில் அவள் எல்லோருக்கும் சிம்ம சொப்பனமாக விளங்கினாலும் மனதிற்குள் அவள் சாதாரணப் பெண் தான்... அன்பை வேண்டி நிற்கும் அபலை பெண் தான்... கணவன், குழந்தை என்று அவளுக்கு என்று ஒரு கனவு வாழ்க்கை இருக்கிறது...

அந்தக் கனவை எல்லாம் அவளது தாத்தா கலைத்து விட்டார்... அதை விடக் கணவனாக வர போகும் அவளது தொழில் எதிரி விக்ரம் பேசியது மனதிற்கு மிகவும் வருத்தமாக இருந்தது... ஆனாலும் அதை வெளிக்காட்டி கொள்ளாது நிமிர்வாய் அவனைப் பார்த்தாள்...

"கல்யாண பத்திரிக்கையில் கூட உன் பெயரின் பின்னே வெறும் பிபிஏன்னு தான் போட்டிருக்கு... ஆனால் என் பெயரின் பின்னே பார்த்தியா... எத்தனை டிகிரி போட்டு இருக்கிறது என்று..." அவன் தற்பெருமை அடித்தான்...

"இப்படிப்பட்ட நீ எனக்குக் கொஞ்சமாவது ஈடாகுவாயா...?" என்று அவளைக் கண்டு அவன் கெக்கெலித்தான்...

அவனது தற்பெருமைக்கு உடனே அடி கொடுக்காவிட்டால் அவள் பவித்ரா சத்யமூர்த்தி இல்லையே...

"இந்த வெறும் பிபிஏ கிட்டே தான் மெத்த படிச்ச நீ தோத்து போய்க்கிட்டு இருக்க... இந்தத் தொழில் சாம்ராஜ்யத்தில் உன் கண்ணில் விரல் விட்டு ஆட்டுவதும் இந்த வெறும் பிபிஏ தான்..." என்றாள் கர்வமாக...

"இந்தத் திமிர் தான்டி உன்னை வெறுக்க வைக்குது... என் ரசனைக்கு ஏத்தவள் நீ கிடையாது... இவ்வளவு ஏன் எனக்குக் கொஞ்சமும் பொருத்தம் இல்லாதவள் நீ..." என்று அவளை வார்த்தையால் கடித்துக் குதறியவன் அவளைப் பார்க்க பிடிக்காதவனாய் கண்களை மூடி இருக்கையில் சாய்ந்து கொண்டான்...

"பேசிக்கிட்டு இருக்கும் போதே எதுக்குக் கோழை மாதிரி கண்ணை மூடுற...?"

அவளது பேச்சில் கண்ணைத் திறந்தவன், "உன் கூடப் பேச பிடிக்கலைன்னு அர்த்தம்..." என்றவன் மீண்டும் விழிகளை மூடி கொண்டான்... அவள் கடுப்புடன் ஜன்னல் பக்கமாய்த் திரும்பி கொண்டாள்...

உண்மையில் விக்ரம் மிகவும் களைத்துப் போயிருந்தான்... நேற்று இரவு முழுவதும் அவனுக்கு வேலை இருந்தது... முழித்திருந்து வேலை செய்தவன் காலையிலும் தூங்காது நிறுவனத்திற்கு ஓடி விட்டான்... இது போன்ற பயணத்தின் போது தான் அவன் சற்று ஓய்வு எடுப்பது...

சிறிது நேரத்தில் பவித்ரா தோள் மீது விக்ரமின் தலை சாய்ந்தது...

'ம்க்கும்... 'என்னைத் தொட கூடாது'ன்னு பேச்சு மட்டும் வாய் கிழிய பேச வேண்டியது... இதுக்குப் பெயர் என்னடா இடியட்...' மனதிற்குள் அவனைத் தாளித்தபடி அங்கிருந்த பத்திரிக்கையைக் கொண்டு அவனது தலையை நிமிர்த்தி விட்டாள்...

அதைக் கவனித்த விமானத்தின் பணிப்பெண், "பாவம் தூங்குறாரே மேடம்... விடுங்க..."

"அது எதுக்கு...?" என்று கடுப்பாகி விட்டாள் பவித்ரா...

"சார் எவ்வளவு ஹேண்ட்சம்மா இருக்காரு... எனக்கு இப்படி ஒரு சான்ஸ் கிடைச்சா மிஸ் பண்ணவே மாட்டேன்... இவரைக் கல்யாணம் பண்ணிக்கப் போறவங்க கொடுத்து வச்சவங்க..."

வசீகரமான விக்ரமை பார்த்து அவள் ஜொள்ளினாள்...

"அந்தக் கொடுத்து வச்ச ஜென்மம் நான் தான்..." என்ற எரிச்சலுடன் மொழிந்த பவித்ராவை கண்டு அவள் திகைப்பில் வாய் பிளந்தாள்...

"நானே சொல்றேன்... இவனை நீ ப்ராக்கெட் போட்டுக்கோ... உனக்குப் புண்ணியமா போகும்..."

இவளுக்கு மூளை எதுவும் குழம்பி போய் விட்டதோ என்று பயந்து போன விமானப் பணிப்பெண் அங்கிருந்து ஓடி விட்டாள்...

'இவன் பெரிய மன்மதன்... இவனுக்கு எல்லாம் இது ஓவர் சீன் தான்...' என்று அவனை மனதிற்குள் திட்டியபடி அமர்ந்திருந்தாள் பவித்ரா...

சென்றடைய வேண்டிய விமான நிலையம் வந்ததும் விழிகளைத் திறந்த விக்ரம் இறங்குவதற்கு ஆயத்தமாகத் தனது மடிகணினி பையை எடுத்தான்... அப்போது அந்த விமானப் பணிப்பெண் இவர்களைத் தாண்டி செல்ல பவித்ரா அவளைக் கூப்பிட்டாள்... அவள் திருதிருவென விழித்தபடி அங்கு வந்து நின்றாள்...

"உன் மனதில் உள்ளதை இவனிடம் சொல்லலையா...?"

"சாரி மேம்... அது ஏதோ தெரியாம..." அவள் பயந்து போய்த் திக்கினாள்...

"என்ன என் கிட்ட சொல்லணும்...?" இடையில் புகுந்தான் விக்ரம்...

"அது... இவங்களுக்கு உன்னை ரொம்பப் பிடிச்சியிருக்காம்... நீ ஹேண்ட்சம்மா இருக்கியாம்... அதனால் கல்யாணம் பண்ணிக்கலாமான்னு கேட்கிறாங்க..."

பவித்ரா சொன்னதும் விக்ரமின் கோபம் அவளிடம் இருந்து அந்தப் பெண்ணிடம் திரும்பியது...

"ஹேய்... உன் மனசில் என்ன நினைச்சிக்கிட்டு இருக்க...? இங்கே உன் வேலை என்ன...? எடுபிடி வேலை தானே... அதை மட்டும் ஒழுங்கா பாரு... எவன்டா பணக்காரன் வருவான் வளைச்சு போடலாம்ன்னு அலையாதே... உன்னை மாதிரி ஒன்றிரண்டு பேரால் தான் எல்லா ஏர்ஹோஸ்டஸையும் தப்பா பேசுறாங்க..." என்று கோபத்தில் படபடத்தவன் அங்கிருந்து எழுந்து சென்று விட்டான்...

அந்தப் பெண் பேயறைந்தது போல் அதிர்ந்து போய் நின்றாள்... அதைக் கண்டு சிரித்தபடி எழுந்த பவித்ரா,

"இப்போ சொல்லு... அவனைக் கல்யாணம் பண்ணிக்கப் போற நான் கொடுத்து வச்சவளா...?" என்று கேட்க...

"நீங்க ரொம்பப் பாவம்ங்க..." என்று அவள் இவளை பரிதாபமாய்ப் பார்த்தாள்...

அவளது பரிதாபம் பவித்ராவுக்குத் தேவையில்லை போலும்... அதனால் அலட்சியமாய் அவளைப் பார்த்தவள்,

"உண்மையில் அவனைக் கல்யாணம் பண்ணிக்கப் போகிற நான் கொடுத்து வச்சவள் தான்... நீ ஒரு அழகான பெண் தான்... அதை யாருமே மறுக்க முடியாது...

இங்கிருந்த முக்கால்வாசி பேர் உன்னைப் பார்த்து ஜொள்ளு விட்டாங்க... அதை நானே பார்க்க தான் செஞ்சேன்... ஆனா இவன் மட்டும் உன்னைப் பார்க்கலை... அது தான் இவன்... என்ன புரிந்ததா...?"

அவளுக்கு ஒன்றுமே புரியவில்லை...இரண்டுமே அரை லூசுங்க என்று நினைத்துக் கொண்டு சும்மா தலையாட்டி வைத்தாள்... பவித்ரா அவளை ஏற இறங்க பார்த்தபடி விமானத்தை விட்டு வெளியில் வந்தாள்... நவநாகரீக உடையில், கவர்ச்சியாய் அழகாய் இருந்த அந்தப் பெண்ணால் விக்ரமை ஏன் கவர முடியவில்லை...? என்று அவள் மனதிற்குள் ஆராய்ந்து கொண்டிருந்தாள்...

"உனக்காக எத்தனை நேரம் காத்திருப்பது...? இப்படித் தான் ஆடி அசைஞ்சு வருவியா...?" என்று கடுகாய் பொரிந்தபடி நின்றிருந்த விக்ரமை கண்டு அவளுக்கு எரிச்சலாக இருந்தது...

"உன்னை யார் காத்திருக்கச் சொன்னது...?" பதிலுக்கு அவளும் அவனிடம் காய்ந்தாள்...

"எல்லாம் உன் தாத்தனும், என் தாத்தனும் தான்... ரெண்டு கிழடுங்களும் சேர்ந்துக்கிட்டு என் உயிரை வாங்குதுங்க..."

"என் உயிரையும் சேர்த்து தான்..." என்று அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

இருவருக்கும் சேர்த்து ஒரே காரை அனுப்பி இருந்தனர் இரு வீட்டாரும்... அதற்கு விக்ரம் கேட்டதற்கு,

"கல்யாணம் பண்ணிக்கப் போற நீங்க ரெண்டு பேரும் தனித் தனியா வந்தா நல்லா இருக்காது..." என்று கூறி அவனது வாயை அடைத்து விட்டனர்...

ஓட்டுநர் பயணப் பொதிகளைக் காரில் எடுத்து வைக்கப் பவித்ரா காரின் பின்னால் ஏறினாள்... விக்ரம் முன்னால் ஏற போனவன் பின் என்ன நினைத்தானோ பின்னால் ஏறிக் கொண்டான்...

"நீ முன்னால் உட்காருவதற்கு என்ன...?" என்று அவள் சிடுசிடுக்க...

"நான் ஒண்ணும் டிரைவர் கிடையாது..." என்று கோபமாய்ப் பதிலளித்தவன் மறுபுறம் அமர்ந்து கொண்டான்...

விமான நிலையத்தில் இருந்து இருபது கிலோ மீட்டர் தூரத்தில் அவர்களது சொந்த ஊர் இருக்கிறது... அங்கு வைத்து தான் இவர்களுக்குத் திருமணம் நடைபெற இருக்கிறது... இரு வீட்டினரும் பத்து நாட்களுக்கு முன்னரே இங்கு வந்து விட்டனர்... மணமகனும், மணமகளும் தொழிலை காரணம் காட்டி இப்போது தான் வந்திருக்கின்றனர்...

ஊர் நெருங்கியதும் பவித்ரா ஏதோ சொல்ல வாயெடுக்கப் போன போது விக்ரம் ஓட்டுநரிடம்,

"டிரைவர், முதல்ல மேடமோட வீட்டுக்கு போங்க..." என்றதும் அவளது விழிகள் அவனை ஆச்சிரியமாய்ப் பார்த்தது... ஆனால் அவன் கண்டு கொள்வானோ என்று அவசரமாய்த் தனது பார்வையைத் திருப்பிக் கொண்டாள்...

அவளது வீட்டின் முன் கார் நின்றதும் அவளோடு விக்ரமும் சேர்ந்து இறங்கினான்... அதற்குள் திருவேங்கடமும், விஜயமூர்த்தியும் அங்கு வந்து விட்டனர்...

"வீட்டுக்கு வாங்க மாப்பிள்ளை..." என்று அவனை வரவேற்க...

இத்தனை நாள் பகையாய் பார்த்த வீட்டினரோடு சட்டென்று பழக முடியாது திணறிய விக்ரம்,

"எப்படியும் கல்யாணம் முடிந்து இங்கு வர தானே போறேன்... இப்போ நான் கிளம்பறேன்..." என்று மரியாதையாய் மறுத்து விட்டு அவன் கிளம்பி சென்று விட்டான்...

விக்ரமை கண்ட பிறகு தான் ரேவதிக்கு நிம்மதியாக இருந்தது... எங்கே விக்ரம் வராது இருந்து விடுவானோ

என்று அவர் பயந்து போயிருந்தார்...

"தூங்கி ரெஸ்ட் எடுப்பா... சாயங்காலம் பொண்ணுக்கு நலுங்கு வைக்கப் போகணும்..."

"அவளுக்கு நலுங்கு வைக்க நான் எதுக்கும்மா...? நீங்க மட்டும் போயிட்டு வாங்க..." என்றபடி அவன் தனது அறைக்குச் சென்றான்...

"நீ தானே மாப்பிள்ளை... நீ வராமல் இருந்தால் நல்லாயிருக்காது விக்ரம்..." என்ற அன்னையைக் கண்டு,

"சரி சரி வந்து தொலைக்கிறேன்..." என்றான் சலிப்பாய்...

"விக்ரம்..." அன்னையின் அழைப்பில் அவன் அவரைத் திரும்பி பார்த்தான்...

"உனக்கு இந்தக் கல்யாணத்தில் விருப்பம் இல்லையாப்பா...?"

"இப்பவாவது இதைக் கேட்கணும்ன்னு உங்களுக்குத் தோணிச்சே... ரொம்பச் சந்தோசம்..." என்றான் அவன் நக்கலாய்...

"விக்ரம்..." அவர் திகைத்து போய் மகனை பார்த்தார்...

"பொண்ணாம்மா அவ...? சரியான சண்டிராணி... அப்படிப்பட்டவ கூட என்னால் எப்படி நிம்மதியா வாழ முடியும்...? எதைப் பத்தியும் யோசிக்காம இப்படி ஒரு கல்யாணம் அவசியம் தானா...?"

மகனை தீர்க்கமாய்ப் பார்த்த அவனது அன்னை, "இது மாதிரி பவியும் நினைத்தால்...?"

அதில் அவன் திகைத்து போய் அன்னையைப் பார்த்தான்...

"ஆம்பளை என்பதால் வாய்க்கு வந்ததைப் பேசாதே விக்ரம்... அந்தப் பொண்ணுக்கும் உன்னை மாதிரி நிறைய ஆசைகள் இருக்கலாம்... ஆனால் அதை எல்லாம் விட்டுட்டு பெரியவங்க சொன்னாங்கன்னு தான் உன்னைக்

கல்யாணம் பண்ண சம்மதிச்சு இருக்கிறாள்... இப்படி ரெண்டு பேரும் வார்த்தைகளை அள்ளி வீசிக்கிட்டு இருந்தால் சீக்கிரமே கல்யாண வாழ்க்கை சலித்துப் போய் விடும்... இந்தக் கல்யாணம் இன்னையோட முடிஞ்சு போற விசயம் இல்லை... ஆயிரங்காலத்து பயிர் விக்ரம்... உன் ஆயுள் வரைக்கும் அவள் உன்னோடு வரும் பந்தம்... உன் பகையைத் தள்ளி வச்சிட்டு அவளை உன் மனைவியா சொந்தத்துடன் பார்..."

அவனது அன்னை ஒரு போதும் அவனிடத்தில் இப்படிக் கண்டிப்புடன் பேசியது இல்லை... இன்று ஏன் இப்படிப் பேசுகிறார் என்று தெரியாது அவன் விழித்தான்...

"பெண் மனம் ரொம்ப ஆழமானது விக்ரம்... வார்த்தையால் பவியோட மனசை காயப்படுத்தி உன்னோட வாழ்க்கையைச் சிக்கலாக்கிக்காதே..."

"அம்மா... இன்னைக்கு உங்களுக்கு என்னாச்சு...?" என்று புரியாது தன்னைப் பார்த்த மகனை கண்டு சிரித்தவர்,

"அனுபவசாலி சொன்னால் கேட்டுக்கணும் விக்ரம்... இப்படி ஆராயக் கூடாது..." என்க...

அவரைக் கூர்ந்து கவனித்தவனுக்கு அப்போது தான் அது உறைத்தது... அவரது சிரிப்பில் ஜீவனில்லை என்பது... ஏன்...???

"ரதி... அங்கே என்ன பண்ணிக்கிட்டு இருக்க... இங்கே எத்தனை வேலையிருக்கு...? மசமசன்னு ஒரு இடத்தில் நிக்காம இங்கே வா..."

"இதோ வர்றேன்க்கா..."

தனது வயதினை மறந்தவராய் அங்கிருந்து விரைந்து சென்ற அன்னையை அவன் யோசனையாகப் பார்த்தான்... எதுவோ சரியில்லை என்று அவனது மனதிற்குத் தோன்றியது... ஆனால் அது என்ன என்று தான் அவனுக்குத் தெரியவில்லை...

அதற்கு மேல் ஓய்வு எடுக்க விரும்பாது அவன் அறையை விட்டு வெளியில் வந்தான்... கூடத்தில் இருந்த ஊஞ்சலில் அமர்ந்தவன் விழிகளால் அன்னையைத் தொடர்ந்தான்... அவனது பெரியன்னை எந்தவொரு வேலையையும் செய்யாது அன்னையை அதிகாரமாய் வேலை ஏவி கொண்டிருக்க அவரோ அக்கா சொன்னதைப் பணிவுடன் கேட்டு அப்படியே நடந்தார்...

இத்தனை நாளாய் அவன் இதை எல்லாம் கவனித்துப் பார்த்தது இல்லை... விவரம் தெரிந்ததில் இருந்து அவன் படித்தது எல்லாம் விடுதியில் தங்கி தான்... படித்து முடித்து வந்ததும் தொழிலை கையில் எடுத்தவன் அப்படியே அதில் மூழ்கி போனான் யாரையும் கவனியாது...

சகோதரிகள் இருவரும் மனமொத்து தான் தனது தந்தையுடன் வாழ்ந்து வருகிறார்கள் என்று இது வரை அவன் நினைத்திருந்தான்... ஆனால் இன்று அவனது கண்களுக்கு எல்லாமே வித்தியாசமாகப் பட்டது...

அப்போது செளந்தர்யா அவனது அருகில் வந்து அமர்ந்தார்...

"விக்கி... எப்படி இருக்கப்பா...?"

"எனக்கு என்ன பெரியம்மா நல்லா இருக்கேன்..." என்றவனது விழிகள் தாயை சுற்றி வந்தது...

சமையல் வேலையில் இருந்து வெளிவேலைகள் வரை அனைத்தையும் ஒற்றை ஆளாய் ஓடி ஓடி கவனித்த அன்னையைக் கண்டு அவனுக்கு இரக்கமாக இருந்தது...

"விக்கி... இன்னும் இரண்டு நாளோடு உன்னோட சுதந்திரம் பறி போகப் போவதை நினைச்சா எனக்குப் பக்குன்னு இருக்கு..." என்றவரை ஒன்றும் பேசாது வெறித்துப் பார்த்தான் அவன்...

"நிச்சயதார்த்தம் அன்னைக்குப் பார்த்த தானே பவி பண்ணிய அட்டூழியத்தை... முதல்லேயே அவளை அடக்கி வச்சிரு... இல்லை அவள் உன்னை மீறி போய் விடுவாள்...

பார்த்து இருந்துக்கோ... ஏதோ பெரியவள் மனசுக்கு தோணியதை உன் கிட்ட சொன்னேன்..."

தனது அன்னை பேசியதற்கும் பெரியன்னை பேசியதற்கும் தான் எத்தனை வித்தியாசங்கள்... இதில் யாருக்கு அவன் மீது அதிக அக்கறை இருக்கிறது...? அவனுக்குச் சிரிப்பு எழுந்தது... கஷ்டப்பட்டு அடக்கி கொண்டான்...

"அதெல்லாம் நான் பார்த்துக்கிறேன் பெரியம்மா..." என்று புன்னகைத்தவன்,

"அம்மாவுக்கு ஒண்ணுமே தெரியாது... உங்க அளவுக்கு விவரம் பத்தாது பெரியம்மா... நீங்க தான் என்னோட கல்யாணத்தை முன்னே இருந்து நடத்தணும்... அங்கே வாசலை பாருங்க அம்மா சொதப்பிக்கிட்டு இருக்கிறதை... அந்தச் சிவப்பு பூவுக்குப் பதிலா எந்தப் பூ கட்டினால் நல்லாயிருக்கும்ன்னு நீங்களே சொல்லுங்க...?"

"வெள்ளை பூ..."

"சரியா சொன்னீங்க பெரியம்மா... அதைத் தான் நானும் நினைச்சேன்... பார்த்தீங்களா அம்மாவுக்கு ஒண்ணுமே தெரியலை...?" என்று அவன் வேண்டுமென்றே அலுத்துக் கொண்டான்...

"ஆமாம் விக்கி... அவளுக்கு ஒண்ணுமே தெரியாது... இரு, நான் போய் என்னன்னு பார்க்கிறேன்..." என்ற சௌந்தர்யா அங்கே சென்று தங்கையிடம் ஏதோ சொல்லி உள்ளே அனுப்பியவர் தானே அங்கு நின்று வேலை செய்ய ஆரம்பித்தார்...

"அம்மா..." தன்னைக் கடந்து உள்ளே சென்ற அன்னையை அழைத்தான் மகன்...

"என்ன விக்ரம்...?" வாஞ்சையுடன் கேட்ட தாயை பார்த்தவனுக்கு அவரைத் தான் சரியாகக் கவனிக்கவில்லையோ என்று ஒரே குற்றவுணர்வாக இருந்தது... அவரது மனதில் ஏதோ குறை இருக்கிறது... ஆனால் அதை எல்லாம் தனது புன்னகையால் சமாளிக்கும்

வித்தை அவருக்குத் தெரிந்திருக்கிறது என்பது அவனுக்கு நன்கு புரிந்தது...

"இங்கே உட்காருங்க..." என்று அவரை ஊஞ்சலில் அமர்த்தியவன் உள்ளே சென்றான்... ரேவதி ஒன்றும் புரியாது மகன் செல்வதைப் பார்த்தபடி அமர்ந்திருந்தார்... அவன் திரும்பி வரும் போது அவனது கையில் பழச்சாறு அடங்கிய குவளை இருந்தது...

"இதைக் குடிங்கம்மா..."

இத்தனை வருடங்களில் அவர் கேட்கும் முதல் அன்பான வார்த்தை இது... அவரது கண்கள் கலங்கியது...

"நீ தான் கல்யாண மாப்பிள்ளை... நீ குடிப்பா..."

"கல்யாண மாப்பிள்ளை எனக்கு என்ன ஜம்முன்னு இருக்கேன்... அவனோட அம்மா நீங்க தான் டயர்டா இருக்கீங்க... அதனால் நீங்க குடிங்க..."

அவரிடம் கொடுத்தவன் அவர் அருகில் அமர்ந்து அவரது கையைப் பிடித்தபடி புன்னகையுடன் பேசி கொண்டிருந்தான்... அதைச் சௌந்தர்யா கவனித்து விட்டார்... அவரது முகம் அப்படி ஒரு கோபத்தினைப் பிரதிபலித்தது...

அங்கு வந்தும் பொறுப்பு இல்லாமல் நண்பர்களோடு சீட்டு விளையாடியபடி அரட்டை கச்சேரியில் ஈடுபட்டு இருந்த கணவனைக் கண்டு அவருக்கு அப்படி ஒரு எரிச்சல் வந்தது என்றால், கிராமத்தில் கிடைத்த கள்ளை குடித்து விட்டுப் போதையில் கண்கள் சிவக்க நின்றிருந்த வினோத்தை கண்டு அப்படி ஒரு ஆத்திரம் வந்தது... ஆனாலும் எதையும் வெளிக்காட்டி கொள்ளாதவாறு அடக்கி கொண்டார்... பெரியவர் முன் அவரது ஆத்திரம் எதுவும் எடுபடாது என்பது அவருக்கு நன்கு தெரியும்...

"பவிம்மா, கையில் மருதாணி வச்சுக்கோம்மா... இன்னைக்கு நலுங்கு இருக்கு இல்லையா...?"

"அம்மா... அதான் இன்னும் இரண்டு நாளில் கல்யாணம் நடக்கப் போகுதே அப்புறம் எதுக்கு இந்த நலுங்கு எல்லாம்..." அவளுக்கு எரிச்சலாக இருந்தது...

"இது ஒரு சம்பிரதாயம் கண்ணு... மாப்பிள்ளை வீட்டில் உன்னைப் பார்க்காதவங்க எல்லாம் இன்னைக்கு உன்னைப் பார்க்க வருவாங்க..." என்று பாட்டி பர்வதம் சொல்ல...

வேறுவழியின்றிப் பவித்ரா அழகு நிலையத்தில் இருந்து வந்த பெண்ணிடம் தனது கைகளை நீட்டினாள்...

மாலையில் அழகுற தயாராகி இருந்த மகளைக் கண்டு கல்பனாவின் விழிகளில் நீர் நிறைந்தது... இதனைப் பார்க்க கணவருக்குக் கொடுத்து வைக்கவில்லையே என்று...

"அக்கா... மாமாவோட ஆசிர்வாதம் எப்பவும் நம்ம பொண்ணுக்கு உண்டு..." என்று கூறி நர்மதா அவரைத் தேற்றினார்...

அடுத்தச் சில மணி நேரத்தில் மாப்பிள்ளை வீட்டில் இருந்து எல்லோரும் வந்து விட்டிருந்தனர்... விக்ரமும் உடன் வந்திருந்தான்... கால் மேல் கால் போட்டபடி மாப்பிள்ளை தோரணையுடன் அவன் தனது தாத்தா இராமநாதன் அருகில் அமர்ந்து கொண்டு இந்த நிகழ்ச்சியை வேடிக்கை பார்த்தான்...

அலங்காரத்தில் அடக்க ஒடுக்கமாக அமர்ந்திருந்த பவித்ராவிற்கு அவனது தோரணை கண்டு எரிச்சலாக இருந்தது...

'உட்கார்ந்து இருக்கிறதை பார்... பெரிய மாடல்ன்னு மனசுக்குள் நினைப்பு...' மனதில் அவனைத் திட்டினாள்...

'சண்டிராணி இப்படிச் சாந்தசொரூபியா இருக்காளே... உலக அதிசயம் தான்...' மனதில் பவித்ராவை பற்றி ஆச்சிரியமாக நினைத்தான் விக்ரம்...

எல்லோரும் நலுங்கு வைத்ததும் கடைசியாக விக்ரமை அழைத்தனர்...

"நான் எதுக்கு...?" என்று அவன் சங்கோஜத்தில் மறுத்தான்...

"விக்ரம்... வாப்பா..." ரேவதி மகனை அழைக்க...

"ரதி நீ எதுக்கு விக்கியை கூப்பிடற...? அவன் தான் சாமியார்ன்னு உனக்குத் தெரியுமே... அவனைப் போய்க் கூப்பிட்டுக்கிட்டு... என்னைக் கேட்டால் அவனுக்குக் கல்யாணமே பண்ணி வைக்க வேண்டாம் என்பேன்..."

சௌந்தர்யா அடிக்குரலில் தங்கையிடம் முணுமுணுத்தார்... பாம்பு செவியனான விக்ரம் காதில் அது நன்கு விழுந்து விட்டது... அடுத்த நொடி மனதில் உறுதி எடுத்தவனாய் அவன் நாற்காலியில் இருந்து எழுந்தான்...

"விக்கி... நீ உட்காருப்பா... உனக்குப் பிடிக்காததை நீ செய்ய வேண்டாம்..." என்று சௌந்தர்யா அன்பொழுக அவனைத் தடுத்தார்...

"பிடிக்கலைன்னு நான் சொல்லலையே பெரியம்மா..." என்று அவரைப் பார்த்து புன்னகையுடன் கூறியவன் பவித்ராவை நோக்கி அடி எடுத்து வைத்தான்...

அழுத்தமான நடையுடன், முகம் இறுக தன்னை நோக்கி வந்த விக்ரமை கண்டு பவித்ராவிற்கு உள்ளுக்குள் குளரெடுத்த போதும் வெளியில் அலட்சியமாய்ப் பார்த்து வைத்தாள்...

அங்குத் தாம்பாள தட்டில் இருந்த குங்குமத்தை எடுத்து அவளது நெற்றியில் அழுத்தமாய் வைத்து விட்டவன் அடுத்து அவன் செய்த காரியத்தில் எல்லோரும் ஆச்சிரியத்தில் வாயை பிளந்தனர்...

இரு கைகள் நிறையச் சந்தனத்தை அள்ளி எடுத்து பவித்ராவின் இரு கன்னங்களிலும் அழுத்தமாய்ப் பூசியவன் அதே கைகளுடன் கன்னங்களைப் பற்றி

அவளது முகத்தைத் தனது அருகில் இழுத்தவன் அவளது நெற்றியில் தனது முதல் அச்சாரத்தை அழுத்தமாய்ப் பதித்தான்...

விக்ரமின் இதழொற்றலில் பவித்ரா உறைந்து போய் அமர்ந்திருந்தாள்...!!!

மொழி பேசும்...!!!

## விழி : 5

பவித்ரா உறைந்து நின்றது ஒரு நொடிக்கும் குறைவான நேரம் தான்... அடுத்த நொடி சட்டென்று சிலிர்த்துக் கொண்டு விக்ரமை முறைத்தாள்...

"என்னைத் தொடாதேன்னு ஓவரா சீன் போட்ட சாமியார் தானே நீ...? இப்போ மட்டும் ஏன்டா என்னைத் தொடற...? இப்ப நான் சொல்றேன் நீ என்னைத் தொடாதே..." என்று அடி குரலில் அவள் அவனிடத்தில் சீறினாள்...

அவள் கூறியதை கேட்டு விக்ரமும் பதிலுக்கு அடி குரலில் சீறினான்...

"இன்னொரு தடவை சாமியார் அது இதுன்னு சொன்ன... அப்புறம் சேதாரத்துக்கு நான் பொறுப்பில்லை..."

அவனின் குரலில் இருந்த வேறுபாடு உணர்ந்து அவள் அவனை உற்று கவனித்தாள்... அவனது முகத்தில் அப்படி ஒன்றும் சந்தோசத்தின் சாயல் தெரியவில்லை... அவனது செயலுக்கு நேர்மாறாக அது இறுக்கமாய்க் கடுகடுவென்று இருந்தது...

'இவன் சாமியார் இல்லை... கடுவன் பூனை...' என்று மனதிற்குள் கடுப்பாய் நினைத்தவள் ஒன்றும் பேசவில்லை...

விக்ரமின் செயலில் பவித்ரா வீட்டினருக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது... பகையாளி வீட்டு மாப்பிள்ளை தங்களது பெண்ணிடம் எப்படி நடந்து கொள்வானோ என்று பயந்த அவள் வீட்டுப் பெண்கள் மூவரும் சந்தோசம் அடைந்தனர்... நிச்சயம் அன்று இருவருக்குள்ளும் நடந்த போட்டா போட்டி பார்த்து கதிகலங்கி போயிருந்தனர் எல்லோரும்... இப்போது தான் அவர்களுக்கு நிம்மதியாக இருந்தது...

அவளது தாத்தா திருவேங்கடம் கர்வமாய் மீசையை நீவியபடி இராமநாதனை பார்த்து வைத்தார்... அதைக் கண்டு இராமநாதன் யோசனையில் ஆழ்ந்தார்... என்ன

தான் இந்தத் திருமணம் மூலம் இருவரும் உறவினர்களாக ஆன போதும் அவரது மனதில் இருக்கும் பகை அப்படியே தான் இருந்தது... திருவேங்கடத்தின் கர்வத்திற்குப் பதிலுக்குச் சாட்டையடி கொடுக்க வேண்டும் என்று மனதில் நினைத்தவர் அதற்காகத் திட்டமிட ஆரம்பித்தார்...

ரேவதி மகனின் செயல் கண்டு அப்படியே மனம் குளிர்ந்து போனார்... தான் சொன்ன வார்த்தைகளின் அர்த்தத்தை மகன் உணர்ந்து கொண்டான் என்று... சௌந்தர்யா முகத்தில் ஈயாடவில்லை... பேயறைந்தது போலிருந்தது அவரது முகம்...

இத்தனை நாளாய் அவர் கட்டியிருந்த கோட்டை எல்லாம் இடிந்து தரை மட்டமானது போல் ஒரு தோற்றம் அவருள்... ஆனாலும் அவர் அதை அலட்சியமாய்ப் புறந்தள்ளினார்... அவரை மீறி அப்படி என்ன நடந்து விடக் கூடும் என்று...

இது ஏதும் அறியாத சிறியவர்கள் மூவரும் பகையை மட்டும் மனதில் கொண்டு ஒருவரை ஒருவர் பார்த்து முறைத்து கொண்டிருந்தனர்...

பவித்ராவிற்கு நலுங்கு வைத்த விக்ரம் எதுவுமே நடவாதது போல் புன்னகையுடன் தனது இருக்கையில் வந்து அமர்ந்தான்... இராமநாதன் பேரனை ஆராய்ச்சியாய் பார்த்தார்... அவரது மனதில் அபாய மணி அடிக்க ஆரம்பித்தது...

பெண் வீட்டில் இருந்து தங்களது வீட்டுக்கு வந்ததும் இராமநாதன் விக்ரமை அழைத்தார்... எல்லோரும் அங்குக் கூடி இருந்தனர்...

"என்ன தாத்தா...?"

"நீ சந்தோசமா இருக்கியாப்பா...?"

'என் சந்தோசத்தைத் தான் கல்யாணம் என்கிற பெயரில் குழி தோண்டி புதைச்சிட்டு இப்போ கேள்வியா கேட்கறீங்க...' என்று பழைய விக்ரமாக இருந்தால் கோபத்தில் எகிறியிருப்பான்... ஆனால் இவனோ புதிய

விக்ரம்... அவனது விழிகள் சுற்றிலும் பார்த்தது... கூடியிருந்த வீட்டினர் அனைவரின் முகத்திலும் ஆவல் மட்டுமே தெரிந்தது ஒருவரை தவிர...

ஆம், பெரிய மகனின் பதிலுக்காகச் சௌந்தர்யா மட்டும் படபடப்புடன் நின்றிருந்தார்... இப்போதும் விக்ரமிற்கு அவரின் மனதில் என்ன இருக்கிறது என்று முழுதாகத் தெரியவில்லை... ஆனாலும் தன்னால் தனது அன்னை யாரிடமும் அவமானப்படக் கூடாது என்பதில் மட்டும் உறுதியாக இருந்தான்... அது அவரது சகோதரியாக இருந்தாலும் சரி... அவனது பெரியன்னையாக இருந்தாலும் சரி...

"ஏன் என் சந்தோசத்திற்கு என்ன...?"

"அந்த வீட்டுப் பெண்ணைப் பிடிச்சிருக்கான்னு கேட்டேன்..."

"பிடிச்சிருக்கு, பிடிக்கலைங்கிறது வேறு விசயம் தாத்தா... இன்னும் இரண்டு நாளில் கல்யாணத்தை வச்சிக்கிட்டு நீங்க இப்படி அபத்தமாகப் பேசுறது தான் சரியில்லை..." என்றான் பேரன் புன்னகையுடன்...

அதில் அவரது முகம் சுருங்கி போனது... அதே போல் அவரது விழிகள் பேரனின் முகத்தை ஆராய்ந்தது... கவனமாகத் தனது உணர்வுகளைக் காட்டாது இருந்த பேரனின் முகத்தில் இருந்து அவரால் ஒன்றும் கண்டுபிடிக்க முடியவில்லை...

"எப்படியோப்பா நீ சந்தோசமா இருந்தால் சரி..."

"நிச்சயம் நான் சந்தோசமாக இருப்பேன் தாத்தா... எனது பெர்சனல் வாழ்க்கை வேறு... தொழில் வேறு... இரண்டையும் போட்டுக் குழப்பிக் கொள்ள மாட்டேன்..."

விக்ரம் அப்படிச் சொன்ன போதும் அவரால் அதை அவ்வளவு சாதாரணமாக எடுத்துக் கொள்ள முடியவில்லை... அவர் யோசனையுடன் அமர்ந்திருந்தார்... அவரது யோசனைக்கான விடை திருமணத்திற்கு முந்தைய நாள் தான் தெரிந்தது...

விக்ரம் வீட்டினர் சென்றதும் தனிமையில் அமர்ந்திருந்த பவித்ராவிற்கு அருகில் தெரிந்த விக்ரமின் முகமே நினைவில் நின்றது... அவன் முத்தமிட்ட நெற்றியை தொட்டு பார்த்தவள் மனதிற்குள் சிலிர்த்துக் கொள்ளவெல்லாம் இல்லை... மாறாக அருவருப்பில் அமர்ந்திருந்தாள்...

'அவனுக்கு எவ்வளவு தைரியம் இருக்கணும்...?' என்று கோபம் கொண்டவளுக்கு மனக்கண்ணில் மீண்டும் அவனது முகம் அருகாமையில் தெரிய முகத்தைச் சுளித்தாள்...

'ச்சை... சரியான பூச்சாண்டியா இருப்பான் போலிருக்கு... காண சகிக்கலை...' என்று எரிச்சலுடன் உதட்டை பிதுக்கி கொண்டாள்...

திருமணத்திற்கு முதல் நாள் இரவு இராமநாதன் திருவேங்கடத்தைத் தனது வீட்டிற்கு வருமாறு அழைப்பு விடுத்தார்... என்னவாய் இருக்கும் என்று யோசனையுடன் அவர் தனது மகனுடன் அங்கு வந்தார்...

"வாங்க..." என்று விக்ரம் பொதுவாக இருவரையும் வரவேற்றான்...

இருவரும் அமர்ந்ததும் இராமநாதன் தொண்டையைச் செருமி கொண்டு பேச ஆரம்பித்தார்...

"திருவேங்கடம்... உன் பேத்தி கழுத்தில் என் பேரன் தாலி கட்டணும்ன்னா உன் பேத்திக்கான பங்கை என் பேரன் பெயரில் எழுதி வைக்கணும்..."

தாத்தா சொன்னது கேட்டு விக்ரம் தான் அதிகம் அதிர்ந்தான்... திருவேங்கடமும் சற்று திகைத்து தான் போனார்... நாளை காலையில் திருமணம் என்று உறவினர் அனைவரும் கூடியிருக்கும் இந்த வேளையில் இராமநாதன் இப்படிக் கூறியது அவருக்குச் சற்றுக் கோபத்தை வரவழைத்தது...

"என்ன ப்ளாக்மெயில் பண்றீங்களா...?" விஜயமூர்த்திச் சற்று குரலை உயர்த்தினார்...

"இதுவரை உங்க பொண்ணுக்குன்னு சீதனமா நாங்க எதுவும் கேட்கலையே... அதைத் தான் இப்ப கேட்கிறோம்..." பதிலுக்குக் குரலை உயர்த்தினார் விஸ்வநாதன்...

விக்ரமின் நிலை இரண்டு கெட்டானாய் இருந்தது... தாத்தாவை எதிரிகள் எதிரில் எதிர்த்து பேசவும் முடியலை... அதே சமயம் தாத்தாவின் வார்த்தைகளை ஏற்றுக் கொள்ளவும் அவனால் முடியவில்லை... தன்னை விலைக்கு விற்பது போல் அவனுக்கு அத்தனை அவமானமாக இருந்தது...

"தாத்தா... இப்போ எதுக்கு இந்தப் பேச்சு...?" என்றான் தன்மையாக...

"உனக்குச் சேர வேண்டியதை தான் கேட்டுட்டு இருக்கேன் விக்ரம்... நாளைக்கே அவங்க வீட்டுக்கு சின்ன மருமகன் வந்ததும் நீ பகையாளின்னு உனக்குச் சொத்தை கொடுக்காம அவனுக்கு எல்லாத்தையும் எழுதி வச்சிட்டா...? உன்னை விடு... உனக்கு என்னுடைய சொத்துக்கள் பல தலைமுறைக்குப் போதும்... ஆனால் உன் மனைவி பாவம் இல்லையா...? அவளுக்கும் சேர்த்து தான் நான் பேசுகிறேன்..."

தாத்தா நைச்சியமாகப் பேசினார்... அவருக்குத் தொழிலில் மூன்றாவது ஒரு ஆளிடம் தோற்றும் போகக் கூடாது... அதே சமயம் பேரன் பெண் வீட்டினருடன் இணக்கமாக இருக்கவும் கூடாது... அதற்கு இப்படி ஒரு பேச்சை போட்டு வைக்க வேண்டியது அவசியம் என்றே நினைத்தார்... சொத்துக்களோடு பெண்ணையும் பிரித்தெடுக்கத் திட்டமிட்டார்... தனது பேரனை விட்டு கொடுக்க அவருக்கு விருப்பம் இல்லை...

அதே தான் திருவேங்கடமும் நினைத்தது... விக்ரமின் நிலை அவருள் பலவித கனவுகளை விதைத்திருந்தது... ஆனால் இப்போது அது எல்லாம் சரிந்து விடும் போலிருந்தது

அவருக்கு... அதனால் இராமநாதனின் பேச்சை எதிர்க்க முடிவு செய்தார்... அதற்குள் விக்ரம் வாய்த் திறந்தான்...

"தாத்தா... எனக்காகத் தானே இந்தச் சொத்துக்களை வாங்கறேன்னு சொல்றீங்க... அப்படியே அது எனக்கு வந்தாலும் நான் அதை என் மனைவி பெயரில் திருப்பி எழுதி விடுவேன்... எப்படியும் அவள் பெயருக்கு தான் அது போகப் போகிறது... அதனால் அவள் பெயரிலேயே எல்லாம் இருக்கட்டும்..." என்று அவன் சாதூர்யமாகப் பேசினான்...

அதைக் கேட்டு இராமநாதனின் முகம் இருண்டது என்றால், திருவேங்கடத்தின் முகம் மலர்ந்தது... பேரன் மறுத்த பின்னர் இராமநாதனால் ஒன்றும் செய்ய முடியவில்லை...

"அப்புறம் நான் கிளம்பறேன் இராமநாதா... நாளை கல்யாணத்தில் சந்திக்கலாம்..."

இரு கை கூப்பி விடை பெற்ற திருவேங்கடம் கடைசி வரிகளை அழுத்தமாய் உச்சரித்தார்... அவரது மனதில் அப்படி ஒரு வன்மம் இருந்தது... முதலில் இந்தத் திருமணம் நல்லபடியாக முடியட்டும்... அதன் பின் விக்ரமை தங்கள் பக்கம் இழுத்துக் கொள்ளலாம் என்று புத்திசாலித்தனமாக நினைத்து அவர் சற்று அடக்கி வாசித்தார்... பெண் நினைத்தால் முடியாதது என்று ஒன்று உண்டோ... அவருக்குப் பவித்ரா மேல் அந்தளவிற்கு நம்பிக்கை இருந்தது...

அவர்கள் கிளம்பி சென்றதும் விக்ரம் கோபமாகத் தாத்தாவிடம் திரும்பினான்...

"தாத்தா... ஏன் இப்படிப் பண்ணினீங்க...? நீங்க இப்படிப் பேசியது என்னை விலைக்குப் பேசியது போல் ரொம்ப அவமானமா இருந்தது தாத்தா... அவங்களோட சொத்தும், நானும் ஈடா...? ரொம்ப வருத்தமா இருக்கு தாத்தா... நீங்க விரும்பியதால் தான் இந்தக் கல்யாணம்... உங்களுக்கு விருப்பம் இல்லைன்னா இந்தக் கல்யாணம் வேண்டாம்... அதற்காக நீங்க என்னை இப்படி விலை பேசி

அவமானப்படுத்த வேண்டாம்..." என்றவன் பெரியன்னையைத் தீர்க்கமாய்ப் பார்த்தவாறு,

"அதுக்காக நான் கல்யாணம் பண்ணிக்காம இருக்கப் போறது இல்லை... இந்தப் பெண் இல்லைன்னா வேறு பெண் எனக்கு மனைவியாக வருவாள்... என் மனைவி யார்ங்கிறதை நீங்க தான் முடிவு செய்யணும்... அது போல் என் சுயமரியாதையை நான் தான் முடிவு செய்யணும்... நீங்க இல்லை..." உறுதியான குரலில் உரைத்து விட்டு அவன் சென்று விட்டான்...

எல்லோரும் சென்றதும் சௌந்தர்யா இராமநாதனின் அருகில் வந்தார்...

"பார்த்தீங்களா மாமா... விக்கி எப்படிப் பேசிட்டு போறான்னு... இப்பவே இப்படின்னா...? நாளைக்குக் கல்யாணத்துக்கு அப்புறம்... அந்த வீட்டோட மாப்பிள்ளையா போயிருவான் போலிருக்கே... எதுக்கும் நம்ம வினோத்க்கு தொழிலை கத்து கொடுத்து கூட வச்சுக்கோங்க... சமயத்துக்கு உதவும்..."

பெரிய மருமகள் கூறியது அவருள் பெரிய பிரளயத்தை வெடிக்கச் செய்தாலும் அவர் வெளியில் அதைக் காட்டி கொள்ளாது,

"முதல்ல உன் மகனை கம்பெனியில் போய் உட்கார சொல்லு... அதுக்கு அப்புறம் தொழிலை கத்துக்கிறதை பத்தி பேசலாம்... யாருக்கு என்ன செய்யணும், கொடுக்கணும்ன்னு எனக்குத் தெரியும்..."

அதற்கு மேல் சௌந்தர்யா அங்கு நிற்கவில்லை... மனதில் முணுமுணுத்துக் கொண்டே சென்று விட்டார்... இராமநாதன் யோசிக்க ஆரம்பித்தார்... மருமகள் கூறியதில் எந்தத் தவறும் இல்லை... சௌந்தர்யா கூறியது போல் நடப்பதற்கான சாத்தியக்கூறுகள் இருக்கிறது... ஆனாலும் இந்த விசயத்தை இப்படியே விட்டு விட முடியவில்லை...

அது போல் தான் வீட்டிற்குச் சென்ற திருவேங்கடம் தனியே பேத்தியை சந்தித்தார்...

"பவி... விக்ரமுக்கும், உனக்கும் இடையே உள்ள பிரச்சினைகளை மறந்துட்டு அவன் கூட நீ சந்தோசமா வாழணும்... தொழில் வேறு, வாழ்க்கை வேறு... என்ன நான் சொல்றது புரிந்ததா...?"

"தாத்தா... நான் எப்படி அவனுடன்...?" என்றவளை இடைமறித்தவர்,

"ஒரு பெண் நினைத்தால் இரும்பை கூடக் கரும்பு போல் வளைக்கலாம்... அது போல் நீ விக்ரம் என்கிற இரும்பை வளைத்து உன் பக்கம் கொண்டு வா..."

"கொண்டு வந்து...?" அவள் கேள்வியாய் அவரைப் பார்த்தாள்...

"அவன் மூலம் வரும் அவனது தொழிலோடு நம் தொழிலையும் சேர்த்து இரண்டு பேரும் நம்ம நிறுவனத்தை முதல் இடத்திற்குக் கொண்டு வாங்க..."

இதைத் தான் இராமநாதனும் செய்ய நினைத்தார்... அங்கே பேரன் அவருக்குப் பிடி கொடுக்கவில்லை...

"ச்சேச்சே... அவனோடது நமக்கு எதுக்கு...? நான் தனியே நம்ம நிறுவனத்தைப் பார்த்துக்குவேன் தாத்தா..."

"முட்டாள் போல் பேசாதே... சொன்னதைச் செய்... அவனை வளைத்து உன் பக்கம் திருப்பும் வழியைப் பார்..."

கடுமையாகக் கூறிவிட்டு சென்ற தாத்தாவை பார்த்து திகைத்து நின்றவளின் மனம் அவர் கூறியதன் அர்த்தம் புரிந்து அருவருத்துப் போனது...

அதே நேரம் ரேவதி மகனை தேடி சென்றார்... வானில் தெரிந்த மதியுடன் மௌனமாய் உரையாடி கொண்டிருந்த மகன் அருகில் அவர் வந்து நின்றதும் அவரின் வரவு உணர்ந்து திரும்பி பார்த்தவன் அவரைக் கண்டு புன்னகைத்தான்...

"என்னம்மா...?"

"இப்போ தான்ப்பா எனக்கு ரொம்பச் சந்தோசமாயிருக்கு..."

"ஏன்...?" அவன் புன்னகை மாறாமல் கேட்டான்...

"நீ உனக்கு வர போகும் மனைவியை யாரிடமும் விட்டுக் கொடுக்காமல் அதே சமயம் உன்னுடைய சுயமரியாதையையும் இழக்காமல் பேசியது ரொம்பச் சந்தோசம்... இன்னைக்கு என் கண்களுக்கு நீ புதுசா தெரிஞ்ச விக்ரம்..."

"நான் உங்க மகன் அதே விக்ரம் தான்..."

"கூடுதலாய் புரிதல் வந்திருக்கிறது..."

"அது என்னவோ உண்மை தான்... எல்லோரை பற்றியும் இப்போ தானே புரிந்து கொள்ளத் தொடங்கி இருக்கிறேன்..." என்றான் அவன் பூடகமாக...

"நீ உன் மனைவியைப் புரிந்து கொண்டு சந்தோசமா இருந்தால் அதுவே போதும்..."

"நிச்சயம்மா..."

மகனை ஆதூரத்துடன் பார்த்தவர் கிளம்பி செல்ல முயன்ற போது விக்ரம்,

"இந்த வீட்டில் நீங்க சந்தோசமா இருக்கீங்களாம்மா...?" என்று கேட்க...

அவனை ஆழ்ந்து பார்த்தவர் பின் சிரித்தபடி, "நாளை உன் மகன் அவன் அம்மாவிடம் இந்தக் கேள்வியைக் கேட்காது நீ கவனமா பார்த்துக்கோ..." என்றவர் சென்று விட்டார்...

விக்ரம் தலையைப் பிடித்துக் கொண்டான்... தொழில் பிரச்சினைகளை எளிதாகக் கையாண்டவனுக்கு வீட்டுப் பிரச்சினை பெரும் பிரச்சினையாக இருந்தது... ஏதோ இருக்கிறது அது என்னவென்று தான் தெரியவில்லை... ஒன்று மட்டும் அவனுக்கு நன்றாகப் புரிந்தது... தனது

அன்னையைப் பெரியன்னை வேண்டும் என்றே திட்டம் போட்டு மட்டம் தட்டுவது...

இத்தனை யோசனைகளுடன் திருமணநாள் இனிதாக விடிந்தது... மணமகன் கோலத்தில் மணமேடையில் அமர்ந்திருந்த விக்ரம் கர்மமே கண்ணாக அய்யர் கூறிய மந்திரங்களை உச்சரித்துக் கொண்டிருந்தான்... அந்நேரம் அருகில் வந்தமர்ந்த பவித்ராவை அவன் சிறிதும் கண்டு கொள்ளவில்லை...

அழகு தேவதையாய் வந்தமர்ந்தவளை கண்டு ஒட்டுமொத்த கூட்டமும் வாயை பிளந்த போதும் ரசிக்க வேண்டியவனோ கடமையே கண்ணாக இருந்தான்... அவன் தான் அப்படி என்றால் அவளோ அதற்கும் மேல் இருந்தாள்... அவன் அருகில் அமர்ந்த போதும் அவள் அவனைச் சற்றும் திரும்பி பார்க்கவில்லை...

காப்பு கட்டும் போது ஒருவருடைய கரத்துடன் மற்றவர் கரம் உரசிய போது அவர்களுக்குள் மின்சாரம் பாயவில்லை... அது போல் தான் தாலி கட்டும் போது அந்தக் கணம் விழிகள் நான்கும் உரசி கொண்டது... அவனது கை விரல் பத்தும் அவளது பின்னங்கழுத்தை மென்மையாய் வருடி சென்றது... ஆனால் தேகத்தின் உரசல்களால் அவர்களுக்குள் தீப்பற்றிக் கொள்ளவில்லை... முடுக்கி விட்ட பொம்மை போல் இயந்திரத்தனமாய் எல்லாம் நடந்து முடிந்தது...

எதிர்பார்ப்புகள் இருந்தால் தானே ஏமாற்றங்கள் இருக்கும்... இங்கு இருவருக்கும் எந்த எதிர்பார்ப்புகளும் இல்லை... ஏமாற்றங்களும் இல்லை... தொழில் ஒப்பந்தம் போல் அவர்களது திருமணமும் வெற்றிகரமாக அரங்கேறியது...

அம்மி மிதித்து அருந்ததி பார்த்து மனைவியின் கால் விரலில் மெட்டி அணிவிக்கச் சொன்ன போது மட்டும் விக்ரம் முகத்தைச் சுளித்தான்... பவித்ராவோ அவனை மிதப்பாய் பார்த்து வைத்தாள்... அவன் வேறுவழியின்றி

அவளது கால் பற்றி மெட்டி அணிவித்து விட்டு நிமிர்ந்த போது மிகவும் நொந்து போய் விட்டான்...

"அய்யரே... இது மாதிரி இவளும் என் காலில் விழும் சம்பிரதாயம் ஏதும் இருக்குதா...?"

"அது எல்லாம் இன்னைக்கு ராத்திரி உங்க கால்ல உங்காத்துக்காரி விழுந்து நமஸ்காரம் வாங்குவா... இப்போ நீங்க ரெண்டு பேரும் தம்பதி சமேதரா போய்ப் பெரியவா காலில் விழுந்து ஆசிர்வாதம் வாங்குங்கோ..." என்று அய்யர் கூற...

விக்ரமின் முகம் மலர்ந்தது அந்த அய்யர் கூறியது கேட்டு...

'சண்டிராணி... இன்னைக்கு நைட் நீ என் கிட்ட வசமா மாட்டின...' என்று மனதிற்குள் கறுவியவன் நினைவில் எந்தவொரு தவறான எண்ணமும் இல்லை... அவளைத் தனது காலில் விழ வைக்க வேண்டும் என்று மட்டுமே அவன் எண்ணினான்...

ஆனால் விதியோ வேறு விதமாய்க் கணக்கிட்டு விகாரமாய்ச் சிரித்தது... எந்தவொரு மனிதனும் மனமுவந்து தவறு செய்வது இல்லை... சந்தர்ப்பம், சூழ்நிலை அவனை வலுக்கட்டாயமாய்த் தவறான பாதைக்கு இழுத்துக் கொண்டு செல்கிறது...

இரு வீட்டு பெரியவர்களின் கால்களில் விழுந்து மணமக்கள் ஆசிர்வாதம் வாங்கினர்... வள்ளி, தெய்வானையுடன் காட்சி அளிக்கும் முருக பெருமானை போன்று சௌந்தர்யா, ரேவதி சகிதம் நின்றிருந்த விஸ்வநாதனை கண்டு முகம் சுளித்தாள் பவித்ரா... இது என்ன மாதிரியான குடும்பம் என்று...?

ஆனாலும் சபை முன் மனதினை வெளிக்காட்டி கொள்ளாது அவர்களது கால்களில் விழுந்தாள்...

"நீண்ட ஆயுளோட, தீர்க்க சுமங்கலியா எங்க விக்ரம் கூட நீ சந்தோசமா இருக்கணும்மா..." என்று மனமார ஆசிர்வதித்த ரேவதி கண்டு லேசாகப் புன்னகை புரிந்தாள் பவித்ரா...

"அதெல்லாம் நம்ம விக்கியை சந்தோசமா வச்சுக்குவாள்... என்னம்மா பவி...?"

அன்பொழுக கூறிய சௌந்தர்யாவை விக்ரம் கூர்ந்து கவனித்தான் என்றால், பவித்ராவின் முகம் மலர்ந்து போனது... அவர் தன்னைப் பற்றி நல்ல விதமாகப் பேசுகிறாரே என்று...

பர்வதம், கல்பனா, நர்மதா மூவரும் மகிழ்ச்சியாய் பார்த்து கொண்டிருந்தனர்... ஏதோ இந்தளவிற்கு விக்ரம் வீட்டினர் அன்பாகப் பழகுகின்றனரே என்று...

மணமக்கள் விக்ரம் வீட்டினருக்குப் போன போது தைரியமான பெண்ணான பவித்ரா கூடச் சற்று மனம் கலங்கி தான் போனாள்... ஆறுதல் கூற வேண்டியவனோ தனக்கும் இதற்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை என்பது போல் எங்கோ வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்... இவ்வளவு ஏன் அவளை ஒரு மனுசியாகக் கூட அவன் மதிக்கவில்லை...

அருகில் இருந்த நர்மதா அவளை ஆறுதலாய் அணைத்துக் கொண்டார்... அதில் சிறிது தைரியம் வர பெற்றவளாய் விக்ரமின் வீட்டிற்குள் வலது கால் எடுத்து வைத்து உள்ளே நுழைந்தாள்... கணவன் என்கிற சொந்தத்துடன் அவனும் உடன் நுழைந்தான் வெறும் பெயரளவில் மட்டுமே...

புது மணப்பெண்ணாய் சம்பிரதாயங்களைச் செய்த பவித்ரா அடுத்து என்ன செய்வது என்று தெரியாது விழித்து நின்றாள்... இரு வீட்டாரும் இணக்க நிலை காணப்படாது போல் இறுக்கமாய் நின்றிருந்தனர்... ஸ்தம்பித்த நிலை என்று சொல்வோமே அப்படி ஒரு நிலை அங்கே நிலவியது...

ரேவதி தான் அந்த மௌனத்தைக் கலைத்தார்...

"வாம்மா... வந்து ட்ரெஸ் மாத்திக்கோ..."

அவருக்குமே சிறு தயக்கம் இருந்தது... தான் கூறினால் மருமகள் கேட்டு கொள்வாளோ என்று... என்னே அதிசயம்

பவித்ரா அவர் சொன்னதைக் கேட்டு அவருடன் சென்றாள்... அதில் அவரும் உள்ளம் மகிழ்ந்து போனார்... மாமியாரும் மருமகளும் இணைந்து செல்வது கண்டு சௌந்தர்யாவின் காதில் புகை வராத குறை தான்... அவ்வளவு பொறாமையாக இருந்தது அவருக்கு...

சிறிது நேரமே இருந்த பவித்ரா வீட்டினர் அங்கிருந்து கிளம்பி விட்டனர்... யாருக்கும் அங்கு இருக்க ஒப்பவில்லை... அவர்கள் செல்லும் போது பவித்ராவின் விழிகள் கலங்கியது... ஆனாலும் அழாது கண்ணீரை உள்ளிழுத்து கொண்டாள்...

"இன்னும் கொஞ்ச நேரம் இருக்கலாமேம்மா..."

"அது எப்படிம்மா...? அதுவும் இங்கே...?" சங்கடமாய் மகளைப் பார்த்தார் கல்பனா...

"ஓ..." என்று முகத்தைச் சுருக்கிய பவித்ரா,

"அப்போ என்னை மட்டும் ஏன்ம்மா காலம் முழுசும் இங்கே இருக்கிற மாதிரி பண்ணிட்டீங்க..."

அதைக் கேட்டு கல்பனா மகளை அணைத்துக் கொண்டு அழுதார்... அவரால் மாமனாரை எதிர்த்து பேச முடியாத ஒரு சூழ்நிலை...

"நீங்க எதுக்கு அழுறீங்க... எதுவாக இருந்தாலும் நான் சமாளிச்சுக்குவேன்...?" என்று அவள் அன்னையைத் தேற்றினாள்...

"என்ன தான் உயர உயர பறந்தாலும் பெண்ணாய் பிறந்தால் ஒருத்தனுக்கு அடிமையா வாழ்ந்து தானாக வேண்டும்... அடிமை வாழ்வு வாழ்ற நாய் பிழைப்பு தான் இந்தப் பெண் பிழைப்பு..."

"நாம எதுக்கு அடிமையா வாழணும்...? நாமளும் அவங்களுக்குச் சமமா எல்லாம் செய்றோம்மா... அந்தக் காலம் மாதிரி இப்பவும் நீங்க இப்படிப் பேசாதீங்க..." என்று படபடத்த பெண்ணைப் பரிதாபமாகப் பார்த்தார் கல்பனா...

"எப்படியோ நீ நல்லா வாழ்ந்தால் எங்களுக்குச் சந்தோசம்... மாப்பிள்ளையை அனுசரிச்சு போ... சின்னப் பிள்ளை மாதிரி கோபப்படாதே..."

"அம்மா... நான் ஒண்ணும் சின்னப் பிள்ளை இல்லை..." என்று சிடுசிடுத்த மகளைக் கண்டு அவருக்குச் சிரிப்பு வந்தது...

"இதோ கோபப்படுற பார்த்தியா...? இதைத் தான் சொன்னேன்..."

அன்னை சுட்டி காட்டியதும் அமைதியாகி விட்டாள் பவித்ரா... கடைசியாகத் தாத்தா விடை பெற வந்தவர் பேத்தியிடம்,

"நான் சொன்னது நல்லா நினைவில் இருக்கட்டும்... விக்ரமை உன் வழிக்குக் கொண்டு வருவது உன் கையில்... நாளையில் இருந்து நீ அவனை உன் புடவை முந்தானையில் முடிந்து வைத்திருக்க வேண்டும்..."

திருவேங்கடம் கூறியதை கேட்டு பவித்ரா முகத்தைச் சுளித்தபடி ஒன்றும் பேசாது நின்றிருந்தாள்... அந்தப் பக்கம் வந்த விக்ரம் இதைக் கேட்டு விட்டதை அவர்கள் இருவரும் அறியவில்லை... அது போல் தான் பவித்ராவின் முகத்தினை அவனும் பார்க்கவில்லை... திருவேங்கடத்தின் வார்த்தைகள் மட்டுமே அவனது காதில் விழுந்தது... ஒருவேளை அவளது முகத்தினைப் பார்த்திருந்தால் அவனது முடிவு வேறு மாதிரியாக இருந்திருக்குமோ என்னவோ... அவளது மௌனம் அவனது மனதில் வன்மத்தை தூண்டி விட்டது...

'நீ என்னை உன் புடவையில் முடிந்து வைத்துக் கொள்ளப் போகிறாயா...? இருடி உன்னை ஓட ஓட விரட்டறேன்... நான் விக்ரம்டி... ஆம்பிளை சிங்கம்... இப்படி அசிங்கமா உன் புடவை முந்தியில் ஒளிய நான் என்ன மானம் கெட்டவனா...?' மனதில் ஆத்திரமாய் நினைத்தவன் அறிவிழந்து செய்த செயலானது அவனது தலையெழுத்தையே மாற்றி அமைத்தது...

தன்னை மட்டுமே நினைத்த விக்ரம் அவள் ஒரு பெண் புலி என்பதை அந்தக் கணம் மறந்து போய் விட்டான்...!!!

மொழி பேசும்...!!!

## விழி : 6

தனது வீட்டார் புறப்பட்டுச் சென்றதும் தனித் தீவில் மாட்டி கொண்டது போல் பெரும் அவஸ்தையுடன் நின்றிருந்தாள் பவித்ரா... தோழமையுடன் பார்க்க வேண்டிய மதுமதியோ அவளைச் சிறிதும் கண்டு கொள்ளாது முகத்தைத் திருப்பிக் கொண்டு போனாள்... வினோத் அவளைப் பார்த்து சிறு புன்னகை புரிந்தவன் அதற்கு மேல் அவளிடம் பேச முனையவில்லை...

"விக்ரம்... பவியை உன் அறைக்கு அழைச்சிக்கிட்டு போப்பா..." என்று சொன்ன ரேவதியிடம்,

"இப்போ எனக்கு ரூமுக்கு போக விருப்பமில்லை..." என்று அவர் முகம் பாராது உரைத்த விக்ரம் வரவேற்பறையில் அமர்ந்து கொண்டு அலைப்பேசியில் மூழ்கி போனான்...

"அவன் கிடக்கிறான்ம்மா... நீ வா..." என்று அவளை அழைத்து வந்து உணவு மேசையில் அமர வைத்த ரேவதிக்கு அதன் பின்னர் அவளிடம் பேச நேரமில்லாது போனது... ஏனெனில் வேலைகள் அவரைச் சூழ்ந்து கொண்டது...

அப்போது அங்கு வந்த சௌந்தர்யா அவளிடம் பேச ஆரம்பித்தார்... புடவை, நகை என்று சராசரி பெண்மணியாக அவர் பேசிய பேச்சுக்களைப் பவித்ராவால் சகித்துக் கொள்ள முடியவில்லை... இங்கிருந்து எழுந்து சென்று விடலாமா என்று அவள் யோசித்துக் கொண்டு இருக்கும் போது தெய்வம் போல் ரேவதி அங்கு வந்தார்...

"அக்கா... மாமா உங்களைக் கூப்பிடறாங்க..." என்றதும் சௌந்தர்யா உடனே எழுந்து சென்று விட்டார்...

"நீ வாம்மா..." என்ற ரேவதி அவளைத் தன்னுடைய அறைக்கு அழைத்துச் சென்றார்...

கிராமத்து வீடு என்பதால் பழமையாக இருந்த போதும் அந்த அறை பெரியதாக இருந்தது... அங்கிருந்த பழைய

புகைப்படத் தொகுப்புகளை எடுத்து அவளிடம் கொடுத்தவர்,

"எல்லாம் உன் புருசன் ஃபோட்டோ தான்..." என்க...

அவள் சங்கோஜமுற்றவளாய், "வேண்டாம் அத்தை..." ஏனெனில் விக்ரம் புகைப்படத்தைப் பார்ப்பதற்கு அவளுக்குச் சிறிதும் பிடித்தமில்லை...

"அட, வெட்கமாக்கும்... இது எல்லாம் அவனோட சின்ன வயசு ஃபோட்டோ தான்... அதனால் நீ தாராளமா பார்க்கலாம்..." என்று கூறியவர் தானே புகைப்படத் தொகுப்பை திறந்து,

"இது அவனுக்கு ஆறு மாசமா இருக்கும் போது எடுத்தது... முதல் மொட்டை போட்ட போது..."

விக்ரம் கொழுகொழுவென்று பார்ப்பதற்கு அமுல் பேபி போல் அழகாக இருந்தான்... இப்போது இருக்கும் விக்ரமிடம் கோபம் கொள்ளும் அவளால் குழந்தை விக்ரமிடம் கோபம் கொள்ள முடியவில்லை... மாறாகச் சிறு குழந்தையை ரசிக்கும் பாவனை அவளது விழிகளில் தெரிந்தது...

"அவன் உங்களை மாதிரியா...?" என்று இயல்பாகக் கூறி விட்டு நாக்கை கடித்தாள் பவித்ரா...

மாமியார் முன்னிலையில் அவரது மகனை 'அவன்' என்று விளித்தால் அவர் தவறாக எடுத்து கொள்வாரோ என்று...

அதை ரேவதி உணர்ந்தாலும் அவளைப் பார்த்து புன்னகைத்தார்...

"உனக்கும் அவனுக்கும் இருக்கிற போட்டி எங்க எல்லோருக்கும் தெரியும்... ஒரே நாளில் மாற்றம் வந்து விடாது... கொஞ்சம் கொஞ்சமாக மாற்றம் வரும்... நீயே விக்ரமை ஒரு நாள் இல்லை ஒரு நாள் மாமான்னு கூப்பிட தான் போற..."

'நானா...? அவனையா...? நெவர்...' என்று மனதிற்குள் சிலுப்பிக் கொண்டாள் பவித்ரா...

"ஆமாம் மா... அவன் என்னை மாதிரி..." என்றவரை பவித்ரா கூர்ந்து கவனித்தாள்...

இந்த வயதிலும் அழகு குறையாது இருந்த அவரைப் பார்த்த போது விக்ரமின் அழகு அவளது மனதினில் உறைத்தது... ஆனாலும் அதை ஏற்றுக் கொள்ளத் தான் அவளுக்கு மனமில்லை...

ரேவதி மருமகளிடம் ஒவ்வொரு புகைப்படத்திற்கும் தனித் தனியே விளக்கம் கூறிக் கொண்டு வந்தார்... அப்படிக் கூறும் போது தான் அவரது முகத்தில் எத்தனை மகிழ்ச்சி... அவரது அந்த மகிழ்ச்சியே சொல்லாமல் சொல்லியது இந்தப் புகைப்படங்கள் அவரது ஞாபகம் மட்டுமல்ல அவரது வாழ்க்கை என்று... அப்போது தான் அவளுக்கு அது உறுத்தியது...

"எல்லோ ஃபோட்டோஸ்லேயும் நீங்களும், விக்ரம் மட்டும் தான் இருக்கீங்க... விக்ரம் அப்பா எங்கே...?"

"மாமான்னு சொல்லும்மா..."

"ஆங்... மாமா எதிலேயும் இல்லையே..."

பவித்ரா கூறியதை கேட்டு ரேவதியின் முகத்தில் விரக்தி படர்ந்தது... அதைப் புன்னகையின் பின்னே சாமார்த்தியமாக அவர் மறைத்து கொண்டதை அவள் யோசனையுடன் பார்த்து கொண்டிருந்தாள்...

"அவர் ஃபோட்டோக்கு எல்லாம் வர மாட்டார்..."

"ஓ..." என்றவள் அதற்கு மேல் ஒன்றும் கேட்கவில்லை...

ஆனால் மனதில் ஏதோ ஒன்று சரியில்லை என்று உறுத்தியது... அது என்னவென்று அவளுக்குத் தெரியவில்லை... அது அவளுக்குத் தேவையும் இல்லை... அதனால் அவள் அமைதி காத்தாள்...

இரவு ஒன்பது மணிக்கு மேல் சாந்தி முகூர்த்த சடங்கிற்கு மட்டுமே பவித்ரா வீட்டினர் வந்தனர்... அதற்கு என்று அவளை அலங்காரம் பண்ணிய போது இத்தனை நேரம் இல்லாத ஒருவித பதற்றம் அவளுள் தொற்றிக் கொண்டது...

இதுவரை திருமணம் என்பதை ஒரு தொழில் ஒப்பந்தம் போல் மனதிற்குப் பிடிக்காதவனிடம் இருந்து இயந்திரத்தனமாய்த் தாலி வாங்கிக் கொண்டவளுக்கு இப்போது தான் அவனுடனான பந்தத்தின் நிதர்சனம் முகத்தில் அறைந்தது...

'நான் எப்படி விக்ரமுடன் ஒரே அறையில், ஒரே படுக்கையில்... கடவுளே...!' ஒரு பெண்ணாய் அவளுக்குப் பயத்தில் வியர்த்தது...

அதைக் கண்டு அவளது சித்தி நர்மதா வாஞ்சையுடன் அவளைப் பார்த்தவர், "இத்தனை நாள் எதிரியாக இருந்து பார்த்தவங்களைச் சட்டுன்னு மனசுக்கு பிடிச்சுடாது தான்... ஆனால் பிடிக்காததைப் பிடித்தமாய் மாத்திக்கிறது உன் கையில் தான் இருக்கிறது பவி..."

'அது எப்படி மனசுக்கு ஒவ்வாத ஒன்றை...'

"பவி... மாப்பிள்ளை மனசு கோணாம நடந்துக்கோ..." என்று அவளது அன்னை கல்பனா கூற...

'டிபிக்கல் அம்மா டயலாக்...' அவள் மனதிற்குள் பொங்கினாள்...

"பவிம்மா... இரு வேறு துருவங்கள் கல்யாண பந்தத்தில் கணவன், மனைவி உறவாய் ஒண்ணு சேர்கிறது... இந்தப் பந்தத்தை நல்லபடியா கொண்டு போறது பெண்ணான உன் கைகளில் தான் இருக்கு..." என்று பாட்டி பர்வதமும் அறிவுரை கூறிய போது அவள் மனதிற்குள் மிகவும் நொந்து போய் விட்டாள்...

'இதை எல்லாம் அவனுக்குப் போய்ச் சொல்லுங்களேன்...' என்று அவளுக்கு உரக்க கத்த வேண்டும் போலிருந்தது...

அந்நேரம் ரேவதி அங்கு வந்தார்... அவளது முகத்தைப் பரிவுடன் பற்றி, "நீயும் நல்ல புத்திசாலி, என் மகனும் அது மாதிரி தான்... உங்க ரெண்டு பேரை மாதிரி பேரனையோ, பேத்தியையோ பெத்து என் கிட்ட கொடுத்துருங்க... நான் அவங்களை வளர்த்துக்கிறேன்... நீங்க ரெண்டு பேரும் தொழிலை கவனிங்க... என்ன சரியா பவி...?"

'ஐயோ... உங்க மகனை மாதிரியா...? வேண்டவே வேண்டாம்...' என்று அவள் மனதிற்குள் அலறினாள்... விக்ரம் ஒருத்தனையே தாங்க முடியலை... இதில் இன்னொன்றா என்று...

நல்ல நேரம் பார்த்து பவித்ராவை விக்ரமின் அறைக்குள் அனுப்பி வைத்தனர்... பவித்ரா என்ன தான் தைரியமான பெண்ணாக இருந்தாலும் விக்ரமை தனியே சந்திக்க அப்படிப் பயந்தாள்... அவள் பயந்ததற்கு நேர்மாறாக அவன் அறையினுள் இல்லை... அதில் அவள் சந்தோசம் அடைந்தாள்...

'நல்லவேளை அவனைக் காணோம்... அவன் வருவதற்குள் படுத்து தூங்கிற வேண்டியது தான்...' மனதிற்குள் சந்தோசமாக நினைத்தவள் கையிலிருந்த பால் சொம்பை அங்கிருந்த மேசை மீது வைத்து விட்டு நிம்மதியாய் கட்டிலில் அமர்ந்தாள்...

இப்போது இல்லை என்றாலும் சிறிது நேரம் கழித்து விக்ரம் அறைக்குள் வந்தால் என்ன செய்வது என்று யோசனையுடன் அமர்ந்திருந்தவளுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றியது... அவளது ஒவ்வொரு செய்கையையும் விக்ரம் பால்கனியில் அமர்ந்தபடி கண்ணாடி கதவின் வழியே பார்த்துக் கொண்டிருந்தான்... இரை தேடும் புலியின் வேட்கை அவனது கண்களில் ஒளிர்ந்தது...

பவித்ரா தூங்கும் வரை அமைதியாக இருந்தவன் அவள் உறங்கிய பின் அறைக்குள் நுழைந்தான்... கால்களைக் குறுக்கி கொண்டு படுத்திருந்தவளை ஒரு கணம் இமைக்காது பார்த்தான்... அடுத்து அவளிடம் தான்

எடுத்துக் கொள்ளப் போகும் உரிமை கண்டு அவனுக்கே சிறிது நடுக்கமாக இருந்தது...

இதுவரை எந்தப் பெண்ணையும் ஏறெடுத்து பார்க்காதவன்... அவர்களிடம் எப்படிப் பேச வேண்டும், நடந்து கொள்ள வேண்டும் என்று பெண்களின் சூட்சமம் தெரியாதவன்... அப்படிப்பட்டவன் கணவனாக மாறுவது குறித்து உள்ளுக்குள் அவனுக்குச் சற்று உதறலாக இருந்தது... ஆனாலும் ஆண் என்கிற திமிர் அவள் அடக்கி ஆள நினைத்தது...

மனைவி அருகில் அமர்ந்தவன் முதலில் ஒற்றை விரலால் அவளைத் தொட்டான்... அதற்கே அவனது கை அப்படி நடுங்கியது... அந்தக் கணம் அவன் கேட்ட பேச்சுக்கள் காதில் ஒலித்தது... அவ்வளவு தான் அவனிடம் இருந்த நடுக்கம் எல்லாம் சொல்லாமல் கொள்ளாமல் விடை பெற்றது...

மனைவி அருகில் படுத்தவன் அடுத்த நொடி அவளைத் தனது ஆளுகையின் கீழ் கொண்டு வந்திருந்தான்... தூக்க கலக்கத்தில் இருந்த பவித்ரா கணவனை முழுவதும் உணரும் முன் அவன் கலவியலில் வேகமாய் முன்னேறி இருந்தான்...

"விக்ரம்... நீ பண்றது ரொம்பத் தப்பு..." அவனின் செயலை தடுத்தவாறு கூறிய பவித்ராவின் குரலில் அப்படி ஒரு நடுக்கம் இருந்தது...

"எதுடி தப்பு...? கணவன் மனைவி கிட்ட உறவு கொள்ளுவதைத் தப்புன்னு யாரும் சொல்ல மாட்டாங்க..."

"பிடிக்காத பொண்ணை இப்படித் தொடுவதற்குப் பெயர் கற்பழிப்பு... நீ அதைத் தான் செய்து கொண்டிருக்க... என்ன ஒண்ணு நீ அதைத் தாலி கட்டிட்டு செய்திட்டு இருக்க..."

அதில் அவனது உடல் ஒரு கணம் விறைத்தது... மறு கணம் அவனது நடவடிக்கை முன்பை வேகமாய் இருந்தது...

"ஆமாம்டி... நான் உன்னைக் கற்பழிச்சுட்டு தான் இருக்கேன்... உன்னால் முடிஞ்சா கத்தி ஊரை கூப்பிடு... நானும் நியாயத்தைக் கேட்கிறேன்... எல்லோரும் யாருக்குச் சப்போர்ட் பண்றாங்கன்னு பார்க்கிறேன்..."

அவன் கூறுவதும் சரி தானே... இந்த அசிங்கத்தை அவள் என்னவென்று கத்தி கூப்பாடு போடுவாள்... இதோ இப்போது கத்தினாலும் அவனோடு சேர்ந்து அசிங்கப்படப் போவது அவளும் தானே... சமுதாயத்திற்குப் பயந்து அவள் மிகவும் கேவலமாய் அசிங்கப்பட்டுத் தோற்று போனாள் அவனிடத்தில்...

"வேண்டாம் விக்ரம்... எனக்குப் பிடிக்கலை... என்னை விட்டிரு..."

தாழ்ந்த குரலில் அவள் கெஞ்சிய கெஞ்சல், அவளது ஆவேசமான எதிர்ப்பு எதையும் சட்டை செய்யாது முன்னேறியவன் மென்மையான பெண்ணவளை தனது உடல் வலிமையால் எளிதில் அடக்கி விட்டான்... அவளிடத்தில் கணவனாய் தன்னை நிலை நாட்டிய பின்னரே அவளை விட்டு விலகினான்...

இதுநாள் வரை எதற்கும் கலங்காத பவித்ராவின் கண்களில் இருந்து கண்ணீரை வரவழைத்து விட்டான் அவளது கணவன்... வாழ்க்கையே முடிந்தது போன்றதொரு ஒரு சோர்வு அவளிடம்... அவன் என்னமோ மென்மையாகத் தான் அவளைக் கையாண்டான்... ஆனால் பெண்ணவளால் தான் அவனைத் தாங்கி கொள்ள முடியவில்லை... எழுவதற்குக் கூட அவளால் முடியவில்லை... சிரமப்பட்டு எழுந்து குளியலறைக்குள் சென்றாள்...

அவள் சென்றதும் படுக்கையில் படுத்த விக்ரமின் கன்னம் தலையணையில் இருந்த ஈரத்தை உணர்ந்தது... மெல்ல அதைத் தொட்டு பார்த்தவனுக்கு அது பவித்ராவின் கண்ணீர் என்று புரிந்தது... அவள் அழுது அவன் பார்த்தது இல்லை... தொழிலில் எத்தனை பெரிய நஷ்டம் வந்தாலும் இரும்பு போல் தாங்கி நின்றவள் இப்போது கண்ணீர்

வடித்தது கண்டு அவனுக்கு என்னவோ மாதிரியாக இருந்தது... அவளின் வரவிற்காக அவன் காத்திருந்தான்...

ஷவருக்கு அடியில் நின்ற பவித்ராவின் விழிகளில் இருந்து கண்ணீர் பெருக்கெடுத்து ஓடியது... பவித்ராவின் அழுகை தண்ணீரில் இருக்கும் மீனின் அழுகை போன்றது... அது யாருக்கும் தெரியாது... அவளுக்குத் துக்கமாக இருந்தால் குளியலறைக்குள் புகுந்து தனிமையில் அழுவாளே தவிர... எல்லோரின் முன்பு அழ மாட்டாள்... அழுகை அவளைப் பலவீனப்படுத்தும், அதே சமயம் எதிரியை பலமாக்கும் என்று அவளுக்கு நன்கு தெரியும்...

அது போல் தான் இப்போதும் அவளது துக்கத்தைக் கண்ணீராய் தண்ணீரில் கரைத்தாள்... அப்போது அவள் அன்னை கூறிய வார்த்தைகள் அவளது காதில் ஒலித்தது...

'என்ன தான் உயர உயர பறந்தாலும் பெண்ணாய் பிறந்தால் ஒருத்தனுக்கு அடிமையா வாழ்ந்து தானாக வேண்டும்... அடிமை வாழ்வு வாழ்ற நாய் பிழைப்பு தான் பெண் பிழைப்பு...'

எத்தனை சத்தியமான வார்த்தைகள் அவை... தொழிலில் விக்ரமுக்கு சவால் விடுபவள் இப்போது வாழ்க்கையில் அவனிடம் மிகவும் மோசமாய்த் தோற்று போய் நிற்கிறாளே... அவளுக்கு அத்தனை துயரமாக இருந்தது... எத்தனை நேரம் குளியலறைக்குள் இருக்க முடியும்... உடை மாற்றிக் கொண்டு வெளியில் வந்தாள்...

கட்டிலில் சாய்ந்து கொண்டு தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த கணவனைக் காண காண அவளுக்குக் கோபம் கோபமாக வந்தது... ஆனால் ஒன்றும் பேசாது அறையின் மூலையில் தரையில் போய் அமர்ந்து கொண்டாள்... முழங்காலில் முகம் கவிழ்த்தவள் அதன் பிறகு நிமிரவில்லை...

"இப்போ என்ன நடந்து போச்சுன்னு இப்படி டிராமா பண்ற...? இது எல்லாப் புருசன், பொண்டாட்டிக்கும் இடையில் நடப்பது தான்..."

"இப்படி மிருகத்தனமாவா...?" தலையை நிமிர்த்தியபடி அவள் கோபமாய்ச் சீறினாள்...

அதில் அவனுக்கும் கோபம் வந்தது...

"இது மிருகத்தனமா...? மிருகத்தனம்ன்னா என்னன்னு நான் காட்டவா...?" கட்டிலில் இருந்து ஆத்திரத்துடன் எழுந்தவன் பின்பு ஏதோ தோன்ற அப்படியே அமர்ந்து விட்டான்...

"இங்கே பார் பவித்ரா... நீயும் நானும் கணவன், மனைவி... இந்த உறவு நம் வாழ்க்கை முழுவதும் தொடரும்... இதைப் பாதியில் அறுத்துட்டு நீயும், நானும் போகப் போறது இல்லை... அப்படி இருக்கும் போது இந்த உறவை எல்லோரையும் மாதிரி நீயும் ஏத்துக்கிட்டு தான் ஆகணும்..."

ஏனோ தெரியவில்லை விக்ரம் தன்மையாக அவளுக்கு எடுத்துக் கூறினான்...

"காலம் முழுவதும் இந்த அருவருப்பை என்னால் தாங்கிக்க முடியாது..." என்றாள் அவள் கோபமாய்...

தனது தொடுகையை அருவருப்பாய் இருக்கிறது என்று சொன்ன மனைவியைக் கண்டு அவனுக்கும் ஆத்திரம் பொங்கியது...

"ஆமாம், நீ பெரிய உலக அழகி... இங்கே உனக்காக யாரும் ஏங்கிட்டு இருக்கலை... இந்த ஊரு, உலகத்துக்கு நீ என்னோட மனைவி... நீயும், நானும் சந்தோசமா வாழ்கிறோம்ன்னு அவங்களுக்கு நிரூபிக்க உன் மூலமா எனக்கு ஒரு குழந்தை வேணும்... எப்போ நீ என் குழந்தையை உண்டாகுறியோ அப்போ நான் உன்னைத் தொடுறதை நிறுத்திர்றேன்..."

தொழிலில் எல்லாம் சாதித்த ஒரு சாதனை பெண்ணைக் கடைசியில் பிள்ளை பெற்றெடுக்கும் இயந்திரமாக மாற்ற நினைக்கும் கணவன் மீதான அவளது வெறுப்பு எல்லை கடந்தது...

"விக்ரம்... இதுக்கு எல்லாம் நீ நல்லா அனுபவிப்ப... நான் ஒரு பெண் என்கிறதால தானே என்னைச் சுலபமா அடக்கிட்ட... ஆனா நான் உன்னைச் சும்மா விட மாட்டேன்டா..."

அவளது சபதம் கண்டு அவனது முகத்தில் சிரிப்புப் படர்ந்தது...

"சண்டிராணி உன்னால் என்னை என்னடி பண்ண முடியும்...?" அவனது திமிரான வார்த்தையில் ஒன்றும் பேசாது அமைதி காத்தவள் முழங்காலில் முகம் கவிழ்ந்து கொண்டாள்...

அவனும் அவள் அருகே வரவில்லை... வீம்பாய் கட்டிலில் படுத்து உறங்கி விட்டான்...

மறுநாள் காலையில் எழுந்த பவித்ரா கணவன் புறம் திரும்பாது குளித்து முடித்து அறையை விட்டு வெளியேறி விட்டாள்... எங்குச் செல்வது என்று தெரியாது விழித்தவள் நேரே வரவேற்பறைக்கு வந்தாள்... அங்கு இவளுக்காகவே காத்திருந்தது போல் சோபாவில் அமர்ந்திருந்த ரேவதி எழுந்தார்...

"காபி குடிக்கிறியா பவி..."

அவள் தலையாட்டவும் அவளை அழைத்துக் கொண்டு சமையலறைக்குச் சென்றார்... அவள் சொல்ல சொல்ல அவளுக்குப் பிடித்த விதத்தில் காபி கலந்து கொடுத்தவரை அவளுக்கு நிரம்பப் பிடித்துப் போனது... அவர் விக்ரமின் அன்னை என்பதே அவளுக்கு மறந்து போனது...

"உனக்குச் சமைக்கத் தெரியுமா பவி..."

"கொஞ்சம் கொஞ்சம்... அடிப்படை சமையல் செய்யத் தெரியும்..."

"பரவாயில்லை கத்துக்கிட்டா போச்சு... இல்லைன்னாலும் ஒண்ணும் கவலையில்லை... வேலைக்கு ஆளுங்க

இருக்காங்க... நீ உன் புருசனையும், தொழிலையும் பார்த்துட்டு நிம்மதியா இரு..."

அவர் கூறியதும் விக்ரம் நேற்று நடந்து கொண்ட முறை மனதில் எழுந்து அவளைக் கலவரப்படுத்தியது...

"இங்கே சமையலுக்கு ஆள் இருந்தாலும் நாம தான் செய்யணும்... தாத்தாவுக்கு வேலைக்காரங்க செஞ்சா பிடிக்காது..." என்று வீட்டு கதைகளைப் பேசியபடி வேலை பார்த்துக் கொண்டிருந்தவரிடம் மனதால் நெருங்கி விட்டாள் பவித்ரா...

சட்னிக்கு தேங்காய் துருவ போன ரேவதியிடம் இருந்து தேங்காயை பறித்தவள், "நான் துருவி தர்றேன் அத்தை..."

இயல்பாக அவளது வாயில் இருந்து 'அத்தை' என்ற வார்த்தை வந்தது... அதைக் கண்டு ரேவதிக்குச் சந்தோசமாக இருந்தது... கீழே அமர்ந்து பவித்ரா தேங்காய் துருவ அவர் சமைத்தபடி அவளிடம் பேசி கொண்டிருந்தார்...

"அம்மா... காபி..." என்றபடி அங்கு வந்து நின்றான் விக்ரம்...

அவனது வரவு உணர்ந்து பவித்ராவின் முகம் இதுவரை இருந்த இளக்கத்தைத் தொலைத்து இறுகி போனது... அவனை நிமிர்ந்து பாராது தேங்காய் துருவுவதில் கவனத்தைச் செலுத்தினாள்...

"இப்போ தான் பவித்ரா உன்னைப் பார்க்க அவ்வளவு பாந்தமா இருக்கு..." என்று அதற்கும் நக்கலடித்தான் விக்ரம்...

அதில் அவள் அவனை நிமிர்ந்து பார்த்து முறைத்தாள்... அவனோ அவளைக் கண்டு கொள்ளாது கையிலிருந்த காபியை உறிஞ்சினான்...

அப்போது அங்கு வந்த சௌந்தர்யா அவளிடம், "தேங்காய் மட்டும் துருவினா போதுமா பவி...? அப்படியே சமையலையும் கவனிச்சுக்கோ... இனி நம் வீட்டில் நீ தான் சமையல் செய்யணும்..."

'சம்பளமில்லாத வேலைக்காரி ஆக்கிருவாங்க போலிருக்கிறதே...' அவள் மனம் குமுறும் போதே விக்ரமின் குரல் இடையிட்டது...

"பெரியம்மா... பவி நம்ம மேலுள்ள பகையில் சாப்பாட்டில் விசத்தை வைச்சாலும் வச்சிர போகிறாள்... பார்த்து கவனம்..." என்று அவரை அவன் எச்சரித்தான்...

அதைக் கேட்டு பவித்ராவிற்கு பற்றிக் கொண்டு வந்தது...

'முதலில் உனக்குத் தான்டா விசம் வைக்கணும்...' மனதில் கணவனை நினைத்துக் கறுவி கொண்டாள்...

"அப்படின்னா வேண்டாம் விக்கி... எப்போதும் போல் ரேவதியே பார்த்துக்கட்டும்..." என்று அவசரமாகச் சொன்னார் அவர்...

"பெரியம்மா... இன்னைக்கு எனக்கு உங்க கையால் சமைச்சு சாப்பிடணும் போலிருக்கு... நீங்க சமையுங்களேன்..."

கெஞ்சலாய் அவன் கூறியதை எப்படி அவரால் தட்ட முடியும்...? ஒருவேளை அவன் அதிகாரமாய்க் கேட்டிருந்தால் அவர் எதிர்த்து இருப்பாரோ என்னவோ... இப்போது அவரால் பதில் பேச முடியாது வேறுவழியின்றிச் சமையலை கவனிக்கச் சென்றார்...

இது தான் சாக்கு என்று விக்ரம் அன்னையை வெளியில் அழைத்துக் கொண்டு வந்தான்... அங்கு அமர்ந்தபடி அவர்களை வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்த பவித்ராவிடம்,

"உனக்கு வேறு தனியா சொல்லணுமா...? எனக்குக் குளிக்கத் தேவையானதை யார் எடுத்து வைப்பாங்க...?" என்று அவளிடம் வேறு காய்ந்தான்...

"அதுக்கு எதுக்குடா அவளைத் திட்டுற...?" என்ற ரேவதி மருமகளிடம்,

"நீ முதல்ல அவனைக் கவனிம்மா..." என்க...

பவித்ரா எழுந்து அவர்களுடன் இணைந்து நடந்தாள்... சிறிது தூரம் நடந்ததும் விக்ரம் நின்று தனது தாயின் கரத்தினைப் பிடித்துக் கொண்டு,

"இத்தனை நாள் நீங்க சந்தோசமா இருந்தீங்களா இல்லையான்னு எனக்குத் தெரியாது... ஆனால் இனி உங்களை நான் சந்தோசமா வச்சிக்குவேன்... அது போல் தான் என் மகனின் அம்மாவையும்..." என்றவன் மனைவியைத் திரும்பியும் பாராது சென்று விட்டான்...

"விக்ரம் யாரை சொல்கிறான்னு புரியுதா...?"

அவள் 'ஙே' என்று விழித்தாள்...

"உன்னைத் தான் சொல்லிட்டுப் போறான்... நான் கூட என்னமோ நினைச்சேன்... ஆனால் நீங்க ரெண்டு பேரும் பரவாயில்லை... வாழ்க்கையைப் புரிந்து நடந்துக்கிறீங்க..." என்றவரை அவள் பரிதாபமாகப் பார்த்தாள்...

"இப்போ குலதெய்வ கோவிலுக்குப் போயிட்டு அப்படியே உங்க வீட்டுக்கு மறுவீடு போங்க... நாளைக்குச் சென்னைக்குப் போகணும் இல்லையா...?"

அவர் சொன்னதும் தான் தொழில் பற்றிய நினைவுகள் அவளுக்கு ஞாபகம் வந்தது... கடைசியில் அவளும் சராசரி இல்லத்தரசியாய் மாறி தொழிலை கவனிக்க மறந்து போய் விட்டாளே... அவளது கணவனும் அதைத் தானே விரும்பினான்... அவளுக்கு அவனின் மீது கோபம் கோபமாக வந்தது...

அறைக்கு வந்து அவள் உடை மாற்றிய போதும் அவள் அவனிடத்தில் ஒன்றும் பேசவில்லை... அதை அவன் பெரிதாய் கண்டு கொண்டதாய் தெரியவில்லை...

கோவிலில் சாமி கும்பிடும் போது தான் தனக்கு எதிரில் பெண்கள் புறம் நின்றிருந்த மனைவியவளை விக்ரம் பார்த்தான்... அதுவரை அவன் அவளைக் கண்டு கொள்ளவில்லை...

கண்களை மூடி கடவுளிடம் வேண்டி கொண்டிருந்தவளின் முகத்தில் அப்படி ஒரு தீவிரம் இருந்தது... அந்தத் தீவிரத்திற்கான காரணம் என்னவாக இருக்கும் என்று அவன் தலையை உடைத்துக் கொண்டான்...

தீபாராதனையை எடுத்துக் கண்களில் ஒற்றி கொண்டவளின் விழிகளில் இருந்து அவனால் எதையும் கண்டு பிடிக்க முடியவில்லை...

கோவிலில் இருந்து வீட்டிற்கு வந்து பத்து நிமிடங்கள் இருந்தவர்கள் பின் பவித்ராவின் வீட்டிற்குக் கிளம்பி சென்றனர்...

"திருவேங்கடம் கிட்ட ஜாக்கிரதையா இரு விக்ரம்... உன்னை நம்பி தான் இந்தக் குடும்பமே இருக்கு..."

தன்னை எச்சரித்த தாத்தாவின் வார்த்தைகளின் பின்னால் இருந்த துன்பத்தை விக்ரம் உணர்ந்தே இருந்தான்... அவனது தந்தை மற்றும் தம்பி வினோத்தால் வந்த துன்பமே அது என்று அவனுக்குப் புரியாமல் இல்லை...

"உங்க நம்பிக்கையை நான் எப்போதும் காப்பாத்துவேன் தாத்தா... முதலில் நான் உங்க பேரன்... அதன் பிறகே அவளுக்குக் கணவன்..." என்ற பேரனை கண்டு அவருக்கு அத்தனை நிம்மதியாக இருந்தது...

பவித்ராவின் வீட்டிற்கு மதிய உணவின் போது தான் இருவரும் அங்கு வந்து சேர்ந்தனர்... மதிய உணவு உண்டு விட்டு அறைக்குள் நுழைந்த விக்ரம் மாலை வரை வெளியில் வரவில்லை... பவித்ராவும் அவனை எட்டி பார்த்து என்னவென்று கேட்கவும் இல்லை...

மாலையில் யாருடனும் ஒட்டாது வெளியில் கிளம்பி சென்ற விக்ரம் இரவு உணவிற்குத் தான் வீட்டிற்கு வந்தான்... உணவு முடிந்து மீண்டும் அறைக்குள் முடங்கிக் கொண்டான்...

"என்னக்கா இது மாமா என்ன இப்படி உம்மணாமூஞ்சியா இருக்கார்...?"

"நீ தானே சொன்ன அவன் ஹேண்ட்சம் அப்படி இப்படின்னு..."

"அது..." என்று இழுத்த பல்லவி, "அது ஒத்துக் கொள்ள வேண்டிய விசயம் தான்க்கா... மாமா செம ஹேண்ட்சம் தான்..." என்று சின்னவள் ஜொள்ள... அவளை முறைத்து பார்த்தாள் பவித்ரா...

'இவளை மாதிரி என்னால் ஏன் வாழ்க்கையை ஈசியாக எடுத்துக் கொள்ள முடியவில்லை...?' அவளது மனம் முரண்டியது...

இரவு அவளது அறைக்கு நுழையும் போதே அவளது உள்ளமும் , உடலும் ஒரு சேர பதறியது... அவள் நினைத்தது போல் அவள் கட்டிலை நெருங்கியதும் விக்ரமின் கரங்கள் அவளை அணைத்தது... அதிலிருந்து விடுபடத் திமிறியவளின் காதில் அவன்,

"இப்போ கத்துடி பார்க்கலாம்... இன்னைக்கு உங்க தாத்தா கிட்ட நான் பஞ்சாயத்து வைக்கிறேன்..." என்று எகத்தாளம் பேசிய கணவனைக் கண்டு அவளுக்கு மனம் கசந்தது...

கத்தி முனையில் ஒரு பெண்ணின் விருப்பம் இல்லாது கற்பை சூறையாடும் கயவனுக்கும் கணவனான விக்ரமிற்கும் அதிக வேறுபாடு இல்லை என்றே அவளுக்குத் தோன்றியது...

அவனது தொடுகையில் உடல் அருவருக்கக் கூசி திமிறியவளின் எதிர்ப்பை சிறிதும் கண்டு கொள்ளாது தனது காரியத்தில் கண்ணாயிருந்தான் அவன்... அவனது காரியம் முடிந்ததும் அவன் உறங்கி விட அவளோ விடிய விடிய முழித்து இருந்தாள்... நேற்று அவளிடம் இருந்த கண்ணீர் கூட இன்று அவளிடத்தில் இல்லை... எல்லாம் வற்றிப் போனது...

'விக்ரம்... உனக்குத் தெரிந்த வழியில் நீ என்னை அடக்கி ஆளுகிறாய்... அதே போல் எனக்குத் தெரிந்த வழியில் நான் உன்னை அடக்கி காட்டுகிறேன்... ஆம்பிளைங்கிற

உன் திமிரை அடக்குகிறேன்டா...' அவளது மனதில் வன்மத்தின் தீ கொழுந்து விட்டு எரிந்தது...

மறுநாள் புது மணத் தம்பதி மட்டும் சென்னை கிளம்பி சென்றனர்... மற்றவர்கள் கிராமத்து வீட்டை சுத்தம் செய்து பூட்டி விட்டு வர தாமதமாகும் என்று கூறி விட்டனர்... சென்னை வீட்டில் வேலை செய்யும் பெண் ஆரத்தி சுற்ற பவித்ரா சத்யமூர்த்தி, பவித்ரா விக்ரமாக அந்த வீட்டில் காலடி எடுத்து வைத்தாள்...

மூன்றாம் நாள் இரவு விக்ரம் அவளைத் தொட்ட போது அவள் எதிர்ப்பு ஒன்றும் சொல்லாது அவனிடத்தில் அப்படியே அடங்கிப் போனாள்... அது அவனுக்கு ஆச்சிரியத்தை அளித்த போதும் அவளிடம் ஏனென்று கேட்கவில்லை... அதே போல் முதலிரவு அன்று பேசிய மனைவி அதன் பின் ஒரு வார்த்தை கூடத் தன்னிடம் பேசவில்லை என்பதையும் அவன் அறிந்திருக்கவில்லை...

அடுத்த ஒரு வாரத்தில் பவித்ராவின் அமைதிக்கான அர்த்தம் அவனுக்குத் தெரிந்தது...

வாழ்க்கையில் வலியவனாய் மனைவியை வெற்றிக் கொண்ட விக்ரம் தொழிலில் மெல்லிய மனைவியிடத்தில் மிகவும் மோசமாய்த் தோற்றுப் போய்க் கொண்டிருந்தான்...

ஆம், பதுங்கியிருந்த புலி கடைசியில் குறி பார்த்து பாய்ந்தே விட்டது...

வாழ்க்கையையும் தொழில் போன்று நினைத்து சதுரங்க வேட்டையாட நினைத்தனர் கணவன், மனைவியான இந்தத் தொழில் எதிரிகள்... தொழிலில் அன்பு என்கிற பேச்சுக்கே இடமில்லை... ஆனால் வாழ்க்கையில் காதல் எப்போது எந்தப் புள்ளியில் தோன்றும் என்பதினை அறியா பாலகர்களாக இவ்விருவரும் வாழ்க்கையை விளையாட்டாய் விளையாடி பார்க்க ஆசைப்பட்டனர்...!!!

மொழி பேசும்...!!!

## விழி : 7

இரவு பதினோரு மணிக்கு வீட்டிற்குள் நுழைந்த விக்ரமிற்கு அப்படி ஒரு சோர்வு உடலில்... ஓய்வில்லாது ஓடி கொண்டு இருப்பவனுக்கு இப்போது புதிதாகத் திருமண வாழ்க்கை வேறு சேர்ந்து அவனை மேலும் சோர்வுற செய்தது... தொழில் உடலினை சோர்வுற செய்தது என்றால், திருமண வாழ்க்கை மனதினை மிகவும் சோர்வுற செய்தது...

'என்னடா வாழ்க்கை இது...?' என்று அவன் மிகவும் சலிப்பாக உணர்ந்தான்... திருமணமாகி நான்காவது நாள் இப்படி ஒரு எண்ணம் தோன்றிய ஒரே புது மணமகன் இவனாகத் தான் இருப்பான்...

யாருமில்லாத வீடு வேறு மேலும் அவனது சோர்வினை அதிகரிக்க அவன் நேரே தனது அறைக்குச் சென்றான்... அவனது மனைவி இன்னமும் வீடு வந்து சேரவில்லை என்று தெரிந்ததும் அவனுக்கு அப்படி ஒரு கோபம் பொங்கியது...

'யாரை கேட்டு இவள் கம்பெனிக்கு போனாள்...? இவளுக்கு என் கிட்ட ஒரு வார்த்தை சொல்லணும்ன்னு தோணிச்சா...? வரட்டும் இன்னைக்கு...'

மனதிற்குள் கறுவி கொண்டே அவன் குளித்து முடித்து உணவு உண்ண சென்றான்... அங்கு 'ஹாட் கேசில்' இருந்த சப்பாத்தியை எடுத்துத் தட்டில் வைத்து குருமாவை ஊற்றி வாயில் வைத்தவனுக்கு அந்தச் சப்பாத்தி தொண்டைக்குள் இறங்க மறுத்தது... ஏனெனில் சப்பாத்தி ஆறி போய்க் காய்ந்திருந்தது...

அந்நேரம் அவனுக்குத் தனது அன்னையின் ஞாபகம் எழுந்தது... அவன் எத்தனை மணிக்கு வந்தாலும் அவனுக்காகக் காத்திருந்து சுட சுட உணவினை பரிமாறும் அவரது அன்பு இப்போது தான் அவனுக்கு உறைத்தது... ஏனெனில் இது வரை அவனது அன்னை இது போல் அவனைப் பிரிந்திருந்தது இல்லை... எப்போதும் அவனுக்கு வேண்டியதை செய்து கொண்டு அவர் வீட்டில்

இருந்ததாலோ என்னமோ அவனும் அவரது அருமையை இதுவரை உணர்ந்தது இல்லை...

அதற்கு மேல் சாப்பிட பிடிக்காதவனாய் அங்கிருந்த பாலையும், பழத்தையும் உண்டு விட்டு எழுந்தான்... உணவு விடுதியில் உணவு வாங்கலாம் தான்... ஏனோ அதற்கு அவனுக்கு விருப்பம் இல்லை...

வரவேற்பறையில் அமர்ந்து தொலைக்காட்சியை உயிர்ப்பித்தவன் செய்தியில் ஆழ்ந்து விட்டான்...

சரியாகப் பன்னிரெண்டு மணிக்கு பவித்ரா வீட்டினுள் நுழைந்தாள்... அவளைக் கண்டதும் அவனது கோபம் அதிகரித்தது... கோபமாய் எழுந்து அவள் அருகில் வந்து வழிமறித்தார் போன்று நின்றவன்,

"இது தான் நீ வீட்டுக்கு வரும் நேரமா...?" என்று கோபத்துடன் வார்த்தைகளைக் கடித்துத் துப்ப...

அவளோ கைகளைக் கட்டி கொண்டு அமைதியாக அவனை வெறித்துப் பார்த்து கொண்டிருந்தாள்... அதில் அவனது கோபம் இன்னமும் எகிறியது...

"நீ கம்பெனிக்கு போறேன்னு என் கிட்ட சொன்னியா...? இல்லை நான் தான் உனக்குப் பெர்மிசன் கொடுத்தேனா...?"

அதற்கும் அவளது பதில் அதே வெறித்த பார்வையுடன் கூடிய மௌனம் தான்...

"கண்ட கண்ட நேரத்திற்கு நீ வருவதற்கு இது ஒண்ணும் சத்திரம் இல்லை... வீடு... புருசங்காரன் வீட்டுக்கு வரும் போது மனைவி வீட்டில் இருக்கணும்... இங்கே என்னடான்னா எல்லாம் தலைகீழா இருக்கு..."

அதற்கும் பதில் கூறாது அவனைச் சுற்றிக் கொண்டு அவள் செல்ல முயன்ற போது தனது கையை நீட்டி அவளைத் தடுத்தவன்,

"என்னைப் பார்த்தா உனக்கு என்ன பைத்தியக்காரன் மாதிரியா தெரியுது...?"

அவனது வார்த்தைகளைப் புறம் தள்ளியவளாய் அலட்சியப்படுத்தியவளாய் அவனைத் தாண்டி கொண்டு தங்களது அறையை நோக்கி சென்றாள்... அவனும் கோபத்துடன் அவள் பின்னேயே வந்தான்... அறை கதவை திறந்து கொண்டு உள்ளே சென்றவளின் கையைப் பிடித்துத் தடுத்தவன்,

"எவ்வளவு நெஞ்சழுத்தும் உனக்கு...? கேட்க கேட்க பதில் சொல்லாம போற...?"

அவளும் திருமணம் முடிந்து இன்று தான் நிறுவனத்திற்குச் சென்றிருக்கிறாள்... வேலைகள் மலை போல் குவிந்திருப்பதைக் கண்டு அதில் மூழ்கி போனவள் நேரத்தை மறந்து போனாள்... அது போல் உணவு உண்ணவும்... இப்போது அவளது உடல் மிகவும் சோர்ந்து இருந்தது... வயிற்றுக்கு உணவு வழங்காததால் அவளது சக்தி முழுவதும் வடிந்திருந்தது... இதில் கணவன் வேறு நை நை என்று அவளது உயிரை எடுத்ததில் மனம் சலிப்பாக உணர்ந்த போதும் அந்தச் சலிப்பை கூட உரிமையில்லாத கணவனிடம் காட்ட அவள் விரும்பவில்லை...

அவளது அமைதி அவனது ஆத்திரத்தை அதிகரித்ததில் அவன் எப்போதும் பெண்ணவளை பழிவாங்க தேர்ந்தெடுக்கும் வழியை அப்போதும் பின்பற்ற... உடலும், மனமும் அன்று மிகவும் காயப்பட்டுப் போனது அவளுக்கு...

வழக்கம் போல் குளியலறைக்குள் வந்து சத்தம் இல்லாது அழுதாள்... என்ன இல்லை அவளிடம்...? பிறகு ஏன் இப்படி ஒரு ஆணிடம் அடிமைப்பட்டுக் கிடக்க வேண்டும்...? அவளது மனம் மிகவும் நொந்து போனது, இந்தச் சமுதாயக் கட்டமைப்பை நினைத்து... அவள் எவ்வளவு உயரம் பறந்தாலும் சமுதாயத்திற்குக் கட்டுப்பட்ட பெண்... அடுத்துத் திருமணத்திற்குக் காத்திருக்கும் தங்கையின் நினைவு வேறு...

அது எல்லாம் விட இந்தச் சமுதாயத்தில் அவளது தாத்தாவிற்கு என்று இருக்கும் தனி மரியாதை, கௌரவம் எல்லாம் சேர்ந்து அவளை ஊமையாக்கி இருந்தது... அவளைப் போன்ற மேல்தட்டு மக்களிடையில் விவாகரத்தும், பல தார திருமணமும் சகஜமான ஒன்று தான்... ஆனால் அவளது வீட்டை பொருத்தவரை அது அத்தனை எளிதல்ல...

பிறந்த வீட்டினருக்காக அவள் பொறுத்து போனாள்... தொழில் ஒப்பந்தத்திற்காக நடந்த திருமணத்தை அது போன்றே ஒரு ஒப்பந்தமாய் நினைத்து கொண்டாள்... ஆனாலும் பெண்ணவளால் சில விசயங்களைச் சகித்துக் கொள்ள முடியாது போனது... உடலை விட அவளது மனம் மிகவும் ரணப்பட்டுப் போனது...

குளித்து முடித்து விட்டு வெளியில் வந்தவள் முகத்தில் அழுததற்கான சுவடு எதுவும் இல்லை... மிகச் சாதாரணமாக இருந்தாள்... தன்னைப் பார்த்துக் கொண்டிருந்த விக்ரமை கண்டு கொள்ளாது அவள் அறையை விட்டு வெளியில் சென்று விட்டாள்...

பத்து நிமிடத்தில் திரும்பி வந்தவள் கையில் உணவு கிண்ணம் இருந்தது... அதில் சுட சுட நூடில்ஸ் இருந்ததை விக்ரம் கண்டான்... அதன் நறுமணம் வேறு அவனது பசியைத் தூண்டி விட்டது... விக்ரமின் விழிகள் மனையாளை பின் தொடர்ந்தது...

அவளோ அவனைக் கண்டு கொள்ளாது கீழே படுக்கையை விரித்து அதில் அமர்ந்தவள் ஒரு கையில் புத்தகமும், ஒரு கையில் நூடில்ஸுமாக ஐக்கியமாகி விட்டாள்... அவன் சாப்பிட்டானா...? என்று அவள் அவனிடம் ஒரு வார்த்தை கேட்கவில்லை...

அதைக் கண்டு அவனுக்கு உள்ளுக்குள் திகுதிகுவெனப் பற்றிக் கொண்டு வந்தது...

"கட்டுன புருசன் சாப்பிட்டானா இல்லையான்னு எல்லாம் கேட்கிறது இல்லை... தான் மட்டும் தின்னால் போதுமா...?"

கடினமாய் வந்து விழுந்த கணவனது வார்த்தையில் அவளது கை ஒரு நொடி தயங்கியது... பின் மீண்டும் அது தனது வேலையைச் செவ்வனே செய்தது...

"ச்சீ... நீயெல்லாம் மனுசியாடி...? ஜடம்..." என்று அதற்கும் அவளிடம் எரிந்து விழுந்த விக்ரம் பால்கனியில் சென்று அமர்ந்து கொண்டான்...

அறைந்து சாத்திய பால்கனி கதவை சிறிது நேரம் வெறித்துப் பார்த்தவள் தான் உண்ட பாத்திரத்தை ஒதுக்கி வைத்து விட்டு படுக்க ஆயத்தமானாள்...

வெறும் தரையில் போர்வையை விரித்துப் படுப்பது அவளுக்கு முள் மேல் படுப்பது போன்று அத்தனை அவஸ்தையாக இருந்தது... பிறந்ததில் இருந்து பட்டு மெத்தையில் படுத்து உறங்கியவள் அவள்... கை தட்டினால் ஓடி வந்து சேவகம் செய்ய வேலைக்காரர்கள் என்று ஒரு மகாராணி போல் வாழ்ந்து வந்தவள்...

இப்போது அவளே உணவு சமைத்து உண்டு, இப்படித் தரையில் படுக்கும் அவலநிலைக்கு அந்த விதி அவளைத் தள்ளியிருக்கிறது... யாரை நொந்து கொள்வது என்று தெரியாது மனதிற்குள் மறுகியவளாய் கண்களை மூடி கொண்டாள்...

அடுத்து வந்த மூன்று நாட்களும் இயந்திர தன்மையுடன் வேகமாய் ஓடியது... நான்காவது நாள் விக்ரமின் குடும்பத்தினர் வந்து விட்டிருந்தனர்... அவர்கள் வருவது தெரிந்தும் பவித்ராவிற்கு வேலை இருந்ததால் எப்போதும் போல் இரவு தாமதமாகத் தான் வந்தாள்...

ஏனோ அவளுக்கு ரேவதியை பார்க்க வேண்டும் போல் தோன்றியது... அறைக்குச் சென்று குளித்து விட்டு அவள் மாமியாரை பார்ப்பதற்காக அறை கதவை திறந்து வெளிவர நினைத்த போது ரேவதியே அவளைத் தேடி அங்கு வந்து விட்டார்... அவள் நலம் விசாரிக்கும் முன் ரேவதி முந்தி கொண்டார்...

"என்னம்மா பவி, இப்படிக் கண்ணு எல்லாம் சிவந்து காய்ச்சல் வந்த மாதிரியிருக்க...?"

அவர் பதறி போய்க் கேட்டதும் அவளுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது... இத்தகைய அன்பான வார்த்தைகளைத் தானே அவள் தனது கணவனிடத்தில் தேடுகிறாள்... அவளின் அமைதி அவரை எதுவோ செய்ய அவர் ஆறுதலாய் அவளை அணைத்துக் கொண்டார்...

அடுத்த நொடி பவித்ராவின் கைகள் அவரை இறுக்கமாய் அணைத்துக் கொண்டது... அவள் தனது துயரை வார்த்தையிலோ, கண்ணீரிலோ காட்டவில்லை... அந்த ஒற்றை அணைப்பில் காட்டினாள்...

அப்போது அங்கு வந்த விக்ரம் இந்தக் காட்சியைக் கண்டு அதிசயித்துப் போனவனாய் அப்படியே அசையாது நின்று விட்டான்...

"டேப்லெட் போட்டியா பவி...?"

அவர் கேட்டதும் தன்னைச் சுதாரித்துக் கொண்ட பவி அவரை விட்டு விலகி நின்றவள், "ம்... போட்டேன் அத்தை... நீங்க எப்படி இருக்கீங்க...?"

ரேவதி பதில் சொல்லும் முன் அங்கு வந்த விக்ரம், "என்னை மகனா அடைந்த என் அம்மா நல்லா தான் இருப்பாங்க..." என்றான் கிண்டலாய் மனையாளை நோக்கி...

"அது எல்லாம் சரி தான்... ஆனால் நீ உன் மனைவியைப் பார்த்துக்க வேண்டாமா...? அவள் காய்ச்சலோடு இருக்கும் போது நீ இப்படி வேலை வேலைன்னு ஓடிட்டு இருந்தால் எப்படி...? அவளை டாக்டர் கிட்ட கூட்டிட்டுப் போயிருக்கலாம்... இல்லை அவரை வீட்டுக்கு வரவழைச்சுப் பார்த்திருக்கலாம் இல்லையா...?"

அன்னை குற்றம் சாட்டவும் தான் அவன் மனைவியை உற்றுக் கவனித்துப் பார்த்தான்... அன்னை சொன்னது போல் அவள் சற்று சோர்வாக இருப்பது போல் தான்

தெரிந்தது... இதுவரை அவன் இப்படி எல்லாம் யாரிடமும் கேட்டது இல்லை... அதனால் அவனுக்கு இது எல்லாம் தெரியவில்லை...

"உங்க மருமகள் ஊரையே பார்ப்பவள்... அவளை நான் தனியே டாக்டர் கிட்ட கூட்டிட்டு போகணுமா...? அட போங்கம்மா..."

பவித்ராவை பாராட்டுவது போல் விக்ரம் கூறினாலும் அதில் இருக்கும் மறைமுகக் கிண்டலை அவள் மட்டும் தான் அறிவாள்... ஆனாலும் அவனிடத்தில் அதைக் காட்டாது மறைத்தாள்...

"ஊரை பார்ப்பவளாக இருந்தாலும் அவளை நீ தானே பார்த்துக்கணும் விக்ரம்..."

"சரி சரி... இனி அவளைக் கவனமாகப் பார்த்துக்கிறேன்..." என்று கூறியவன் அறைக்குள் நுழைந்து கொண்டான்... பவித்ரா ரேவதியுடன் பேசியபடி வெளியில் சென்று விட்டாள்...

மீண்டும் பவித்ரா அறைக்குள் வந்த போது விக்ரம் உறங்கி போயிருந்தான்... அதைக் கண்டு அவள் ஆச்சிரியம் அடைந்தவளாய் அறை கதவை பூட்டி விட்டு தனது படுக்கையில் படுத்தவள் நிம்மதியுடன் கண்ணயர்ந்தாள்...

பவித்ரா உறங்கிய பின்னர் எழுந்த விக்ரம் அவளை யோசனையுடன் பார்த்திருந்ததை அவள் அறிந்திருக்க வாய்ப்பில்லை...

அடுத்தடுத்து வந்த நாட்களில் வீட்டில் பூனையாகக் கணவனிடம் பம்மியவள் வெளியில் புலியாகச் சீறி பாய்ந்தாள்... அவளது ஆக்ரோசமான பாய்ச்சலில் விக்ரம் சற்று திணறி தான் போனான்...

எப்போதுமே தொழிலில் அவனுக்கும் அவளுக்கும் போட்டி உண்டு தான்... ஆனால் இப்போது நடக்கும் போட்டி அவனே எதிர்பாராத ஒன்று... எப்போதும் ஒன்றில் அவள் வெற்றி பெற்றால், மற்றொன்றில் அவன் வெற்றிப் பெறுவான்...

இது தான் எப்போதும் நடக்கும் ஒன்று... ஆனால் இந்த முறை பவித்ராவின் தொடர் வெற்றியில் அவன் சிறிது ஆடி தான் போனான்...

அதன் காரணம் தெரியாது அவன் வீட்டில் வந்து அவளிடத்தில் காய்ந்தான்...

"உன்னால் இதை எல்லாம் எப்படிச் சாதிக்க முடிந்தது... உண்மையைச் சொல், என் லேப்டாப்பில் இருந்து என்னுடைய ரகசியத்தைத் திருடினியா...? இப்படிச் செய்ய உனக்கு வெட்கமாக இல்லை..."

அதற்கும் ஒன்றும் பேசாது கல் போன்று முகம் இறுகியவளாய் அவனை வெறித்துப் பார்த்தவள் அடுத்த நொடி அந்தக் காரியத்தைச் செய்தாள்... தனது புடவை முந்தானையைத் தூக்கி கீழே போட்டவள் மரம் போல் அசைவற்று நிற்க... அவளது செயலில் அவன் தான் வெலவெலத்துப் போனான்...

அவளின் இந்தச் செயலை அவன் சிறிதும் எதிர்பார்க்கவில்லை...

"ச்சீ... நீ எல்லாம் ஒரு பெண்ணா...?" என்று அவளைப் பார்த்து கத்தி விட்டு வெளியில் சென்று விட்டான்...

தொழிலில் கணவனை வென்ற போது கூட அவள் இத்தனை மகிழ்ச்சி அடையவில்லை... ஆனால் இப்போது அத்தனை மகிழ்ச்சி கொண்டாள்... படுக்கையில் வீரத்தை காட்டிய வீரன் இப்போது கோழை போல் புறமுதுகிட்டு ஓடுவதைக் கண்டு அவளது இதழ்களில் வெற்றி புன்னகை தோன்றியது...

'இன்னும் உன்னை ஓட ஓட விரட்டுறேன் பார்...' அவளது மனதிற்குள் வன்மம் எழுந்தது...

கணவன், மனைவி போட்டியை அறிந்த வர்மா ஊரெல்லாம் அதைச் சொல்லி சொல்லி சிரித்தார்... அந்தளவிற்கு மிக மோசமாக விக்ரம் மனைவியிடத்தில் தோற்றுப் போனான்... அவனுக்கே தான் செய்யும் தவறுகள் புரியவில்லை...

எல்லாமே சரியாகத் தான் இருக்கிறது... ஆனால் எதுவோ சரியில்லை... இது தான் இப்போது அவன் விசயத்தில் நடந்து கொண்டிருந்தது...

இந்த நேரத்தில் ரேவதி மகனிடம் அவர்களது திருமண வரவேற்பு பற்றிப் பேசினார்...

"இப்போ இது ஒண்ணு தான் குறை... போங்கம்மா..." என்று அவன் அவரிடம் கோபம் கொண்டான்...

சௌந்தர்யாவிற்கு விக்ரம், பவித்ரா வாழ்க்கை ரகசியம் பற்றி இலைமறை காயாகத் தெரிந்த போதும் அதை அம்பலத்தில் ஏற்றுவதற்குச் சரியான நேரம் பார்த்துக் காத்திருந்தார்...

அன்று ரேவதி அறையில் பவித்ரா வந்தமர்ந்து பேசி கொண்டிருந்தாள்...

"அத்தை... நீங்க மட்டும் தனியாவா இங்கே படுப்பீங்க...?"

ஏனெனில் அங்கு அவளது மாமனார் இருப்பதற்கான எந்தச் சுவடும் இல்லை... அதனால் தான் அவள் அப்படிக் கேட்டாள்... மருமகள் கேட்டது கண்டு ரேவதியின் முகம் உணர்வினை தொலைத்தது... அதை உணர்ந்தவளாய் பவித்ரா,

"உங்களைக் கஷ்டப்படுத்தணும்ன்னு நான் கேட்கலை..."

"பரவாயில்லைம்மா... தனிமை எனக்குப் பழகி போன ஒன்று தான்... விக்ரம் ஐந்து வயது வரை என் கூடத் தான் இருந்தான்... அவன் நல்லா படிக்கணும்ன்னு ஊட்டியில் போர்டிங் ஸ்கூலில் சேர்த்த பிறகு என்னுடைய வாழ்க்கையில் தனிமை மட்டுமே மிச்சம்..." என்றவரை கண்டு அவளுக்குப் பாவமாக இருந்தது...

யாருக்கும் தெரியாத ரகசியம் எதுவோ ஒன்று அவரது வாழ்க்கையில் புதைந்திருப்பதை அவள் அறிந்தாள்... அதை வாய் விட்டு கேட்டு மேலும் அவரை வருத்தப்பட வைக்க அவள் விரும்பவில்லை...

அந்த மாதம் பவித்ரா தலைக்குக் குளித்த போது அது ஒரு குறையாகக் கூறி சௌந்தர்யா கண்ணீர் விட்டு அழுது ஆர்ப்பாட்டம் செய்து அவளை எல்லோர் முன்னும் அசிங்கப்படுத்தி விட்டார்... அதில் அவள் உடல் கூசி போய் நின்றாள்... ரேவதி தனது அக்காவிடம்,

"அக்கா... என்ன பேச்சு பேசுறீங்க...? கல்யாணமாகி ஒரு மாசம் தான் ஆகியிருக்கு... அதுக்குள்ள நீங்க இப்படிப் பேசுறது சரியில்லை..."

"எது சரியில்லை...? உண்மையைச் சொன்னால் உனக்கு என் மீது கோபம் வருதா...? உனக்கு உன் மகன் மேல் அக்கறை இல்லை... ஆனால் எனக்கு என் மகன் மேல் அக்கறை இருக்கு... அவனோட வாழ்க்கை நல்லா இருக்கணும்னு நான் நினைக்கிறது தப்பா...?" என்று அவர் போலியாகக் கண்ணீர் விட்டு மாமனார், கணவர் இருவரின் இரக்கத்தினைச் சம்பாதித்து விட்டார்...

சௌந்தர்யா சண்டை போட்டாலாவது விக்ரம் அவரிடம் சத்தம் போட முடியும்... இப்படிப் பாசம் காட்டி அழுதால் அவனும் என்ன செய்வான்...? கையாலாகாதவனாய் அவனும் அவமானப்பட்டு நின்றிருந்தான்...

அந்தக் கோபம் எல்லாம் மனைவியிடம் தான் பாய்ந்தது...

"எல்லாம் உன்னால் தான்டி... உன்னால் தான் நான் இந்த மாதிரி பேச்சுக்களைக் கேட்டுக்கிட்டு இருக்கேன்..."

பவித்ராவும் சௌந்தர்யா பேச்சில் மிகவும் மனம் அடிப்பட்டுப் போயிருந்தாள்... அவளாலும் ஒன்றும் பதில் பேச முடியவில்லை... அதனால் அமைதியாகப் படுத்து விட்டாள்...

அடுத்து ஐந்து நாட்கள் கழிந்த பின் விக்ரம் கணவனாக அவளை நெருங்கிய போது அவளால் எதுவும் சொல்ல முடியவில்லை... வெளியில் அவனை அமைதியாக எதிர் கொண்டாள்... ஆனால் மனதிற்குள்ளோ இதற்கான நிரந்தரத் தீர்வை தேடி யோசித்துக் கொண்டிருந்தாள்...

******************

"பவிம்மா..."

ரேவதியின் அன்பான அழைப்பில் பவித்ரா நின்றாள்...

"நாளைக்கு வரலெக்ஷ்மி விரதம்... கணவனுக்காக விரதம் இருக்கிறது... நாளைக்கு ஒரு நாள் நீ விரதம் இருக்கணும்... நம் விக்ரமுக்காக..."

விக்ரமிற்காக விரதம் இருக்க அவள் என்ன முட்டாளா...? ஆனால் அன்போடு கேட்கும் அந்த நல்ல உள்ளத்தைக் கஷ்டப்படுத்த மனமில்லாது சரியென்று தலையாட்டினாள்...

அவர்களுக்குத் திருமணமாகி ஆறு மாதங்கள் கழிந்திருந்தது... திருமண வாழ்க்கை அப்படியே தாமரை இலை தண்ணீர் போன்று ஒட்டாது சென்று கொண்டிக்கிறது... தொழிலில் அதே போட்டியுடன் எந்த மாற்றமும் இல்லாது செல்கிறது... தொழிலில் பெரும்பாலும் வெற்றி அவளுக்குத் தான்... இப்போதைக்கு அது ஒன்று தான் அவளுக்குப் பெருத்த ஆறுதல்...

மறுநாள் முழுவதும் பவித்ரா விரதம் இருந்தாள்... அதுவும் மாமியாருக்காக... ஆனால் பகல் பொழுது அலுவலகம் சென்றவள் மாலையில் சற்று நேரத்துடன் வீட்டிற்குத் திரும்பி வந்தாள்...

சுமங்கலி பூஜைக்கு என்று விசேச பூஜை வீட்டில் ஏற்பாடு செய்யப்பட்டு இருந்தது... ரேவதி சொன்னபடி குளித்து முடித்துப் பட்டு புடவை அணிந்து மங்களகரமாகப் பூஜையில் வந்தமர்ந்தவள் மனம் கணவனது வருகையை வெகுவாய் எதிர்பார்த்துக் காத்திருந்தது வஞ்சினமாய்...

பூஜை முடியும் போது விக்ரம் ஆவேசமாக வீட்டிற்குள் நுழைந்தான்...

"விக்ரம் வந்துட்டியா...? ரொம்ப நல்லது... பவி அந்தக் குங்குமத்தை எடுத்து விக்ரம் கிட்ட கொடு... அவன் உனக்கு வச்சு விடட்டும்..."

ரேவதியின் வார்த்தையில் பவித்ரா குங்கும சிமிழை கையில் ஏந்தியபடி விக்ரமை நோக்கி வந்தாள்... அவளது பார்வை அவனை அழுத்தத்துடன் பார்த்தது... அவன் அருகில் வந்தவள் குங்கும சிமிழை அவன் முன் நீட்டினாள்... அடுத்த நொடி அவன் ஆவேசமாய் அதைத் தட்டி விட்டான்... 'ணங்' என்ற ஒலியுடன் குங்கும சிமிழ் கீழே விழுந்து குங்குமம் நாலாப்புறமும் சிதறியது...

அவனது முகத்தினைப் பார்த்து கொண்டிருந்தவள் தனது பார்வையைக் கொஞ்சமும் திருப்பிக் கொள்ளவில்லை... அவனது கோபத்தினைச் சிறிதும் சட்டை செய்யவில்லை... மாறாக அழுத்தத்துடன் கைகளைக் கட்டி கொண்டு நின்றிருந்தாள்...

"உனக்கு எவ்வளவு நெஞ்சழுத்தம் இருந்தா அங்கே அப்படிப் பண்ணிட்டு வந்து இங்கே இப்படிச் சுமங்கலி பூஜை பண்ணிக்கிட்டு இருப்ப... உன்னைக் கொன்னால் கூடத் தகும்டி..." என்றவன் அவளது கழுத்தை பிடித்து நெறித்த போதும் அவள் அசையாது நின்றாள்...

"விக்ரம் என்ன காரியம் பண்ணுகிறாய்..." ரேவதி மகனை தடுத்தார்...

அதில் விக்ரம் கையை விலக்கியப் போதும் அவளைக் கோபமாய் முறைத்துக் கொண்டு கொலைவெறியில் நின்றிருந்தான்...

"பவி உன்னை என்னடா பண்ணினாள்..?"

"அதை அவள் கிட்டேயே கேளுங்க..." என்று அவன் எகிறினான்...

"பவி நீயாவது சொல்லும்மா..."

ரேவதி கெஞ்சி கேட்ட போதும் அவள் அசையவில்லை... வாய் திறக்கவில்லை...

"அவள் எப்படிம்மா வாய் திறப்பாள்... அவள், அவள்..."

மேலே சொல்ல முடியாது அவன் திணறினான்... அந்த அசிங்கத்தை அவன் என்னவென்று சொல்வான்... ஆண் மகன் அவன் பெண்ணான அவளிடம் அசிங்கமாய்த் தோற்று போன கதையை அவளிடம் எப்படிச் சொல்வான்...

இன்று விக்ரம் முக்கியமான வெளிநாட்டு ஒப்பந்தத்தில் கையெழுத்திட வேண்டி இருந்தது... அதற்கு அவன் செல்லும் போது முகம் தெரியாத ஆட்களால் அவன் கடத்தப்பட்டான்... இரண்டு மணி நேரத்தில் அவன் விடுவிக்கப்பட்ட போது தன்னைக் கடத்தியவனிடமே அவன் பேரம் பேசி யார் தன்னைக் கடத்த சொன்னது என்பதை அறிந்து கொண்டவன் பெரும் அதிர்ச்சிக்கு உள்ளானான்... ஏனெனில் அதற்குக் காரணம் அவனது மனைவி... அது உண்மை என்பது போல் அந்த ஒப்பந்தத்தை அவள் கைப்பற்றி இருந்தாள் வெற்றிகரமாக...

தொழிலில் அவனை அசிங்கமாகத் தோற்கடித்து விட்டு இங்கே வீட்டில் அவனது நலம் வேண்டி விரதம் இருந்தவளை கண்டு அவன் கோபம் கொள்ளாது இருந்தால் தான் அதிசயம்... விட்டால் அவளது உயிரை எடுத்திருப்பான்... அந்தளவிற்கு அவன் ஆத்திரத்தில் இருந்தான்...

அவன் கேவலப்பட்டதை அவனால் வெளியில் சொல்ல முடியவில்லை... ஆனால் தன்னைக் கேவலப்படுத்திய மனைவியை அவனால் கேவலப்படுத்த முடியும்... விசயம் தெரிந்தும் அவன் அமைதியாக இருந்தது தவறு... பாம்புக்கு பால் வார்த்தால் அது கொத்தாது போகாது என்பதற்கு உதாரணம் அவனது மனைவியவள்... அதனால் அவன் பாம்பாக மாறி சீறி அவளை உயிருடன் கொத்தி குதறிட நினைத்தான்...

"இவளால் ஒரு குழந்தைக்கு அம்மாவாக முடியாது... இந்த விசயம் உங்களுக்கு எல்லாம் தெரியுமா...? இதை இவள் நம்மிடம் சொல்லாமல் மறைத்து விட்டாள்... பெரியவங்க நீங்க இவளை என்னன்னு கேள்வி கேட்டீங்களா...?"

விக்ரமின் வார்த்தையில் பவித்ரா அவனை மனதிற்குள் மெச்சுதலாக நினைத்து கொண்டாள்... ஆனால் வெளியில் அதைக் காட்டி கொள்ளாது அவனை வெறித்துப் பார்த்தாள்...

'முடிந்தது எல்லாம் முடிந்தது...' பவித்ராவின் மனம் ஆனந்த ஆரவார கூச்சல் போட்டது...

தனது திருமண வாழ்க்கையின் இறுதி அத்தியாயத்தைத் தனக்குத் தானே அவள் எழுதி கொண்டாள்...!!!

மொழி பேசும்...!!!

## விழி : 8

"உன்னை மாதிரியான ஒரு மலடியை சகிச்சிக்கிட்டு வாழணும்ன்னு எனக்கு எந்த அவசியமும் இல்லை... இனி ஒரு நொடி கூட நீ இங்கே இருக்கக் கூடாது... இப்பவே என் வீட்டை விட்டு வெளியில் போடி..."

விக்ரம் ஆத்திரத்துடன் பவித்ராவை பார்த்து கத்தியவன் வாயிலை நோக்கி தனது கையைக் காட்டினான்...

"என்ன விக்கி சொல்ற...? அவளால குழந்தை பெத்துக்க முடியாதா...? அட கடவுளே, என் மகன் வாழ்க்கையை நாங்களே கெடுத்துட்டோமே..." என்று இல்லாத கண்ணீரை துடைத்துக் கொண்டு போலியாய் அழுத சௌந்தர்யா பவித்ராவிடம்,

"இன்னும் இங்கே எதுக்குக் கல் மாதிரி நின்னுக்கிட்டு இருக்க... விக்கி சொன்னதைக் கேட்ட தானே... வெளியில் போடி..." என்று தன் பங்கிற்குக் கத்தி கூச்சலிட்டார் அவர்...

"அக்கா... சின்னஞ்சிறுசுங்க ஏதோ கோபத்தில் பேசுறதை எல்லாம் நாம் பெருசா எடுத்துக்க வேண்டாம்... என்ன விசயம்ன்னு விசாரிச்சு பார்க்கலாம்..."

ரேவதி தனது அக்காவிடம் கெஞ்சினார்... அவருக்குத் தனது மகனின் வாழ்க்கை முக்கியம்... அது போல் பெண்ணான பவித்ரா பழி சொல் தாங்கிக் கொண்டு நிற்பதை கண்டு அவருக்கு அத்தனை பாவமாக இருந்தது... மகன் அருகில் வந்தவர் அவனிடம் மன்றாடினார்...

"விக்ரம்... அவசரப்பட்டு வார்த்தையை விடாதே... நீயே அவளைத் தனியே அழைச்சிக்கிட்டு போய் என்னன்னு விசாரி..."

கணவன், மனைவி விசயம் இப்படி அம்பலத்தில் ஏறுவது கண்டு அவருக்கு அத்தனை கஷ்டமாக இருந்தது... ஆனால் அதை உணர வேண்டிய அவரது மகனோ உணர தவறி போய்க் கல்லாய் இறுகி நின்றான்...

"அதான் அவன் அவ்வளவு தெளிவாகச் சொல்கிறானே ரதி... அவளால் ஒரு குழந்தைக்குத் தாயாக முடியாதுன்னு..." சௌந்தர்யா விக்ரமிற்கு ஒத்து ஊதினார்...

"விசயம் தான் தெரிஞ்சு போச்சே... இதில் விசாரிக்க என்ன இருக்கு...? பேசாம தீர்த்து கட்டிட வேண்டியது தான் பாக்கி..."

தனது வாழ்க்கையைக் கேள்விக்குறியாக்கிய இந்தக் குடும்பத்தின் நிம்மதியை கேள்விக்குறியாக்கிட சௌந்தர்யா விரும்பினார்... பவித்ரா போல் அவரும் இது மாதிரி விசயத்தில் பாதிக்கப்பட்டவர் தான்... அதன் வன்மம் அவரது நெஞ்சில் அணையாது கனன்று கொண்டு இருந்தது...

இது போன்று பாதிக்கப்பட்டவர்களில் சிலர் தன்னைப் போல் பிறர் பாதிக்கப்படக் கூடாது என்பதில் கவனமாக இருப்பர்... ஒரு சிலர் தன்னைப் போல் பிறர் பாதிக்கப்படும் போது அதைக் குரூர மனதுடன் பார்த்து ரசிப்பர்... யாம் பெற்ற துன்பம் பெறுக இவ்வையகம் என்பது போல்... இதில் சௌந்தர்யா இரண்டாவது ரகம்...

இது எல்லாவற்றையும் விட விக்ரம் மாதிரி திறமையானவனுக்கு அதே போல் திறமையான, அழகான பெண் பவித்ரா மனைவியாக வந்து வாய்த்தது அவருக்கு அத்தனை பொறாமையாக இருந்தது... அனைத்து விதத்திலும் விக்ரம் சிறப்பாக வாழ்வது குறித்து அவருக்கு அத்தனை எரிச்சல், கோபம்...

தொழிலில் தனது மகனை பின் தள்ளி விட்டு விக்ரம் முன்னிலை வகித்தது அவருக்கு அறவே பிடிக்கவில்லை... அது போல் வீட்டில் பவித்ரா தன்னைப் பின் தங்க செய்துவிட்டு முன்னிலை வகித்து விடுவாளோ என்கிற பயம் அவருள் எப்போதும் இருந்து வந்தது... ரேவதி போல் வாயில்லா பூச்சி பவித்ரா கிடையாது என்பதை அவர் நன்கு உணர்ந்து இருந்தார்... தனக்கு அடுத்து தனது மகனின் மனைவி தான் இந்த வீட்டில் ஆட்சி செலுத்த வேண்டும்

என்று அவர் நினைத்தார்... அதனால் தான் கிடைத்த சந்தர்ப்பத்தில் தனது சகுனி வேலையைக் காட்டி விட்டார்...

"சௌந்தர்யா... வாயை மூடிக்கிட்டு இரு... பெரியவன்னு நான் எதுக்கு இங்கே இருக்கேன்...?"

இராமநாதன் மருமகளைப் பார்த்துச் சத்தம் போடவும் சௌந்தர்யா வாயை மூடி கொண்டார்...

"சௌந்து... அப்பா இருக்கும் போது நீ பேச கூடாது..."

விஸ்வநாதன் தனது முதல் மனைவியை எச்சரித்தார்... அதைக் கண்டு சௌந்தர்யா தனது கண்களை உருட்டி அவரை மிரட்டியதில் அவர் அப்படியே பம்மி விட்டார்... பின்னே சௌந்தர்யாவை பகைத்துக் கொண்டால் அவரால் இப்படி உல்லாசமாக இருக்க முடியுமா...? பணம் கேட்டால் தந்தையும், மகனும் கொடுக்க மாட்டார்கள்... ரேவதியிடம் கேட்டால்,

"இந்தக் கெட்ட பழக்கங்களை விடக் கூடாதா...?" என்று அழுகாச்சி காவியம் வடிப்பார்... அது அறவே அவருக்குப் பிடிக்காது...

சௌந்தர்யா மட்டுமே அவர் கேட்டதும் என்ன ஏது என்று விசாரிக்காது பணத்தை அள்ளி கொடுத்து விடுவார்... அவரது அமுதசுரபி சௌந்தர்யா என்றால் மிகையில்லை...

"என்னம்மா எங்க விக்ரம் சொல்ற குற்றச்சாட்டுக்கு நீ என்ன பதில் சொல்ற...?"

இராமநாதன் கேட்டதற்குப் பவித்ரா பதில் கூறாது உள்ளே சென்றாள்... அதில் அவர் மிகுந்த அவமானம் அடைந்தார்... இதுவரை யாரும் இது போல் அவர் பேசி கொண்டிருக்கும் போது இப்படி பாதியில் சென்று அவரை அவமானப்படுத்தியது இல்லை... சின்னப் பெண்ணிடம் அவர் அடைந்த அவமானம் அவரை அவளுக்கு எதிராகச் சிந்திக்க வைத்தது...

தாயாக முடியாத பெண்ணை இனியும் இந்த வீட்டு மருமகளாக வைத்துக் கொள்ள வேண்டுமா என்று அவரது நினைவு தாறுமாறாக ஓடியது... அந்தக் காலத்திலேயே குழந்தையின்மை காரணமாகச் சௌந்தர்யாவை ஒதுக்கி வைத்து விட்டு தன் மகனுக்கு இரண்டாவது திருமணம் முடித்து வைத்தவர் இந்த இராமநாதன்... அப்படிப்பட்டவர் பேரனுக்காக யோசிக்க மாட்டாரா...? இப்போதே அவர் வேறு மாதிரி யோசிக்க ஆரம்பித்து விட்டார்...

"பார்த்தீங்களா தாத்தா, நீங்க கேட்கிற கேள்விக்குப் பதில் சொல்லாம எப்படிப் போகிறாள் என்று...? திமிர்... உடம்பு எல்லாம் திமிர்..." விக்ரம் தனது மனக்குமுறலை பொருமலாக வெளியிட்டான்...

இன்னமும் அவனால் மனைவியின் செய்கையை ஜீரணிக்க முடியவில்லை... ஒரு பெண்ணால் எப்படி இப்படிப் பட்ட ஒரு செயலை துணிகரமாகச் செய்ய முடிந்தது என்று அவனுக்கு ஆற்றாமையாக இருந்தது... ஒரு ஆணாய் இந்தச் செயலை மிகவும் அவமானமாக எண்ணி உள்ளம் குமைந்தான்...

சமுதாயத்தில் அவனுக்கு எத்தகைய பெரிய தலை குனிவை ஏற்படுத்தி விட்டாள் அவனது மனைவி...

உள்ளே சென்ற பவித்ரா சில நிமிடங்களில் திரும்பி வந்தாள்... அவளது கையில் ஒரு காகித கட்டு இருந்தது... அதை அங்கிருந்த மேசை மீது போட்டவள் ரேவதியிடம்,

"உங்க மகன் சொன்னது போல் என்னால் ஒரு குழந்தைக்கு அம்மாவாக முடியாது... இதோடு விவாகரத்து நோட்டீசிலும் கையெழுத்துப் போட்டிருக்கேன்... நீங்க உங்க மகனுக்கு இன்னொரு கல்யாணம் பண்ணி வைக்கிறதில் எனக்கு எந்த ஆட்சேபணையும் இல்லை..." என்றவளை கண்டு அனைவரும் திகைத்து போய் நின்றனர்...

விக்ரமோ மனைவியை உணர்வில்லாது பார்த்தான்... அவனது உணர்வினை தான் அவள் கொன்று விட்டாளே...

பவித்ரா ரேவதி அருகில் வந்தவள், "அத்தை... வித் யுவர் பெர்மிசன்..." என்று அனுமதி கேட்டவள் அடுத்தக் கணம் அவரை இறுக அணைத்து கொண்டாள்... அவரது அன்பை நினைத்து அவளது கண்கள் கலங்கியது... இருந்தாலும் தன்னை அடக்கி கொண்டு விலகினாள்...

"போகிறேன் அத்தை..."

"பவி... அப்படிச் சொல்லாதேம்மா..."

மருமகளிடம் குறை இருப்பது தெரிந்த போதும் ரேவதியால் அவளை நிம்மதியாய் வழியனுப்ப முடியவில்லை...

"திரும்ப நான் இங்கே வந்து என்ன செய்யப் போகிறேன்...? அதை விட எனக்குமே இங்கே வர விருப்பம் இல்லை..." என்றவளை கண்டு சௌந்தர்யா கோபமாய்க் கத்தினார்...

"நீ இங்கே திரும்பி வர வேண்டாம்... உனக்காக இங்கே யாரும் காத்திருக்கப் போவதில்லை... முதலில் நீ நடையைக் கட்டு..."

இதை எல்லாம் பார்த்தபடி அசையாது சிலை போல் நின்றிருந்த விக்ரம் முகத்தில் சிறிதும் இளக்கமில்லை... அவன் அவமானப்பட்டது மட்டுமே அவனது நினைவிலாடியது...

வீட்டை விட்டு வெளியில் செல்லும் போது கூடப் பவித்ரா மறந்தும் கணவனை ஏறிட்டு பார்க்கவில்லை... அது வேறு அவனது ஆத்திரத்தை கிளப்பியது...

"உன்னோட பொருட்களை எல்லாம் மூட்டை கட்டிட்டு கிளம்பு..." என்றான் கை விரலால் சொடக்கிட்டு அவளைத் தடுத்தவாறு...

அதில் அவளது மனம் வெகுண்ட போதும் நிதானமாய் அவனை ஏறிட்டு பார்த்தவள், "என்னோட வேலைக்காரங்க வந்து எடுத்துக்குவாங்க..." என்று கூறி விட்டு வெளியேறியவளிடத்தில் இத்தனை நாளாய்க் காணாமல்

போயிருந்த இராணியின் கம்பீரம் மீண்டும் திரும்பி இருந்தது...

அவள் தனது காரில் ஏறி தனது வீடு நோக்கி பறந்தாள்...

புயல் அடித்து ஓய்ந்தது போல் இருந்தது விக்ரமின் வீடு... அவன் யாரிடமும் பேச பிடிக்காது தனது அறைக்குள் சென்று கதவை மூடி கொண்டான்... அவனது மனம் அந்தளவிற்கு வெறுத்துப் போயிருந்தது... ரேவதி மனம் பதற மகன் பின்னே சென்றார்...

சௌந்தர்யா மாமனாரிடமும், கணவரிடமும் பகையை உருவேற்றிக் கொண்டிருந்தார்...

"இதுக்குத் தான் சொன்னது பகையாளி குடும்பத்தோடு உறவாட கூடாதுன்னு... கடைசியில் பாருங்க நம்ம பையன் வாழ்க்கை தான் வீணாகி போச்சு..."

"யார் வாழ்க்கையும் வீணா போகலை... என் பேரன் வாழ்க்கையை எப்படிச் சரி செய்றதுன்னு எனக்குத் தெரியும்... நீ உன் வேலையைப் பார்..."

இராமநாதன் இறுக்கமான முகத்துடன் மருமகளை விரட்டி அடித்தார்... சௌந்தர்யா உள்ளுக்குள் கடுகடுத்த போதும் வெளியில் சிரித்தபடி அங்கிருந்து அகன்று விட்டார்...

அறைக்கு வந்த விக்ரம் நேரே பால்கனியில் வந்து நின்றான்... மாலை மங்கி இரவின் இருளால் சூழ்ந்திருந்த இருண்ட வானம் அவனது மனதினை போல் வெறுமையாகக் காட்சி அளித்தது... எந்தப் புள்ளியில் வாழ்க்கை தவறாகி போனது என்று அவனுக்குத் தெரியவில்லை... மனதில் ஏதேதோ எண்ணங்களின் ஊர்வலம்... அதை நினைத்தும் பார்க்க விரும்பாது அவன் தலையைக் குலுக்கி கொண்டான்...

மகனது தோளில் ஆதரவாய் கை வைத்த ரேவதி அவனை அன்போடு அழைத்தார்...

"விக்ரம்..."

அன்னையின் அழைப்பில் அவன் திரும்பி பார்த்த போதும் வார்த்தைகளை உதிர்க்கவில்லை... கைகளைக் கட்டி கொண்டு மௌனமாய் அவரை ஏறிட்டான்...

"அவசரப்பட்டுட்டியே விக்ரம்..."

அவரது குரலில் அத்தனை ஆதங்கம் இருந்தது... மகனது வாழ்க்கை குறித்த கவலை அவரது வார்த்தைகளில் புதைத்திருந்தது...

"உலகத்தில் இவள் மட்டுமே பெண் இல்லைம்மா... என் வாழ்க்கை இவளோடு முடிந்து போவதற்கு..." என்றான் விக்ரம் மிகுந்த அலட்சியமாக...

மகனது வார்த்தையில் அதிர்ந்து போனவராய் அவனைப் பார்த்தவர், "விக்ரம்..." அவரது குரல் நடுங்கியது...

"வேறு என்ன சொல்ல சொல்றீங்க...?"

அவன் அடைந்த அவமானத்தை அவனால் அன்னையிடம் கூடக் கூற முடியாது மனம் வெட்கி போனான் அந்த ஆறடி ஆண்மகன்...

"இப்போ மருத்துவ அறிவியல் ரொம்ப முன்னேறி இருக்கு விக்ரம்... பவியை வேறு டாக்டர் கிட்ட கூட்டிட்டுப் போய்ப் பார்க்கலாம்... எதையும் நிதானமா யோசிச்சு முடிவு பண்ணணும் விக்ரம்..."

அன்னையின் வார்த்தையில் அவனது விழிகளில் ஒரு நொடி வேதனை வந்து போனது... மறுநொடி சாதாரணமாக அன்னையைப் பார்த்தவன்,

"இதைக் கண்டுபிடித்ததே அவளோட பேமிலி டாக்டர் தான்ம்மா..." என்று சொல்லிவிட்டு அவரது முகம் பார்க்க முடியாது திரும்பி நின்று இருண்ட வானத்தை வெறித்தான்...

மகனது வார்த்தையில் ரேவதி ஓய்ந்து போய் அங்கிருந்த நாற்காலியில் அமர்ந்து விட்டார்... மீண்டும் சரித்திரம் திரும்புகிறதோ... அவரால் தாங்க முடியவில்லை...

"அம்மா..." விக்ரம் பதறியவாறு அவரது அருகில் வந்தான்...

"என்ன செய்யுதும்மா...?" அவன் அவரது தோள்களில் கை வைத்து உலுக்க...

அதில் தன்னுணர்வு பெற்றவர் மகனை இயலாமையுடன் பார்த்தார்... பின்பு அவனது கைகளை விலக்கி விட்டு எழுந்து அங்கிருந்து சென்று விட்டார்... தளர்ந்த நடையுடன் செல்லும் அன்னையைப் பார்த்தவனுக்கு அத்தனை வருத்தமாக இருந்தது... அவனுக்கு வருத்தம் இருந்து என்ன செய்ய...? எதையும் மாற்ற அவனால் முடியாது...

********************

வரவேற்பறையில் அமர்ந்திருந்த கல்பனா மகளைக் கண்டதும் புன்னகை முகமாய் வரவேற்றார்...

"பவிம்மா... எப்படியிருக்க...? இன்னைக்கு விரதம் இருந்தியாம்மா...? ஆமாம், மாப்பிள்ளை எங்கே...?"

திருமணப் பட்டு புடவை உடுத்தி, தலையில் பூ வைத்து மங்களகரமாக இருந்த மகளைக் காண காண அவருக்கு அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது... எதிரி வீட்டில் மணம் செய்து கொடுத்த பெண் சந்தோசமாக இருக்கிறாளா? இல்லையா? என்று அவரது மனதிற்குள் சிறு உறுத்தல் இருந்து கொண்டே இருக்கும்... ஆனால் கடந்த ஆறு மாதங்களாக அந்த உறுத்தலுக்கு அவசியமே இல்லாது மகள் அங்கு வாழ்ந்து வருவது குறித்து அவருக்கு அத்தனை சந்தோசமாக இருந்தது...

"ப்ச்..." என்று சலிப்புடன் அவரது கையைத் தட்டி விட்ட மகளைக் கண்டு அவர் மனம் துணுக்குற்றார்...

"பவிம்மா..." திகைப்புடன் நோக்கியவரை அழுத்தமாய்ப் பார்த்தவள்,

"எல்லாம் முடிந்து விட்டதும்மா..." என்றாள் அமைதியாக...

"என்னடி சொல்ற...?" கேட்கும் போதே அவருக்கு அழுகை பீறிட்டது...

"என்னால் ஒரு குழந்தைக்குத் தாயாக முடியாதுன்னு வீட்டை விட்டு அனுப்பிட்டாங்க..." என்றவள் அங்கிருந்த சோபாவில் அமர்ந்து சோர்வுடன் விழிகளை மூடி கொண்டாள்...

"ஓஹோ... எதிரி வீட்டு பொண்ணுங்கிறதால அவங்க வாய்க்கு வந்ததைப் பேசுவாங்களா...? எல்லோரும் கோவிலுக்குப் போயிருக்காங்க... வரட்டும், வந்ததும் அங்கே போய் என்னன்னு கேட்டுட்டு வர சொல்றேன்..." என்று ஒரு பெண்ணின் அன்னையாய் அவர் உள்ளம் கொதித்தார்...

"அவங்க யாரும் சொல்லலை... நம்ம பேமிலி டாக்டர் கொடுத்த ரிப்போர்ட் தான் அப்படிச் சொல்லுது..."

கண்களைத் திறவாமல் பதில் சொன்ன மகளை அதிர்வுடன் பார்த்தார் கல்பனா...

"பவி..."

அன்னையின் அதிர்ந்த குரலில் விழிகளைத் திறந்தவள் வறண்ட புன்னகையுடன், "எதுக்கும்மா இத்தனை அதிர்ச்சி...? இருக்கிறதை சொன்னாங்க... ஒரு மலடியை மருமகளாக ஏத்துக்க யாருக்கு தான் விருப்பம் இருக்கும்...? விடுங்கம்மா..." என்றாள் வெகு சாதாரணமாக...

மகள் மீண்டும் விழிகளை மூடி கொள்ள அன்னை தான் பதற்றத்துடன் கைகளைப் பிசைந்தபடி அங்கும் இங்கும் நடை பயின்றார்...

அரை மணி நேரத்தில் கோவிலுக்குச் சென்றவர்கள் அனைவரும் வீட்டினுள் நுழைந்தனர்... பாட்டி பர்வதமும், சித்தி நர்மதாவும் பவித்ராவை கண்டதும் மகிழ்ச்சியாக விரைந்து வந்து அவளது அருகில் ஆளுக்கு ஒரு பக்கமாய் அமர்ந்து கொண்டு,

"பவிம்மா எப்படியிருக்க...?" என்று ஒரே மாதிரி கேட்க...

"அவளுக்கு என்ன...? பார்த்தாலே தெரியலையா...? என்னோட அக்கா சூப்பரா இருக்கிறாள்..." என்று குழந்தையாய் கேலி செய்து சிரித்தாள் பல்லவி...

மூவரையும் பார்த்து பொதுவாகப் புன்னகைத்தவளின் புன்னகையில் ஜீவனில்லை என்பதை அறிந்து கொண்டவர்கள் புரியாது கல்பனாவை பார்த்தனர்... அடுத்த நொடி அவர் அழுது கொண்டே எல்லாவற்றையும் எடுத்து கூற அதைக் கேட்டுப் பெண்கள் மூவர் மட்டுமல்லாது ஆண்களும் இடிந்து போய் அமர்ந்து விட்டனர்...

"மாமா... இப்போ என்ன பண்றதுன்னு எனக்குத் தெரியலை...?" என்று அழுது கொண்டே கல்பனா கூற...

வேதனையுடன் மருமகளைப் பார்த்த திருவேங்கடம் தனது மனைவியிடம், "பவியைக் கூட்டிட்டு உள்ளே போ..." என்க...

"என்னங்க... அவங்க வீட்டில் போய்ப் பேசி பார்க்கலாம்..."

"குறை நம்மிடம் இருக்கும் போது நாம் பேசும் வார்த்தைகளை யோசித்துத் தான் பேச வேண்டும்..."

தாத்தா சொன்னதும் அவரைப் பார்த்த பவித்ரா ஒன்றும் பேசாது எழுந்து தனது அறைக்குச் சென்று விட்டாள்... உடன் வந்த பெரியவர்களை வேண்டாம் என்று தவிர்த்து விட்டு தனிமையை நாடினாள் அவள்...

பெண்ணவள் மனதில் தான் காயமடைந்த நாட்களே மீண்டும் மீண்டும் ஓடி கணவன் மீதான வெறுப்பை வளர்த்தது... அந்த வெறுப்பு தான் எப்படியாவது அவனைத் தொழிலில் வென்று விட வேண்டும் என்கிற வன்மத்தை அவளுள் விதைத்தது... அதன் விளைவு தான் இன்று அவனைக் கடத்தியது...

தன்னைப் படுக்கையில் வென்ற கணவனைத் தொழிலில் அவள் வென்று விட்டாள்... இந்தத் தொழில் ஒப்பந்தத்தை அவன் இழந்ததால் அவனுக்கு ஏற்பட்ட இழப்பை கணக்கிட முடியாதது... அது தானே அவளுக்கும் வேண்டும்... அவனை

வெல்ல வேண்டும் என்பது தானே அவளுடைய வாழ்நாள் லட்சியம்... அதைத் தான் இன்று அவள் சாதித்துக் காட்டி இருக்கிறாள்...

ஆனால் சாதித்த சந்தோசத்தைக் கொண்டாட முடியாது அவளது மனம் மிகவும் கனத்துப் போயிருந்தது... தைரியமான பெண்ணான அவளுக்கே எதிர்காலம் விடை தெரியாது மிகவும் மருட்டியது...

மறுநாள் காலையில் விக்ரம் அன்னையைத் தேடி வந்தான்... கவலையுடன் இருந்த அவர் அருகில் வந்தவன்,

"அம்மா... நான் துபாய்க்கு போகிறேன்..."

"எப்போ திரும்பி வருவப்பா...?"

தொழில் விசயமாக மகன் வெளிநாடு செல்வது வாடிக்கையான ஒன்று என்பதால் அவர் சாதாரணமாகக் கேட்டார்...

"தெரியலைம்மா..."

தலையைக் குனிந்து கொண்டே கூறிய மகனை அவர் திகைப்புடன் பார்த்தார்... அவருக்கு இருக்கும் ஒரே ஆதரவு அவன் மட்டுமே... அவனும் அவரை விட்டு பிரிந்து சென்றால்...? மனதுக்குப் பாரமாக இருந்தது...

"ஏன் விக்ரம்...? எனக்காக இங்கே இருக்கக் கூடாதா...?"

"இங்கே இருந்தால் நான் மூச்சடைத்து செத்து போயிருவேன்ம்மா..."

கம்பீரமான ஆண்மகனான மகன் அப்படிக் கூறியது கேட்டு அவரது பெற்ற மனம் துடி துடித்துப் போனது... அவசரமாக அவனது வாயில் கை வைத்து தடுத்தவர்,

"உன் நிம்மதி தான்ப்பா எனக்கு முக்கியம்..." என்றவர் அவனிடம் யாசிப்பது போல்,

"என்னையும் உன்னுடன் கூட்டிட்டு போறியா விக்ரம்..."

பாவம் போல் தன்னிடம் கேட்ட அன்னையைக் கண்டு அவனுக்கு இரக்கமாக இருந்தது...

"நிச்சயம்மா..."

என்று உறுதியாய் கூறியவன் அன்றைய தனது பயணத்தை ரத்துச் செய்து விட்டு மறுநாளே அன்னையை உடன் அழைத்துக் கொண்டு புறப்பட்டு விட்டான்... மறுப்பு தெரிவித்த தாத்தாவின் வார்த்தையை அவன் சிறிதும் கண்டு கொள்ளவில்லை...

"நீ போனா இங்கே வீட்டை யார் பொறுப்பாய் பார்ப்பது...?" என்று பாசம் போல் போலியாகக் கண்ணீர் வடித்த சௌந்தர்யாவை கண்டு,

"அதான் இந்த வீட்டின் தூண், ஆணிவேர் நீங்க இருக்கீங்களே பெரியம்மா... வீட்டை பத்திரமாகப் பார்த்துக்கோங்க... உங்களோட அறிவு அம்மாவுக்குச் சுட்டுப் போட்டாலும் வராதே..."

வஞ்சப்புகழ்ச்சியில் புகழ்ந்தவனைக் கண்டு மனதிற்குள் பல்லை கடித்தார் அவர்...

"தாத்தா... வினோத்துக்குத் தொழிலை பழக்கி கொடுங்கள்... அவனும் எத்தனை நாளைக்குத் தான் இப்படி விளையாட்டுப் பிள்ளையாக இருப்பது... ஏதாவது உதவி தேவைப்பட்டால் நான் அங்கிருந்த படி உதவுகிறேன்..."

தாத்தாவிடம் கூறியவனைக் கண்டு வாயெல்லாம் பல்லாகப் புன்னகைத்தார் சௌந்தர்யா... இந்த ஒரு விசயத்திற்காகவே விக்ரமுடன் தங்கை கிளம்புவதை அவர் தடுக்க முயலவில்லை... விக்ரம் அன்னையுடன் துபாய் பறந்து சென்று விட்டான்... தனக்கான பெண் பறவையை மறந்து...

*****************

ஒரு வார காலம் அமைதியாகச் சென்றது... பவித்ரா எப்போதும் போல் நிறுவனத்திற்குச் சென்று வந்தாள்...

விக்ரமும், ரேவதியும் துபாய் சென்று விட்டதை அவள் செவி வழியாக அறிந்து கொண்டாள்... ஆனால் அதற்காக அவள் வருத்தம் கொள்ளவில்லை... மாறாக விக்ரம் மீது வெறுப்பு தான் வளர்ந்தது...

அன்று காலை நிறுவனத்திற்குக் கிளம்பும் போது திருவேங்கடம் பேத்தியிடம் வந்தார்...

"பவி... உன் கிட்ட ஒரு விசயம் பேசணும்..."

"சொல்லுங்க தாத்தா...?"

"உன் வாழ்க்கையைப் பத்தி என்ன முடிவு எடுத்து இருக்க...?"

"அது முடிந்த போன விசயம் தாத்தா..." என்றாள் கை விரல்களின் நக சாயத்தை வெறித்தபடி...

"அது எப்படி முடிந்து போன விசயமாகும்...?"

தாத்தாவின் கேள்வியில் அவள் அவரை நிமிர்ந்து கேள்வியாய் பார்த்தாள்...

"உனக்கும், விக்ரமுக்குமான இந்தக் கல்யாணம் எதனால் நடைபெற்றது என்று உனக்கு நினைவு இருக்கிறதா...?"

"நன்றாக நினைவு இருக்கிறது தாத்தா..." என்றாள் கசந்த முறுவலுடன்...

"அந்தக் காரணம் இன்னமும் அப்படியே தான் இருக்கிறது..."

பெரியவரின் வார்த்தையில் அவள் மட்டுமல்லாது அனைவரும் திகைத்து போய் அவரைப் பார்த்தனர்...

"தொழிலோடு இப்போது உன் வாழ்க்கையும் சேர்ந்து இருக்கிறது... இதைப் பத்தி நீ என்ன முடிவு எடுத்து இருக்கிறாய்...?"

"முடிவுன்னு நீங்க எதைச் சொல்றீங்க தாத்தா... என்னைத் திரும்ப விக்ரம் கூடச் சேர்ந்து வாழ சொல்றீங்களா...? அது

என்னால் முடியாது..." ஆணித்தரமாக மறுத்தவள்,

"அப்படி வாழ்வதால் எந்தப் பயனும் இல்லை..." என்று விரக்தியுடன் வந்தது அவளது வார்த்தைகள்...

"உனக்கு எந்தப் பயனும் இல்லை என்று எனக்கு நன்றாகத் தெரியும்..."

ஏனெனில் அவர் தங்களது குடும்ப வைத்தியரை நேரில் சந்தித்துப் பேசி விட்டார்... விசயம் கேள்விப்பட்டு அவருக்கு அத்தனை வேதனையாக இருந்தது... ஆனாலும் மனம் தளராது ஒரு தொழிலதிபராய் அடுத்து என்ன செய்ய வேண்டும் என்று அவர் வேகமாக யோசிக்க ஆரம்பித்தார்...

தொழிலையும் காப்பாற்றியாக வேண்டும்... அதே சமயம் பேத்தியின் வாழ்க்கையையும் காப்பாற்ற வேண்டும்... அதற்கு ஒரே ஒரு தீர்வு தான் அவருக்குப் புலப்பட்டது... அதைச் செயல்படுத்த எண்ணி தான் அவர் பேத்தியிடம் பேச நினைத்தது...

"என்ன சொல்ல வர்றீங்க தாத்தா...? எனக்குப் புரியலை..."

"விக்ரம் இன்னொரு கல்யாணம் பண்ணிக்கிட்டா உன்னோட வாழ்க்கை பாழாகும்..."

"இப்போ மட்டும் என்ன...? அது தானே நடந்திருக்கிறது..." தனது மன வருத்தத்தை மறைத்துக் கொண்டு அவள் கூற...

"அது போல் தொழிலும் வேறு வேறு பிரிந்து விடும்... இது அந்த வர்மாவுக்கு மிகவும் எளிதாகப் போய் விடும்..."

"அதனால்...?" என்று கேள்வி கேட்டவளின் விழிகள் கூர்மையானது...

"தொழிலிலும், வாழ்க்கையிலும் தோற்காது இருக்க என்னிடம் ஒரு யோசனை இருக்கிறது..."

என்னவென்று அவள் கேட்கவில்லை... 'நீங்களே சொல்லுங்கள்' என்பது போல் அவள் அழுத்தமாக அமர்ந்திருந்தாள்...

"விக்ரமுக்கு நம் பல்லவியை இரண்டாம் தாரமாகக் கட்டி கொடுக்கலாம்ன்னு முடிவு பண்ணியிருக்கேன்..."

தாத்தாவின் பேச்சு கேட்டு அனைவரும் அதிர்ந்து போய் விட்டனர்...

"தாத்தா..." பல்லவி அதிர்ச்சியில் வாய் விட்டுக் கூவி விட்டாள்...

பவித்ராவிற்குத் தாத்தாவின் கூற்று அதிர்ச்சியாக இருந்த போதும் அதை வெளிக்காட்டி கொள்ளாது அவரை அமைதியாகப் பார்த்திருந்தாள்...

"என்னங்க... இது நம்ம ரெண்டு பேத்தியோட வாழ்க்கை சம்பந்தப்பட்டது..." பர்வதம் அச்சத்துடன் கூற...

"நீ இதில் தலையிடாதே..." என்று அவர் மனைவியை அடக்கி விட்டார்...

மாமியாரே பேச முடியாத போது வேறுவழியின்றி இரு மருமகள்களும் வாய் மூடி மௌனியானர்... ஆனால் மனதிலோ இரு பெண் பிள்ளைகளின் வாழ்க்கையைக் குறித்து அச்சம் தோன்றியது... விஜயமூர்த்தியோ சொல்லவும் வேண்டாம்... தந்தையை எதிர்த்து பேச தெரியாத கோழை அவர்...

"நான் இந்தக் கல்யாணத்தை நடக்க விட மாட்டேன்... தெரிஞ்சே என் தங்கையைப் பாழும் கிணத்தில் தள்ளி விட நான் ஒரு போதும் அனுமதிக்க மாட்டேன்..." பவித்ரா ஆத்திரத்துடன் கூவினாள்...

அந்தக் கணம் பவித்ராவின் மனக்கண்ணில் அவளது விருப்பம் இல்லாது அவளை ஆக்கிரமித்த விக்ரமின் அராஜக செயல் தோன்றி அவளை வதைத்தது...

"அக்கா..." என்று அழுது கொண்டே பல்லவி அக்காவை கட்டி கொண்டாள்...

பவித்ரா தனது கவலையை ஒதுக்கி வைத்து விட்டு தங்கையை ஆறுதலாக அணைத்து கொண்டாள்...

"விக்ரம் ஆண்மகன்... இன்றைக்கு இல்லை என்றாலும் என்றாவது ஒரு நாள் அவனுக்கு வேறு கல்யாணம் பண்ணி வச்சிருவாங்க..."

"பண்ணி வைக்கட்டுமே... எனக்கு என்ன...? அதற்காக என் தங்கை வாழ்க்கையைப் பாழாக்க நான் விட மாட்டேன்... அவளுக்கேற்ற மணமகனை பார்த்து கொடுக்க வேண்டியது என் பொறுப்பு..."

வீட்டின் மூத்த பெண்ணாய் அவள் பொறுப்புடன் பேசினாள்...

"முதலில் உன் பொறுப்பு என்ன தெரியுமா...? உன் வாழ்க்கை அழியாமல் காப்பாற்றிக் கொள்ளும் வழியைப் பார்... வேறு பெண் விக்ரம் மனைவியாக வந்து உன் வாழ்க்கை அழிவதற்குப் பதில் உன் தங்கை அந்தப் பெண்ணாக இருந்தால் உன் வாழ்க்கையும் காப்பாற்றப்படும்... அதே சமயம் தொழிலும் நிமிர்ந்து நிற்கும்..."

"இதற்கும் தொழிலுக்கும் என்ன சம்பந்தம் தாத்தா...?" முதன்முறையாய் அவள் தாத்தாவிடம் சீறினாள்...

"என்ன சம்பந்தமா...? உன்னுடைய சிறு பிள்ளைத்தனமான செயலால் ஒரு வாரமாக நமது நிறுவன பங்குங்கள் எந்தளவுக்குச் சரிந்து இருக்கிறது என்று பார்த்தாயா...?"

"தாத்தா அது வேறு..." தன்னிலை விளக்கம் கொடுக்க முற்பட்டவளை கை நீட்டி தடுத்தவர்,

"எல்லாமே ஒன்றுடன் ஒன்று சம்பந்தப்பட்டு இருக்கிறது... நீ சம்மதித்தால் எந்தவித மாற்றமும் இல்லாது இந்தக் கல்யாணம் நடக்கும்... இல்லை என்றால்...?" என்று நிறுத்தியவர் பேத்தியை ஆழ்ந்து நோக்கினார்...

"இல்லை என்றால்...?" அவளும் சளைக்காது அவரது பார்வையைத் தாங்கி நின்றாள்...

"இல்லை என்றால் தொழிலில் இருந்து நீ விலகி கொள்ள வேண்டும்... இதன் பொறுப்பு முழுவதும் பல்லவி பெயரில் மாற்றி எழுதப்படும்... இனி என்னுடைய தொழில் வாரிசு அவள் மட்டுமே... ஏனெனில் உன் வாழ்க்கையின் தோல்வி நம் தொழிலை மிகவும் மோசமாகப் பாதிப்பதை நான் விரும்பவில்லை..."

"சின்னப் பெண் தலையில் பனங்காயை வைக்க நினைக்கிறீங்க தாத்தா..."

"அதை விக்ரம் பார்த்து கொள்வான்..."

"ஓஹோ... யாரோ ஒருவனை நம்பும் நீங்க இத்தனை நாளாய் தொழிலை கட்டி காத்து வந்த என்னை நம்ப மாட்டீங்க அப்படித் தானே..."

'அப்படித் தான்' என்பது போல் அவர் மௌனமாக இருந்தார்...

"அவனா உங்க தொழிலை கட்டி காக்க போகிறான்...? அதுவும் என்னை விட... குட் ஜோக்... இது முட்டாள்த்தனமான பேச்சு தாத்தா... அவன் நம் தொழிலை இல்லாது ஆக்கிவிடுவான்... அதற்குத் தான் அவன் காத்து கொண்டிருக்கிறான்..."

பேத்தி பேச்சு கேட்டுத் திருவேங்கடம் ஆத்திரத்துடன் வெடித்தார்...

"உனது திமிரால் உன் வாழ்க்கையை நீ கெடுத்துக் கொண்டு வந்திருக்கிறாய்... கல்யாணமாகி ஆறு மாதமாகிறது... இன்னும் உன் புருசனை உன் பக்கம் வளைத்து போட உனக்குத் தெரியவில்லை... நீ இப்படி இருந்தால் எந்த ஆண்மகன் தான் உன்னுடன் வாழ்வான்... ஆனால் உன்னைப் போல் பல்லவி கிடையாது... விக்ரமுக்கு அடங்கி நடந்து அவனைச் சாமார்த்தியமாக அவள் கைக்குள் போட்டு கொள்வாள்..." என்ற தாத்தாவை அருவருப்புடன் பார்த்தாள் பவித்ரா...

அதற்கு மேல் அவள் பேசுவதற்கு ஒன்றும் இல்லை...

"இன்னைக்கே லீகல் ஃபார்மாலிட்டீஸ் எல்லாம் முடிச்சிருங்க... இனி எனக்கும் தொழிலுக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை... அது போல் இந்த வீட்டிற்கும்..." உணர்ச்சி இல்லாது அவள் கூற...

"பவி..." தாத்தாவை தவிர எல்லோரும் அதிர்ச்சியுடன் குரல் கொடுத்தனர்...

"முதுகெலும்பு இல்லாத கோழையாக என்னால் வாழ முடியாது..." என்று வெற்றுக் குரலில் அவள் பதிலளித்தாள்...

"அக்கா... எனக்கு இந்தக் கல்யாணம் வேண்டாம்... எனக்கு நீ தான் வேணும்..." என்று பல்லவி அவளைக் கட்டி கொண்டு அழுதாள்...

"உனக்குத் தான் ஹேண்ட்சம் விக்ரமை பிடிக்குமே..." கசந்த புன்னகையுடன் தங்கையின் கன்னத்தைத் தட்டினாள் அவள்...

"இப்போ அவனைப் பிடிக்கலை... உனக்குப் பிடிக்காத அவனை எனக்கும் பிடிக்காது... அவன் ஹேண்ட்சம் இல்லை... ராட்சசன்..." என்று மூக்கை விடைத்துக் கொண்டு கோபமாய் உரைத்த தங்கையை ஆறுதலாய் அணைத்து கொண்டவள்,

"தாத்தா சொன்ன மாதிரி ஒருவேளை உன்னோட அன்பு அவனை மாற்றலாம்..." என்றவளின் வார்த்தையில் அப்படி ஒரு வலி இருந்தது...

"பல்லவி... உன் அக்கா வாழ்க்கைக்காகத் தான் நான் இதைச் செய்கிறேன்... நீயாக இருந்தால் உன் அக்காவுக்கு இங்கேயும் சரி, அங்கேயும் சரி அவளது மதிப்பு எந்த விதத்திலும் குறையாது..." என்ற தாத்தாவை விரோதி போல் பார்த்து வைத்தாள் பல்லவி...

அன்றே இராமநாதனை சந்தித்துப் பேசினார் திருவேங்கடம்... இராமநாதன் மனதிலும் இப்படி ஒரு எண்ணம் தோன்ற தான் செய்தது... ஆனாலும் தானாக

இறங்கி செல்ல அவரது மனம் இடம் கொடுக்கவில்லை... அதனால் திருவேங்கடமாய் வந்து பேசவும் சிறிது பந்தா செய்தவர் பின் சமாதான உடன்படிக்கைக்குத் தயாராகி விட்டார்...

"எனக்குமே அதே எண்ணம் தான் திருவேங்கடம்..." என்று பூரிப்புடன் கூறி உடனே இதற்கு ஒத்துக் கொண்டார்...

திருவேங்கடம் சென்றதும் விக்ரமிடம் கூறலாம் என்று நினைத்து அலைப்பேசியை எடுத்த இராமநாதனை தடுத்து விட்டார் விஸ்வநாதன்...

"வேண்டாம்ப்பா... அவனிடம் சொன்னால் இதுக்கு ஒத்துக்க மாட்டான்... கல்யாணம் என்று சொல்லாமல் அவனை இங்கே வரவழைத்துக் காரியத்தைக் கச்சிதமாக முடித்து விட வேண்டியது தான்..." என்று மகன் கூறியதை கேட்டு இராமநாதனும் சரி என்று விட்டு விட்டார்...

பேரனின் பிடிவாதம் தான் அவர் அறிந்த ஒன்றாச்சே...

விஸ்வநாதன் தகப்பனிடம் பேசி விட்டு மனைவியைப் பார்த்து 'எப்படி?' என்று பெருமையுடன் பார்க்க... சௌந்தர்யா அகமும், புறமும் மகிழ நின்றிருந்தார்...

அன்று தான் அனுபவித்த வலியை ரேவதிக்கு அவரது மகன் மூலம் உணர்த்திட நினைத்தார் அவர்... அந்தளவிற்குப் பழிவெறி அவரது மனதினை ஆக்கிரமித்து இருந்தது...

விக்ரம், பல்லவி திருமணநாள் முடிவு செய்யப்பட்ட அன்று பவித்ரா வீட்டை விட்டு வெளியேறி இருந்தாள்...!!!

மொழி பேசும்...!!!

## விழி : 9

அதிகாலையில் விழித்த பவித்ரா வழக்கம் போல் 'முருகா சரணம்' என்று மனதில் கூறியபடி அன்றைய வேலைகளைப் பார்க்கலானாள்...

"கண்ணு... எழுந்திருச்சிட்டியா...? இந்தா காபி குடி..."

புன்னகை முகமாய்த் தனது கையில் காபி தம்பளரை கொடுத்த காமாட்சி அம்மாளை கண்டு அவளது முகத்தில் மின்னல் கீற்றாய் புன்னகை தோன்றி மறைந்தது... முன்பே அவளிடத்தில் புன்னகை அளவாகத் தான் இருக்கும்... இப்போது அதற்கும் பஞ்சம் வந்து விட்டது போல் சிரிக்க மறந்து இருந்தாள் அவள்...

மனதிற்குள் எதுவோ ஒன்று பாரமாய் அழுத்துவது போல் ஒரு தோற்றம்... மூச்சு கூட விட முடியாதபடி அந்தப் பாரம் அவளை அத்தனை சித்ரவதை செய்தது... காரணம் ஏனென்று அவளுக்குத் தெரியவில்லை... அவளது மனம் என்ன எதிர்பார்க்கிறது என்றும் அவளுக்குப் புரியவில்லை...

காற்றில் கமழ்ந்த பூவின் நறுமணத்தில் தன்னினைவு கலைந்தவள் அங்குப் பாயில் கொட்டப்பட்டு இருந்த மல்லிகை பூக்களை வாழை நாரில் சரமாய்த் தொடுக்க ஆரம்பித்தாள்... பூ கட்டுவதில் தேர்ந்தவள் போல் அவளது விரல்கள் அதை வேகமாகக் கட்ட துவங்கியது... அவளது மனமோ பின்னோக்கி சென்றது...

அவள் வீட்டை வந்து ஒரு மாத காலமாகி விட்டது... அன்று எங்குச் செல்வது என்று தெரியாது பேருந்து நிலையத்தில் நின்று கொண்டிருந்த ஏதோ ஒரு பேருந்தில் ஏறியவள் இறுதியாக வந்திறங்கியது ஆள் அரவமற்ற ஒரு பகுதியில்... அது எந்த ஊர் என்று கூட அவளுக்குத் தெரியாது... எங்கே செல்வது என்று தெரியாது விழித்துக் கொண்டிருந்தவளை அந்தப் பேருந்தில் அவளுடன் பயணம் செய்த காமாட்சி தான் தன்னுடன் அழைத்து வந்தார்...

காமாட்சி தனது கணவருடன் அந்தக் கிராமத்தில் வாழ்ந்து வருகிறார்... அவருக்கு ஒரே ஒரு பெண்... அவளையும் பக்கத்து ஊரில் திருமணம் செய்து கொடுத்துக் கடமை முடிந்த திருப்தியில் இருவரும் சந்தோசத்துடன் மீதி காலத்தைக் கழித்துக் கொண்டிருந்தனர்... தங்களது வயிற்றுப்பாட்டுக்கு பூ கட்டி விற்பனை செய்து சம்பாதித்து வந்தனர்...

ஆரம்பத்தில் ஒரு பூ கூடக் கட்ட தெரியாது சிரமப்பட்ட பவித்ரா சில நாட்களில் அதன் நுட்பத்தை அறிந்து கொண்டு இப்போது திறமையாகப் பூ கட்டும் அளவுக்கு முன்னேறி இருந்தாள்... திறமை ஒன்று தானே அவளை மற்ற பெண்களிடம் இருந்து தனித்து அடையாளம் காட்டியது... இப்போது அந்தத் திறமையையும் பறித்து அவளை வெற்று களிமண்ணாக மாற்றி விட்டாரே அவளது தாத்தா...

அப்போது வாசலில் சத்தம் கேட்டது... அவர்களது பக்கத்து வீட்டு பையன் தான் வந்திருந்தான்... அவன் நகரத்தில் இருந்த தொழிற்சாலையில் வேலை செய்து வருகிறான்...

"அக்கா... அன்னைக்குச் செஞ்சு கொடுத்த மாதிரி பூங்கொத்து செஞ்சு கொடேன்... எங்க முதலாளி அதைப் பார்த்துட்டு ரொம்ப நல்லாயிருக்குன்னு சொன்னார்... நாளைக்குக் கம்பெனிக்கு புதுசா யாரோ வர்றாங்களாம்... அவங்களை வரவேற்க அழகான பூங்கொத்து தயார் பண்ண சொன்னாருக்கா..."

பவித்ரா கல்லூரி படிக்கும் போது சிறப்பு வகுப்பாக இந்தப் பயிற்சியைப் பயின்றிருந்தாள்... அன்றொரு நாள் அந்தப் பையன் கேட்டதற்காக ஒரு பூங்கொத்துச் செய்து கொடுத்ததைத் தான் இப்போது அவன் ஞாபகப்படுத்திக் கூறிக் கொண்டிருக்கிறான்...

"சூப்பரா செஞ்சு கொடுத்திடலாம்..." என்று கூறி புன்னகைத்தவளிடம் அவன் விடை பெற்று சென்று விட்டான்...

உடனே அவளது தொழில் மூளை சுறுசுறுப்பாக வேலை செய்ய ஆரம்பித்தது...

"காமாட்சியம்மா... இந்த மாதிரி பூங்கொத்து தயாரிச்சு விற்பனை செய்தால் என்ன...?"

"இந்தக் கிராமத்தில் அது எல்லாம் எங்கே கண்ணு விற்க போகுது...?"

"டவுனில் விற்கும் இல்லையா...?"

"அங்கே விற்கும் கண்ணு..."

அவர் சொன்னதைக் கேட்டு அவள் அது பற்றிச் சிந்திக்க ஆரம்பித்து விட்டாள்... தனக்கு என்று தனியே ஒரு அடையாளத்தைத் தேடி கொள்ள வேண்டும் என்கிற வெறி அவளுள் உதயமானது... அவள் வீட்டினுள் முடங்கிப் போவதற்காகப் படைக்கப் பட்ட பெண் அல்ல... சாதிக்கப் பிறந்தவள்... இந்த வைராக்கியம் இருக்கும் வரை அவளது ஓட்டத்தை யாராலும் தடுத்து நிறுத்த முடியாது...

அதே நேரம் அலுவலகத்தில் இருந்த விக்ரமின் மனதிலும் ஏதோ ஒன்று உறுத்தி கொண்டே இருந்தது... வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு அவன் சாதாரணமாக இருப்பது போல் தான் தோன்றும்... இவ்வளவு ஏன் அவனுக்குமே அப்படித் தான் தோன்றுகிறது... ஆனாலும் மனதில் இருக்கும் இந்த உறுத்தல் உணர்வு அவனை விட்டு அகல மறுக்கிறதே... என்ன காரணமாக இருக்கும் என்று அவன் யோசித்தாலும் அவனுக்கு ஒன்றும் புலப்படவில்லை...

அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது... மறுமுனையில் கிடைத்த செய்தியில் அவனது முகத்தில் அவனையும் அறியாது ஒரு மலர்ச்சி தோன்றியது... அடுத்த நொடி அந்த அழைப்பை துண்டித்து விட்டு உடனே அவன் தனது அன்னைக்கு அழைத்தான்... மறுமுனையில் அவர் எடுத்ததும்,

"அம்மா... ஓடி போன உங்க மருமகள் திரும்பக் கிடைத்து விட்டாள்..." என்றான் கிண்டலும், சந்தோசமாய்...

"என்ன சொல்ற விக்ரம்...? உண்மையாவா...?" என்று விசயத்தை உறுதி செய்து கொண்ட ரேவதி,

"விக்ரம்... இன்னும் நீ நாக்கை கட்டுப்படுத்தும் வழியைக் காணோம்... என் மருமகள் தானாகவா ஓடி போனாள்... நீங்க எல்லாம் சேர்ந்து அவளை ஓடி போக வச்சிட்டீங்க..." என்றவரது வார்த்தையில் அத்தனை வருத்தம் இருந்தது...

"சரி விடுங்கம்மா... நான் பண்ணியது தப்பு தான்... நான் செஞ்ச தவறை நானே சரி செய்கிறேன்... போதுமா...?"

"போதும் விக்ரம் போதும்..." என்றவரது விழிகள் கலங்கியது...

"இனியாவது பவி கூட நீ சந்தோசமா வாழணும் விக்ரம்..."

அதைக் கேட்டதும் அவனது முகம் இறுகி போனது... ஆனாலும் குரலில் குழைவை கொண்டு வந்தவனாய்,

"நிச்சயமாம்மா... இனி இப்படி அடுத்தவர்களுக்குக் காட்சி பொருளாக நாங்க நடந்து கொள்ள மாட்டோம்..."

"ரொம்ப நல்லது விக்ரம்..."

அன்னையிடம் பேசி விட்டு அலைப்பேசியைத் துண்டித்த விக்ரமின் மனதில் கோபமும் இருந்தது... அதே சமயம் ஒருவித நிம்மதியும் சேர்ந்தே இருந்தது... இரண்டும் கலந்த கலவையாக அவனது உணர்வுகள் இருந்தது... அடுத்து நொடி நேரம் கூடத் தாமதம் செய்யாது பவித்ரா இருக்கும் ஊரை நோக்கி அவன் பயணம் செய்தான்...

விமானத்தில் ஏறியமர்ந்தவனுக்கு மனைவியுடன் தான் சேர்ந்து பயணித்த விமானப் பயணம் ஞாபகத்தில் எழுந்தது... கண்களை மூடி அவளது நினைவை விரட்டி அடிக்க முயன்றான்... எங்கே, கண்களை மூடினாலும் மூடிய விழிகளுக்குள் அவனது அழகான ராட்சசியே தோன்றி அவனை இன்னும் அதிகமாய் இம்சித்தாள்...

'ச்சு சரியான இம்சை...' என்று எரிச்சலுடன் அவன் முணுமுணுத்துக் கொண்டான்...

துபாயில் இருந்து அவன் இந்தியா வந்து ஒரு வார காலமாகி விட்டது... தாத்தாவிற்கு உடல்நிலை சரியில்லை என்று கூறி தான் அவனை இங்கு வரவழைத்து இருந்தனர்... அவன் இங்கு வந்து பார்த்தால் அவனுக்கும் அவனது மனைவியின் தங்கைக்கும் இரண்டாம் திருமணம் நடப்பதற்கான வேலைகள் ஜரூராக நடந்து கொண்டிருப்பதைக் கண்டு அவன் அதிர்ந்து போனான்...

ரேவதி செய்வதறியாது கைகளைப் பிசைந்து கொண்டிருந்தார்... மாமனாரை எதிர்த்து பேசி அவருக்குப் பழக்கம் இல்லை... ஆனால் அவரது மகன் தாத்தாவை எதிர்த்து நின்றான்...

"தாத்தா... என்ன வேலை பண்ணி வச்சியிருக்கீங்க...?"

"பார்த்தால் தெரியலை... உன்னோட இரண்டாம் கல்யாணத்துக்கான ஏற்பாடுகள் நடந்து கிட்டு இருக்கு..."

"அது தான் ஏன்னு நான் கேட்கிறேன்...? எனக்கு ஏற்கெனவே கல்யாணமான விசயம் உங்களுக்குத் தெரியுமா...? தெரியாதா...?" என்றான் பேரன் நக்கல் குரலில்...

"அவளால் இந்தக் குடும்பத்துக்கு ஒரு வாரிசை பெத்து கொடுக்க முடியாதுன்னு உனக்கும் தெரியும் தானே... அதற்காகத் தான் நீ அவளை வீட்டை விட்டு வெளியில் அனுப்பியதாய் எனக்கு ஞாபகம்..."

பேரனுக்குத் தானும் சளைத்தவர் இல்லை என்பது போல் தாத்தாவும் தனது நக்கலை வார்த்தைகளில் தெறிக்க விட்டார்... அதில் பேரனது முகம் கன்றிப் போனது...

"அது எனது தனிப்பட்ட விசயம்... இந்த இரண்டாவது கல்யாணம் நான் சம்பந்தப்பட்ட விசயம்... என்னோட வாழ்க்கை எந்த வழியில் கொண்டு போகணும்ன்னு எனக்குத் தெரியும்... நீங்க ஒண்ணும் எனக்கு வழி காட்ட வேண்டாம்..." என்றான் பேரன் பிடிவாதமாக...

"ஓ... அந்தளவுக்கு நீ வந்துட்டியா...? நான் சொன்னதுக்கு நீ சம்மதிக்கலைன்னா இந்தச் சொத்தில் உனக்குப் பங்கு கிடையாது..." என்ற பயமுறுத்திய தாத்தாவை நிமிர்ந்து பார்த்தான் பேரன் சிறிதும் அச்சமின்றி...

"உங்க கிட்ட சொத்துக்களை யார் கேட்டது...? இந்தச் சொத்துக்களை எப்படி எடுத்துக்கிறதுன்னு எனக்கு நல்லா தெரியும்... உங்க திருவிளையாடலை என் கிட்ட வச்சுக்காதீங்க தாத்தா..." என்றவனது மனதில் அந்த உண்மை நன்கு சுட்டது...

சுட்ட உண்மையைத் தான் அவனால் தாங்கி கொள்ள முடியவில்லை... அத்தனை வேதனையாக இருந்தது...

பேரனது பேச்சு கேட்டு இராமநாதன் முகம் அவமானத்தில் சுருங்கி போய் விட்டது... பேரனின் திறமை, சாமர்த்தியம் எல்லாம் அவருக்கு நன்கு தெரியும்... அதனால் அவருக்கு அவன் மீது கோபம் வந்த போதும் அமைதி காத்தார்...

"விக்கி... தாத்தாவை எதிர்த்து பேசாதே..." என்று விஸ்வநாதன் மகனை சத்தம் போட... அதில் தகப்பனை திரும்பி பார்த்த மகன் அவரைத் தீயாய் உறுத்து விழித்தான்...

"உங்களை மாதிரி என்னை நினைச்சீங்களாப்பா... உங்களுக்குத் திறமை இல்லை... அதனால் சொத்து சுகத்துக்கு ஆசைப்பட்டு எங்கம்மா வாழ்க்கையை நாசமாக்கினீங்க... அதே போல் நானும் பண்ணணும்ன்னு நினைக்கிறீங்களா...? எனக்குத் திறமை இருக்கு... இது போல் ஆயிரம் மடங்கு சொத்துக்களை வாங்கிக் குவிக்க என்னால் முடியும்..."

"தாத்தா உன் நல்லதுக்குத் தானே சொல்கிறார் விக்கி..."

"எது நல்லது...? இப்படி ஒரு பாவத்தை, பழி சொல்லை காலம் பூரா சுமக்க சொல்வதற்குப் பெயர் தான் நல்லதா...? பவியிடம் இருக்கும் குறை என்னிடமும் இருக்கலாம் இல்லையா...?"

அதில் எல்லோரும் அதிர்ந்து போய் அவனைப் பார்த்தனர்...

"அப்படியும் இருக்கலாம்ன்னு தான் நான் சொன்னேன்... அவ்வளவு தான்... அது உண்மை இல்லை... என்னைப் பொருத்தவரையில் திருமணம் என்பது வாழ்க்கையில் ஒரு முறை தான் வரும்... நல்லவளோ கெட்டவளோ பவித்ரா தான் என்னோட மனைவி... அது நான் சாகும் வரை மட்டுமல்லாது, அவள் சாகும் வரைக்கும் கூட... இனி எனது இரண்டாம் கல்யாணம் பத்தி இங்கு யாரும் பேச கூடாது..." என்றவன்,

"நாட்டில் அநாதை குழந்தைகளுக்கா பஞ்சம்... அதில் ஒண்ணை எடுத்து நான் தத்தெடுத்து வளர்த்துட்டுப் போகிறேன்... இதற்காக எல்லாம் என்னால் இரண்டாவது கல்யாணம் பண்ணிக்க முடியாது..." என்று உறுதியாக மறுத்த மகனை பெருமையாகப் பார்த்தார் ரேவதி...

மகனது நிலைப்பாடு அவரை மிகவும் சந்தோசத்தில் ஆழ்த்தியது... எங்கே அவனது தந்தையைப் போன்று அவனும் தவறு செய்து விடுவானோ என்று பயந்து போனார் அவர்... இப்போது தான் அவருக்கு அத்தனை நிம்மதியாக இருந்தது...

சௌந்தர்யாவோ கணவனைத் தீயாக உறுத்து விழித்தார்... விக்ரமின் தைரியம் அன்று அவரது கணவருக்கு இல்லாது போனதே... கோழை போல் தந்தை சொல் பேச்சு கேட்டு அவரது தங்கையின் கழுத்தில் தாலி கட்டி குடும்பம் நடத்தி பத்தாம் மாதம் குழந்தையையும் கொடுத்த கணவர் இப்போது அவருக்கு ஒரு புழு போல் தெரிந்தார்... அத்தனை அருவருப்பாக இருந்தது அவருக்குத் தனது கணவனை நினைத்து...

முதல் மனைவியின் கேவலமான பார்வையில் விஸ்வநாதன் வெட்கி போனவராய் தலை குனிந்து அமர்ந்திருந்தார்...

தனிமையில் ரேவதி மகனின் கைகளைப் பிடித்துக் கொண்டு அழுது விட்டார்...

"அம்மா... நீங்க எதுக்கு அழுறீங்க...? உங்களுக்கு நான் இருக்கேன்... கவலைப்படாதீங்க..."

"இந்த வார்த்தைகளை நீ உன் மனைவியைப் பார்த்து சொல்வியா விக்ரம்..."

விக்ரம் அன்னையைத் திகைத்துப் போய்ப் பார்த்தான்...

"அம்மா..."

"இந்த மாதிரி சமயத்தில் தான் நீ பவிக்கு ஆறுதலாக இருக்கணும்... அதை விட்டுட்டு அவளோட குறையைச் சொல்லி குத்தி காமிச்சது ரொம்பத் தப்பு விக்ரம்..."

இப்போது அவனும் தனது தவறை உணர்ந்தே இருந்தான்... அன்று அவன் அந்தத் தவறை செய்யாது இருந்தால் இன்று தாத்தாவிற்கு இந்தளவிற்குத் தைரியம் வந்திருக்காது... ஆனால் அன்று அவனது மனைவி செய்த செயல்...? இப்போதும் அவனால் அதை ஜீரணிக்க முடியவில்லை... அவளது செய்கை கசப்பாக அவனது தொண்டை குழியில் அவஸ்தையாக உருண்டது...

"உங்க ரெண்டு பேருக்கு இடையில் என்ன நடந்ததுன்னு எனக்குத் தெரியாது... ஆனால் பவி கூட நீ சேர்ந்து வாழணும்... அது தான் எனக்கு வேணும்..."

"ம்... சரிம்மா..."

இந்த வார்த்தைகளை அவன் அன்னைக்காகச் சொன்னானா...? இல்லை தனக்காகச் சொன்னானா என்று இன்று வரை அவனுக்குத் தெரியவில்லை...

அந்தக் கணமே விக்ரம் நேரே பவித்ரா வீட்டிற்குச் சென்ற போது அவள் அங்கிருந்து காணாமல் போயிருந்தாள்... விசயம் கேள்விப்பட்டு அவன் திருவேங்கடத்திடம் கொதித்தெழுந்து விட்டான்...

"கொஞ்சமாவது வயசுக்கு தகுந்த மாதிரி நடந்துக்கிறீங்களா...?"

அவனது வார்த்தையில் அதிர்ந்து போய்ப் பார்த்த திருவேங்கடத்திடம், "உங்களை மட்டுமல்ல என் தாத்தாவையும் சேர்த்து தான் சொல்கிறேன்... சின்னஞ்சிறுசுக சண்டை போட்டால் என்ன விசயம்ன்னு கேட்டு ரெண்டு பேருக்கும் இடையில் சமரசம் பேசி சேர்த்து வைக்கணும்... அதை விட்டுட்டு இப்படியா பவி வீட்டை விட்டு போகும் அளவுக்கு நடந்து இருப்பீங்க...? இதனோட விளைவுகளை நீங்க நல்லா அனுபவிப்பீங்க..." என்று அவரை எச்சரித்து விட்டு வந்தவனை வாயிலில் நின்ற கல்பனா வழிமறித்தார்...

"ரொம்ப நன்றி மாப்பிள்ளை..." இரு கரம் கூப்பிக் கண்ணீர் மல்க நன்றி தெரிவித்தவரின் கரத்தை கீழே இறக்கியவன்,

"இனி உங்க மகளைப் பத்தி நீங்க கவலைப்பட வேண்டாம்... என் மனைவி என் பொறுப்பு... நான் அவளைப் பத்திரமா பார்த்துக்கிறேன்..." என்றவன் அங்கிருந்து வந்து விட்டான்...

அடுத்து துப்பறியும் நிறுவனத்தை நாடி மனைவி இருக்கும் இடத்தை இதோ இப்போது தான் கண்டுபிடித்து இருக்கிறான்... இனி அந்த ராட்சசியை வீட்டிற்கு அழைத்துச் செல்ல வேண்டும்... தான் கூப்பிட்டாள் வருவாளா...? அவனுக்கு ஆயாசமாக இருந்தது...

'அப்படி வராமல் மட்டும் இருக்கட்டும்... கையைக் காலை கட்டியாவது ஊருக்கு தூக்கிட்டு போயிர வேண்டியது தான்... அவள் என்னைக்குத் தான் என் பேச்சை கேட்டு இருக்கிறாள்...' மனதிற்குள் அவளை நினைத்து அவனுக்குக் கோபம் வந்தது...

**************************

இரவு நேரம் வெளிக்கதவை மூட வந்த பவித்ரா இருட்டில் வந்து நின்ற நெடிய உருவத்தைக் கண்டு பயந்து போய்க் கத்த முயன்றாள்... அடுத்த நொடி அவளது வாயை ஒரு கரம் இறுக மூடியது...

"ஏய்... சத்தம் போடாதே... நான் தான்..."

அந்தக் குரலுக்குச் சொந்தக்காரனை அடையாளம் கண்டு கொண்ட பவித்ராவின் உள்ளமும், உடலும் இறுகி போனது... அவளின் அமைதி கண்டு விக்ரம் தனது கையை எடுத்தான்... அடுத்த நொடி அவள் கோபமாகச் சீறினாள்...

"இங்கே எதுக்கு வந்த...? இருக்கும் கொஞ்ச நஞ்ச என் உயிரை எடுப்பதற்கா...?"

அலைப்பேசியை உயிர்ப்பித்து வெளிச்சத்தை ஏற்படுத்தியவன், "உன் வாய் கொஞ்சமும் குறைவதாய் இல்லை... இப்படிப் பேசும் உன் வாயை என்ன செய்யலாம்...?" என்று தாடையைத் தடவியபடி அவளது இதழ்கள் மீது அழுத்தமாய்ப் படிந்த அவனது பார்வையே சொல்லாமல் சொல்லியது அவன் செய்ய நினைத்ததை...

அதில் அவனை முறைத்து பார்த்தபடி வீட்டை நோக்கி அவள் நடந்து செல்ல அவனும் அவளைப் பின் தொடர்ந்தான்... அதற்குள் காமாட்சி அவனைப் பார்த்து விட்டார்...

"தம்பி, யாரு...?"

"நான் இவங்களோட புருசன்..." என்று பவித்ராவை சுட்டி காட்டி தன்னை அறிமுகப்படுத்திக் கொண்டவன் பாவம் போல் அவரைப் பார்த்து வைத்தான்...

"அடடே வாங்க தம்பி... உட்காருங்க..." என்று வரவேற்றவர் அவனைத் திண்ணையில் அமர சொன்னார்...

விக்ரம் மனைவியைக் கெத்தாகப் பார்த்தபடி திண்ணையில் அமர்ந்தான்...

"பார்த்தா படிச்ச பிள்ளை கணக்கா இருக்க... இப்படிப் பொஞ்சாதிய வீட்டை விட்டு துரத்தி போட்டியே ராசா... பாவம் புள்ள... எங்கே போறதுன்னு தெரியாம முழிச்சிக்கிட்டு இருந்தது... நான் தான் என்னோட இங்கே கூட்டிட்டு வந்தேன்..."

அவர் கூறியதும் அவனது பார்வை மனைவியைப் பார்த்தது... அவளோ அவனைப் பாராது விறைத்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்... அதில் அவனது முகத்தில் புன்னகை தோன்றியது...

"தப்பு எல்லாம் என் பேரில் தான்... அதான் மன்னிப்பு கேட்டு அவளைக் கூட்டிட்டு போக வந்திருக்கேன்..." என்றவனைக் கண்டு சட்டென்று திரும்பி பார்த்தாள் பவித்ரா...

'இவன் உண்மையைத் தான் சொல்கிறானா...?' என்று அவளது பார்வை ஆராய்ச்சியாய் கணவனைப் பார்த்தது...

'ஹ... இவன் கூப்பிட்டால் நாய்க்குட்டி மாதிரி இவன் பின்னாடி நான் போய் விடுவேனா...? அதுக்கு வேறு ஆளை பார்...' என்று அலட்சியமாய் அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

இரவு உணவு முடிந்து காமாட்சியும், அவரது கணவரும் திண்ணையில் படுத்துக் கொள்ள... விக்ரமும், பவித்ராவும் கதவை மூடி விட்டு வீட்டினுள் இருந்தனர்... பவித்ரா எதுவும் பேசாது அமைதியாகப் படுக்க ஆயத்தமானாள்... அதைக் கண்டு விக்ரமிற்குக் கோபம் வர வேகமாக அவள் அருகில் வந்தான்...

"என்னடி உன் மனசில் நினைச்சுக்கிட்டு இருக்க...?"

"நிச்சயமா உன்னை இல்லை..." அவள் கிண்டலாய் பதிலளித்தாள்...

"அதை நீ சொன்னாலும் நான் நம்பப் போவதில்லை..." என்றான் அவனும் அதே கிண்டல் குரலில்...

"தெரியுதுல்ல... அப்புறம் என்ன...? உன் வேலையைப் பார்த்துட்டு போ... என் வழியில் ஏன் குறுக்கே வர்ற...?"

அதில் அவனது ஆத்திரம் அதிகரிக்க அவள் அருகில் தனது கையைக் கொண்டு வர, அவள் பயத்துடன் பின்னே நகர... அவன் அவளது கழுத்தில் கிடந்த தாலி சங்கிலியை எடுத்து காட்டி,

"இதுக்காகத் தான் வந்தேன்..."

அவனது வார்த்தையில் வெடுக்கென்று தாலி சங்கிலியை பிடுங்கியவள் சீற்றத்துடன் அவனைப் பார்த்தாள்...

"இதை என் கழுத்தில் மட்டுமா நீ கட்டியிருக்க...? பல்லவி கழுத்திலும் தானே கட்டியிருக்க... அப்புறம் எதுக்கு இந்த டிராமா எல்லாம்...?"

அதில் அவனது விழிகளில் சுவாரஸ்யம் பொங்கியது... அவளைச் சீண்டி பார்க்க அவனது மனம் ஆசை கொண்டது...

"அம்மா, பெரியம்மா மாதிரி நீயும், உன் தங்கையும் ஒரே வீட்டில் இருந்தால் தானே எனக்கு நல்லது... உன்னை இங்கே கஷ்டப்பட வச்சிட்டு நான் மட்டும் அங்கே சந்தோசமா இருந்தால் நல்லாவா இருக்கும்... அதைக் கண்டு இந்த ஊர், உலகம் என்னைப் பார்த்து கேலி பேசாது...? அதுக்குத் தான் நான் உன்னைத் தேடி வந்தேன்..."

அதைக் கேட்டு அவளுள் ஆத்திரம் பொங்கியது... இத்தனை நாளாய் அவள் மனதில் கனன்று கொண்டிருந்த நெருப்பு அது...

"ச்சீ... நீ எல்லாம் ஒரு மனுசனா... பெண்ணிடம் படுக்கையில் வீரத்தை காட்டிய கோழை நீ..."

அதற்கு மேல் அவள் பேச முடியாதபடி அவன் அவளது கழுத்தை பிடித்திருந்தான்...

"ஐயோ பாவமேன்னு நினைச்சா நீ ரொம்பத் தான் துள்ளுற... கணவன், மனைவி உறவை இதை விட அசிங்கப்படுத்த யாராலையும் முடியாது... பெண்ணாடி நீ...? ச்சே..." என்று அவன் அருவருப்புடன் முகத்தைச் சுளித்தான்...

"அதனால் தான்டா உன்னைத் தொழிலில் ஜெயித்தேன்... நீ என்னை ஒவ்வொரு முறை தொடும் போதும் 'உன்னை

ஜெயிக்க வேண்டும்'ங்கிற வைராக்கியம், வெறி என்னுள் அதிகரித்துக் கொண்டே போகும்... அதே மாதிரி நான் உன்னை ஜெயிச்சும் காட்டிட்டேன்... நான் பெண் இல்லாம வேறு யார் பெண்...?" என்றவளது வார்த்தையில் அத்தனை ஆணவம் இருந்தது...

அவளது வார்த்தையில் அவன் அவளைக் கூர்ந்து பார்த்தான்... ஏனோ தெரியவில்லை அவளால் அவனது பார்வையைச் சந்திக்க முடியவில்லை... அதனால் வேறு பக்கம் திருப்பிக் கொண்டாள்...

"உன் மீதான கோபம் இன்னமும் என் மனசில் இருக்கு... நான் செஞ்சது தப்புன்னா... நீ செஞ்சது அதை விடப் பெரிய தப்பு..."

"அப்புறம் எதுக்கு என்னைத் தேடி வந்த...?" திமிராய் வந்தது அவளது வார்த்தைகள்...

"எனக்கு நீ தேவையில்லை தான்... ஆனால் உன் அத்தை தான் உன்னைக் கூட்டிட்டு வர சொன்னாங்க..."

"ஓ..." என்றவள், "நான் யாருக்காவும் எங்கேயும் வர மாட்டேன்... என் வாழ்க்கையை நான் தான் தீர்மானிக்கணும்... நீயில்லை..."

அவன் தாத்தாவிடம் கூறிய அதே வார்த்தைகளைக் கூறிய மனைவியைக் கண்டு அவனுக்குப் புன்னகை தோன்றியது... எதில் ஒற்றுமை இருக்கிறதோ இல்லையோ இதில் அவர்களுக்கு இடையில் ஒற்றுமை இருக்கிறது...

"அது போல் என் வாழ்க்கையைத் தீர்மானிக்கிற உரிமை எனக்கு இருக்கிறது... இனி என்னோட வாழ்க்கை முழுவதும் நீ என்னோடு தான் பயணித்து ஆகவேண்டும்..." என்றான் அவன் உறுதியான குரலில்...

"நான் வந்தால் தானே..."

"அட, என்னுடன் வராமல் நீ எங்கே போகப் போகிற...? நான் உன் கையை, காலை கட்டியாவது உன்னை ஊருக்கு

கூட்டிட்டு... சாரி சாரி தூக்கிட்டுப் போகத் தான் போகிறேன்..." என்றான் அவன் அலட்சியமாய்...

"டேய்..." என்று பல்லை கடித்தவளின் அருகே வந்தவன்,

"உன் சம்மதம் இல்லாமல் உன்னோடு குடும்பம் நடத்தியவன் நான்... அது போல் என்னுடன் உன்னை அழைத்துச் செல்லவும் உன் சம்மதம் எனக்குத் தேவையில்லை..."

அவனது அருகாமையில் அவள் பதறி போய் விலக... அதை உணர்ந்தவனாய் அவனது புருவங்கள் யோசனையாய்ச் சுருங்கியது... ஒன்றும் பேசாது அவளை விட்டு விலகியவன் தனக்காக விரிக்கப்பட்டு இருந்த பாயில் படுத்துக் கொண்டான்...

முற்றத்தின் வழியே தெரிந்த வானில் எட்டி பார்த்த நிலாவை ரசித்துப் பார்த்தவன், "பேசாம இந்தக் கிராமத்தில் இருந்து விடலாம் போலிருக்கிறது... அத்தனை நிம்மதியாய் இருக்கிறது..." என்று கூற...

காலம் காலமாய்த் தன்னுடன் ஒற்றுமையாய் குடும்பம் நடத்தியவனைப் போன்று பேசி வைத்த கணவனைக் கண்டு கடுப்பாகி போனவளாய் பவித்ரா பதில் சொல்லாது திரும்பி படுத்து கொண்டாள்... அவளிடம் இருந்து சத்தம் வராது போகவும் அவன் அவளைத் திரும்பி பார்த்தான்...

நிலா ஒளியில் அழகுற தெரிந்த மனைவியின் பின்னழகு அவனை ருசி கண்ட பூனையாய் ஜொள்ளிட வைத்தது...

'டேய்... அவளிடம் இத்தனை அடிபட்டும் உனக்குப் புத்தி வர மாட்டேங்குதே... இப்ப உனக்கு ரொமான்ஸ் ரொம்ப முக்கியமா...?' அவனது மனசாட்சி அவனைக் காறி துப்பியதில் அவன் சமத்து பிள்ளையாய் திரும்பி படுத்துக் கொண்டான்...

இருவரது நெஞ்சிலும் மற்றவர் அளித்த காயங்களே ஆறாத ரணமாக... அதையும் மீறி ஒரு சிறு நிம்மதி... அந்தச் சிறு

நிம்மதி தான் காதலுக்கான அச்சாரம் என்பதை அந்த இரு அறிவுஜீவிகளும் உணரவில்லை...

மறுநாள் காலையில் எழுந்ததும் விக்ரம் தங்களது பயணத்தைக் காமாட்சியிடம் உறுதி படுத்தினான்... அதைக் கேட்டு பவித்ரா ஆட்சேபணை தெரிவிக்க... அவனோ அவளது கூற்றை எப்போதும் போல் புறம் தள்ளினான்...

"நேத்து சொன்ன என்னோட ஸ்டேட்மெண்ட் அப்படியே தான் இருக்கிறது... நீயா வந்தா நல்லது... இல்லைன்னா கையை, காலை கட்டிட வேண்டியது தான்..." என்றவன் அவளை வில்லன் பார்வை பார்க்க... அதைக் கண்டு அவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

"ராசா... புள்ளத்தாச்சி பொண்ணுய்யா... பார்த்துச் சூதானமா கூட்டிட்டு போப்பா..."

காமாட்சி வார்த்தையில் முதலில் புரியாது விழித்தவன் அடுத்தக் கணம் புரிந்தவனாய் முகம் மலர்ந்தவனாய் மனைவியை ஏறிட்டுப் பார்த்தான்... அவனது விழிகள் அவளைக் கண்டு 'உண்மையா...?' என்று கேட்டது... அவன் கேட்டதன் அர்த்தம் புரிந்த போதும் அவளது விழிகள் அவனுக்கான பதிலை பிரதிபலிக்கவில்லை... அந்தளவிற்கு அழுத்தமாய் அவள் நின்றிருந்தாள்...

காமாட்சி அம்மாள் அறிவுரை கூறியதற்குச் சரி சரியென்று தலையாட்டியவன் தனிமையில் மனைவியைச் சந்தித்து,

"பவி... உண்மையாவா...?" அவனது குரல் அத்தனை நெகிழ்ந்திருந்தது...

அவளால் கணவன் கேட்டதற்குப் பதில் கூற முடியவில்லை... குழந்தை பிறக்காது என்ற காரணத்துக்காகத் தானே அவன் அவளை வீட்டை விட்டுத் துரத்தியது... இந்தக் காரணத்துக்காகத் தானே அவளிடம் இருந்து தொழிலை பிடுங்கி அவளை வெற்று மனுசியாக்கினார் அவளது தாத்தா... இதனால் தானே

அவளது கணவனும் அவளை விலக்கி வைத்து விட்டு இரண்டாவது திருமணம் செய்து கொண்டிருக்கிறான்...

இதற்கு எல்லாம் காரணமான இந்தக் குழந்தையைப் பற்றி அவளால் சந்தோசமாகக் கணவனிடத்தில் சொல்ல முடியாது போனது... இது அவளது குழந்தை... அவளுக்கு மட்டுமே சொந்தமான குழந்தை...

"தெரிந்து என்ன செய்யப் போற...? எல்லாத்தையும் மாத்தி எழுத போறியா...?" என்று வெடுக்கென்று அவள் கேட்க...

அவள் கூறியதை அவன் செவி கொடுத்து கேட்டால் தானே... சந்தோச மிகுதியில் அவளது மாராப்பு சேலையை விலக்கி அவளது வெற்று வயிற்றில் கை வைத்துப் பார்த்தான்... குழந்தை வயிற்றில் இருப்பதை அவனால் உணர்ந்து கொள்ள முடியவில்லை என்றாலும் அது உண்டானதில் ஏற்பட்ட சந்தோசத்தை அவன் உணர்ந்தான்...

அந்தக் கணம் தான் அவன் அந்த வேறுபாட்டை உணர்ந்தான்... அவனது தொடுகையில் மனைவியவளின் மேனியில் ஒருவித சிலிர்ப்பு எழுவதை அவன் ஆச்சிரியமாய் உணர்ந்தான்... முதன்முறையாக அவனது தொடுகைக்கு அவனது மனைவி தனது உணர்வினை பிரதிபலித்து இருக்கிறாள்...

அந்த நொடி அவனது மனதில் தோன்றிய உணர்வுகளை வார்த்தைகளில் வடிக்க முடியாது... அந்தக் கணம் இத்தனை நாளாய் தான் இழந்தது என்ன என்பதை அவன் உணர்ந்தான்...

அடுத்த நொடி, "சாரி..." என்றபடி அவன் அவளை விட்டு விலகி சென்றிருந்தான்...

அவனது விலகலில் எதையோ இழந்தார் போன்று அவளது மனம் தவித்துப் போனது... அவளது விழிகளில் விழிநீர் அரும்பியது...

காதல் இருவருள்ளும் தனது காலடி தடத்தை அழுத்தமாய்ப் பதிக்க ஆரம்பித்து இருந்தது அவர்கள் அறியாது...!!!

மொழி பேசும்...!!!

## விழி : 10

வீட்டை விட்டு வெளியில் வந்த விக்ரமின் மனம் அத்தனை லேசாக இருந்தது... அந்த வானத்தை வசப்படுத்தியது போன்று ஒரு மகிழ்ச்சி, நிறைவு... வீட்டின் முன்னிருந்த சிறு இடத்தில் நட்டு வைக்கப்பட்டு இருந்த பூஞ்செடி கூட்டங்கள் அவனது சந்தோசத்தில் பங்கெடுத்துக் கொள்வது போல் அவனைக் கண்டு மகிழ்வாய் தலையசைத்துச் சிரித்தது... கூட்டமாய்ப் பூத்திருந்த சாமந்தி பூவில் ஒன்றை எடுத்து முகர்ந்து பார்த்தவனுக்கு அத்தனை பரவசம்...

ஏனென்று தெரியாத ஒரு உணர்வு மனதினை ஆக்கிரமிக்க மனம் பரபரக்க சந்தோசத்தில் தலையைக் கோதி கொடுத்தான்... அப்போது அவனது கைகளில் மனைவியின் பிரத்யேக நறுமணம் இன்னமும் மிச்சம் இருப்பது போல் ஒரு தோற்றம்... கரத்தை நாசியின் அருகே கொண்டு வந்து முகர்ந்து பார்த்தவன் அதை இன்னமும் அதிகமாய் உணர்ந்தவனாய் கண் மூடி அனுபவித்தான்...

மனைவியவளின் மேனி சிலிர்த்ததை இப்போதும் உணர்ந்தவனின் உள்ளம் சிலிர்த்தது... தனது இத்தனை சந்தோசத்திற்குக் காரணம் மனைவி குழந்தை உண்டாகி இருப்பதா...? இல்லை மனைவியவளின் மெய் சிலிர்ப்பா...? புரியாது குழம்பி நின்றான்...

எதுவாக இருந்தால் என்ன...? அவனது மனம் இந்தக் கணம் சந்தோசமாக இருக்கிறது... அது தானே அவனுக்கு வேண்டும்...

பவித்ராவின் காதுகளில் கணவனது மன்னிப்பு குரலே ஒலித்தது... ஏனோ தெரியவில்லை அவன் மன்னிப்பு கேட்டது அவளுக்கு அத்தனை பாரமாகத் தோன்றியது... இழக்க கூடாததை இழந்தது போல் அவளுக்கு அழுகை அழுகையாக வந்தது... கலங்கிய மனதுடன் அவள் வெகு நேரம் அப்படியே நின்றிருந்தாள்...

பிறகு கலங்கிய விழிகளைத் துடைத்துக் கொண்டு வெளி திண்ணையில் வந்தமர்ந்தவள் அங்கிருந்த பூக்களைக் கட்ட

துவங்கினாள்... திண்ணையில் மனைவி அமர்ந்திருப்பதைக் கண்டு விக்ரம் அங்கு வந்தான்... அவளுக்கு எதிர்புறமாக அங்கிருந்த தூணில் சாய்ந்து அமர்ந்தவன் மனைவியின் செய்கையை ஆச்சிரியமாகப் பார்த்தான்...

மளமளவென்று அவள் பூ கட்டுவது அவனுக்குப் பெரும் வியப்பாக இருந்தது... எங்கு இருந்தாலும் திறமையோடு அவள் பொருந்தி போவதை நினைத்து அவனுக்கு ஆச்சிரியமாக இருந்தது...

"பவித்ரா... காலையில் சாப்பிட்டுட்டு நாம ஊருக்கு கிளம்பணும்..." என்றான் தன்மையாக...

"என்னால் வர முடியாது..." என்றாள் அவள் பட்டென்று...

"உன்னுடைய அனுமதியை இங்கு யாரும் கேட்கலை..." சற்று திமிராய் ஒலித்த அவனது குரலில் அவள் அவனை நிமிர்ந்து பார்த்து உறுத்து விழித்தாள்..

"என்னோட விசயத்துக்கு என் அனுமதி முக்கியம்..." என்றாள் அவள் அழுத்தம் திருத்தமாய்...

"அட பார்றா... ஜோக் எல்லாம் அடிச்சிக்கிட்டு... உன் கிட்ட கேட்டா நான் உன்னைத் தொட்டேன்... உன் கிட்ட கேட்டா உனக்கு என் குழந்தையைக் கொடுத்தேன்... அது போல் தான் இதுவும்... எல்லாம் என் விருப்பப்படி தான் நடக்கும்..." என்றான் அவனும் தெனாவெட்டாய்...

அதில் அவளது முகம் அவமானத்தில் சிவந்து போனது...

"நான் உன் கூட வர முடியாதுன்னா வர முடியாது தான்..."

"என் பொறுமையைச் சோதிக்காதே பவித்ரா..." என்றான் அவன் கோபமாக...

"என்னமோ நான் மட்டும் தான் உன் மனைவி மாதிரி... வா வான்னு கூப்பிடற... உனக்குத் தான் பல்லவி இருக்காளே... போ போய் அவள் கூடக் குடும்பம் நடத்து... எதுக்கு இங்கே வந்து என் உயிரை வாங்கிற... ஒருவேளை உங்கப்பா

மாதிரி இரட்டை மாடு கட்டி வண்டி ஓட்டும் ஆசை இருக்கிறதோ... அப்படி ஒரு ஆசை உனக்கு இருந்தால் அதுக்கான ஆள் நானில்லை..."

"என்னடி சொன்ன...?"

விக்ரம் கோபத்துடன் எழுந்தவன் தனது கையை ஓங்கியபடி அவள் அருகே வந்தான்... அந்நேரம் காமாட்சியும், அவரது கணவரும் அங்கு வந்து சேர்ந்தனர்... காலை உணவு சமைப்பதற்குப் பொருட்கள் வாங்குவதற்காகச் சந்தை வரை சென்றிருந்தனர்...

அவர்களைப் பார்த்ததும் அவன் தனது கையைக் கீழே இறக்கியவன் கோபத்தினைக் கட்டுப்படுத்தும் வழி தெரியாது பேண்ட் பாக்கெட்டில் கையை விட்டபடி தனது முழு உயரத்திற்கும் அடங்காத காளை போன்று திமிறி கொண்டு நின்றான்... அவனது தாடை இறுக்கத்தில் தெரிந்தது அவனது கோபத்தின் அளவு...

அப்போது தான் அவன் தன் மனைவியவளை கவனித்தான்... அவள் பயத்தில் விழிகள் அகல சுவற்றில் பல்லி போல் ஒட்டி கொண்டு அமர்ந்திருந்தாள்... அவளது தோற்றம் கண்டு அவனது உதடுகளில் புன்னகை வந்தமர்ந்தது...

"தம்பி... சித்த நேரம் இருய்யா... சமைச்சிட்டு கூப்பிடறேன்..." என்ற காமாட்சி அம்மாள் கணவனை அழைத்துக் கொண்டு வீட்டினுள் சென்றார்...

விக்ரம் மனைவி புறம் திரும்பினான்...

"இவ்வளவு பயம் இருக்கிறவள் பேசும் போது வார்த்தையை யோசிச்சு விடணும்... இங்கே பார்... உனக்கு விருப்பம் இருக்கா இல்லையாங்கிறது எனக்கு முக்கியம் இல்லை... நீ என் கூட வரணும்... அது தான் இப்போ முக்கியம்..."

அதற்கு முறைத்தவளை கண்டு, "சும்மா சும்மா இப்படி முறைச்சுக்கிட்டு இருந்தேன்னு வை... உன்னைக்

குண்டுகட்டா தூக்கிட்டு போயிருவேன்..." என்றவன் அவளைத் தூக்குவதற்காக அருகில் வந்தான்...

"டோன்ட் டச் மீ..." என்று அடக்கப்பட்ட கோபத்தில் அவள் சீறினாள்... அவளது வார்த்தையில் அவனது கரங்கள் திகைப்புடன் அப்படியே நின்றது...

"குழந்தைக்காகத் தான் நீ என்னைத் தொட்ட... இப்போ அந்தக் குழந்தை வந்தாச்சு... இனி நீ என்னைத் தொட்டேன்னா உன்னைக் கொன்னுருவேன் கொன்னு..." என்று ஒரு விரல் நீட்டி அவள் மிரட்டியதை கண்டு அவன் திகைப்பு மறைந்தவனாய் வாய் விட்டுச் சிரித்தான்...

"எனக்குத் தொடணும்ன்னு தோணிச்சுன்னா உன்னை மட்டும் தான்டி தொடுவேன்... தேவையில்லாம இப்படி லூசுத்தனமா உளறாதே..."

"யார் லூசு...? நானா...? நீ, உன் குடும்பம் தான்டா லூசு..." கணவன் பேசியதன் அர்த்தம் கூட உணராதவளாய் அவள் அவனிடத்தில் எகிறினாள்...

"என்ன சொல்லியும் உன் வாய் அடங்குவதாய் இல்லையே... என்ன செய்யலாம்...?" என்று அவளது இதழை அழுத்தமாய்ப் பார்த்தவன் ஒரு நொடி சுற்றும் முற்றும் பார்த்தான்... யாருமில்லை... அதனால் தைரியமாக அவளின் அருகே வந்தவன் அவளது முகம் நோக்கி குனிந்தான்...

அவனது செய்கையில் தலையைப் பின்னுக்குச் சாய்த்தவள் விழிகளில் அச்சம் அப்பட்டமாய்த் தெரிந்தது... மனைவியின் அச்சம் அவனை ஒரு நொடி யோசிக்க வைத்தாலும் அவளது பேச்சு அதை மீற வைத்தது... அவளுக்குத் தான் யார் என்பதை அவளிடத்தில் வன்மையாய் பதிக்க நினைத்தது...

நொடி பொழுதில் மிக மிக அழுத்தமாய் அவளது இதழில் முத்திரை பதித்து நிமிர்ந்தவன், "இனி இது மாதிரி வாயடிச்ச இது தான் உனக்குப் பனிஷ்மென்ட்..." என்று

கன்னம் தட்டிய கணவனின் செயலில் அவளது விழிகள் வெறுமையைப் பிரதிபலித்தது... பட்டென்று அவள் அவனது கையைத் தட்டி விட்டாள்...

"இன்னும் இரண்டு மணி நேரம் தான் உனக்கு டைம்... அதுக்குள்ள கிளம்பி ரெடியாயிரு..." என்றவன் அவளை விட்டு விலகி சென்றான்...

தனது அலைப்பேசியை உயிர்ப்பித்துப் பயணத்திற்கு வேண்டிய ஏற்பாடுகளைச் செய்ய ஆரம்பித்தான்... அவளோ அவனை வெறித்துப் பார்த்தபடி அமர்ந்திருந்தாள்...

சிறிது நேரத்தில் காமாட்சி அவனை உணவு உண்ண அழைத்தார்...

"கண்ணு... போய் உன் புருசனுக்குப் பரிமாறு..." என்றவர் சிறியவர்களுக்குத் தனிமை கொடுத்து விட்டு தனது கணவரோடு திண்ணையில் அமர்ந்து பேசி கொண்டிருந்தார்...

பேண்ட் போட்டுக் கொண்டு தரையில் அமர முடியாமல் அவஸ்தையுடன் அமர்ந்திருந்த விக்ரமை கண்டு அவளுக்குச் சிரிப்பு வந்தது...ஆனால் சற்று முன் அவன் செய்த காரியம் நினைவிலாடி அவளை இறுக செய்ய மௌனமாய் உணவினை எடுத்து வைத்தாள்...

வாழையிலை போட்டு அதில் மல்லிகை பூ மாதிரி இருந்த இட்லியை வைத்து கோழி குழம்பை ஊற்றிய மனைவியைக் கண்டு அவன்,

"இப்படி அடக்க ஒடுக்கமாய் இருந்தால் எவ்வளவு நல்லா இருக்கு... ஆனா எனக்குத் தான் அந்தக் கொடுப்பினை இல்லையே..." என்று கிண்டலாய் கூறியவனைக் கண்டு அவள் கோபத்துடன் கரண்டியை கிண்ணத்தில் போட அதில் இருந்து தெறித்த குழம்பு அவனது கண்ணில் பட்டது...

"ஆ..." என்று சன்னமாய் அலறியவனைக் கண்டு அவள் மனம் பதறி போய் நிமிர்ந்து பார்ப்பதற்குள் அவன் கையை

உதறி விட்டு எழுந்து விட்டான்...

"பொண்ணாடி நீ... ராட்சசி..." என்று அவன் அடக்கப்பட்ட கோபத்தில் அவளைப் பார்த்துக் கத்தியதில் அவளது விழிகளில் விழிநீர் நிரம்பியது... அதை அவனுக்குக் காட்டாது அவள் தலையைக் குனிந்து கொண்டாள்...

"எல்லாத்தையும் நீயே கொட்டிக்கோ..." என்று கோபமாய் இரைந்தவன் முற்றத்தில் இருந்த அண்டாவில் இருந்து நீரை எடுத்துக் கண்ணைக் கழுவினான்...

காரம் பட்டதில் விழி அப்படி எரிந்தது... அதை விட அவனது மனம் அதிகக் கோபத்தில் கனன்றது...

பவித்ராவோ திக்பிரம்மை பிடித்தார் போன்று அப்படியே அமர்ந்து விட்டாள்... அவள் வேண்டும் என்றே அதைச் செய்யவில்லை... தெரியாமல் செய்த தவறிற்குக் கணவன் கோபம் கொண்டது அவளது மனதினை அன்னிச்சை மலராக வாட செய்தது...

அவள் மெல்ல எழுந்து விக்ரம் அருகே வந்தாள்... விழிகள் சிவக்க நின்றிருந்தவனைக் காண பரிதாபமாக இருந்த போதும் அதை வெளிப்படுத்திக் கொள்ள விரும்பாதவளாய் அவனிடம்,

"நம்மளுடைய சண்டை நம்மோடு... அவங்களை ஏன் வீணே மனசு கஷ்டப்பட வைக்க வேண்டும்...?"

அவளது பேச்சின் அர்த்தம் புரியாது அவன் புருவங்களை நெறித்தான்...

"நீ சாப்பிடலைன்னா காமாட்சியம்மா மனசு கஷ்டப்படுவாங்க... உனக்காகத் தான் பார்த்து பார்த்து சமைச்சிருக்காங்க..."

அதற்காகவா இல்லை மனைவியின் வார்த்தையில் இருந்த தன்மையாலா...? ஏதோ ஒன்றில் அவன் அமைதியாக உணவின் முன் வந்தமர்ந்தான்... இருந்தாலும் உண்ண அவனது மனம் இடம் கொடுக்கலை...

"ப்ளீஸ் சாப்பிடு விக்ரமா..."

அவளது குரலில் நிமிர்ந்து பார்த்தவன் ஒன்றும் பேசாது உணவினை உண்ண ஆரம்பித்தான்... அவள் எழுந்து முற்றத்தில் இருந்த தூண் அருகே வந்து சாய்ந்து அமர்ந்து கொண்டாள்... அங்கிருந்து பார்க்கும் போது விக்ரமின் முதுகு பகுதி தெரிந்தது... வெகு நேரம் அவனைப் பார்த்துக் கொண்டு அமர்ந்திருந்தாள்...

உணவு உண்டு விட்டு சென்ற பிறகும் விக்ரமின் கோபம் குறைவதாய் இல்லை... அதன் பிறகு அவன் அவளிடம் பேசவில்லை... காமாட்சி தான் அவளை உண்ண வைத்து அறிவுரை கூறிக் கொண்டிருந்தார்...

"ஆம்பள புள்ள அப்படி இப்படித் தான் இருக்கும் கண்ணு... நீ தான் அனுசரிச்சு போகணும்... ஆனா ராசாவை பார்த்தா அப்படியும் தெரியலை... தங்கமா தான் தெரியுது... எந்தக் கோபமா இருந்தாலும் அன்பா காட்டு... அமைதியா உணர்த்து... ஆம்பிளைங்களுக்குப் புரிய தாமதமாகும்... இப்ப இல்லாட்டியும் ஏதோ ஒரு சந்தர்ப்பத்தில் அவங்க மாறுவாங்க... என்ன சரியா கண்ணு..."

அதைக் கேட்டு அவள் மனதிற்குள் விரக்தியுடன் புன்னகைத்து கொண்டாள்...

"ஊருக்கு போனா எங்களை எல்லாம் மறந்துறாதே..." என்றவரை அவள் திடுக்கிடலுடன் பார்த்தாள்...

இங்கேயும் தான் தொடர்ந்து இருக்க முடியாத அவலநிலையை எண்ணி அவள் உள்ளம் குமைந்தாள்... ஆனால் வெளியில் அவரிடம் தலையசைத்து வைத்தாள்...

சிறிது நேரத்தில் தன்னுடன் கிளம்பிய மனைவியை ஆச்சிரியமாகப் பார்த்தான் விக்ரம்... அவன் வரவழைத்திருந்த கார் அவர்களுக்காகக் காத்திருந்தது...

"ராசா... பவி புள்ளைய பத்திரமா பார்த்துக்கோய்யா... பாவம், அதுக்கு மனசில் உள்ளதை வாய் விட்டு சொல்ல தெரியாது..."

அவர் கூறியதும் அவனது பார்வை மனைவியைப் பார்த்தது... 'அவளுக்கா பேச தெரியாது... அவள் பேசி நீங்க கேட்டது இல்லை... அதான் இப்படிச் சொல்றீங்க...' என்று நக்கலாய் நினைக்க வேறு செய்தான்...

"பவியைப் பத்திரமா பார்த்துக்கிட்டதுக்கு ரொம்ப நன்றி... எந்த நேரத்தில், எந்த உதவி வேண்டுமானாலும் என் கிட்ட தயங்காம கேளுங்க..." என்று கை கூப்பி நன்றி தெரிவித்தவன் தனது முகவரி அட்டையை அவரிடத்தில் கொடுத்தான்...

"காமாட்சியம்மா... நான் ஒரு பிசினஸ் ஆரம்பிக்கப் போகிறேன்... அதில் நீங்க தான் என்னோட பார்ட்னர்..." என்ற பவித்ராவை கண்டு காமாட்சி மட்டுமல்லாது விக்ரம் கூடச் சிரித்து விட்டான்...

'அடேங்கப்பா... பெரிய பிசினஸ் பார்ட்டனர் தான்...' என்று நினைத்தபடி தோளை குலுக்கி உதட்டை அவன் பிதுக்கிய விதத்தில் அவள் அவனைக் கண்டு முறைத்தாள்...

"இது உனக்குத் தேவையில்லாத விசயம்..." என்று அவள் சீற...

"ஓகே ஓகே... சரண்டர்..." என்று சிரித்தபடி இரு கைகளையும் தூக்கியவன் அங்கிருந்து அகல...

அவன் சரணடைந்த விதத்தில் அவள் அவனை வெறித்துப் பார்த்தாள்...

ஒருவாறு அவர்களிடம் விடை பெற்று இருவரும் காரிலேறினர்... கார் நகரத்தை நோக்கி பறக்க துவங்கியது...

"வலுக்கட்டாயமா என்னைக் கூட்டிட்டு போகிற... நான் இன்னொரு முறை காணாமல் போக மாட்டேன்னு என்ன நிச்சயம்...?" மீண்டும் அவனை விட்டு விலகி விடும் தீவிரம் அவளது வார்த்தையில் தெரிந்தது...

"இன்னொரு முறை நீ காணாமல் போனால் இதே போல் கண்டுபிடித்து உன்னைத் தூக்கிட்டு போவேன்..." என்று நக்கலாய் கூறியவன்,

"இனி அது போல் நடக்க நான் விட மாட்டேன்..." என்றான் உறுதியான குரலில்...

ஓட்டுநர் இருந்ததால் இருவரும் தாழ்ந்த குரலிலேயே பேசி கொண்டனர்...

"நான் வேண்டாம்ன்னு தானே நீ என்னை வீட்டை விட்டு துரத்தின... அப்படிப்பட்ட நீ இப்போது வருந்தி வருந்தி அழைப்பதை பார்க்கும் போது வேடிக்கையாக இருக்கிறது..." என்ற கேலி குரலில் கூறியவளை அவன் உறுத்து விழித்தான்...

"எல்லாம் குழந்தைக்காகத் தானா...?" அவள் கூறிய போது அவனது பார்வையில் வெறுமை வந்தது...

"ஆமாம்டி... எனக்கு உன்னை விட என் குழந்தை தான் முக்கியம்... அதைப் பெத்து கொடுத்துட்டு நீ எங்கே போகிறதா இருந்தாலும் போய்த் தொலை..." என்று சிடுசிடுத்தவன் மேலே பேச பிடிக்காதவனாய் விழி மூடி இருக்கையில் சாய்ந்து கொண்டான்... அவள் விழிகளில் நீர் நிறைய ஜன்னல் வழியே வேடிக்கை பார்க்கலானாள்...

விமானம் மூலம் இருவரும் சென்னை வந்தடைந்த போது மதியமாகி இருந்தது... வீட்டு வளாகத்தினுள் கார் நுழைந்த போது பவித்ராவின் மனம் வேதனையில் ஆழ்ந்தது... பெண்களுக்கே இது தான் சாபமா...? பிடித்தமில்லாத வீடு, பிடித்தமில்லாத வாழ்வு, பிடித்தமில்லாத கணவன்... எதுவுமே அவளுக்குப் பிடிக்கவில்லை... அப்படியே வாயிலோடு ஓடி போக வேண்டும் போலிருந்தது அவளுக்கு...

"வா..."

அவள் பக்க கார் கதவை திறந்து விட்டபடி விக்ரம் அழைத்ததில் அவள் அவனை ஏறிட்டு பார்த்தாள்... பின்

மெதுவே அவள் காரை விட்டு இறங்கினாள்... விக்ரம் மனைவியைக் கைப்பிடித்து அழைத்துச் சென்றான்... இதே விக்ரம் திருமண நாளின் போது கண்டு கொள்ளாது சென்றது அவளது நினைவில் எழுந்தது... அன்று போல் தான் இன்றும் அவன் அவளைக் கண்டு கொள்ளவில்லை... ஆனால் அவனது கரம் அவளது கரத்தை இறுக பற்றியிருந்தது அது தான் வித்தியாசம்... ஏதோ ஒரு உள்ளுணர்வு உந்த அவள் அவன் பின்னே சென்றாள்...

"வாம்மா பவி..." முகம் நிறையப் புன்னகையுடன் ரேவதி ஆரத்தி கரைத்து இருவரையும் வரவேற்றார்...

"அத்தை..." என்று அவரைக் கண்டதும் அவள் அணைத்து கொண்டாள்... விழிகள் கலங்கிய போதும் விழிநீரை உள்ளிழுத்து கொண்டாள்...

"நீ யாரை மறந்தாலும் இந்த அத்தையை மறந்து போகலாமா...? உனக்கு என் நினைப்பு வரலையா...?"

"வந்தது அத்தை... ஆனா நீங்க இங்கே இல்லையே... துபாயில் இருந்தீங்களே..."

இதுவரை தனது வருத்தத்தில் இருந்தவர் அவள் கூறியது கேட்டு திடுக்கிட்டுப் போய்ப் பார்த்தார்...

"என்னைத் தேடினியா பவி..."

"ம்... ம்... ம்..." என்று தலையசைத்தவளுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது...

அன்னை மற்றும் மனைவியின் பாச பிணைப்பை ஆச்சிரியத்துடன் பார்த்தபடி நின்றிருந்தான் விக்ரம்... தன்னிடம் கூடத் தன் மனைவி இப்படி நடந்து கொள்ள மாட்டேங்கிறாளே என்று அவனுக்குச் சிறிது பொறாமையாக இருந்தது...

"போதும்மா... அவளை உள்ளே கூட்டிட்டு போங்க..." என்று அவன் சிரித்தபடி அன்னையிடம் கூற...

"உனக்குப் பொறாமைடா..." மகனிடம் கேலியாய் உரைத்த ரேவதி மருமகளை உள்ளே அழைத்துச் சென்றார்...

அங்கு வரவேற்பறையில் இரு குடும்பமும் திரண்டு இருந்தது... அத்தனை பேர் இருந்த போதும் அவளது விழிகள் தனது தங்கையைத் தான் முதலில் தேடியது... கழுத்தில் புத்தம் புது மஞ்சள் கயிறுடன் புது மணப்பெண்ணாய் நின்றிருந்த தங்கையைக் கண்டதும் இரும்பு பெண்ணான அவள் சிறிது தடுமாறி தான் போனாள்...

அவளுக்கு மயக்கம் வருவது போல் இருந்தது... சட்டென்று அருகில் நின்றிருந்தவரை ஆதாரத்திற்குப் பிடித்துக் கொண்டாள்... அது அவளது கணவன் என்கிற உணர்வு கூட அவளுக்கு இல்லை...

"பவி... என்ன செய்யுது...?" பரிவுடன் கேட்ட கணவனது குரலில் அவனை ஏறிட்டு பார்த்தவள் தீச்சுட்டார் போன்று அவனை விட்டு விலகி நின்றாள்...

அதில் அவன் யோசனையாய் அவளைப் பார்த்தான்... சிறிது கோபம் கூட அவனுக்கு வந்தது...

"ம்க்கும்... ஓடி போனவளுக்கு இத்தனை ராஜமரியாதை அவசியம் தேவை தான்... இவள் வயிற்றில் வளர்றது நம் வீட்டு வாரிசா...? இல்லை...?" என்று நயவஞ்சக குரலில் இழுத்த சௌந்தர்யாவை கண்டு எல்லோரும் அதிர்ந்து போயினர்...

பவித்ராவோ கோபத்துடன் அவரைப் பார்த்தாள்...

"பெரியம்மா... நீங்க என் மனைவியைக் களங்கப்படுத்தலை... அவளோடு என்னையும் சேர்த்து களங்கப்படுத்துறீங்க... அப்போ உங்க மகனாகிய நான் ஆண்மகன் இல்லைன்னு நீங்க சொல்றீங்களா...?"

முகத்தில் அடித்தார் போன்று வார்த்தைகளால் அவரைச் சாடினான் விக்ரம்... கணவனது வார்த்தைகளில் பவித்ரா வியப்பாய் அவனைப் பார்த்தாள்... முதன்முறையாக அவன்

அவளுக்குப் பரிந்து பேசியிருக்கிறான்... அதில் அவனது சுயநலமும் அடங்கி இருப்பதை உணர்ந்தவளாய் தனது வியப்பை அடக்கியபடி வேடிக்கை பார்க்கலானாள்...

"பவித்ரா என் மனைவி... அவள் வயிற்றில் வளருவது என் குழந்தை... அவளுக்கும் எனக்கும் நிறைய விசயங்களில் முரண்பாடுகள் இருக்கலாம்... ஆனால் இந்த விசயத்தில் பவித்ரா அவளது பெயர் போன்று பவித்ரமானவள்... நெருப்பைப் போன்றவள்... எனக்கு அவளைப் பத்தி நல்லா தெரியும்..." என்றான் ஆணித்தரமான குரலில்... கணவனின் வார்த்தையில் அவளது அலைப்புற்றிருந்த மனம் அமைதி அடைந்தது...

"சௌந்தர்யா கொஞ்ச நேரம் வாயை மூடு..." இராமநாதன் மருமகளை அதட்டினார்...

"அவங்களை ஏன் சத்தம் போடுற இராமநாதா...? ஊர் வாய் இப்படித் தானே பேசுது... எல்லாம் இவளால் வந்தது... வீட்டை விட்டு ஓடி போகும் அளவுக்கு இங்கே என்ன நடந்து போச்சு...?" கோபத்துடன் கேட்டபடி திருவேங்கடம் பேத்தியை அடிக்கப் போனார்...

அவள் வீட்டுப் பெண்கள் திகைத்து போய் அழுதபடி நின்றிருந்தனர்... பெரியவரை எதிர்த்து அவர்களால் பவித்ராவிடம் உறவாட முடியவில்லை...

விக்ரம் அவரது கைப்பிடித்துத் தடுத்து நிறுத்தியவன், "பவித்ரா உங்க பேத்தியா இருந்த போது உங்களுக்கு அடிக்க உரிமை இருந்தது... ஆனால் இப்போது அவள் என் மனைவி... அவளை அடிக்கவோ, பேசவோ உங்களுக்கு எந்த உரிமையும் இல்லை..."

"இதை நீ அவளை வீட்டை விட்டு அனுப்பும் போது யோசிச்சு இருக்கணும்..."

அதில் முகம் கன்றி போனவனாய் அவன் மனைவியைத் திரும்பி பார்த்தான்... அன்றைய நாளின் அவமானம்

இருவரின் மனதிலும் படமாய் ஓடியது... முதலில் சுதாரித்துக் கொண்ட விக்ரம்,

"நான் செய்த தவறை நானே சரி செய்து விட்டேன்... அதான் நானே அவளை அழைத்து வந்து விட்டதைக் கூறினேன்... இனி எங்கள் வாழ்வில் நீங்க யாரும் தலையிட வேண்டாம்..."

"அது எப்படி முடியும்...? பவி எங்கள் வீட்டு பெண்..."

அதில் அவரை நிமிர்ந்து பார்த்தவன், "அவள் வீட்டை விட்டுப் போயிருந்த இந்த ஒரு மாதமாய்த் தோன்றாத உறவு, உரிமை இப்போது ஏன் தோன்றுகிறது...?"

அவனது கேள்வி அவரைக் குத்தீட்டியாய்க் குத்தியது...

"அந்தளவுக்கு உங்களுக்கு உங்க கௌரவம் முக்கியமாப் போச்சு இல்லையா... வீட்டை விட்டு போனவள் அப்படியே தொலைஞ்சு போகட்டும்ன்னு கை கழுவி விட்டுட்டீங்க... அப்படிப்பட்ட நீங்க இப்போ என்ன புதுசா டயலாக் விடுறீங்க...?" என்று அவரிடம் குத்தலாய் கேள்வி கேட்டவன் அன்னையிடம்,

"பவியை உள்ளே கூட்டிட்டு போங்கம்மா... யார் கேள்வி கேட்கிறாங்கன்னு நானும் பார்க்கிறேன்..."

தனது வீட்டுப் பெண்களைப் பார்த்தபடி பவித்ரா ரேவதியுடன் உள்ளே சென்றாள்... உடன் பல்லவியும்... ரேவதி தனது அறைக்கு மருமகளை அழைத்து வந்தார்... அங்கு வந்த அடுத்த நொடி பல்லவி தனது சகோதரியை அணைத்துக் கொண்டு,

"அக்கா..." என்று கதறினாள்...

தங்கையை ஆறுதலாய் அணைத்து கொண்டவள், "எப்போ கல்யாணம் நடந்தது...?" என்று கேட்டவளின் குரல் நடுங்கியது...

"ஐஞ்சு நாளாச்சு..." அழுகையுடனே அவள் கூறினாள்...

அதைக் கேட்டு பெரியவள் மனம் கனத்துப் போனது... புது மனைவியுடன் சந்தோசமாய் வாழ்ந்து கொண்டு அங்கே தன்னைத் தேடி வந்து இரட்டை வேடம் போடும் கணவனைக் கண்டு அவளுக்கு அப்படியே கசந்தது... சற்று முன் அவளுக்காக அவன் பரிந்து பேசியது எல்லாம் பின்னால் சென்று விட்டது...

"பல்லவி... வந்திருக்கிறவங்களைப் போய்க் கவனிம்மா..." ரேவதி சொல்லவும் அவள் அக்காவை விட்டு விலகினாள்...

"பல்லவி... இங்கே வா..." என்று அவளை அழைத்தவர் அவளது அழுத விழிகளைத் தாய்மை உணர்வோடு துடைத்து விட்டவர்,

"இப்போ போ..." என்றார்...

இப்போது அவரது செயல் கூடப் பவித்ராவின் மனதினை கூறு போட்டது... என்ன இருந்தாலும் அவர் அவளுக்கு மாமியார் தானே... அதனால் தான் மகனின் இரண்டாவது மனைவியை அக்கறையாய் பார்த்து கொள்கிறார் போலும்...

"இப்போ எத்தனை மாசம்மா...?" பரிவுடன் கேட்டவரிடம் முகம் திருப்ப மனமில்லாது,

"இரண்டரை மாதம்..."

"ரொம்பச் சந்தோசமா இருக்குப் பவி... நான் கும்பிட்ட கடவுள் என்னைக் கை விடலை..." என்று மகிழ்ந்தவரை அவள் உணர்விலாது பார்த்தாள்...

அதற்குள் அவளது பாட்டி, அன்னை, சித்தி மூவரும் அங்கு வந்தனர்... அவர்களுக்குத் தனிமை கொடுத்து ரேவதி வெளியில் சென்று விட்டார்...

"பவி எப்படி இருக்க...?"

"ஏன்டி எங்களை எல்லாம் விட்டு போன...?"

"இப்போ உடம்பு எப்படி இருக்கு பவி...?"

மாற்றி மாற்றி மூவரும் கேள்விகள் கேட்ட போதும் அவள் வாய் திறக்காது இறுகி போய் அமர்ந்திருந்தாள்... அவளை வாய் திறக்க முயற்சித்து அதில் பலனின்றித் தோல்வியுடன் அவர்கள் கிளம்பி சென்றனர்...

அன்று முழுவதும் பவித்ரா ரேவதியின் அறையில் இருந்து கொண்டாள்... மறந்தும் அவர்களது அறைக்குச் செல்லவில்லை... யாரையும் பார்க்க விரும்பவில்லை... அத்தனை பயமாக இருந்தது அவளுக்கு...

இரவு வந்ததும் விக்ரம் மனைவியைத் தேடி வந்தவன் அன்னையுடன் அவள் பேசி கொண்டிருப்பதைக் கண்டு அவர்கள் அருகில் வந்தான்...

"விக்ரம்... நாளைக்குப் பவியை ஹாஸ்பிட்டலில் காட்டணும்ப்பா..."

"சரிம்மா... அப்பாயிண்ட்மென்ட் போடுறேன்... நீங்க கூட்டிட்டு போங்க..."

"நீ தான்டா உன் பொண்டாட்டியை கூட்டிட்டு போகணும்... நானில்லை..."

"என்னால் முடியாது... எனக்கு முக்கியமான வேலையிருக்கு..." என்று அவன் மறுக்க...

"அத்தை... நீங்க மட்டும் வந்தால் போதும்..." என்றாள் அவளும் கோபமாய்...

"உங்க மருமகளே சொல்லிட்டாள்... பிறகு என்ன...? நாளைக்கு அவளைக் கூட்டிட்டு போயிட்டு வந்திருங்க..." என்றவன் மனைவியைப் பார்த்து,

"அம்மா தூங்க வேண்டாமா...? வா, நம்ம ரூமுக்கு போகலாம்..."

"இல்லை... நான் அங்கே வரலை..." என்றாள் அவள் அவசரமாக...

"அம்மா... இதை எல்லாம் நீங்க என்னன்னு கேட்கிறது இல்லையா..." என்று மகன் அன்னையிடம் புகார் வாசிக்க... அவர் சிரித்தபடி,

"பவி... உங்க ரூமுக்கு போம்மா..." என்க...

அதற்கு மேல் சிறு பிள்ளை போல் அடம்பிடிக்க வழியில்லாது கணவனுடன் சென்றாள்... அறைக்குள் நுழையும் போது அவளது கால்கள் அத்தனை தயங்கியது... மனமோ அருவருத்துப் போனது...

ஆனால் அவள் பயந்தது போல் அங்கு யாருமில்லை... சுற்றும் முற்றும் பார்த்தவள்,

"பல்லவி எங்கே...?"

அதில் அவன் யோசனையாய் அவளைப் பார்த்தான்... அடுத்த நொடி அவன் முகம் மலர அவளைச் சீண்டி பார்க்கும் நோக்கத்துடன்,

"இரு மனைவிகளை ஒரே அறையில் வைத்துக் குடும்பம் நடத்தும் அளவுக்கு நான் பரந்த மனம் கொண்டவன் இல்லை..." என்று கேலி போல் உரைத்தவன்,

"உன் தங்கை அவளது ரூமில் இருக்கிறாள்..."

அவன் கூறியது கேட்டு அவள் முகம் கூம்பியவளாய் எப்போதும் அவள் அமரும் இடத்தில் தரையில் அமர்ந்தவள் முழங்காலில் முகம் கவிழ்ந்து கொண்டாள்... எதுவுமே யோசிக்க முடியாதபடி அவளது மனம் மரத்துப் போயிருந்தது... இத்தகைய இழிநிலை தனக்குத் தேவை தானா என்று...?

அப்போது விக்ரமின் கரங்கள் அவளை அலேக்காகத் தூக்கியது...

"டேய் விடுடா..." என்று திமிறியபடி அவள் அவனை அடிக்க...

"பேசாம இருக்கப் போறியா... இல்லை அடிக்கிற கையைக் கடிச்சு வைக்கவா..." என்று அவன் அவளை மிரட்ட... அப்படி

எதுவும் செய்து விடுவானோ என்ற பயத்தில் அவள் அடிப்பதை கை விட்டாலும் திமிறுவதைக் கை விடவில்லை...

"விடுடா..."

"இதோ விட்டுட்டேன்..." என்றவன் படுக்கையில் அவளைப் படுக்க வைத்தான்...

அடுத்த நொடி தீச்சுட்டார் போன்று அதிலிருந்து எழுந்தாள் அவள்...

"அம்மா பரதேவதையே... உன் அதிரடியை எல்லாம் நான் தாங்குவேன்... என் குழந்தை தாங்காது... அதனால் இனியாவது பொண்ணா லட்சணமா அடக்கமா இருக்கப் பழகு..." என்று அதற்கும் அவன் அவளுக்கு வார்த்தையால் கொட்டு வைத்து விட்டு,

"இப்போ என்ன நடந்து போச்சுன்னு இப்படிக் குதிக்கிற...?" என்று புரியாதவன் போல் கேட்டு வைத்தான்...

"இன்னும் என்ன நடக்கணும்...?" என்றவள் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்...

அவளது முகத் திருப்பல், செய்கை இதன் அர்த்தம் அவனுக்குப் புரிந்ததோ... அவனது முகத்தில் புன்னகையின் சாயல்... அவள் அருகில் வந்தவன்,

"பல்லவி அவள் அறையில் இருக்கிறாள்..." என்று கூற... அதற்கு அவள் அவனை முறைத்து பார்த்தாள்...

"கூடவே அவளது கணவன் வினோத்தும் இருக்கிறான்..." என்று கூறிய விக்ரமின் முகத்தில் அப்படி ஒரு விசம சிரிப்பு இருந்தது...

மொழி பேசும்...!!!

## விழி : 11

விக்ரமின் வார்த்தையில் பவித்ரா என்ன மாதிரியாக உணர்ந்தாள் என்று அவளுக்கே தெரியாது... இத்தனை நாட்களாக அவளது மனதில் இருந்த தவிப்பு எல்லாம் இன்று அப்படியே அடங்கி விட்டது... அப்படி ஒரு நிம்மதி அவளது மனதில்... நிற்க முடியாமல் கால்கள் துவள அவள் அப்படியே கட்டிலில் அமர்ந்தாள்... அவளது ஒவ்வொரு அசைவையும் கவனித்துக் கொண்டிருந்த விக்ரமிற்கு அப்படி ஒரு சிரிப்புப் பொங்கியது... ஆனால் சிரிக்காது வாய்க்குள் அடக்கி கொண்டான்...

"சண்டிராணி என்ன சரவெடி சத்தத்தைக் காணோம்...?" என்றான் கேலி குரலில்...

அவனது கேலியில் இயல்புக்கு திரும்பியவள் கணவனை ஏறிட்டு பார்த்து முறைத்தாள்... அதைக் கண்டு அவனது முகம் சிரிப்பை விடுத்து யோசனையைத் தத்தெடுத்தது...

"என் வாழ்க்கையை அழித்தது போதாதுன்னு இப்போ என் தங்கை வாழ்க்கையையும் அழித்தாகி விட்டதா...? ரொம்ப நல்லது..." என்று இளக்காரம் போல் குத்தி காட்டியவளை கண்டு அவனுள் கோபம் எழுந்தது...

"உன் வாழ்க்கையோடு சேர்ந்து என் வாழ்க்கையும் தான் அழிந்து போனது... என்னமோ உன் வாழ்க்கை மட்டும் அழிந்து போன மாதிரி எதுக்கு இத்தனை வெட்டி சீன்...?" என்றான் அவனும் எரிச்சலான குரலில்...

"ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் இருக்கிறது..." என்று கூறியவளை கண்டு அவனது புன்னகை மீண்டது...

"இப்போ சொன்ன பார்... இது ஒத்துக் கொள்ள வேண்டிய விசயம்... இதைத் தான் நானும் சொல்கிறேன்... எங்கே நீ கேட்டால் தானே..." என்று அவன் வார்த்தைகளால் அவளுக்குக் கொட்டு வைத்தான்...

அவன் கூறிய வார்த்தைகளில் இருந்த நிதர்சனம் அவளது மனதினை சுட அவளால் பேச முடியவில்லை...

அமைதியானாள்...

"பல்லவி சின்னப் பெண்... அவள் என்னைப் போல் கிடையாது..." என்றவளின் குரல் சுருதி இறங்கி ஒலித்தது...

விக்ரமை போல் வினோத் இருந்தால்...? பூஞ்சிட்டு போன்று சிறகடித்துப் பறக்கும் பல்லவியால் அதைத் தாங்கி கொள்ள முடியுமா...? வலிமையான மனம் கொண்ட அவளாலேயே கணவனின் செயலை இன்னமும் ஜீரணிக்க முடியவில்லை... ஏற்றுக் கொள்ள முடியவில்லை... தங்கையை நினைத்து அவளுக்குப் பெருத்த கவலையாக இருந்தது...

"இருபத்தியொரு வயது ஒண்ணும் சின்னப் பெண் கிடையாது..." என்று கூறியவனை முறைத்து பார்த்தவள்,

"எப்படி இந்தக் கல்யாணம் நடந்தது...?"

"இதை நாளைக்கு உன் தங்கையிடம் கேள்... இப்போ எனக்குத் தூக்கம் வருகிறது..." என்று கூறியவன் கட்டிலின் மறுபக்கம் வந்து படுத்துக் கொள்ள... அவனது செய்கையில் அவள் பதறி போய் எழுந்தாள்...

"இப்போ எதுக்கு எழுந்துக்கிற...?பேசாம படு..." என்று அவன் அவளை அதட்டினான்...

பவித்ரா பதில் பேசாது கீழே போர்வையை விரித்துப் படுக்க ஆயத்தமான போது விக்ரமின் கோபம் அதிகரித்தது... தான் இத்தனை சொல்லியும் இது என்ன பிடிவாதம் என்பது போல் கோபத்துடன் எழுந்து அவள் அருகில் வந்தவன் அவளது கைகளைப் பிடித்துத் தடுத்தான்...

"ஒழுங்கா கட்டிலில் வந்து படு..." என்றான் அடக்கப்பட்ட கோபத்தில்...

"இத்தனை மாதங்களாய் நான் கீழே தான் படுத்திருந்தேன்... இப்போ மட்டும் என்ன புதுசா...?" என்றாள் அவள் அவனது முகம் பார்க்காது...

அதைக் கேட்டு அவனது முகம் அவமானத்தில் கன்றிப் போனது... ஆனாலும் சுதாரித்துக் கொண்டவனாய்,

"அப்போ நீ மட்டும் தனியே இருந்த... இப்போ என் குழந்தை உன் வயித்தில் இருக்கிறதே..." என்றவனைத் திரும்பி பார்த்தவள் விழிகள் வெறுமையைப் பிரதிபலித்தது...

"குழந்தைக்காக ஒண்ணும் அக்கறை தேவையில்லை... இது என் குழந்தை... உன் குழந்தை இல்லை..."

"நான் இல்லாமல் உனக்கு இந்தக் குழந்தை எப்படி வந்தது...? இனி இது போல் அபத்தமா பேசாதே... நீயா வந்து படுத்தால் நான் நல்லவனா தள்ளி படுத்துக்குவேன்... இதே இது நான் உன்னைத் தூக்கிக்கிட்டுப் போய்ப் படுக்க வச்சால் உன்னைக் கட்டி பிடிச்சிட்டுப் படுப்பேன்... வசதி எப்படி...?" என்றவன் மனைவியை மேலும் கீழும் நக்கலாய் பார்த்து வைத்தான்...

'பார்வையைப் பார்... அச்சு அசல் வில்லனே தான்...' என்று நினைத்தவளுக்கு அவன் வில்லனாய் மாறி தனது பெண்மையைக் களவாண்ட கணங்கள் மனதில் தோன்றி அவளை வெறுப்பாய் முகத்தைத் திருப்ப வைத்தது...

"வெறும் பேச்சு வார்த்தை வேலைக்காகாது..." என்றவன் அவள் அருகில் நெருங்கி வர...

அவனைப் பற்றி நன்கு தெரிந்தவளாய் அவனது கைகளைத் தடுத்து, "வந்து தொலைக்கிறேன்..." என்று சிடுசிடுத்தபடி படுக்கையில் ஒரு பக்கம் வந்து படுத்தாள்...

மறுபக்கம் விக்ரம் வந்து படுத்தான்... அவன் படுத்ததும் அவள் முதுகு காட்டி கொண்டு திரும்பி படுக்க... அதைக் கண்டு அவனுக்குக் கோபம் வரவில்லை... மாறாகப் புன்னகை தோன்றியது... இத்தனை நாளாய் அவனது மனதில் இருந்து விடைப்பெற்றுச் சென்றிருந்த நிம்மதி இப்போது அவனிடத்தில் அளவுக்கு அதிகமாய்... நிம்மதியான ஆழ்ந்த தூக்கம் அவனைத் தேடி வந்து தழுவி கொண்டது...

பவித்ராவோ உறக்கம் வராது தவித்தாள்... அவளது கவலையுடன் இப்போது தங்கையின் கவலை வேறு சேர்ந்து கொண்டது... எப்போதுடா பொழுது விடியும் என்று காத்திருந்தாள்...

அதே நேரம் பல்லவி அப்போது தான் தங்களது அறைக்குள் நுழைந்தாள்... அதுவரை அவள் ரேவதியுடன் ஒட்டி கொண்டு அவரோடு சேர்ந்து வேலைகளைப் பார்த்தவள் அவர் தூங்க சென்றதும் வேறுவழி இல்லாது இங்கு வந்தாள்...

வினோத் அறையில் இல்லை... அவளுக்குத் தெரியும் அவன் பால்கனியில் இருக்கிறான் என்று... கடந்த ஐந்து நாட்களாக அது தானே நடந்து கொண்டு இருக்கிறது... அவள் அறையில் இருக்கும் நேரம் அவன் அங்கு இருப்பதில்லை... வரவும் மாட்டான்... காலையில் எப்போது எழுகிறான்...? இரவு எப்போது தூங்குகிறான்...? இப்படி எதுவுமே அவனைப் பற்றி அவளுக்குத் தெரியாது...

ஆனாலும் அவன் அவளுக்குக் கணவன்... இது என்ன மாதிரியான விசித்திரமான திருமணப் பந்தம் என்று அவளுக்குத் தோன்றியது...

அதே நேரம் வினோத்தும் பல்லவியைப் பற்றித் தான் சிந்தித்துக் கொண்டிருந்தான்... சூழ்நிலை காரணமாக வேறுவழி இல்லாது நடந்த திருமணம் அவர்களுடையது... அவனுக்கு மனைவி மீது காதலும் இல்லை... அது போல் வெறுப்பும் இல்லை... அதே சமயம் மனைவியிடத்தில் கணவன் என்கிற உரிமையை நிலைநாட்டிட மனமும் வரவில்லை...

விக்ரம், பவித்ரா போன்று இவர்களுக்கு இடையில் பெரிதாய் பகை கிடையாது... எதிரி வீட்டுப் பிள்ளைகள் என்கிற நினைவு மட்டுமே... ஆனால் விக்ரம், பவித்ரா அப்படியில்லை... தொழிலிலும் நேருக்கு நேர் மோதி கொள்ளும் எதிரிகள்... அதனால் தான் அவர்களது வாழ்க்கையும் ஏட்டிக்கு போட்டியாய் அமைந்து விட்டது...

அதிலும் பல்லவி தனது அக்காவை கட்டி கொண்டு அழுதது வினோத்தின் மனதில் பெரும் சூறாவளியாய்... மனைவியின் அழுகைக்குத் தானும் ஒரு காரணமாகி விட்டோமோ என்று மனதில் சிறு உறுத்தல் எழுந்தது... அவன் தைரியமானவன் தான்... ஆனாலும் தாத்தாவின் பேச்சுக்கு எதிர் பேச்சு பேச அவனால் முடியவில்லை...

"உன் அண்ணங்காரன் தான் என் மானத்தை வாங்கி விட்டான்... நீயாவது என் மானத்தை வாங்காது சொன்ன பேச்சு கேட்டு நடப்பாய் என்று நம்புகிறேன்... குறித்த நாளில், குறித்த நேரத்தில் இந்தக் கல்யாணம் நடந்தே ஆகணும்... நீ பல்லவி கழுத்தில் தாலி கட்டி இந்தக் குடும்ப மானத்தைக் காப்பாத்து... இல்லை திருவேங்கடம் முன் என்னால் தலை நிமிர்ந்து நிற்க முடியாது..."

தாத்தா இராமநாதனின் பேச்சை அவனால் தட்ட முடியவில்லை...

இராமநாதனின் இந்த முடிவை திருவேங்கடமும் வரவேற்றார்... அவருக்கும் விக்ரமின் மறுப்பால் சொந்த பந்தயங்களின் முன் வீண் தலைகுனிவு... அதனால் இதற்கு முழுச் சம்மதம் தெரிவித்தார்... அதன் பின் வினோத், பல்லவி திருமணம் மிகவும் எளிதாக நடந்து முடிந்து விட்டது...

பெரியவர்களுக்கு என்ன மிக எளிதாகத் திருமணத்தை நடத்தி முடித்து விட்டனர்... மீதம் இருக்கும் வாழ்க்கையை அவர்கள் அல்லவா சேர்ந்து கடக்க வேண்டும்... முதலிரவு அன்று பல்லவியை நேருக்கு நேர் சந்திக்க இயலாது பால்கனியில் தஞ்சம் புகுந்த வினோத்தின் நிலை இன்று வரை அப்படியே தொடர்கிறது...

எப்படி வாழ்க்கையை ஆரம்பிப்பது என்று அவனுக்கு மிகவும் குழப்பமாக இருந்தது... அதே போன்றதொரு குழப்பம் தான் பல்லவிக்கும்... இருவருக்கும் மனம் ஒட்டாததால் வாழ்க்கையும் ஒட்டவில்லை...

மறுநாள் காலையில் விக்ரம் எழுந்த போது பவித்ராவின் முகம் அவன் முகத்தருகில்... ஆச்சிரியமாக விழி விரித்தவன் அப்போது தான் அதை உணர்ந்தான்... அவன் தான் உறக்க கலக்கத்தில் அவள் பக்கம் வந்திருந்தான்...

'இது மட்டும் இவளுக்குத் தெரிஞ்சது அவ்வளவு தான்... விக்ரம், சத்தம் செய்யாம நல்ல பிள்ளையாய் விலகி படுடா...'

அவனது மூளை அவனை எச்சரிக்கை செய்யும் போதே அவனது மனைவியவள் கண் விழித்துப் பார்த்தாள்...

'செத்தேடா விக்ரம்...' என்று அவன் மனதிற்குள் அலறியபடி பட்டென்று விழிகளை மூடி கொண்டான்...

என்னே அதிசயம்...! பவித்ரா தூக்க கலக்கத்தில் அவனது கழுத்தை கட்டி கொண்டு உறக்கத்தினைத் தொடர்ந்தாள்... அதில் ஆச்சிரியமாய் விழிகளைத் திறந்து பார்த்தான் விக்ரம்... அவனது முகத்தோடு முகம் வைத்து புன்னகையுடன் உறங்கி கொண்டு இருந்தவளை காண காண அவனுள் கணவன் விக்ரம் சிலிர்த்து எழுந்தான்...

அடுத்தக் கணம் தனது மனதினை கட்டுப்படுத்த இயலாது அவளது இதழில் அவன் கவி பாட ஆரம்பித்தான்... கவிதை முற்று பெற விடாது தடுத்தாள் விழித்து எழுந்த அவனது மனைவியவள்...

"ம்... ம்..." என்றபடி திமிறியவளை கண்டு கொள்ளாதவனாய் அவன் இதழொற்றலில் மூழ்கி போனான்... கிட்டத்தட்ட ஒரு மாத காலமாய்க் கிடைக்காத அமிர்தம்... அதை அவன் அவ்வளவு எளிதில் விட்டு விடத் தயாராக இல்லை...

இதழொற்றல் முடிந்து அவன் விலகிய போது, "ச்சீ... நீ மனுசனே இல்லை விக்ரம்..." என்று அவள் பாம்பாய் சீறினாள்...

அதைக் கேட்டு அவனுள்ளும் கோபம் முகிழ்த்தது... ஆனாலும் அவன் அமைதி காத்தான்... மனைவியின்

வார்த்தையை வைத்து அவளை மடக்கா விட்டால் அவன் நல்ல ஆண்மகன் இல்லையே...

"ஆமாம் நீ சொல்வது உண்மை தான்..." என்று உடனே ஒத்துக் கொண்டான் நல்ல பிள்ளையாக...

அதைக் கேட்டவள் விழிகள் இடுங்க அவனைக் கூர்மையாய் உறுத்து விழித்தாள்...

"நீ எனக்குச் செய்த அவமானத்தை மறந்து உன்னைத் தேடி கண்டு பிடிச்சு கூட்டிட்டு வந்திருக்கிறேனே... மனித பிறவியாக இருந்திருந்தால் உன்னைப் பழிவாங்கி இருப்பேன்... தெய்வப்பிறவியாக இருக்கப் போய்த் தான் நான் இதைச் செய்திருக்கிறேன்..." என்றான் சிறிதும் அலட்டி கொள்ளாது அமர்த்தலான குரலில்...

"நீ என்னை அவமானப்படுத்தியதை விடவா...?"

அவளுக்கு ஆற்றாமையாக இருந்தது... ஆறு மாத காலமாக அவளது விருப்பமின்றி அவளைச் சுகித்து இருக்கிறான் அவன்... அப்படிப்பட்டவன் இப்போது பெரிய நல்லவன் போல் பேசுவது கண்டு அவளுக்கு வெறுப்பாக இருந்தது...

"இங்கே பார் பவித்ரா... இதைப் பற்றிய பேச்சு இது தான் கடைசி முறையாக இருக்கணும்... நீ ஒரு தவறு செய்தாய்... அதை மறுக்க உன்னால் முடியாது... அது போல் நானும் தவறு செய்தேன்னு நீ சொல்கிறாய்... ஆனால் என்னைப் பொருத்தவரை அது தவறில்லை என்று தான் சொல்வேன்... தாம்பத்யம் என்பது எல்லாக் கணவன், மனைவிக்குள் நடக்கும் இயல்பான விசயம்... நீ ரொம்ப யோசிச்சு எல்லாத்தையும் போட்டு குழப்பிக்கிற... அதுக்கு நான் ஒண்ணும் பண்ண முடியாது... இது தான் நம்ம வாழ்க்கை... உனக்கும், எனக்குமாய் விதிச்சது... இதில் இருந்து தப்பிச்சு போக மட்டும் நினைக்காதே... அப்படி நினைத்தால் நான் மனுசனா இருக்க மாட்டேன்..."

"அதைத் தானே நானும் சொல்கிறேன்..." என்று கூறியபடி முகத்தைத் திருப்பியவளை கண்டு அவன்

புன்னகைத்தான்...

ஏனோ இப்போது அவள் மீது கோபம் வர மறுத்தது... முன்பு எல்லாம் அவளிடம் சட்டென்று கோபம் கொள்பவன் இப்போது அமைதியாய் பேசுவது கண்டு அவனுக்கே தன்னைக் குறித்து ஆச்சிரியமாக இருந்தது...

"அதையே தான் நானும் சொல்கிறேன்... மீண்டும் மீண்டும் என்னைத் தெய்வப்பிறவியாக்க நினைக்காதே என்று..." என்றவனை வெடுக்கென்று திரும்பி பார்த்தவள்,

"நீ எல்லாம் தெய்வப்பிறவின்னா அது அந்தத் தெய்வத்துக்கே அசிங்கம்டா..." என்றவளது விழிகளில் அத்தனை வெறுப்புத் தெரிந்தது...

அவளது வார்த்தைகள் கேட்டு அவன் கோபம் கொள்ளாது அவளை நோக்கி நிதானமாக நடந்து வந்தான்... மனதிற்குள் பயந்தாலும் வெளியில் காட்டி கொள்ளாது திமிராய் அவனை நிமிர்ந்து பார்த்தாள்...

"சரி, நான் உன்னை உன் விருப்பம் இல்லாமல் தொட்டவன் தான்... உன்னைப் பலவந்தப்படுத்தியவன் தான்... உன் பார்வையில் எல்லாமே தவறுன்னு வச்சிக்குவோம்..."

"வச்சுக்குவோம் என்ன... அது தவறே தான்..."

"நீ ஏன் என்னைத் தடுக்க முயலவில்லை...?" என்றவனை வெறித்துப் பார்த்தவளின் விழிகள் கலங்க துவங்கியது... அதை அவனுக்குக் காட்டாது மறைக்க எண்ணியவள் வேறு புறம் திரும்பி நின்று கொண்டாள்...

அவள் வேண்டாம் என்று எத்தனை தடவை அவனிடம் கெஞ்சி இருப்பாள்... அதை எல்லாம் உடல் பலத்தால் ஒன்றும் இல்லாது செய்து விட்டு இப்போது என்ன பேச்சுப் பேசுகிறான் என்று கணவனை நினைத்து அவளது உள்ளம் குமுறியது...

"என்னிடம் இருந்து உன்னைத் தற்காத்துக் கொள்ள நீ ஏன் முயற்சி செய்யவில்லை...?" என்று கேட்டவனைத்

திடுக்கிட்டு போனவளாய் அவள் திரும்பி பார்த்தாள்...

"உன்னிடம் பல் இல்லையா...? என்னைக் கடிப்பதற்கு... உன்னிடம் நகங்கள் இல்லையா...? அதை வைத்து நீ என்னைப் பிராண்டி இருக்கலாமே... இதே இது வேறு ஒருத்தன் உன்னைத் தொட்டால் இப்படித் தான் கெஞ்சிக்கிட்டு இருந்திருப்பியா...? அவனைக் கொன்னிருப்ப தானே... இதை எல்லாம் நீ ஏன் என்னிடத்தில் செய்யவில்லை...?

அதற்கு அமைதியாய் இருந்தவளை அழுத்தமாய்ப் பார்த்தவன்,

"இது தான் கணவன், மனைவிக்குமான உறவு... உன் மனசில் 'நான் உன் கணவன்'னு ஆழமா பதிஞ்சதன் விளைவு... இனிமேல் ரொம்ப யோசிக்காம வாழ்க்கையை அதன் போக்கில் வாழும் வழியைப் பார்..." என்றுரைத்தவன் குளியலறைக்குள் புகுந்து கதவை சாத்தி கொண்டான்...

மூடிய கதவை வெறித்துப் பார்த்தவளின் மனதில் உணர்வலைகள் பொங்கி பிரவாகம் எடுத்தது... அவளது விழிகளில் இருந்து கண்ணீர் வழிந்தது... அதைத் துடைக்கக் கூட இயலாதவளாய் அவள் அசையாது நின்றிருந்தாள்... எத்தனை நேரம் அப்படியே இருந்தாளோ தெரியாது... குளியலறை கதவு திறக்கும் சத்தம் கேட்டு அவசரமாய் விழிகளைத் துடைத்துக் கொண்டு போர்வையை மடிப்பது போல் தலையைக் குனிந்து கொண்டாள்...

விக்ரம் ஒன்றும் பேசாது உடையை மாற்றிக் கொண்டு வெளியில் சென்று விட்டான்... அவன் சென்ற பிறகே அவள் நிம்மதி பெருமூச்சு விட்டாள்...

பவித்ரா குளித்து முடித்து வரும் போது விக்ரம் மற்ற ஆடவர்களுடன் சேர்ந்து உணவு அருந்தி கொண்டு இருந்தான்... அவன் அருகில் வினோத்தும் அமர்ந்திருந்தான்... பல்லவி இயல்பு போல் ரேவதியுடன் சேர்ந்து உணவு பரிமாறி கொண்டிருந்தாள்... அதைக்

கண்டு அவளுக்கு ஆச்சிரியமாக இருந்தது... இவளால் மட்டும் எப்படி இப்படி ஒன்ற முடிகிறது என்று...

உணவு உண்டு கொண்டே மனைவியின் வருகை உணர்ந்து ஏறிட்டுப் பார்த்தான் விக்ரம்...

'அட போடா... நீ பார்த்தால் எனக்கென்ன...?' மனதில் முணுமுணுத்துக் கொண்டே அவள் தனது தங்கையின் அருகில் வந்து நின்று கொண்டாள்...

"அக்கா... மாமாவுக்குத் தோசையை எடுத்து வைக்கா..."

"மாமாவா...? யாருடி அது...?"

"விக்ரம் மாமாவை சொன்னேன்க்கா..." வெகுளியாய் பதிலளித்த தங்கையைப் பார்த்தவள்,

"நான் வர்றதுக்கு முன்னாடி எப்படிச் சாப்பிட்டாரோ அப்படியே சாப்பிடட்டும் உன் மாமா..." என்று அழுத்தி கூறியபடி அங்கிருந்து நகரப் போனவளின் கரத்தினை விக்ரமின் கரம் எட்டி பிடித்துத் தடுத்தது...

"தோசையை எடுத்து வை பவி..." என்றவன் குரலில் இருந்தது அதிகாரமா இல்லை வேறு எதுவுமா என்று அவளுக்குத் தெரியவில்லை... ஆனால் கையில் இருந்த அழுத்தம் அவன் சொன்னதைச் செய்யச் சொல்லியது...

எல்லோர் முன்னும் தப்பிக்க வழியின்றிக் கணவன் தட்டில் ஒரு தோசையை எடுத்து வைத்தவள் அடுத்து இயல்பு போல் சட்னியை பரிமாறினாள்... அதன் பின்னரே அவனது கை தளர்ந்தது... தனது தோல்வியைச் சகித்துக் கொள்ள முடியாது அவள் சமையலறையில் சென்று முடங்கிக் கொண்டாள்... மனதிற்குள் கோபம் கோபமாய் வந்தது... அது யார் மீது என்று தான் அவளுக்குத் தெரியவில்லை...

சிறிது நேரத்தில் விக்ரம் அவளைத் தேடி அங்கு வந்தான்... அவனைக் கண்டதும் வேலைக்காரர்கள் அங்கிருந்து வெளியில் சென்று விட்டனர்... அவளும் அவனை நிமிர்ந்து

பார்த்தாள்... ஆத்திரத்துடன் அவளை ஒரு கை பற்றித் தூக்கி எழுப்பியவன்,

"இனி நமக்குள் எந்தப் பிரச்சினை இருந்தாலும் அது நாலு சுவத்துக்குள் மட்டுமே இருக்கணும்... இப்படி எல்லோரும் பார்க்கும்படி இருக்கக் கூடாது..." என்று அழுத்தி சொன்னவனை விழியகல பார்த்தபடி அவள் நின்றிருந்தாள்...

அவனது இந்தச் செய்கையை அவள் கொஞ்சமும் எதிர்பார்க்கவில்லை... அவளுக்குச் சற்று திகைப்பாய் இருந்தது...

"ஏற்கெனவே சொல்லிட்டேன்... பிடிக்குதோ பிடிக்கலையோ இது தான் நம்ம வாழ்க்கைன்னு... மாத்தி எழுத முயற்சிக்காதே... அது இந்த விக்ரமிடம் நடக்காது..." என்று கோபமாய்க் கர்ஜித்தவன் அவளை விட்டு விலகினான்...

அந்நேரம் அங்கு வந்த பல்லவி இருவரையும் கண்டு சங்கோஜத்துடன், "சாரி மாமா, சாரிக்கா..." என்றபடி அங்கிருந்து செல்ல முயற்சிக்க...

"உன் அக்காவிடம் சும்மா தான் பேசிக்கிட்டு இருந்தேன்..." என்று மனைவி தோள் மீது கை போட்டு புன்னகைத்தவன்,

"நீ உள்ளே வா..." என்றான் மச்சினியை பார்த்து...

"பார்த்தா பேசின மாதிரி தெரியலையே..."

நமட்டு சிரிப்புடன் கூறியவளை கண்டு விக்ரம் வாய் விட்டுச் சிரித்தான்... கணவன் சிரிப்பதை ஏதோ வேற்று கிரகவாசியைப் பார்ப்பது போல் பார்த்து வைத்தாள் பவித்ரா...

"வெறும் பேச்சு மட்டும் இருக்க வேண்டும் என்று எந்தச் சட்டமும் இல்லையே..." கெத்தாய் கூறியவனைக் கண்டு பல்லவி,

"மாமா... உங்க கிட்ட பேசி யாராலையும் ஜெயிக்க முடியாது..." என்றாள் சரணடைந்தவளாய்...

"இல்லையா பின்னே... ஆனானப்பட்ட உன் அக்காவையே அடக்கி ஆள்கிறேனே..."

"ஹா ஹா, மாமா... அது என்னவோ உண்மை தான்... இப்போ வரை அக்கா வாயை திறக்க காணோமே..."

"உன் அக்காவை வாய்த் திறக்காமல் செய்வதற்கு என்று தனி வைத்தியம் மாமன் வசம் இருக்கிறது... அப்படித் தானே பவி..." என்று கண் சிமிட்டியவனைக் கண்டு அவள் வாய் பிளந்து நின்றாள்... இது அவள் கணவன் தானா என்று அவளுக்குச் சந்தேகமாய் இருந்தது...

"சரி எனக்கு நேரமாகி விட்டது... நான் வருகிறேன்..." என்று மச்சினியிடம் உரைத்தவன் மனைவி புறம் திரும்பி,

"வர்றேன் பவி..." என்று விடைப்பெற... அவளோ ஒன்றும் கூறாது மௌனம் காத்தாள்...

"சொன்னது எதுவும் நினைவில் இல்லை போலும்..." என்று ரகசிய குரலில் ஒவ்வொரு வார்த்தைக்கும் அழுத்தம் கொடுத்தவனைக் கண்டு அவளது நெஞ்சம் படபடத்துப் போனது...

"சரி..." என்று மெல்ல தலையசைத்தவளை கண்டு அவனுள் திருப்தி நிலவியது...

"இப்படி இருந்தால் எவ்வளவு நன்றாக இருக்கிறது..." என்று அவளது கன்னம் தட்டியவன் எதையோ நினைத்து பெருமூச்சு விட்டான்...

"மாமா..." என்று பல்லவி இழுக்க...

"நீ இருக்கிறாய் தான்... அது எனக்கு நன்றாக நினைவு இருக்கிறதம்மா..." என்றவன் சிரித்தபடி அங்கிருந்து கிளம்பி சென்றான்...

கணவன் சென்றதும் பவித்ரா தங்கையைப் பிடித்துக் கொண்டாள்...

"பல்லவி... நீ சந்தோசமா இருக்கிறியா...? எப்படிடி நீ இங்கே வந்து மாட்டி கிட்ட...?"

"அக்கா... இது என்ன பேச்சு...? மாட்டி கிட்ட அப்படி இப்படின்னு... தாத்தா சின்ன மாமாவை கல்யாணம் பண்ண சொன்னார்... நானும் சரின்னு பண்ணிக்கிட்டேன்..." என்றாள் பல்லவி இயல்பான குரலில்...

வினோத் தற்செயலாய் அங்கு வந்தவன் மனைவியின் வார்த்தையில் அப்படியே நின்றான்...

"நீ மாமாவை கல்யாணம் பண்ணுவதற்கும் சரின்னு சொன்னதாய் எனக்கு ஞாபகம்..." என்றாள் பவித்ரா மனம் வெறுத்த குரலில்...

"அதைத் தான் மாமா வேண்டாம்ன்னு சொல்லிட்டாரே..." என்று குதூகலமாய்க் கூறியவளை திகைப்புடன் பார்த்தாள் பவித்ரா...

"நீ என்ன சொல்ற...?"

"ஆமாம்க்கா... மாமா கல்யாணத்துக்கு ஒரு வாரம் முன்னாடி தான் இங்கே வந்தார்... வந்தவுடன் அவங்க தாத்தா கிட்ட சண்டை போட்டு ரெண்டாவது கல்யாணத்துக்கு ஒத்துக்க மாட்டேன்னு சொல்லிட்டார்... கடைசியில் வேறுவழி இல்லாம அவமானத்துக்குப் பயந்து ரெண்டு வீட்டு பெருசுகளும் சேர்ந்து வினோத் மாமாவுக்கும், எனக்கும் கல்யாணம் பண்ணி வச்சிட்டாங்க..."

கடைசி வரியை சொல்லும் போது பல்லவியின் குரல் ரகசியம் போல் ஒலித்தது... அதைக் கேட்டு வினோத்திற்குச் சிரிப்பு வந்தது...

"பல்லவி... பிடிக்காத வாழ்க்கையை எப்படிடி வாழ்ற...?" தங்கைக்காகக் கவலை கொண்டாள் பவித்ரா...

"நான் பிடிக்கலைன்னு சொல்லலையே..."

மனைவியின் வார்த்தையில் வினோத் மனதில் அத்தனை நிம்மதி... மிகவும் சந்தோசமாக உணர்ந்தான்...

"அப்புறம் எதுக்குடி நேத்து அப்படி அழுத...?"

"அது உன்னைப் பார்த்ததும் எனக்கு அழுகையா வந்தது... உன்னோட கஷடத்துக்கு நானும் ஒரு காரணமா போயிட்டேன்னு ரொம்பக் கவலையா இருந்தது... அதான் அழுதுட்டேன்..." என்றவளை கண்டு பாவமாக இருந்தது பவித்ராவிற்கு...

"உனக்கு வினோத்தை பிடிச்சியிருக்கா பல்லவி...?"

இதற்கு மனைவியின் பதில் வேண்டி காதை தீட்டி கொண்டு நின்றிருந்தான் வினோத்...

"தெரியலையேக்கா..."

"அப்புறம் எப்படி...?"

"அக்கா... வாழ்க்கையில் நாம் யாரையாவது கல்யாணம் பண்ணி தானாக வேண்டும்... எனக்கு வினோத் மாமான்னு கடவுள் முடிவு பண்ணிட்டாரு... அதை நான் மனசார ஏத்துக்கிறேன்... நாம் நினைப்பது போல் ரெண்டு மாமாவும் கெட்டவங்க கிடையாது நல்லவங்க தான்... வினோத் மாமாவையே எடுத்துக்கோ... எங்களுக்குக் கல்யாணமாகி ஆறு நாளாகுது... ஆனா இதுவரை ஒரு தப்பான பார்வையோ இல்லை செயலோ கிடையாது... மனைவியா இருந்தாலும் கண்ணியமாய்த் தான் நடந்துக்கிறார்... இதை விட வேறு என்ன வேணும்க்கா...?"

வினோத்தின் கண்ணியம் பற்றிக் கேட்டதும் பவித்ராவிற்கு நிம்மதியாய் இருந்தது... தன்னைப் போல் தன் தங்கை கஷ்டப்படவில்லை என்று... அதை விட வினோத்தின் மனம் பெரிதும் நெகிழ்ந்தது...

"எப்படியோ நீ சந்தோசமா இருந்தால் போதும்..." என்ற சகோதரியை ஆழ்ந்து பார்த்த பல்லவி,

"அக்கா... நீ சொன்னதை வச்சு நான் மாமாவை ரொம்பக் கெட்டவரா, வில்லன் மாதிரி கற்பனை பண்ணி இருந்தேன்... ஆனா அவர் வில்லன் இல்லைக்கா... ஹீரோ... உன்னைத் தவிர வேறு யாரும் அவருக்கு மனைவியாக முடியாதுன்னு உறுதியா இருந்தார் பாரு... அங்கே நிற்கிறாங்க மாமா..."

தங்கையின் வார்த்தையில் அவள் அமைதியாக இருந்தாள்... சில விசயங்களை யாரிடமும் பகிர்ந்து கொள்ள முடியாது... அது போல் தான் அவளுடைய ரகசியமும்...

"மாமா எதில் எப்படி இருந்தாலும் உன் விசயத்தில் அவர் ஒரு ஜெம்... அதை நீ நல்லா புரிஞ்சிக்கோக்கா..."

பல்லவி கூறிக் கொண்டு இருக்கும் போதே சௌந்தர்யாவின் குரல் ஓங்கி ஒலித்தது...

"வினோ... இங்கே என்னடா பண்ணிக்கிட்டு இருக்க...?"

"தண்ணி குடிக்க வந்தேன்ம்மா..."

"ம்க்கும்... என் கிட்ட மட்டும் பேசு... ஆனா உன் தாத்தாவை எதிர்த்து பேசாதே... உன் அண்ணனை பார்... அவரை எப்படி எதிர்த்துப் பேசினான்... உனக்குச் சுட்டுப் போட்டாலும் அவனோட தைரியம் வராது... உன்னை மாதிரியே ஒரு அரைவேக்காடை கல்யாணம் பண்ணி இருக்கியே... உன்னை எல்லாம்...?" என்று ஆத்திரத்துடன் பல்லை கடித்தவர்,

"முதல்ல இங்கிருந்து போடா..." என்று குரலை உயர்த்திக் கத்தினார்...

"அம்மா... என்னை என்ன வேணா சொல்லுங்க... அதுக்காக என் மனைவியை இப்படிப் பேசுகிற வேலை எல்லாம் வேண்டாம்..." என்றான் வினோத்தும் கோபமாக...

"அடேங்கப்பா... ஆறு நாள் ராத்திரியில் உன்னை முந்தானையில் முடிஞ்சிக்கிட்டாளா...? பலே கைக்காரி

தான்..." என்று இரைந்தவரை அலட்சியமாய்ப் பார்த்த வினோத்,

"உங்களை மாதிரி உங்க மருமகள் இருக்கிறாள்... இது பெருமைப்படும் விசயம்மா... கோபப்படுற விசயம் இல்லை..." என்று கூறியவன் அவரின் பதிலை எதிர்பாராது சென்று விட்டான்...

கணவனின் பேச்சு கேட்டுப் பல்லவி களுக்கென்று சிரித்தாள்... பவித்ராவுக்குமே வினோத் பேசியது கேட்டுச் சிரிப்பு வந்தது... அதே சமயம் சௌந்தர்யா தன்னை என்ன பேசிய போதும் அவரை ஒன்றும் பேசாது தன்னைக் குற்றம் கூறும் கணவனின் வார்த்தைகள் நினைவில் வந்து அவளை வதைத்தது...

சௌந்தர்யா உள்ளே வந்தவர் இரு மருமகள்களும் வேலை செய்யாது நின்றிருப்பதைக் கண்டு எரிச்சல் அடைந்தவராய்,

"இப்படியே நின்னுக்கிட்டு இருந்தா எப்படிச் சமையல் வேலை நடக்கும்...? அம்மாடி பவி, உன் தங்கைக்குக் கொஞ்சம் எடுத்து சொல்லு..." என்க...

"அக்கா... எனக்குத் தூக்கம் வருதுக்கா... நான் போய்ப் படுக்கப் போறேன்..."

"இந்நேரம் என்ன தூக்கம்...?" என்று சௌந்தர்யா மருமகளை முறைத்தார்...

பல்லவியோ அதைக் கண்டு கொள்ளாது அக்காவிடம், "உன் கொழுந்தனார் நேத்து நைட் முழுவதும் என்னைத் தூங்கவே விடலைக்கா... செம டயர்டா இருக்கு..." என்க... அதைக் கேட்டு திகைத்து நின்ற பவித்ராவை பார்த்துக் கண் சிமிட்டினாள் பல்லவி...

"அக்கா... உனக்கும் இங்கே என்ன வேலை...? குழந்தை உண்டாகி இருக்கும் போது நீயும் ஜாக்கிரதையாக இருக்கணும்... நீயும் போய் ரெஸ்ட் எடு..." என்று தன்னோடு சகோதரியையும் இழுத்துக் கொண்டு சென்று விட்டாள்...

மருமகளின் இந்தச் செயலில் திகைத்து நின்றார் சௌந்தர்யா...

பல்லவி அவளது அறைக்குச் சென்று விட, என்ன செய்வது என்று தெரியாது விழித்த பவித்ரா மெல்ல தனது மாமியார் அறைக்குச் சென்றாள்... அங்கு ரேவதி தனது துணிகளை மடித்துக் கொண்டு இருந்தார்... இவளை கண்டதும்,

"வாம்மா..." என்றார்...

அவரின் கையில் இருந்த துணியை வாங்கி அவள் மடிக்கப் போனாள்... அதை வாங்கிய ரேவதி,

"இந்த மாதிரி நேரத்தில் நீ நல்லா ரெஸ்ட் எடுக்கணும்..." என்க...

"ம்... ம்..." என்று சுரத்து இல்லாது ஒலித்தது பவித்ராவின் குரல்...

அவளது நாடியை பற்றி முகத்தை நிமிர்த்தியவர், " உனக்கும் விக்ரமுக்கும் என்ன பிரச்சினைன்னு எனக்குத் தெரியாது... இனியாவது நீயும், அவனும் பழசை எல்லாம் மறந்துட்டு சந்தோசமா வாழணும் பவி..."

அதற்குப் பதில் கூறாது தலை கவிழ்ந்தவளை கண்டு அவருக்கு வருத்தமாக இருந்தது...

"மாமாவுக்கு உடம்பு சரியில்லைன்னு சொல்லி தான் விக்ரமை இங்கே வரவழைச்சாங்க... வந்ததுக்கு அப்புறம் தான் தெரியும் அவனுக்கு ரெண்டாவது கல்யாணம் பண்ணி வைக்கிறதுக்காகன்னு... சரித்திரம் திரும்புதோன்னு நான் கூடப் பயந்து போயிட்டேன்... ஆனா அவன் பயப்படலை பவி... மாமா சொத்து கொடுக்க முடியாதுன்னு மிரட்டினப்ப கூடத் தைரியாம எதிர்த்துப் பேசினான்... வாழ்க்கையில் ஒரு முறை தான் கல்யாணம்... அது பவி கூட நடந்து முடிஞ்சிருச்சுன்னு உறுதியா மறுத்துட்டான்... அதுக்கு அப்புறம் தான் நீ காணாம போன விசயமே அவனுக்குத் தெரியும்... உன்னைத் தீவிரமா தேட ஆரம்பிச்சான்... உன்னைக் கண்டுபிடிச்சு நேரில் வந்து

பார்க்கும் வரை நீ குழந்தை உண்டாகி இருப்பது கூட அவனுக்குத் தெரியாது..."

மாமியார் கூறுவது எல்லாம் சரி தான்... வெளியில் இருந்து பார்ப்பவர்களுக்கு எல்லாம் சரியாகத் தான் தோன்றும்... உள்ளே இருந்து பார்ப்பவருக்குத் தானே தெரியும்... அதன் சூட்சமம் என்னவென்று...? அதை எப்படி அவரிடத்தில் கூறுவது...? என்று தெரியாது அவள் விழித்துக் கொண்டு இருந்தாள்...

பெண்ணவளின் ஆழ்மனதில் ஆயிரம் ரகசிய கனவுகள் புதைந்து இருக்கும்... அதில் ஆயிரம் எதிர்பார்ப்புகள் மௌனமாய் ஏங்கியிருக்கும்... அது மன்னவனைத் தவிர்த்து வேறு யார் அறிவார்...?

கடமையுடன் கூடும் கணவனுக்குத் தெரியுமா...? காதல் என்றால் என்னவென்று...? கருத்தொமித்து வாழ்வது என்றால் என்னவென்று...? காமத்தை காதல் வெல்ல வேண்டும்... இங்கு என்னவென்றால் காதலை காமம் வென்று கொண்டு இருக்கிறது...

மனம் தொடாது, உடலை மட்டும் தொட்டு பெண்ணவளை வன்கொடுமை செய்தவன் வாரிசு அவளது மணி வயிற்றில்... என்ன யோசித்தும் அவளால் கணவனை ஏற்றுக் கொள்ள முடியவில்லை... எல்லோரும் கூறுவது போல் அது கடமைக்கு என்றாலும் கூட...!!!

மொழி பேசும்...!!!

## விழி : 12

'குழந்தைக்காகத் தான் உன்னைத் தொட்டேன்...'

இதோ இந்த நொடி கூடப் பவித்ராவின் காதுகளில் விக்ரமின் குரல் தான் ஓங்கி ஒலித்துக் கொண்டு இருந்தது... அதை நினைத்து அவளுக்கு அத்தனை வேதனையாக இருந்தது... பவித்ரா என்றால் தொழில் வட்டாரத்தில் அப்படி ஒரு பயம் இருந்தது... மதிப்பு, மரியாதை இருந்தது... ஆனால் இப்போது அது அனைத்தையும் இழந்து விக்ரமின் காலடியில் விழுந்து கிடப்பது போல் ஒரு தோற்றம் அவளுள்... அதை நினைத்து அவளுக்கு அத்தனை அவமானமாக இருந்தது...

இத்தகைய இழிவான நிலை தனக்குத் தேவை தானா என்று கண்கள் கலங்க தலை குனிந்தபடி அவள் அமர்ந்திருந்தாள்... அந்நேரம் ரேவதியின் அலைப்பேசி அழைத்தது... அவர் அதை எடுத்து பேசவும் அவருக்குத் தெரியாமல் அவள் தனது விழிகளைத் துடைத்து கொண்டாள்...

"சொல்லு விக்ரம்..."

கணவன் என்றதும் தன்னிச்சையாய் அவள் அவரை ஏறிட்டாள்...

"ரொம்பச் சந்தோசம்டா... உடனே அவளை அனுப்பி வைக்கிறேன்..." என்று முகம் மலர கூறியவர் அலைப்பேசியை அணைத்து விட்டு மருமகளிடம்,

"பேசியது விக்ரம் தான் பவி... உன்னைச் செக்கப்புக்கு ஹாஸ்பிட்டல் வர சொன்னான்ம்மா... அப்பாயிண்ட்மென்ட் வாங்கிட்டானாம்... இப்பவே நீ கிளம்பு, நேரம் சரியா இருக்கும்..." என்று அவர் அவளை அவசரப்படுத்தினார்...

அதைக் கேட்டு அவளுள் ஏதோ ஒன்று உயிர்த்தது... மனதில் சந்தோசமாய்ச் சிறு மொட்டு ஒன்று முகிழ்த்தது... ஆனாலும் கணவனுடன் தனித்துச் செல்ல சங்கோஜப்பட்டவளாய் மாமியாரிடம்,

"அத்தை நீங்களும் வாங்களேன்..." என்க...

"நான் எதுக்கும்மா கணவன் மனைவிக்கு இடையில் நந்தி மாதிரி..."

"ப்ளீஸ் அத்தை... பெரியவங்க நீங்க இருந்தால் நல்லா இருக்கும்..."

"சரிம்மா... நீ போய் ட்ரெஸ் மாத்திக்கிட்டு வா... நானும் கிளம்பி தயாரா இருக்கேன்..."

அவர் சொன்னதும் நேரே அறைக்கு வந்தவள் புடவை மாற்ற துவங்கினாள்... புடவை கட்டி முடித்து ஒப்பனை பண்ண வேண்டி கண்ணாடி முன் வந்து நின்றவளுக்குப் புடவை கட்டிய தன்னுடைய தோற்றம் பட்டிக்காடு போல் தோன்றியது... அதிலும் இந்த ஒரு மாத காலமாகச் சரியாக உண்ணாது, உறங்காது அவள் பொழிவிழந்து காணப்பட்டாள்...

கணவனுக்கு நாகரீக நங்கைகளை மட்டுமே பிடிக்கும் என்பது அந்த நேரம் அசந்தர்ப்பவசமாய் நினைவில் வந்து தொலைத்தது... பெருமூச்சு விட்டபடி நினைவுகளைப் புறம் தள்ளி வைத்தவள் ஒப்பனை முடித்து விட்டு அறையை விட்டு வெளியில் வந்தாள்...

அங்கு ரேவதியும் தயாராக இருக்கவும் இருவரும் இணைந்து மருத்துவமனை வந்து சேர்ந்தனர்... அவர்கள் இருவரும் சேர்ந்து மருத்துவரை பார்த்துப் பரிசோதனை செய்து குழந்தையின் நலம் விசாரித்து மருந்துகளை எழுதி வாங்கி முடிக்கும் வரை விக்ரம் அங்கு வந்து சேரவில்லை... எல்லாம் முடிந்து அவர்கள் இருவரும் காரில் ஏறும் சமயம் அவன் தனது காரில் இருந்து இறங்கி அவர்களை நோக்கி விரைந்து வந்தான்...

பவித்ரா அவனைப் பார்த்தபடி மௌனமாய் நின்றிருந்தாள்... ரேவதிக்கு தான் மகன் மீது வருத்தமாய் இருந்தது...

"இது தான் நீ வரும் நேரமா விக்ரம்...?" சற்று கண்டிக்கும் குரலில் கேட்டார் அவர்...

"சாரிம்மா... ஹெவி ட்ராபிக்... நான் என்ன பண்ண...?" பேச்சு அன்னையிடம் இருந்தாலும் அவனது விழிகள் மனைவி மீது தான் இருந்தது... அவளது உணர்வற்ற பார்வையில் இருந்து அவனால் அவளது மனநிலையைக் கணிக்க முடியலை...

"உன்னை நம்பி பவியைத் தனியா அனுப்பி இருந்தால்...? என்ன இருந்தாலும் உன் மேல் தான் தப்பு விக்ரம்..."

"அனுப்பி இருந்தால் என்னவாகி இருக்கும்... ஒண்ணுமாகி இருக்காதும்மா... உங்க மருமக விட்டால் இந்த ஊரை வித்துட்டு வந்திருவாள்..."

அதைக் கேட்டு பவித்ரா அவனை முறைத்தாள்... அதைக் கண்டு அவனது புன்னகை விரிந்தது... ஏனோ அவளை மேலும் மேலும் சீண்டி பார்க்க விழைந்தது அவனது மனம்...

"உலகத்தையே வித்துட்டு வரட்டுமேடா... அது அவளது சாமர்த்தியம்... என்ன இருந்தாலும் இந்த மாதிரி நேரத்தில் மனைவி எதிர்பார்ப்பது கணவனது அன்பையும், அரவணைப்பையும் தான்... அதைத் தான் நீ அவளுக்குக் கொடுக்கணும்..."

அன்னை பேச்சை கேட்ட விக்ரம் மனைவியை 'அப்படியா' என்பது போல் பார்த்து வைத்தான்... அவளோ 'போடா' என்பது போல் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்... அதைக் கண்டு அவனது முகம் அவமானத்தில் கன்றிப் போனது...

'இவளை என்ன தான் செய்வது...?' என்று அவன் கோபமாய்ப் பல்லை கடித்தான்...

"இப்போ பவியை உன் கூடக் காரில் கூட்டிட்டு போ... ஆனா வீட்டுக்கு இல்லை... எங்காவது வெளியில்... சரியா...?"

"சரிம்மா..." என்று நல்ல பிள்ளையாய் பதில் கூறியவன் மனைவியைப் பார்த்தான்...

"வேண்டாம் அத்தை... எனக்கு எங்கேயும் போக விருப்பம் இல்லை... டயர்டா இருக்கிற மாதிரி இருக்கு... வீட்டுக்கு போகலாம்..." என்று அவரசமாய் அவள் மறுக்க...

விக்ரம் கைகளைக் கட்டி கொண்டு அமைதியாக அவளை வேடிக்கை பார்த்தான்...

"ஓ... அப்ப சரி... வீட்டுக்கு கூட்டிட்டு போ விக்ரம்... நான் கொஞ்சம் மளிகை கடை வரை போயிட்டு வந்திர்றேன்..."

"அத்தை... நானும் உங்க கூட வரவா...? இல்லை நீங்க தனியா..." என்று இழுத்தவளை பார்த்து வாஞ்சையுடன் புன்னகைத்தவர்,

"எனக்குத் தனிமை பழகி போன ஒன்று... அதை நீ அனுபவிக்கக் கூடாதுன்னு தான் நான் சொல்கிறேன்..."

அவர் கூறியது கேட்டு இருவரும் திடுக்கிட்டு போயினர்...

"நீ விக்ரம் கூடப் போம்மா..." என்றவர் மருமகள் மகனுடன் காரிலேறி செல்வதைப் பார்த்த பின்னரே தானும் கிளம்பி சென்றார்...

விக்ரம் காரை ஓட்டியபடி அமைதியாக வந்த மனைவியை ஓரக்கண்ணால் பார்த்துக் கொண்டு வந்தான்... அவளோ அவனைக் கண்டு கொள்ளாது வெளியில் வேடிக்கை பார்த்துக் கொண்டு இருந்தாள்... அவளது மனதில் ரேவதி கூறிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் ஒலித்துக் கொண்டு இருந்தது...

"சோ, உனக்கு டயர்ட் எல்லாம் இல்லை... என் கூட வர பிடிக்காம தான் அப்படிச் சொன்ன இல்லையா...?"

தனது யோசனையில் மூழ்கி இருந்தவள் அவனது வார்த்தைகளைச் சரியாகக் கேட்கவில்லை...

"என்ன சொன்ன விக்ரமா...?"

மாமியாரின் வருத்தமான வார்த்தையில் கணவன் மீதான பகையை அவள் மறந்திருந்தாள்... அவளது 'விக்ரமா'

என்றழைப்பில் அவனது விழிகள் மின்னியது... அபூர்வமாய் அவளது வாயில் இருந்து வரும் இந்த அழைப்பு அவனுக்கு எதையோ உணர்த்தியது... ஆனால் அது என்னவென்று தான் அவனுக்குப் புரியவில்லை... அவளது இந்த அழைப்பு அவனது மனதிற்குச் சந்தோசத்தைக் கொடுத்தது என்னவோ உண்மை... அதனால் பேச்சை மாற்ற எண்ணியவனாய் தன்மையாய் அவளிடம்,

"அடுத்தச் செக்கப்புக்கு எப்போ வர சொல்லி இருக்காங்க...?" அவனது கவனம் சாலையில் இருந்தாலும் பேச்சு அவளிடத்தில் இருந்தது...

"அது எதுக்கு உனக்கு...?" என்றாள் அவள் வெடுக்கென்று... 'என்னமோ உடன் வருவது போல் எதற்கு இத்தனை பில்டப்...?' என்று அவளது மனம் கோபமாய் முணுமுணுத்தது...

"முக்கியமான டவுட் கேட்கணும்... அதுக்குத் தான்..." என்றான் அவன் சீண்டலாய்...

"உனக்கு எதுக்கு டவுட் வருது...?" என்று சந்தேகமாய்ப் பார்த்தவளை கண்டு,

"இந்த மாதிரி நேரத்தில் நான் உன்னிடம்..." என்று நிறுத்தி விட்டு அவளைப் பார்த்து நமட்டுச் சிரிப்பு சிரித்தவனைக் கண்டு அவளது இரத்த அழுத்தம் ஏகத்துக்கும் எகிறியது...

"என்னிடம் என்ன...?" என்று படபடத்தவளை ஒரு பார்வை பார்த்து விட்டு,

"கணவன் உரிமையை எடுத்துக்கலாமான்னு டாக்டர் கிட்ட கேட்கணும்... இது தான் என்னோட அதி முக்கியமான டவுட்..." என்றவனை அடிப்பதற்கு ஏதாவது கிடைக்குமா என்று அவள் கோபமாய்ச் சுற்றும் முற்றும் பார்த்தாள்...

"என்ன பார்க்கிற...?"

"உன்னை எல்லாம் அடிச்சே கொல்லணும்டா..." என்றாள் அவள் வெறுப்புடன்... அதைக் கேட்டு அவனது முகம்

இறுகியது...

"கள்ளக்காதல் இருந்தால் தான் மனைவி புருசனை அடிச்சுக் கொல்வாளாம்... அது போல் உனக்கும் இருக்கிறதோ...?" அவனும் பதிலுக்குக் கொடிய வார்த்தைகளால் மனைவியின் மென்மையான பூ மனதினை குத்தி குதறினான்...

அதில் அவள் அதிர்ந்து போய் அப்படியே அமைதியாகி விட்டாள்... என்ன வார்த்தை சொல்லி விட்டான் என்று அவளது உள்ளம் குமைந்தது...

"இதுக்குத் தான் தேவையில்லாம வார்த்தைகளைச் சிதற விடக் கூடாது பவித்ரா..." என்று கண்டிப்புடன் வந்தது அவனது வார்த்தைகள்...

அதில் சிலிர்த்துக் கொண்டு நிமிர்ந்தவள், "கொடுமை படுத்தும் கணவனைக் கொல்லலாம் தப்பில்லை..." என்றாள் ஆங்காரத்துடன்...

மனைவியின் வார்த்தையில் கோபம் கொண்டவனாய் காரை ஓடித்துச் சாலையின் ஒரு ஓரமாய் நிறுத்தியவன் அவள் புறம் திரும்பி அமர்ந்து கொண்டு,

"தைரியம் இருந்தா என்னைக் கொல்லுடி பார்க்கலாம்..."

விழிகள் இரண்டும் ஆத்திரத்தில் கோவைப்பழமாய்ச் சிவந்திருக்க அவன் கர்ஜனை செய்தது கண்டு அவளது உள்ளம் பயத்தில் சில்லிட்டுப் போனது... அவளையும் அறியாது பயத்தில் பின்னால் நகர்ந்தாள்... அவனோ இன்னமும் ஆக்ரோசம் குறையாது அவளது கைகளை எடுத்து தன் கழுத்தின் மீது வைத்து,

"கொல்லுடி..." என்று உறும...

அவளது வார்த்தையில் இருந்த தைரியம் செயலில் இல்லாது போனது... அவனது கைகளில் இருந்து தனது கைகளை விடுவித்துக் கொள்ள அவள் போராடினாள்...

அவனோ விட முடியாது என்பது போல் இறுக பிடித்து இருந்தான்...

"ப்ளீஸ் விக்ரமா... கையை விடு..." வேறுவழியின்றி அவள் தான் அவனிடம் தழைந்து போக வேண்டியதாய் போயிற்று...

அவளது வார்த்தைகளில் அவனது கைகள் தானாய்த் தளர்ந்தது...

"நான் ஒண்ணும் உன்னைக் கொடுமைப்படுத்தலை... என் மனைவி கிட்ட எனக்கான உரிமையை எடுத்துக்கிட்டேன்... அவ்வளவு தான்... இப்பவும் சொல்றேன்... இந்த நொடி எனக்குப் பெண் சுகம் தேவைப்பட்டால் நான் உன்னைத் தான் தேடி வருவேன்... இதே இது நான் வேறு பெண்ணைத் தேடி போனால் தான் அது உன்னைக் கொடுமைப்படுத்துறது... என்ன புரிஞ்சதா...?" என்று கோபமாய்க் கூறியபடி காரை கிளப்பினான்...

இந்த ரணகளத்திலும் குதூகலமாய் அவனது வார்த்தைகள் மயிலிறகாய் மனதினை வருடி செல்வதை உணர்ந்து அவள் திடுக்கிட்டு தான் போனாள்... மனம் போகும் பாதை அறிந்து மனம் நொந்தவளாய் தலை குனிந்து கொண்டு அமர்ந்து இருந்தாள் பவித்ரா...

வீடு வந்ததும் அவளை இறக்கி விட்டவன் வீட்டினுள் வராது விருட்டென்று காரை கிளப்பிக் கொண்டு சென்று விட்டான்... அவள் சோர்வுடன் வீட்டினுள் நுழைந்தாள்... அங்குப் பல்லவி அவளுக்காகக் காத்திருந்தாள்... பல்லவியின் குறும்பு பேச்சில் அவளது மன சோர்வு சிறிது குறைந்தது...

மறுநாள் காலையில் கணவன் வேலைக்குச் சென்றதும் பவித்ரா தானும் வெளியில் கிளம்பினாள்... ரேவதியிடம் மட்டும் தான் வெளியில் செல்வதாய்க் கூறி விட்டு சென்றாள்... வீட்டில் இருக்கும் காரை அவள் எடுத்துக் கொண்டு செல்லவில்லை... எங்குச் சென்றாள் என்றும்

யாருக்கும் தெரியாது... மதியம் மூன்று மணிக்கு மேல் சோர்வுடன் வீடு திரும்பினாள்...

இரவு வீடு வந்த விக்ரமின் கண்ணில் முதலில் விழுந்தது மனைவியின் சோர்வான தோற்றம்... ஆனால் அவளிடம் எதுவும் கேட்கவில்லை... நேற்றில் இருந்து அவன் அவளிடம் பேசுவதில்லை... குளித்து முடித்து வந்தவன் உணவு உண்டு விட்டு அன்னையைத் தேடி வந்தான்...

"அம்மா... பவி ஏன் சோர்வா இருக்கிறாள்...? உடம்புக்கு எதுவும் முடியலையா...?"

மனைவி மீதான மகனது அக்கறை அந்தத் தாய்க்கு மிகவும் சந்தோசத்தைக் கொடுத்தது...

"காலையில் வெளியில் போனவள் மதியம் மூணு மணிக்கு தான் திரும்பி வந்தாள்... காரையும் எடுத்துட்டு போகலை... நான் ஏன்னு கேட்டும் பார்த்துட்டேன்... பதில் சொல்ல மாட்டேங்கிறாள்... புள்ளத்தாச்சி பொண்ணுடா... கொஞ்சம் கவனமா இருக்கச் சொல்லு விக்ரம்..." என்று கவலை கொண்ட அன்னையைத் தேற்றி விட்டு அவன் தனது அறைக்கு வந்தான்...

அங்கு ஏற்கெனவே பவித்ரா படுத்திருந்தாள்... மறுபுறம் வந்து படுத்தவன் அவள் புறம் திரும்பி,

"இன்னைக்கு எங்கே வெளியில் போன...?"

அவள் பதில் பேசாது தூங்குவது போல் பாவனைச் செய்ய...

"நீ தூங்கலைன்னு எனக்குத் தெரியும்..." என்றவன் அவளை வலுக்கட்டாயமாய்த் தன்புறம் திருப்பினான்...

"பதில் சொல்லு..."

"அது என் பெர்சனல்... உன் கிட்ட சொல்ல முடியாது..." என்றாள் அவள் முகத்தில் அடித்தார் போன்று...

"எத்தனை நாள் மறைக்கிறேன்னு நானும் பார்க்கிறேன்..." என்றுரைத்தவன் மேலே பேசாது அமைதியாகப் படுத்து

விட்டான்...

அடுத்து வந்த இரு நாட்கள் அமைதியாகக் கழிந்தது... இதற்கிடையில் இன்னும் பத்து நாட்களில் வினோத், பல்லவி வரவேற்பு விழா வேறு ஏற்பாடாகி இருந்தது... ஒரு சகோதரனாய் தம்பிக்கு வேண்டியதை விக்ரம் தான் பார்த்து பார்த்துச் செய்தான்... அப்போது தான் அவன் அந்த விசயத்தைக் கேள்விப்பட்டான்... கேள்விப்பட்ட விசயம் அவனது புருவங்களை ஆச்சிரியத்துடன் உயர்த்த வைத்தது...

அவன் கேள்விப்பட்ட விசயம் இது தான்... பவித்ரா கடனுக்காக ஒவ்வொரு வங்கியாய் ஏறி இறங்குகிறாள் என்பது... இன்று அவனது உதவியாளர் அவளை ஒரு வங்கியில் பார்த்து விட்டு அங்கு வேலை செய்பவரிடம் விசாரித்து விட்டு அவனுக்கு உடனே அழைத்து விசயத்தைக் கூறி விட்டார்...

'இத்தனை நாளாய் கடனுக்காகத் தான் அலைகிறாளா...? இதை ஏன் என்னிடம் சொல்லவில்லை...? சொன்னால் அவளது கௌரவம் குறைந்து விடுமாக்கும்...'

என்று எண்ணி கொண்டே நாற்காலியில் சாய்ந்து அமர்ந்தவன் மனதில் நேர்கொண்ட பார்வையும், மிடுக்குமாய்க் கம்பீரமாக வலம் வரும் பவித்ரா நினைவுக்கு வந்தாள்... அதே போல் இப்போது இருக்கும் பவித்ராவும்... அதே நேர்கொண்ட பார்வையும், மிடுக்கும் அவளிடத்தில் இருந்த போதும் பழைய கம்பீரம் அவளிடத்தில் இருந்து காணாமல் போனதை உணர்ந்தவன் எதையோ யோசித்தபடி விழிகளை மூடி கொண்டான்...

பிறகு முடிவு செய்தவனாய் உதவியாளர் கொடுத்திருந்த வங்கி மேலாளரின் அலைப்பேசிக்கு அழைத்தவன் தன்னை யாரென்று அறிமுகப்படுத்திக் கொண்டான்... அவனது பெயரை விட அவனது நிறுவனம் அவனுக்கான மரியாதையைப் பெற்றுத் தந்தது... அதை நினைத்து அவன் மனதில் சிரித்துக் கொண்டான்...

அங்கு வங்கியில் வெளியில் காத்திருக்கும் தனது மனைவியைப் பற்றி எடுத்துரைத்தவன், "அவங்க என்னோட மிஸஸ் தான்... எந்தவொரு கேள்வியும் கேட்காமல் அவளுக்கு வேண்டிய லோனை சாங்க்சன் பண்ணி விடுங்க..."

"சார்... அதுக்கு நிறைய ப்ரோசிஜர் இருக்கு..." என்று இழுத்தார் அந்த மேலாளர்...

"அது நீங்க தர்ற கடனுக்குத் தான்... நான் தரும் கடனுக்கு இல்லை... அவள் எவ்வளவு பணம் கேட்பதாக இருந்தாலும் நான் தருகிறேன்... ஆனால் அதை நீங்க பாங்க்கில் இருந்து கடன் கொடுப்பது போல் அவளிடம் கொடுத்து விடுங்கள்..."

"அப்படியே செஞ்சிர்றேன் சார்... இதை நீங்களே மேடம் கிட்ட நேரா கொடுக்கலாமே..."

"அவள் ரொம்பச் சுயமரியாதை உள்ளவள்... கணவனே ஆனாலும் என்னோட பணத்துக்குக் கூட ஆசைப்பட மாட்டாள்... என்னிடம் வாய் விட்டு கேட்கவும் மாட்டாள்..." அத்தனை பெருமிதம் வழிந்தது அவனது வார்த்தையில்...

இறுதியாக அலைப்பேசியை அணைக்கும் முன், "அவள் யார்ன்னு உங்களுக்குத் தெரியுமா...?" என்றவன் அவளது நிறுவனத்தின் பெயரை சொல்லி,

"அதன் எம்டி... சுயமரியாதை எதிர்பார்த்து அதைத் தூக்கி எறிந்தவள்... இப்போதாவது புரிந்ததா அவள் யாரென்று... யாராக இருந்தாலும் இப்படிக் கடன் கேட்டு வர்றவங்களைத் தவிக்க விடாதீங்க... அவங்களுக்கு ஒரு கஷ்டம்ங்கிறதால தான் உங்களைத் தேடி வர்றாங்க... நீங்களும் மேலும் கஷ்டப்படுத்தினால் என்ன அர்த்தம்...? என்னிடம் நீங்க பேசி கொண்டிருப்பது கூட என் அந்தஸ்திற்காகத் தான்... எனக்காக அல்ல... இந்த மாதிரியான எண்ணங்களை மாத்திக்கோங்க... எல்லோரும் மனிதர்கள் தான்..." என்று அவருக்கு நன்கு உறைக்கும்படி கொட்டு வைத்து விட்டே அவன் அலைப்பேசியை அணைத்தான்...

அதற்குப் பிறகும் வங்கி மேலாளர் பவித்ராவிற்குக் கடன் கொடுக்காது இருப்பாரா... உடனே அவளை அழைத்து அவள் கேட்ட கடன் தொகையை வழங்கி விட்டார்...

இரவு வந்ததும் அறைக்கு வந்த பவித்ராவை விக்ரம் கூர்ந்து கவனித்துக் கொண்டு இருந்தான்... அவனைப் பார்ப்பதும் ஏதோ கேட்க நினைத்து அவன் அருகில் வருவதும் பின் விலகி போவதும் என்று பரபரப்பாய் இருந்தவளை கண்டு முடிவு செய்தவனாய் அவள் அருகில் வந்ததும் அவளது கையைக் கப்பென்று பிடித்து நிறுத்தினான்...

"வயித்தில் இருக்கும் போதே என் மகனுக்கு நடக்கப் பழகி கொடுக்கிறியா...?" என்று கேட்டான் கிண்டலாய்...

"மகன் இல்லை... மகள்..." என்றாள் அவள் எரிச்சலுடன்...

"சரி ஏதோ ஒண்ணு... அது பிறந்து வந்து நடை பழகி கொள்ளட்டும்... நீ அடங்கி ஒடுங்கி பேசாம படுத்து தூங்கும் வேலையைப் பார்..." என்றான் கட்டளையிடும் குரலில்...

அவன் சொன்னதைச் செய்யாது அவள் தயங்கி கொண்டே, "விக்ரமா..." என்க...

"விக்ரமாவுக்கு என்ன வச்சியிருக்க...?" அவளது அழைப்பில் அவனது முகத்தில் புன்னகை பூத்தது...

"ரிசப்சனுக்குப் பூ அலங்காரத்துக்கு ஆள் ஏற்பாடு பண்ணிட்டியா...?" என்றவளை அவன் கூர்ந்து பார்த்தான்...

"ம்... பண்ணியாச்சு..."

ஒரு விழா என்றாலே முதலில் உணவுக்கு அடுத்து ஏற்பாடு செய்வது மேடை அலங்காரம் தானே...

அதைக் கேட்டு ஏமாற்றத்துடன் நகரப் போனவளின் கைப்பிடித்து அருகில் அமர்த்தியவன், "என்ன விசயம்ன்னு முழுசா சொல்லிட்டு போ..."

"ரிசப்சனுக்கான பூ அலங்காரத்தை நான் பண்ணவா...? இந்தத் தொழிலில் இறங்கலாம்ன்னு முடிவு பண்ணி இருக்கேன்... அதான் நம்ம வீட்டு ஃபங்க்சனில் இருந்து ஆரம்பிக்கலாம்ன்னு எனக்குத் தோணுது... எனக்கும் இது க்ராண்ட் ஓபனிங்கா இருக்கும்..."

அவளது நோக்கம் கண்டு அவன் வியப்பாய் அவளைப் பார்த்தான்... அவனுக்குப் பெண்கள் என்றாலே அறவே பிடிக்காது... அதுவும் வேலைக்கும் போகும் பெண்களைச் சுத்தமாய்ப் பிடிக்காது... ஆனால் தன்னம்பிக்கையுடன் நிமிர்ந்து நிற்கும் இந்தப் பெண்ணவளை ஏனோ அவனுக்கு மிகவும் பிடித்துப் போனது... அதே சமயம் அவளை நினைத்து பிரமிப்பாகவும் இருந்தது...

அன்று காமாட்சி அம்மாவிடம் மனைவி கூறிய வார்த்தைகள் அவனது ஞாபகத்தில் வந்தது...

கணவனது பார்வையைச் சந்தேகப் பார்வையாக எண்ணி கொண்டவள், "நான் இதுக்கான கோர்ஸ் படிச்சியிருக்கேன்... இன்னைக்குத் தான் பாங்க்ல லோன் சாங்க்சன் பண்ணினாங்க..." என்று அவசரமாய் உரைத்தவளை கண்டு அவனது புன்னகை விரிந்தது...

"கடைசியில் இதையாவது கற்று வைத்திருந்தாயே... இல்லை என்றால்..."

"இல்லை என்றால்...?"

"வெற்று மண்ணாகி இருப்பாய்..." கேலி அவன் உடன் பிறந்தது போலும்...

அவனது வார்த்தையில் ரோசத்துடன் அவனை நிமிர்ந்து பார்த்தவள், "எந்த வேலையாக இருந்தாலும் அதில் இருக்கும் வாய்ப்பை பயன்படுத்தி முன்னுக்கு வந்து காட்டும் திறமை எனக்கு இருக்கிறது... நிச்சயம் நீ நினைப்பது போல் வெற்று மண்ணாகி போயிருக்க மாட்டேன்..." என்று நிமிர்வாய் கூறியவளின் நிமிர்வை ரசித்துப் பார்த்தவன்,

"ஓகே... உன்னை நம்பி தான் இந்தப் பொறுப்பை ஒப்படைக்கிறேன்... எங்காவது சொதப்பி வைத்து என் பெயரை கேவலப்படுத்தி விடாதே..."

தனது ஒப்புதலை கூட அவன் சீண்டலாகத் தான் கூறினான்...

"அதெல்லாம் நான் நல்லா செய்வேன்..." என்று ரோசத்துடன் கூறியவள்,

"அந்தப் பூ அலங்காரத்திற்குக் கொடுத்த பணம்..." கவலையுடன் நிறுத்தியவளை கண்டு அவனுக்குப் புன்னகை வந்த போதும் அடக்கி கொண்டு,

"வேஸ்ட் தான் என்ன செய்றது..." என்று சலித்துக் கொள்பவன் போல் கூறியவன்,

"ரொம்ப யோசிக்காம போய்ப் படு... போ..." என்றவன் தானும் படுத்து விழிகளை மூடி கொண்டான்...

அவளும் மறுபக்கம் வந்து படுத்தவள் நிம்மதியாய் விழிகளை மூடினாள்...

*************************

வரவேற்பு மேடையில் கணவனுடன் இணைந்து வந்திருந்த விருந்தினர்களை இன்முகத்துடன் வரவேற்று புன்னகையுடன் பேசிய தங்கையை ஆச்சிரியமாய்ப் பார்த்தாள் பவித்ரா... இன்னமும் அவர்களுக்குள் வாழ்க்கை சரியாக வில்லைத் தான்... ஆனாலும் இந்த இணக்கம் அவளுக்குப் பெருத்த வியப்பாக இருந்தது...

பவித்ராவின் கை வண்ணத்தில் மேடை அலங்காரம் கண்களைக் கவரும் வகையில் அழகாய் ஜொலித்தது... அத்தனை நேர்த்தியாய் சிரத்தை எடுத்துச் செய்து இருந்தாள் அவள்... அவள் கேட்ட எல்லாப் பூ வகைகளையும் வாங்கி அனுப்பி இருந்தார் காமாட்சி அம்மாள்... இப்போது அவளும் அவரும் இந்தத் தொழிலில் பங்குதாரர்கள்...

ஏனோ அவரிடத்தில் அப்படி ஒரு பிடிப்பு ஏற்பட்டுப் போனது அவளுக்கு...

அந்நேரம் அவளது பாட்டி, அன்னை, சித்தி மூவரும் அவளுடன் பேச வந்த போது பேச பிடிக்காது மெல்லிசை கச்சேரி நடக்கும் இடத்தில் வந்து அமர்ந்து கொண்டாள்... அவளது மனம் பழைய நினைவுகளின் தாக்கத்தில் உலைக்களமாய்க் கொதித்துக் கொண்டிருந்தது...

அந்நேரம் அவளது கணவன் விக்ரமின் கம்பீரமான குரலில் அந்தப் பாடல் அவளது காதில் ஒலித்தது... அவள் திடுக்கிட்டு போய் நிமிர்ந்து பார்த்தாள்... மனைவியின் பார்வையை உணர்ந்தவனாய் அவனும் அவளை இமைக்காது பார்த்தபடி பாடி கொண்டிருந்தான்...

"கண்ணே கனியே உன்னைக் கை விடமாட்டேன்
சத்தியம் சத்தியம் இது சத்தியமே
மாலை சூடிய காலை கதிரின் மேலே
சத்தியம் சத்தியம் இது சத்தியமே

ஒரு குழந்தை போலே ஒரு வைரம் போலே
தூய்மையான என் சத்தியம் புனிதமானது

இப்பிறவியில் இன்னொரு பெண்ணைச் சிந்தையிலும் தொடேன்
பிறிதோர் பக்கம் மனம் சாயா பிரியம் காப்பேன்

செல்ல கொலுசின் சிணுங்கல் அறிந்து சேவை செய்வேன்
நெற்றி பொட்டில் முத்தம் பதித்து நித்தம் எழுவேன்

கை பொருள் யாவும் கரைந்தாலும் கணக்கு கேளேன்
ஒவ்வொரு வாதம் முடியும் போதும் உன்னிடம் தோற்பேன்

கண்ணே கனியே உன்னைக் கை விடமாட்டேன்
சத்தியம் சத்தியம் இது சத்தியமே
மாலை சூடிய காலை கதிரின் மேலே
சத்தியம் சத்தியம் இது சத்தியமே

அர்த்த ஜாம திருடன் போல

அதிர்ந்து பேசேன்
காமம் தீரும் பொழுதிலும்
எந்தன் காதல் தீரேன்

மாத மலர்ச்சி மறையும் வயதில்
மார்பு கொடுப்பேன்
நோய் மடியோடு நீ வீழ்ந்தால்
தாய் மடியாவேன்

சுவாசம் போல அருகில் இருந்து
சுகப்பட வைப்பேன்
உந்தன் உறவை எந்தன் உறவாய்
நெஞ்சில் சுமப்பேன்

உன் கனவுகள் நிஜமாக
என்னையே தருவேன்
உன் வாழ்வு மண்ணில் நீள
என் உயிர் தருவேன்

கண்ணே கனியே உன்னைக் கை விடமாட்டேன்
சத்தியம் சத்தியம் இது சத்தியமே
மாலை சூடிய காலை கதிரின் மேலே
சத்தியம் சத்தியம் இது சத்தியமே"

அவளது ஆழ்மனதின் ஏக்கங்களுக்கு வார்த்தைகள் வடித்துப் பாடியவனைக் கண்டு அவள் அதிர்ந்து போய்ப் பார்த்தாள்... அவளது தேகம் உணர்ச்சி வேகத்தில் நடுங்கியது... அவனது குரலில் அத்தனை பாவனை... அத்தனை உணர்வுகள்... அவன் அந்தப் பாடலை உணர்ந்து பாடினானா, இல்லையா என்று அவளுக்குத் தெரியாது... ஆனால் கணவனது குரலில் அவளது ஆழ் மனதில் புதைந்திருந்த காதல் மெல்ல மெல்ல உயிர்த்து எழுந்தது...

காமுகனாய் அவளது பெண்மையைக் களவாண்ட கணவன் எந்தக் கணத்தில் காதலனாய் மாறி அவளது மனதில் இடம் பிடித்தான் என்று அவளுக்குத் தெரியாது... இதோ இந்தக் கணம் கூட அவனது ஒற்றைக் காதல் பார்வைக்கு அவளது மனம் ஏங்கி தவிக்கிறது... அவனது

ஆறுதலான அரவணைப்புக்கு அவளது உள்ளம் ஏக்கத்துடன் துடிக்கிறது... அவனது நெஞ்சத்தில் காதலாய் மஞ்சம் கொள்ள அவளது காதல் மனம் தவியாய் தவித்துத் துடிக்கிறது அவளைப் போல்...

காதலில்லா கணவனிடம் தன் காதலை எப்படிச் சொல்வது என்று தெரியாது அவள் வேதனையுடன் தலையைக் குனிந்து கொண்டாள்... கணவன் மீதான அவளது வேதனை, வருத்தம், வெறுப்பைத் தாண்டி அவளது மனதில் இருந்த காதல் அத்தனையும் அவளது விழிநீராய் மாறி அருவியாய் பெருகி வழிந்தது...

பெயரளவில் பவித்ரா பின்னே இருந்த விக்ரம் அவளுள் நீக்கமற கலந்து அவளது உயிர் சுவாசமாக மாறி இருந்தான்... இறுதியில் இரும்பு பெண்ணான பவித்ராவையும் காதல் நோய் தாக்கி கோழையாய் மாற்றி விட்டது...!!!

மொழி பேசும்...!!!

## விழி : 13

வரவேற்பிற்கு வந்த விக்ரம் மற்றும் வினோத்தின் நண்பர்கள் தான் இந்தப் பாடலை தேர்ந்தெடுத்து கொடுத்து அவனைப் பாட சொல்லி வற்புறுத்தினர்... அரை மணி நேரத்திற்கு முன் தான் அவன் இந்தப் பாடலை கேட்டது... கல்லூரி காலங்களில் திரைப்படப் பாடல்கள் கேட்டது... அதன் பிறகு தொழில் என்று வந்த பின் அவன் திரைப்படம் பார்ப்பது, பாடல் கேட்பது எல்லாமே அபூர்வமாகப் போய் விட்டது...

வெகுநாட்கள் கழித்துக் கேட்ட இந்தப் பாடலின் வரிகள் அவனின் மனதினை ஏதோ செய்தது... ஒரு பெண்ணவளை அதுவும் மனைவியை இந்தளவுக்குத் தாங்க வேண்டுமா என்று வியப்பு எழுந்த அதே சமயம் ஆணுக்கு இதை விட்டால் வேறு வேலையே இல்லையா என்கிற அலட்சிய பாவமும் ஒருங்கே அவனுள் எழுந்தது...

ஆனால் இப்போது பாடும் போது அதுவும் தனது பெண்ணவளை பார்த்துக் கொண்டு பாடும் போது இப்படி எல்லாம் அவளைத் தாங்கினால தான் என்ன? என்கிற கேள்வி அவனது மனதில் வேகமாய் எழுந்தது... அவளைத் தாங்க வேண்டும் என்கிற ஆசை பேராசையாக அவனது மனதினை ஆட்டி படைத்தது... அவனுக்கே தன்னைக் குறித்துப் பெருத்த ஆச்சிரியம் தான்...

பெண் என்றால் பேயும் இரங்கும் என்பார்கள்... ஆனால் இந்த விக்ரம் எந்தப் பெண்ணைக் கண்டும் இரங்கியதாய் சரித்திரம் இல்லை... ஆனால் முதன்முறையாய் மனைவி என்னும் பெண்ணிடத்தில் இரங்கவும் தோன்றியது... இறங்கி போகவும் தோன்றியது... ஏனெனில் அதற்கு முழுத் தகுதி உடையவள் அவனது மனைவி பவித்ரா என்பதை அவன் உணர்ந்தே இருந்தான்...

வரவேற்பு நிகழ்ச்சிக்காக எல்லோருக்கும் புது உடைகள் எடுத்த போது அவள் மட்டும் எதுவும் எடுக்கவில்லை...

"நம் மது, பல்லவி ரெண்டு பேருக்கும் எடுத்தாச்சு விக்ரம்... ஆனால் பவி மட்டும் எதுவுமே வேண்டாம்ன்னு சொல்லிட்டாள்..." என்று ரேவதி அவனிடத்தில் கூறிய போது அவனுக்கு ஆச்சிரியமாக இருந்தது...

அன்றே அவன் மனைவியிடத்தில் வந்து அதைக் கேட்டான்...

"நீ மட்டும் ஏன் ட்ரெஸ் எடுக்கலை...?"

அதற்குப் பதில் சொல்லாது அவள் அமைதியாக இருந்தாள்...

"நான் வேணா உனக்குத் தனியா பணம் தரவா...?" அவன் சற்றுத் தன்மையாகத் தான் கேட்டான்...

"எனக்கு யாரும் எடுத்துக் கொடுக்கத் தேவையில்லை... நானே எடுத்து கொள்வேன்..." என்று அவள் சற்று விறைப்பாகப் பதில் கூறினாள்...

அவளது பேச்சில் அவனுக்குக் கோபம் வந்தது... அவன் என்ன யாரோவா அவளுக்கு என்று ஆத்திரமாக வந்தது...

"எனக்குன்னு ஒரு ஸ்டேட்டஸ் இருக்கு... அதுக்கு ஏத்த மாதிரி நீ இருக்கணும்... எதையாவது உடுத்திட்டு வந்து என் மானத்தை வாங்காதே..." என்று அவன் கோபத்தில் கத்தினான்...

"என்னுடைய வருமானத்தில் தான் நான் எனக்கான உடையை வாங்க முடியும்... உனக்காக எல்லாம் என்னை நான் மாற்றிக் கொள்ள முடியாது..." என்று அவள் பதிலுக்கு வெடுவெடுத்தாள்...

அதைக் கேட்டு அவன் அயர்ந்து போய்விட்டான்... ஆனாலும் பெண்ணவளின் சுயமரியாதை கண்டு அவனுக்குப் பெருத்த ஆச்சிரியமாக இருந்தது... கொஞ்ச நாட்களுக்கு முன் நடந்த சம்பவம் அவன் நினைவில் தோன்றியது...

"விக்ரம்... பவிக்கு ஒரு ஃபோன் வாங்கிக் கொடுடா... அவள் எங்கே போகிறாள், என்ன பண்ணுகிறாள்ன்னு எனக்கு

ஒண்ணும் தெரிய மாட்டேங்குது... அவள் வீடு வந்து சேரும் வரை மனசு திக்திக்ன்னு அடிச்சிக்குது..."

அன்னை சொல்லை தட்டாது அன்றே அவன் விலையுயர்ந்த அலைப்பேசியை வாங்கி மனைவியிடம் கொடுத்தான்... கொடுத்தவன் தான் வாங்கியதாய்க் கூறியிருந்தால் பெண்ணவள் சந்தோசமாய் வாங்கி இருந்திருப்பாளோ என்னமோ...

"அம்மா சொன்னாங்க... நீ ஃபோன் இல்லாம இருக்கன்னு... இந்தா இதை வச்சுக்கோ..." இப்படிச் சொன்னவனை ஏறிட்டு பார்த்தவள்,

"எனக்குத் தேவையானதை எனக்கு வாங்கிக்கத் தெரியும்..." என்று முகத்தில் அடித்தார் போன்று கூறிவிட்டு அவள் சென்று விட்டாள்...

விக்ரம் வழக்கம் போல் ஆத்திரத்தில் மூச்சு வாங்க நின்றிருந்தான்...

அப்போது கோபத்தைக் கொடுத்த வார்த்தைகள் இப்போது பெரும் மதிப்பை தோற்றுவித்தது... அதனால் அவன் அமைதியாகி விட்டான்... வார்த்தைகளில் தான் அவன் அமைதியை கடைப்பிடித்தான்... ஆனால் செயலில் அல்ல... மேடை பூ அலங்காரத்திற்கு என்று முன் பணமாகப் பெரும் தொகையை அவன் கொடுத்த போது அவள் ஆச்சிரியமாக அவனைப் பார்த்தாள்...

"இது ரொம்ப அதிகம் விக்ரமா..."

அவளது இந்த அழைப்பிற்காகவே அவளுக்காக இன்னமும் நிறையச் செய்ய வேண்டும் என்கிற ஆவல் அவனுள் எழுந்தது... ஆனால் அது அவளுக்குப் பிடிக்காது என்பதால் தலையைக் குலுக்கி தன்னைச் சமன் செய்து கொண்டவன்,

"எல்லாம் சரியாகத் தான் இருக்கிறது... நீ இதைச் செய்யப் போகிறாயா...? இல்லை வேறு யாரிடமாவது கொடுக்கவா...?" என்று மிரட்டல் தொனியில் அவன் பேசவும் அதற்கு மேல் அவள் வாய் திறக்கவில்லை...

அன்று சொன்னது போல் அவளது வருமானத்தில் எடுத்திருந்த விலை அதிகம் இல்லாத பட்டு புடவை, தங்க, வைர ஆபரணங்கள் இல்லாது பட்டு நூலில் செய்த 'ஃபேஷன் ஜூவெல்லரி' அணிந்து எளிமையாக அவள் காட்சி அளித்தாள்... ஆனால் இத்தனை நாளாய் அவளிடத்தில் தொலைந்திருந்த கம்பீரம் இப்போது மீண்டு இருந்தது... எதையோ சாதித்த ஒரு உணர்வு அவளது முகத்தில்...

எப்போதும் தொழில் எதிரியாய் அவளது வெற்றியில் கோபம் கொள்ளும் தொழிலதிபன் விக்ரம் மறைந்து இன்று கணவன் விக்ரமாய் மனைவியின் வெற்றியில் அவன் மனம் மகிழ்ந்து போனான்... ஒரு ஆணாய் பெண்ணவளை எதிர்பாலினமாய்ப் பார்க்கும் போது தோன்றிய வெறுப்பு இப்போது தன்னவளாய் பெண்ணவளை காணும் போது பெருமையே எழுந்தது அவனது மனதில்...

அந்தக் கணம் அவன் மனதில் இது தான் தோன்றியது... இவள் சாதாரணப் பெண்ணுமல்ல... சராசரியான பெண்ணுமல்ல... சாதிக்கப் பிறந்தவள் என்று... பவித்ராவின் சுயமரியாதை அவனிடத்தில் பெரும் மரியாதையை ஏற்படுத்தி இருந்தது...

அத்தகைய பெண்ணவள் ஏன் இப்படித் தலை குனிந்து அமர்ந்து இருக்கிறாள் என்று அவனுக்குப் பெருத்த யோசனையாக இருந்தது... யோசனையுடனே பாடி முடித்தவனிடம் மீண்டும் பாட சொல்லி வற்புறுத்தியது நண்பர்கள் கூட்டம்... அடுத்த நொடி அவன் தனது கணீர் குரலில் அந்தப் பாடலை பாட ஆரம்பித்தான்...

"சுட்டும் விழிச்சுடர்தான் கண்ணம்மா சூரிய சந்திரரோ
வட்டக் கரியவிழி கண்ணம்மா வானக் கருமை கொள்ளோ
பட்டுக் கருநீலப் புடவை படித்த நல் வைரம்
நட்ட நடு நிசியில் தெரியும் நட்சத்திரங்களடி

சோலை மலரொளியோ உனது சுந்தரப் புன்னகைதான்
நீலக் கடலலையே உனது நெஞ்சின் அலைகளடி
கோலக் குயிலோசை உனது குரலின் இனிமையடி

வாழைக் குமரியடி கண்ணம்மா மருவக் காதல் கொண்டேன்

சாத்திரம் பேசுகிறாய் சாத்திரம் ஏதுக்கடி
ஆத்திரம் கொண்டவர்க்கே கண்ணம்மா சாத்திரம் உண்டோடி
மூத்தவர் சம்மதியில் வதுவை முறைகள் பின்பு செய்வோம்
காத்திருப்பேனோடி இது பார் கன்னத்து முத்தம் ஒன்று"

அவர்களது நிச்சயம் அன்று பாடிய அதே பாரதியார் பாடல்... அதைக் கேட்டு திடுக்கிட்டவளாய் பவித்ரா நிமிர்ந்து கணவனைப் பார்த்தாள்... அன்று போல் இன்றும் கம்பீரமான அவனது குரல் அவளை வசீகரித்தது... அது போல் அவனது தோற்றமும்...

அணிந்திருந்த கோட், டையைக் கழற்றி விட்டு 'ஃபார்மல்'ஆக அணிந்திருந்த வெண்ணிற சட்டையின் மேல் பொத்தானை கழற்றி விட்டு, முழுக்கை சட்டையைச் சற்றே மேலேற்றி விட்டு அலட்சியமாய் நின்றிருந்த அவனது கம்பீரமான அழகு அவளைப் பெரிதும் கவர்ந்து ஈர்த்தது...

ஆழ்மனதில் இருந்த காதல் மேலெழும்பி அவளை உயிருடன் கொன்றதில் அவள் தாங்க முடியாது அந்த இடத்தை விட்டு அகன்றாள்...

விக்ரம் மேடையில் இருந்த போதும் மனையாளின் அழுத விழிகளை அவன் கண்டு கொண்டான்... அவளது வீட்டினர் பேச வந்ததும் அவள் விலகி இங்கு வந்தமர்ந்தது என்று அனைத்தையும் பார்த்து கொண்டிருந்தவன் அவளது அழுகையை வேறு மாதிரியாக எடுத்துக் கொண்டான்... தனது வீட்டினருக்காக அவள் அழுவதாக எண்ணி கொண்டான்...

மனைவியின் இந்தப் பிரச்சினையை எப்படித் தீர்ப்பது என்று அவனுக்குத் தெரியும்... அவனது உதடுகளில் புன்னகை பூத்தது...

'சண்டிராணி தயாராயிரு...?' என்று தனக்குள் முணுமுணுத்துக் கொண்டான்...

அதே நேரம் மணமகளுக்கு என்று தனியே இருக்கும் அறையில் இருந்த குளியறைக்குள் புகுந்து கதவை சாத்தி கொண்ட பவித்ராவிற்கு மேலும் மேலும் அழுகை பொங்கி கொண்டு வந்தது... கடந்து போன காதல் நினைவுகள் மனதினை தாக்க செயலற்று போயிருந்தாள்...

விக்ரமிற்குப் பல்லவியை மணம் முடிக்க எண்ணி அவளது தாத்தா உறுதியாகக் கூறிய போது கூட அவள் தைரியமாக அதை எதிர்த்து நின்றாள் தான்... அவனுக்குத் தங்கையை மணம் முடிக்க அவளுக்குச் சிறிதும் விருப்பம் இல்லை... ஏனெனில் விக்ரமின் குணம் அப்படி... அதனால் தான் தான் எதிர்ப்பதாக அவள் எண்ணி கொண்டாள்... வேண்டும் என்றால் அவன் வேறு பெண்ணைத் திருமணம் செய்து கொள்ளட்டும் என்று அவள் அலட்சியமாகத் தான் இருந்தாள்...

ஆனால் அவளது தாத்தா விக்ரம், பல்லவி திருமணத் தேதியை முடிவு செய்து விட்டு வந்த போது அவள் அதிர்ந்து போனாள்... அதை விட விக்ரம் அதற்குச் சம்மதித்து விட்டான் என்று தெரிந்த போது அவள் உயிருடன் மரித்துப் போனாள்... ஒருவேளை விக்ரம் இதற்குச் சம்மதிக்க மாட்டான் என்று அவள் நம்பினாளோ...

தொழிலை, தனது அந்தஸ்தை தங்கைக்குத் தாரைவார்த்து கொடுத்த பவித்ராவால் தனது கணவனைத் தாரைவார்த்து கொடுக்க முடியவில்லை... அவளது மனம் கலங்கி போனது... அந்தக் கணம் உலகமே வெறுத்துப் போனது போல் ஒரு உணர்வு... அவளது உலகமே கணவனாய் ஆனது போல் ஒரு தோற்றம்...

விருப்புக்கும் வெறுப்புக்கும் நூலளவு இடைவெளி என்பது போல் தனது வெறுப்பு விருப்பாய் எப்போது மாறியது என்று புரியாது அவள் தவித்தாள்... அந்த விருப்பு தான் காதல் என்பதை அந்தப் பேதை உணரவில்லை...

அதே சமயம் கணவனிடத்தில் போய் வாழ்க்கை பிச்சை கேட்டு கெஞ்சவும் அவளுக்கு விருப்பம் இல்லை... அதனால் தான் அவள் வீட்டை விட்டு கிளம்பி சென்றது... அங்கேயே இருந்து இந்தக் கொடுமையைப் பார்க்கும் அளவுக்கு அவளுக்குப் பரந்த மனம் கிடையாது... கணவனை அடுத்தவளுடன் பங்கு போட்டுக் கொள்ளும் அளவுக்கு அவள் முற்போக்குவாதியும் இல்லை...

அதனால் தான் அன்றே அவள் வீட்டை விட்டு வெளியேறினாள்... மீண்டும் விக்ரம் அவளைத் தேடி வந்த போது அவளது மனம் குதியாட்டம் போட தான் செய்தது... ஆனால் அவன் இப்போது பல்லவியின் கணவன் என்கிற எண்ணமே அவளைத் தனக்குள் இறுகி போகச் செய்தது...

அவள் குழந்தை உண்டாகி இருப்பதை அறிந்து கணவன் அவளது வயிற்றைத் தொட்ட போது அவளுள் சிலீரென்று ஒரு பரவசம் உடம்பு முழுவதும் பரவி சிலிர்த்தது... இத்தனை நாள் தாம்பத்திய உறவில் தோன்றாத சிலிர்ப்பை அந்தக் கணம் அவள் உணர்ந்தாள்... கணவனிடம் அவளது மனம் மயங்கி போனது...

இது எல்லாவற்றையும் விட அவன் பல்லவியைத் திருமணம் செய்யவில்லை என்று அவன் வாயால் கேட்ட போது அவளது மனம் மொத்தமாய் அவனிடத்தில் சரணடைந்தது... கணவன் நினைத்து இருந்தால் இந்தத் திருமணம் எளிதாக நடந்து இருக்கும்... ஆனால் அவன் அதைச் செய்யாதது அவளுக்கு அத்தனை நிம்மதியாய் இருந்தது...

பல்லவி, ரேவதி எல்லோரும் அவளிடத்தில் பேசிய வார்த்தைகள் பெண்ணவள் மனதில் பெரும் தாக்கத்தினை ஏற்படுத்தியது... கணவன் மீதான வெறுப்பையும் தாண்டி அவளுள் புதிதாய் நேசம் மலர்ந்தது... ஆனால் பெண்ணவளை மதிக்காத கணவனிடத்தில் காதலை வெளிப்படுத்த அவளுக்கு விருப்பம் இல்லை... அதிலும் அவளது விருப்பம் இல்லாது தொட்ட கணவனது

காட்டுமிராண்டித்தனமான செயலை மன்னிக்க இயலாது இதோ இப்போது கூட அவள் தவிக்கிறாள்...

என்ன செய்வது என்று தெரியாது துடித்தாள் அவள்... காதல் மனைவியான பவித்ரா கணவனிடத்தில் மண்டியிட தயாராக இருந்தாள்... ஆனால் ஒரு பெண்ணாய் அவனது செயலை, பிற்போக்கு எண்ணங்களை மன்னிக்க முடியாது எதிர்த்து நிற்கிறாள்...

திருமணமாகி இத்தனை நாட்களில் கணவன் விக்ரம் கொஞ்சம் கொஞ்சமாய் உயிர் காதலனாய் மாறி விட்டான்... இது தான் பெண்ணவளின் பூ மனமோ...!!!

எவ்வளவு நேரம் அப்படியே இருந்தாளோ... வெளியில் யாரோ வரும் சத்தம் கேட்டு அவசரமாய் முகத்தைக் கழுவி கொண்டு வெளியில் வந்தாள்... அந்தக் கணம் அவளது மனதில் ஒரு உறுதி பிறந்தது... கணவன் என்று தன்னைச் சக மனுசியாய், ஒரு பெண்ணாய் மதிக்கிறானோ அன்று அவள் தனது காதலை அவனிடத்தில் சொல்வது என்று... அன்று மனைவி பவித்ராவாய் அவனை அவள் உயிருக்கு உயிராய் காதலிப்பாள்...

'அதுவரை அடங்கியிரு காதல் மனமே...' என்று தனது மனதை அடக்கி கொண்டாள்...

பாடி முடித்து விட்டு வந்த விக்ரமை எல்லோரும் பாராட்டிய போதும் அவன் தன் மனைவியை மட்டுமே தேடினான்... அவளோ அவன் கண்ணில் அகப்படாமல் கண்ணாமூச்சி ஆட்டம் ஆடினாள்...

'எங்கே போய்த் தொலைஞ்சாள்...?' கோபமாய் நினைத்தவன் மனதில் அவளின் அழுத முகமே மீண்டும் மீண்டும் தோன்றியது...

விருந்தினர் எல்லோரும் உணவு உண்ண சென்ற போது விக்ரம் மண்டபத்தின் வெளியில் வந்து நின்றான்... மனதிற்குள் ஏதோ ஒரு தவிப்பு... அது என்ன என்று

அவனுக்குத் தெரியவில்லை... அந்தக் கணம் அவனது காதில் அந்தக் குரல் தேனாகப் பாய்ந்தது...

"விக்ரமா..."

மனைவியின் அழைப்பில் முகம் மலர திரும்பி பார்த்தான் அவன்... வெகுநாள் தேடி கிடைத்த புதையல் போன்று அவளை அள்ளி பருகுவது போல் அவன் அவளைப் பார்த்து வைத்தான்... அவனது பார்வையில் பாவையவள் மனதில் பலவண்ண வர்ணஜாலங்கள்... கூடவே 'என்னவானது இவனுக்கு' என்று ஆராய்ச்சி பார்வை வேறு...

"சொல்லு பவி..." அவனது வார்த்தை மென்மை குழைந்து வந்தது...

அவனது விழிகள் அவளது முகத்தினை ஆராய்ச்சியாய்ப் பார்த்தது... சற்று முன் அழுதவள் இவள் தானா என்பது போல் அவளது முகம் மலர்ச்சியாய் இருந்தது... அதைக் கண்டு அவனுக்கு நிம்மதியாய் இருந்தது...

"அது வந்து... அது..."

தைரியமான பெண்ணான மனைவியவள் திக்குவதைக் கண்டு அவனுக்கு ஆச்சிரியமாக இருந்தது... அவளைச் சீண்டி பார்க்கவில்லை என்றால் அவன் விக்ரம் இல்லையே...

"அடடே பவித்ரா பெண்ணாய் மாறிட்டு வராளோ..." என்று அவன் கேலி செய்ய... அதில் அவள் அவனை முறைத்து பார்த்தாள்...

"ஆங்... இப்போ தான் நீ என் மனைவி பவித்ரா..." என்று கேலி குரலில் கூறியவனைக் கண்டு கொள்ளாது,

"நான் முதலில் வீட்டுக்குப் போகிறேன்... நீ அத்தை கிட்ட சொல்லிரு..."

"எதுக்கு...?"

"அங்கே எனக்குக் கொஞ்சம் வேலையிருக்கு..."

"என்ன வேலை...?" என்றான் அவனும் விடாது...

"எல்லாத்தையும் உன் கிட்ட சொல்ல முடியாது விக்ரமா..."

"நீ சொல்லாது நானும் உன்னை விடப் போவதில்லை பவித்ரா..."

"ப்ச்... புரிஞ்சிக்க மாட்டியே..." என்று அலுத்து கொண்டவள்,

"பல்லவி அறையில் பூ அலங்காரம் பண்ண போகிறேன்... போதுமா...?"

"எதுக்கு..." என்று மேலே பேச போனவன் அர்த்தம் புரிந்தவனாய் அப்படியே வார்த்தையை விழுங்கி கொண்டான்...

"ஓ... இதெல்லாம் உனக்குத் தெரியுமா...?" அவனது வார்த்தையில் மீண்டும் அவள் முறைக்க...

"அப்போ உனக்கு எல்லாம் தெரியும்... அப்படித் தானே... பின்னே எதுக்காக நீ நம்ம ஃபர்ஸ்ட் நைட் அன்னைக்குத் தூங்கி வழிஞ்ச..."

"நான் தூங்கினதால எதுவும் நடக்காம போச்சா...? இல்லைல்ல... அப்புறம் எதுக்கு வீண் பேச்சு...?" என்றாள் அவள் காட்டமாய்...

"அது என்னால்... உன்னால் இல்லை..."

"ஆமாம், எல்லாம் உன்னால் தான்..." இந்த இழிவான வாழ்க்கைக்கு அவன் தானே காரணம் என்று அவளது உள்ளம் துக்கத்தில் பொங்கியது...

"எப்படியோ உண்மையை ஒத்துக்கிட்டியே ரொம்பச் சந்தோசம்..."

"இப்போ நம்ம வாழ்க்கை பத்தின பேச்சு ரொம்ப அவசியமா...?" என்று முறைத்துக் கொண்டு கூறியவளை பார்த்து உல்லாசம் பொங்க பார்த்தவன்,

"எனக்கு ரொம்ப ரொம்ப அவசியம்..." என்று அவன் அழுத்தி கூற...

அவனது வார்த்தையில் முகம் சிவந்தவளாய் அவள் வேறு பக்கம் திரும்பி நின்று கொண்டு,

"நான் வர்றேன்..."

"இந்நேரம் எங்கே தனியா போகிற...? நான் கொண்டு வந்து விடுறேன்..."

"ஏன் எனக்குப் போகத் தெரியாதா...? நான் என்ன சின்னப் பிள்ளையா...?"

"ம்ஹூம்... அறிவு இருக்கிறவன் அதைச் சொல்ல மாட்டான்..." என்றவன் அவளை மேலும் கீழுமாய் ரசனையாய் பார்த்து வைத்தான்...

"அடேய்..." என்று பல்லை கடித்தவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு பீறிட்டது... வாய் விட்டு சிரித்து விட்டான்...

காற்றில் தலை முடி அலைபாய வசீகரமாய் அவன் சிரித்த அழகு அவளது மனதில் நீங்காத நினைவாய்...!!! பொக்கிசமாய்ப் பத்திரமாய் மனதில் சேமித்து வைத்து கொண்டாள்...

"கொஞ்சம் இரு..." என்றவன் ஓட்டுநரை அழைத்து அவளை வீட்டில் கொண்டு போய் விடச் சொன்னான்...

மனைவி சென்றதும் மண்டபத்தினுள் நுழைந்தவனை வேலைகள் மூழ்கடித்துக் கொண்டது... கடைசியாக எல்லாவற்றையும் முடித்து விட்டு அவன் வீடு வந்த போது நள்ளிரவாகி இருந்தது... வரவேற்பறையில் அமர்ந்து தொலைக்காட்சி பார்த்துக் கொண்டிருந்த வினோத்தை கண்டு அவன் ஆச்சிரியமாய்ப் பார்த்தான்...

"என்னடா இங்கே உட்கார்ந்து இருக்க...? உன் அண்ணி உங்களுக்காக என்னமோ ஸ்பெசலா செய்யப் போறேன்னு சொன்னாளேடா... அதை என்ஜாய் பண்ணாம இங்கே உட்கார்ந்து டிவி பார்த்துக்கிட்டு இருக்க...?"

"அதனால் தான் இங்கே உட்கார்ந்து இருக்கேன்..." என்றான் அவன் சலிப்பாய்... முதலிரவு அன்று ஏற்பட்ட அதே சலிப்பு இன்றும் அவனுள்...

"ஏன்டா...?" விக்ரமிற்குப் புரியவில்லை...

"கல்யாணம் பண்ணியதால் மட்டும் சட்டுன்னு கணவன் உரிமையை நிலைநாட்டிட முடியுமா...?"

யாரோ சம்மட்டியால் அடித்தது போலிருந்தது விக்ரமிற்கு...

"எங்களுக்குள் புரிதல் வர கொஞ்ச நாளாகும்... அது வரைக்கும் இது எல்லாம் வேண்டாம் அண்ணா... அண்ணி கிட்டேயும் சொல்லிருங்க... அவங்க தங்கை தான் என்னோட மனைவி... அதில் எந்த மாற்றமும் இல்லை... அந்த உறவுக்கான உரிமையைக் காதலாய் தான் எடுத்துக்கணும்... இப்படி அவசரமாய் இல்லை... இந்த விசயத்தை நம் வீட்டு பெருசுங்க கிட்ட சொல்லிராதே அண்ணா..."

தம்பியிடம் சரியென்று தலையாட்டி விட்டு எழுந்த விக்ரம் பல விடையில்லா கேள்விகளுடன் தங்களது அறைக்குச் சென்றான்... முதன்முறையாகத் தான் செய்தது தவறோ என்று அவனுக்குத் தோன்றியது... ஏதோ ஒரு குற்றவுணர்வு அவனைப் போட்டுக் குடைந்தது...

அவன் அறைக்குள் நுழைந்த போது பவித்ரா குளித்து விட்டு வெளியில் வந்தாள்... அவளைக் கண்டதும் அவன் அப்படியே நின்றான்... அவளோ அவனைக் கண்டும் காணாதவளாய் கட்டிலில் சென்று படுத்து கொண்டாள்...

'பல்லவி மாதிரி பெண்களுக்கு வினோத் சொல்வது சரி... ஆனால் பவித்ரா மாதிரியான பெண்ணுக்கு...? இவளை எப்போது என்னைப் புரிந்து கொண்டு, வாழ்ந்து, குழந்தை பெற்று...? ம்ஹூம், அவளாக வர வேண்டும் என்றால் அது இந்த ஜென்மத்தில் நடக்காது...' மனதில் சலித்துக் கொண்டவன் துண்டை எடுத்துக் கொண்டு குளியலறைக்குள் புகுந்து கொண்டான்...

குளித்து முடித்து வந்தவன் இரவு விளக்கை போட்டு விட்டு தனது மடி கணினியை உயிர்ப்பித்து வேலையைப் பார்க்கலானான்... இன்றைய பொழுது வரவேற்பு நிகழ்ச்சியில் கழிந்து விட்டதால் நிறைய வேலைகள் தேங்கி நின்றது...

கணவன் வேலை செய்து கொண்டு இருப்பது கண்டு பவித்ராவினுள் பழைய நினைவுகளின் தாக்கம்... இப்போது எல்லாவற்றையும் இழந்து அநாதையாய் நிற்பது போல் ஒரு தோற்றம்... தனது நிலையை நினைத்து அவளது கண்களில் இருந்து கண்ணீர் வழிந்தது... கணவனுக்குக் கண்ணீரை காட்டாது மௌனமாய் அழுது கரைந்தாள்... அவளது அழுகையில் காதல் பிரதான இடத்தைப் பிடித்துக் கொண்டு அவளை மேலும் கழிவிரக்கத்தில் கரைய செய்தது...

வெகுநேரம் விழித்து வேலை பார்த்த விக்ரம் ஒருவழியாய் எல்லாவற்றையும் முடித்து விட்டு படுக்க ஆயத்தமானான்... அப்போது தான் கவனித்தான் மனைவி போர்வை எதுவும் போர்த்திக் கொள்ளாது படுத்திருப்பதை... எழுந்து அவள் அருகில் வந்தவன் அவளுக்குப் போர்வையைப் போர்த்தி விடும் போது தான் கவனித்தான் அவளது விழிகளில் தேங்கியிருந்த விழிநீரை... வைரம் போல் பளபளத்த கண்ணீரை கண்டவன் முகம் யோசனையில் ஆழ்ந்தது...

வினோத் அறைக்குள் நுழைந்தவன் அங்குப் பல்லவி தரையில் கை கால்களைப் பரப்பிக் கொண்டு குப்புற படுத்து இருப்பதைக் கண்டு திகைத்தவன் பின் சிரித்து விட்டான்... சிறு பிள்ளை போன்று வாயை பிளந்தபடி உறங்கும் அவள் அருகே மண்டியிட்டு அமர்ந்தவன் இமைக்காது அவளைப் பார்த்திருந்தான்...

அவனுக்குத் தெரியும் அண்ணனது வாழ்க்கையில் ஏதோ ஒன்று சரியில்லை என்று... அவனது அண்ணியைப் போன்று அவனது மனைவியும் எதிரி குடும்பத்தைச் சேர்ந்தவள் தான்... ஆனாலும் அதை எல்லாம் மனதில் வைத்து கொள்ளாது இங்கு அனுசரித்துச் செல்லும்

அவளைக் கண்டு அவனுக்கு அத்தனை மகிழ்ச்சியாக, பெருமிதமாக இருந்தது...

இனிமேலும் இப்படி ஒதுங்கி இருக்கக் கூடாது... அவளை நன்கு புரிந்து கொள்ள முயற்சிக்க வேண்டும் என்று அவன் எண்ணினான்...

********************

நஷ்டம் அடைந்த நிறுவனம் ஒன்றை குத்தகை எடுப்பதற்காக அந்தப் பெரிய ‘ஹாலில்’ நிறையத் தொழிலதிபர்கள் குழுமியிருந்தனர்... விக்ரம், வர்மா இருவரும் அவர்களோடு இணைந்து அமர்ந்திருந்தனர்... அந்நேரம் அங்கு வந்த பவித்ராவை கண்டு எல்லோரது கண்களும் வியப்பாய்ப் பார்த்தது... ஏனெனில் கடந்த சில மாத காலமாகத் தொழிலில் தலை காட்டாத பவித்ரா இப்போது தரிசனம் தந்திருக்கிறாளே... விக்ரமும் தனது மனைவியைத் தான் இமைக்காது பார்த்துக் கொண்டிருந்தான்...

அங்கு நிறைய நாற்காலிகள் காலியாக இருந்த போதும் அவள் யார் அருகிலும் அமராது நேரே கணவன் அருகில் வந்தவள் அவனை ஒரு பார்வை பார்த்தாள்... கால் மேல் கால் போட்டுக் கொண்டு அமர்ந்திருந்த விக்ரம் தனது தோரணையைச் சிறிதும் மாற்றிக் கொள்ளாது திமிராய் அவளைப் பார்த்தான்...

'இவனும், இவன் திமிரும் கூடப் பிறந்தது...' என்று மனதிற்குள் கணவனைத் தாளித்தபடி அவன் அருகில் இருந்த நாற்காலியில் அமர்ந்தாள்...

"பூக்கார அம்மாவுக்கு இங்கே என்ன வேலை...? அதாவது இரும்படிக்கிற இடத்தில் ஈக்கு என்ன வேலைன்னு கேட்கிறேன்..." என்று அவன் மனைவி புறம் சரிந்து கேலியாய் முணுமுணுத்தான்...

"எங்க நிறுவனம் சார்பில் நான் வந்திருக்கிறேன்..." என்றாள் அவள் கம்பீரமாக... அவளது கம்பீரத்தை

கணவனவன் மிகவும் ரசித்துப் பார்த்தான்...

இந்தக் காட்சியை எல்லோரும் அதிசயமாய்ப் பார்த்தனர்... விக்ரமின் மறுபக்கம் அமர்ந்திருந்த வர்மாவும் அதிசயமாய் அவர்களைப் பார்த்தார்...

"என்ன மிஸ்டர். வர்மா... காணாததைக் கண்டதது போல் இது என்ன பார்வை...? நாங்கள் இருவரும் கணவன், மனைவி... எங்களுக்குள் இணக்கம் இல்லாமலா எனது குழந்தை அவளது வயித்தில் வளர்கிறது...?" ஒற்றைப் புருவம் தூக்கியபடி அவன் வர்மாவை கிண்டலாய்ச் சீண்டினான்...

"வாயை மூடிட்டு சும்மா இருக்க மாட்டியா...?" பவித்ரா கடுப்புடன் அவனது காதை கடித்தாள்...

"நம்மளோட அருமை, பெருமைகளை நாமளே தானே சொல்லிக்கணும்..." என்றான் அவனும் விடாது புன்சிரிப்புடன்...

"விக்ரமா..." என்று அவள் அவனை முறைத்து பார்க்க... அதில் கண்கள் மின்ன அவன் அமைதியானான்...

குத்தகை தொடங்க ஆரம்பித்ததும் விக்ரமும், பவித்ராவும் இணக்க நிலை மறந்து விறைப்பாய் அமர்ந்தனர்... இருவரும் கணவன், மனைவி தான்... ஆனாலும் இருவரும் அங்குப் போட்டியாளராய் வந்திருந்தனர்... அதனால் குத்தகை பேர போட்டி சூடு பிடித்தது...

இறுதியில் பவித்ராவே குத்தகையை வென்று எடுத்தாள்... வெற்றி களிப்போடு அவள் கணவனைத் திரும்பி பார்த்தாள்... அவனோ சட்டென்று அங்கிருந்து எழுந்து சென்று விட்டான்... அந்தக் கணம் வெற்றி பெற்ற சந்தோசம் இல்லாது ஒருவித வெறுமை அவளது மனதினை ஆக்கிரமித்தது...

அவள் விழிகளில் விழிநீர் கோர்க்க நடந்து செல்லும் கணவனின் முதுகை வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தாள்...

பவித்ராவின் கலக்கத்திற்கு நேர்மாறாய் இருந்தது விக்ரமின் மனநிலை... மனைவிக்கு முதுகு காட்டி சென்று கொண்டிருந்தவனின் முகத்திலோ அத்தனை புன்னகை... எதையோ சாதித்து விட்ட பெருமை அப்பட்டமாய்த் தெரிந்தது... அந்தச் சந்தோசத்தில் அவன் தனது நடையை எட்டி போட்டான் உற்சாகமாய்... அந்தக் கணம் அவனது காதுகளில் திருவேங்கடத்திடம் தான் கூறிய வார்த்தைகள் மீண்டும் மீண்டும் ஒலித்தது...

"உங்களை மட்டுமல்ல என் தாத்தாவையும் சேர்த்து தான் சொல்கிறேன்... சின்னஞ்சிறுசுக சண்டை போட்டால் என்ன விசயம்ன்னு கேட்டு ரெண்டு பேருக்கும் இடையில் சமரசம் பேசி சேர்த்து வைக்கணும்... அதை விட்டுட்டு இப்படியா பவி வீட்டை விட்டு போகும் அளவுக்கு நடந்து இருப்பீங்க...? இதனோட விளைவுகளை நீங்க நல்லா அனுபவிப்பீங்க..."

அன்று அவன் கூறிய விளைவுகளை இன்று நடத்தி காட்டி விட்டான் வெற்றிகரமாக... அதுவும் மனைவிக்குச் சாதகமாய்... அவளை ஒரு சாதனை பெண்ணாய் மாற்றும் பொருட்டு...!!!

மொழி பேசும்...!!!

## விழி : 14

அலுவலகத்தில் வந்தமர்ந்த விக்ரமிற்கு மனதிற்கு மிகவும் சந்தோசமாக இருந்தது… இது தான் முதல் முறை… தனது தோல்வியில், எதிரியவளின் வெற்றியில் அவன் சந்தோசப்படுவது… எதிரியாக இருந்த போதும் அவள் அவனது இனிய எதிரி அல்லவா… அந்தக் கணம் இல்லாள் முகத்தில் தோன்றிய வெற்றி களிப்பு அவனது மனக்கண்ணில் வலம் வந்தது… கூடவே மனதில் வருத்தமும்…

பவித்ரா வீட்டை விட்டு போனதற்குக் காரணம் திருவேங்கடம் அவளிடம் இருந்து நிறுவனத்தின் உரிமையைத் திரும்பப் பெற்று கொண்டதால் தான் என்று அவன் நினைத்தான்… அதனால் தான் அவள் மனம் வெதும்பி ஊரை விட்டு சென்று விட்டாள் என்று அவனாக எண்ணி கொண்டான்… அதைக் கேள்வியுற்றதும் அவனுக்கு அப்படி ஒரு கோபம் வந்தது…

அவன் ஊரை விட்டு செல்ல அவள் காரணமாய் இருந்த போதும் இப்போது அவனால் அவளை எள்ளல் கொள்ள முடியவில்லை… மாறாக அவளது தாத்தாவிடம் அவனைக் கோபம் கொள்ள வைத்தது… அவரிடம் சவால் விட வைத்தது… அவன் சவால் விட்டது போல் அதில் வெற்றி பெற்றும் காட்டி விட்டான்…

மனைவியவள் வெற்றியில் அவனுக்குச் சந்தோசம் தான்… ஆனால் அதை வெளிப்படையாக அவன் காட்டினால் அவளுக்குச் சந்தேகம் வரும்… எப்போதும் கோபம் கொள்ளும் விக்ரமை பார்த்து வந்தவளுக்கு இந்த விக்ரம் அவளுக்குப் புதிதாக இருக்கும்… அவளைச் சந்தேகம் கொள்ள வைக்கும்… அதே சமயம் அவளைச் சிந்திக்கவும் வைக்கும்… அப்படி அவள் சிந்திப்பது அவளுக்கு நல்லது அல்லவே… அவள் அவளாக நிமிர்ந்து நிற்க வேண்டும்… அது தான் இப்போது முக்கியம்…

பவித்ராவை பழையபடி வீறு கொண்டு எழ செய்யக் கணவன் விக்ரமை விட எதிரி விக்ரம் தான் இப்போதைக்குத் தேவை... மனைவிக்குக் கிடைக்க வேண்டிய நியாயத்திற்காக அவன் தன்னை வெளிக்காட்டி கொள்ளவில்லை...

'ஆனாலும் பவித்ரா உனக்கு இருக்கிற ரோசம் யாருக்கும் வராது...? ரோசம் வந்தால் இப்படித் தான் உன்னுடைய உழைப்பை தாரைவார்த்து கொடுத்துட்டு போவியா...? என் தாத்தாவும் தான் இப்படி எல்லாம் என்னை மிரட்டினார்... நான் எதிர்த்துக் கேள்வி கேட்கவில்லையா...?' என்று ஒரு மனம் மனைவியிடம் கேள்வி கேட்டாலும் மறுமனம் அவளின் தன்மானத்தை மெச்ச தான் செய்தது...

அதே நேரம் தனது அலுவகத்தில் இருந்த பவித்ராவின் நினைவுகளிலும் மன்னவனின் ஊர்வலமே... அவளுக்குக் கிடைத்த வெற்றியின் மகிழ்ச்சி இப்போது அவளுக்குத் துக்கமாய்த் தெரிந்தது... இத்தனை நாள் இனித்த வெற்றி இப்போது முற்றிலும் கசந்து வெறுத்தது... இதற்கு முன் எதிரியாய் கணவனை வென்ற போது தோன்றாத துயரம் இப்போது அவள் மனதில் தோன்றியது... எல்லாவற்றையும் விட்டு விட்டு எங்காவது ஓடி போய் விடுவோமோ என்று கூட அவளுக்கு ஒரு எண்ணம் தோன்றியது...

சில நாட்களுக்கு முன் நிகழ்ந்த நிகழ்வு அவளது நினைவில் தோன்றி அந்த எண்ணத்தைத் தடை செய்தது...

அன்று வழக்கம் போலும் பவித்ரா தனது அலுவலகத்தில் இருந்த போது திருவேங்கடம் அவளைச் சந்திக்க வந்தார்... தன்னைத் தேடி வந்தவரை முகம் மலர வரவேற்கவில்லை என்றாலும் மாரியாதை தரும் பொருட்டு,

"வாங்க..." என்று வரவேற்றவள் அவரை அங்கிருந்த நாற்காலியில் அமர சொன்னாள் பவித்ரா...

திருவேங்கடத்தின் விழிகள் அந்தச் சிறிய அலுவலகத்தை வலம் வந்தது... ஒரு சிறிய அறை, உதவிக்கு என்று ஒரு பெண் இது தான் அந்த அலுவலகம்... பெரிய ஏசி அறையில்

சுழல் நாற்காலியில் அமர்ந்து தொழில் செய்யும் பேத்தியின் கம்பீரமான தோற்றம் அவரது நினைவில் வந்தது... இப்போதும் அந்தக் கம்பீரம் சிறிதும் குறையாது இருந்த பேத்தியை அவரது விழிகள் நிறைவாய்ப் பார்த்தது... அவள் எங்கும் பிழைத்து கொள்வாள் என்று பெருமிதமாக நினைத்தார்...

இத்தனையும் அவர் நினைத்து முடிப்பதற்குள் அவள் வேலை செய்யும் பெண்ணைக் கண்களால் வெளியேறும் படி உத்தரவிட்டாள்... அவளது அந்தக் கம்பீரம் கண்டு அவரது மனம் பெருமிதம் கொண்டது...

"அப்புறம் சொல்லுங்க... என்ன விசயமா வந்திருக்கீங்க சார்...?"

தொழில் ரீதியாய் பேசிய பேத்தியை கண்டு திடுக்கிட்டுப் போனார் அவர்... அவளோ சிறிதும் இளகாது அவரைப் பார்த்தாள்...

"பவி... நான் இப்போது உன்னிடம் ஒன்று கேட்டு வந்திருக்கேன்..." என்றவரை கண்டு எதுவும் பேசாது அமைதியாக இருந்தாள்...

"உன் கையைக் காலாய் நினைச்சு கெஞ்சி கேட்கிறேன்... நம் தொழிலை சரிவில் இருந்து நீ தான் காப்பாற்ற வேண்டும்..." என்று அவளது கைகளைப் பிடித்துக் கொண்டு விழிகள் கசிய கேட்டவரை கண்டு அவள் ஸ்தம்பித்துப் போனாள்... வளர்த்த பாசம் அவளின் மனதினை உருக்கியது...

"தாத்தா... என்ன இது...? இவ்வளவு பெரிய வார்த்தையைச் சொல்லிக்கிட்டு...?"

"எனக்கு வேறுவழி தெரியலைம்மா... பல்லவிக்கு உன் அளவுக்குக் கெட்டிக்காரத்தனம் இல்லை... என்னாலும் முன்பு மாதிரி தொழிலை பார்க்க முடியவில்லை... விக்ரம், வர்மா இருவரது போட்டியை என்னால் சமாளிக்க

முடியவில்லை பவி... அதிலும் விக்ரமை எந்த வழியிலும் என்னால் கட்டுப்படுத்த முடியவில்லை..."

"இவனா தாத்தா உங்க தொழிலை கட்டி காப்பாத்த போகிறான்...?" அன்றைய நாள் நினைவில் அவளது மனம் கசந்து போனது...

"தப்பு தான்ம்மா... நான் அப்படிச் சொன்னது தப்பு தான்... என்னை மன்னிச்சிரு... உனக்கே தெரியும் தொழில் என்னோட உயிர் மூச்சுன்னு... இப்படியே இது சரிந்தால் நான் என் உயிரை விட்டு விடுவேன்..." என்றவரிடம் இரக்கமற்று பேச பெண்ணவளால் முடியவில்லை...

"நீ பழையபடி தொழிலை கையில் எடுக்க வேண்டும்... நம் தொழிலை சரிவில் இருந்து காப்பாத்த வேண்டும்..." என்று கெஞ்சியவரை கண்டு ஒரு நொடி யோசித்தவள் மறுநொடி அவரிடம்,

"சரி வருகிறேன்... ஆனால் ஒரு நிபந்தனை... நான் அங்கு வருவது ஒரு தொழிலாளியாகத் தான்... அதற்கான ஊதியத்தை மட்டும் நான் எடுத்து கொள்வேன்... மத்தபடி எனக்கும் கம்பெனிக்கும் எந்தச் சம்பந்தமும் இல்லை... எனது தொழில் சாம்ராஜ்யம் இது தான்... இது மட்டும் தான்..." என்று கூறியவளின் விழிகள் தனது அலுவலக அறையை ராணியின் கம்பீரத்துடன் வலம் வந்தது...

சிறு தொழிலாக இருந்த போதும் இந்தச் சாம்ராஜ்யத்தின் ராணி அவள் அல்லவா... அவளது தன்னம்பிக்கை கர்வமாகப் பிரதிபலித்தது அவளது விழிகளில்...

"பவிம்மா..." என்று விழிகள் கசிய தன்னைப் பார்த்தவரை கண்டு அவளுக்கு மனம் கசியத்தான் செய்தது... ஆனால் அவளால் சில விசயங்களை மறக்க முடியவில்லையே...

"சாரி தாத்தா... உங்களோட தொழில், உங்களோட அந்தஸ்து இது எல்லாம் என் வாழ்க்கையை மிகவும் கொடூரமாக விளையாடி விட்டது... நான் சந்தோசத்தை, நிம்மதியை தொலைத்து வெகுநாட்களாகி விட்டது... நான்

இழந்த எதையும் உங்களால் திருப்பித் தர முடியாது தாத்தா... அது போல் தான் திருமணத்திற்கு முன்னிருந்த பவித்ராவையும் உங்களால் திரும்பப் பார்க்க முடியாது..."

"பவி... இன்னமும் உனக்கும், விக்ரமுக்கும் இடையிலான பிரச்சினை அப்படியே தான் இருக்கா...?"

"அப்படிப் பிரச்சினை இருந்தால் என்ன செய்வதாக உத்தேசம் தாத்தா...? என்னை நம் வீட்டுக்கு கூட்டிட்டு போய் வச்சிக்கப் போறீங்களா...? இல்லைல்ல... பிறகு எதுக்கு இந்தக் கேள்வி...? கணவனால் கஷ்டப்படும் பெண்கள் எல்லாம் தற்கொலை பண்ணும் செய்தி படிக்கும் போது எனக்கு அப்படி ஒரு கோபம் வரும்... ஆனால் இப்போது பார்க்கும் போது அது தான் சரின்னு தோணுது..."

"பவி..." அதிர்ச்சியுடன் கூவி விட்டார் திருவேங்கடம்...

"தற்கொலை பண்ணி கொள்ளும் அளவுக்கு உங்க பேத்தி ஒண்ணும் கோழை இல்லை தாத்தா... வாழ்க்கையே போராட்டம் என்றால் போராடி பார்க்க தான் நான் ஆசைப்படுகிறேன்... ஆனால் அது எது வரை என்பதை அந்த ஆண்டவன் தான் முடிவு செய்ய வேண்டும்..." என்று விரக்தியுடன் கூறிய பேத்தியை கண்டு அவரது விழிகள் கசிந்தது...

முதன்முறையாகத் தவறு செய்து விட்டோமோ என்கிற குற்றவுணர்வு அவரைக் கொன்றது... அவர் பேச வார்த்தைகளற்று தலை குனிந்து அமர்ந்திருந்தார்... அந்த நிலையிலும் பவித்ரா பெரியவரின் மனநிலையை உணர்ந்தவளாய் அவரின் கையை ஆறுதலாய் பிடித்துக் கொண்டாள்... அதில் நிமிர்ந்து பார்த்த திருவேங்கடம்,

"என்னை மன்னிச்சிரும்மா..."

அன்று பேத்தி மணவாழ்க்கையை முறித்துக் கொண்டு வந்ததால் தொழில் பாதிக்கிறது என்று கோபம் கொண்டவர் இப்போது பேத்தியின் இந்த வாழ்க்கைக்காக

மனம் வருந்தினார்... விசித்திரமான மனநிலை கொண்டது தான் மனிதனின் மனமோ...

பெரியவரின் மன்னிப்பில் சின்னவள் அப்படியே மனம் உருகி விட்டாள்...

"நமக்குள் மன்னிப்புக்கு அவசியமே இல்லை தாத்தா... நீங்க நல்லது நினைச்சு தான் என் கல்யாணத்தை முடிவு செய்திருப்பீங்க... ஒருவேளை என்னால் தான் வாழ்க்கையை ஒழுங்காக அமைத்துக் கொள்ள முடியவில்லையோ என்னமோ...? தவறு என் பக்கமும் இருக்கலாம்... என் தவறை நான் திருத்தி கொள்ள முயற்சிக்கிறேன்..."

தாத்தாவிற்காக அப்படிச் சொன்னாளா இல்லை தனக்காக அப்படிச் சொல்லி கொண்டாளா... அது அவளுக்கே தெரியவில்லை...

அதன் பிறகு பவித்ரா தொழில் பொறுப்பை ஏற்றுக் கொண்டாள்... இந்தக் கொஞ்ச நாட்களில் விக்ரம் அவர்களது நிறுவனத்திற்குப் பெரும் போட்டியினை ஏற்படுத்தி இருந்தான்... ஏதோ வேண்டுமென்றே, திட்டமிட்டுத் தாக்கியது போல் இருந்தது அவனது நடவடிக்கை... அந்தக் கணம் அவளுக்குக் கணவன் மீது கோபம் எழுந்தது...

அதே சமயம் திரும்பவும் ஒரு போராட்ட வாழ்க்கையா? என்று அவளது காதல் மனம் மிகவும் சோர்ந்து போனது... ஆனாலும் தங்களது நிறுவனத்திற்காகப் போராட்டத்தைக் கையில் எடுத்து கொண்டாள்... அவள் தொழிலை கையில் எடுத்த இந்த ஒரு வாரத்தில் அவளது முதல் வெற்றி இது... ஆனால் வெற்றி பெற்ற உற்சாகம் அவளது மனதில் இல்லை... மாறாக அது சோக கீதம் வாசித்துக் கொண்டிருந்தது...

அன்றிரவு விக்ரம் அறைக்கு நுழைந்த போது பவித்ரா தூங்காது அவனுக்காகக் காத்திருந்தாள்... அவனோ

திகைத்து போய் நின்றவன் பின் சுதாரித்துக் கொண்டு உடை மாற்றலானான்...

'இவள் தூங்கி இருப்பாளான்னு நினைச்சு லேட்டா வந்தேனே... இப்போ என்ன பண்றது...?' என்று யோசித்துக் கொண்டே உடை மாற்றியவன் அடுத்த நொடி மனைவியைத் திரும்பியும் பார்க்காது குளியலறைக்குள் புகுந்து கொண்டான்...

'எத்தனை நேரம் பாத்ரூமில் இருக்க முடியும் விக்ரமா...? திரும்ப இங்கே தானே வந்தாகணும்...' என்று மனதில் கறுவி கொண்டு காத்திருந்தாள் மனைவியவள்...

அது போல் சிறிது நேரத்தில் வெளியில் வந்தான் விக்ரம்...

"விக்ரமா..." மனைவியின் அந்த அழைப்பு என்றும் போல் அவனைக் கட்டி போட்டது... அதில் நின்றவன் என்ன என்பது போல் அவளைத் திரும்பி பார்த்தான்...

"ஒரு வாழ்த்து கூடச் சொல்லாம ஓடி போயிட்ட...?"

இதற்கு என்ன பதில் சொல்வது என்று அவன் யோசித்துக் கொண்டு இருக்கும் போது அவளே பதிலை எடுத்து கொடுத்தாள்...

"நான் திரும்ப வருவேன்னு நீ நினைக்கலை இல்லையா...? கட்டின பொண்டாட்டி கிட்ட தோத்துப் போனது ரொம்பக் கேவலமா இருக்குதோ...?"

'இவளை...? ஏதோ போனா போகுதுன்னு சும்மா இருந்தால் இவளுக்கு இளக்காரமா போயிருச்சா...? இவளை பேச விட்டால் இன்னமும் பேசிக்கிட்டே தான் இருப்பாள்... இதுக்கு ஒரு முடிவு கட்டுறேன்டி...' என்று மனதில் கோபமாய் நினைத்தபடி அவள் அருகே வந்தவன் ஒரு கணம் அவளை உறுத்து விழித்தான்...

அடுத்தக் கணம் அவளை இறுக அணைத்து முகம் முழுவதும் முத்தமிட்டான்... முதலில் கோபத்துடன் ஆரம்பித்த முத்தம் பிறகு சந்தோச மனநிலைக்கு

வித்திட்டது... அவனது திடீர் செயலை எதிர்பார்க்காத பாவையவளின் மேனி ஒரு முறை அதிர்ந்து பின் காதலில் குழைந்து நெளிந்தது கணவனது கரங்களில்... அதை உணர்ந்தவனின் கரங்கள் தைரியம் வர பெற்று மேலும் மேலும் முன்னேறியது... அவள் உணர்ந்த காதல், அவனது உணராத காதல் இரண்டையும் அவர்களது உடல்கள் நன்கு உணர்ந்தது... மன வேறுபாட்டை உடல் பொருத்தம் கொஞ்சம் கொஞ்சமாய்க் களைந்து கொண்டிருந்தது...

வரம்பு மீறி பயணம் செய்த அவனது உதடுகளையும், கரங்களையும் தடுக்க இயலாதவளாய் அவள் மெதுவே முனங்கினாள்...

"என்னைப் பழி தீர்க்க நீ கையாளும் கேவலமான யுக்தி இது விக்ரமா... படுக்கையில் பெண்ணிடம் வீரத்தை காட்டும் கோழை நீ..."

மனைவியவளின் வார்த்தைகள் அவனுள் பெரும் கோபத்தினைக் கிளப்பியது... அவளது முகம் பற்றி அவளது விழிகளுக்குள் தனது விழிகளைக் கோபத்துடன் கலந்தவன்,

"யாரோ ரோட்டில் போகிற பெண்ணிடத்தில் நான் வீரத்தை காட்டவில்லை... என் மனைவியிடத்தில், எனக்கு உரிமையான இடத்தில் தான் நான் வீரத்தை காட்டுகிறேன்... மனைவியிடத்தில் வீரத்தை காட்டாத ஆண் வாழ்க்கையில் வெற்றி பெற்று எந்தப் பிரயோஜனமும் இல்லை..." என்றவன் அடுத்த நொடி அவளது இதழ்களில் இதழ் பதித்த போது பவித்ராவின் மனம் அதிர்ந்து தான் போனது...

இதுவரை அவளிடத்தில் இருந்த காதல் சுத்தமாய் வடிந்து அவளுள் சுயமரியாதை பொங்கி எழ, இரும்பு பெண்ணாய் அவள் தனக்குள் இறுகி போனாள்... அவள் கணவனிடத்தில் வளைந்து கொடுக்காது உறுதியாய் நிமிர்ந்து நின்றாள்...

சற்று முன் அள்ளி பருகிய தேன் துளிகளின் தித்திப்பு விக்ரம் மனதில் இனிமையாக இன்னமும் இருந்தது... ஆனால் இப்போது அவளது ஒத்துழையாமையில் அந்தத் தித்திப்பு மறைந்து கசப்பு பரவியது அவனுள்... அடுத்த நொடி அவளை விட்டு அவன் விலகி இருந்தான்...

"ச்சீ... போடி..." அத்தனை நேர இனிமை மறைந்ததில் கோபம் கொண்டவனாய் அவளை உதறி விட்டு அவன் மட்டும் தனித்துப் படுக்கையில் வீழ்ந்தான்...

கணவனது உதறலில் கண்களில் கண்ணீர் மல்க நின்றிருந்தவள் பின் சமாளித்துக் கொண்டு மறுபக்கம் வந்து படுத்தாள்... எப்போதும் போல் கணவனுக்குத் தெரியாது அவள் மௌனமாய்க் கண்ணீர் வடித்தாள்...

விக்ரமிற்கோ உறக்கம் வரவில்லை... இத்தனை நாளாய் அவன் மனைவியின் விருப்பமின்றிச் சுகித்து இருக்கிறான் தான்... ஆனால் இன்று அது போல் அவளது விருப்பம் இல்லாது சுகிக்க முடியவில்லை அவனால்... அவன் நினைத்திருந்தால் அதை நடத்தி காட்டி இருந்திருப்பான்... ஆனால் பெண்ணவளின் குழைந்த மேனி நினைவில் நின்று அது தான் வேண்டும் என்று அவன் மனம் அடம் பிடித்தது...

அடம் பிடித்த மனதினை அடக்க வழியில்லாது தவித்தவனின் தூக்கம் தூர போனது...

********************

இரவு நேரத்தில் அந்தக் கேளிக்கை விடுதி உற்சாகத்துடன் காணப்பட்டது... வினோத் தனது நண்பர்களுடன் சேர்ந்து அங்கு வருகை தந்திருந்தான்... வெகுநாட்கள் கழித்து வந்ததில் அவனிடத்தில் சந்தோசம் நிரம்பி வழிந்தது... திருமணத்திற்குப் பின் இன்று தான் முதன்முறையாக இங்கு வருகை தருகிறான்... நண்பன் ஒருவன் மது கோப்பையை அவன் முன் நீட்டினான்...

அந்த நொடி பல்லவியின் முகம் அவனது நினைவில் எழுந்தது... புது மனைவி தனக்கு மது பழக்கம் இருப்பது தெரிந்தால் என்ன சொல்வாளோ என்ற நினைவில் அவன் வேண்டாம் என்று மறுத்தான்... அதைக் கண்டு அவனது நண்பர்கள் குழாம் அனைத்தும் கேலியாய்ச் சிரித்தது...

"கல்யாணமான ஒரு மாசத்தில் இவன் பொண்டாட்டிக்கு இப்படிப் பயப்படுகிறான்... நம்ம கூட்டத்தில் இருக்கவே லாயக்கு இல்லாதவன்..." என்று அவர்கள் அவனைக் கிண்டல் செய்ய...

"யாரை பார்த்துடா பொண்டாட்டிக்கு பயப்படுறவன்னு சொன்னீங்க... நானா...? நோ, நெவர்..." பழைய வினோத்தாகச் சிலிர்த்தவன் மதுவை ஒரே மூச்சில் வாயில் ஊற்றிக் கொண்டு மிதப்பாய் நண்பர்களைப் பார்த்தான்...

"இப்போ ஒத்துக்கிறோம்டா நீ எங்க நண்பன் தான்னு..."

நண்பர்களுடன் அரட்டை அடித்துக் கொண்டு இருந்ததில் நேரம் சென்று கொண்டிருந்தது அவனுக்குத் தெரியவில்லை... அப்போது தான் அவன் விழிகளைச் சுழற்றி அந்த இடத்தை நோட்டமிட்டான்... எல்லோரும் ஆடவர், பெண் என்று அறியாது கண்மண் தெரியாது நடனமாடி கொண்டிருந்தனர்... அப்போது தான் அவன் கவனித்தான் கூட்டத்தோடு கூட்டமாய் ஆடி கொண்டிருந்த அந்தப் பெண்ணை... அடுத்த நொடி தீயை மிதித்தார் போன்று விலுக்கென்று எழுந்து நின்றான்...

"என்னடா...?" நண்பர்கள் கேள்வி கேட்க...

"நேரமாச்சுடா... நான் வீட்டுக்கு கிளம்பறேன்..." என்றவன் அவர்களின் பதிலை எதிர்பாராது விறுவிறுவென்று நடந்து அந்தப் பெண்ணின் அருகில் சென்றவன் அவளது கையைப் பிடித்துக் கொண்டு வாயிலை நோக்கி நடக்க ஆரம்பித்தான்...

எதிர்பாராது கணவனை அங்குக் கண்டதும் பல்லவியின் உற்சாகம் குறைந்து பயம் மெல்ல எட்டி பார்த்தது...

ஆனாலும் அவன் என்ன செய்து விட முடியும் என்கிற அசட்டு துணிச்சலுடன் அவள் அவனின் இழுத்த இழுப்பிற்கு உடன் நடந்தாள்...

தனது கார் கதவை திறந்து மனைவியை உள்ளே தள்ளியவன் மறுபக்கம் வந்து கோபத்துடன் அமர்ந்தான்... பின் திரும்பி மனைவியை அதே கோபத்துடன் பார்த்தான்... அவள் ஏதோ சொல்ல வருவதைக் கண்டு,

"என்ன...?" என்று உறுமினான்...

"என்னோட கார்..." என்று இழுத்தவளை கண்டு ஆத்திரத்துடன்,

"இனி காரை எடு... உன் கை, காலை உடைக்கிறேன்..." என்று கர்ஜித்தவன்,

"எங்க வீட்டு மருமகள், என் மனைவி இப்படித் தான் இருக்கணும்ன்னு ஒரு வரைமுறை இருக்கு... ஆனால் நீ பண்ணிய காரியம்..." மேலே பேச முடியாது அவன் கோபத்துடன் ஸ்டீயரிங் வீலில் கையைக் குத்தினான்...

அவள் ஒன்றும் பேசாது அவனைப் பார்த்தாள்... அதற்கு நேர்மாறாய் அவளது முகம் மிகவும் தீவிரமாய் மாறியிருந்தது...

"என் மனைவி இப்படித் தான் இருக்கணும்ன்னு எனக்கு ஒரு எதிர்பார்ப்பு இருக்கு... ஆனா அது... இது மாதிரி இல்லை..." என்று அவள் நடனம் ஆடியதை அவன் சுட்டி காட்டினான்...

"எனக்கும் என் கணவன் எப்படி எல்லாமோ இருக்கணும்ன்னு எதிர்பார்ப்பு இருக்கு... ஆனால் இப்படி இல்லை..." என்றவள் மது அருந்தியிருந்த கணவனைக் கண்டு அவள் முகத்தைச் சுளித்தாள்...

"ஆண்கள் உங்களுக்கு மட்டும் தான் எதிர்பார்ப்பு இருக்கும் என்பது இல்லை... பெண்கள் எங்களுக்கும் எதிர்பார்ப்பு உண்டு..." என்றவளை முறைத்து பார்த்தவன்,

"ஆணுக்கும் பெண்ணுக்கும் வித்தியாசம் உண்டு பல்லவி... எதிலும் ஆணுக்கு அதிகச் சேதாரம் இல்லை... ஆனால் பெண்ணுக்கு...?" என்று நிறுத்தியவனைக் கண்டு,

"எனக்கு என்னோட லிமிட் தெரியும்..." என்று அவள் ரோசத்துடன் கூற...

அவளது சிறு பிள்ளைத்தனமான பேச்சில் அவனுக்குச் சிரிப்பு வந்தது... அவளைத் திரும்பி பார்த்து அவன் புன்னகைக்க... அதில் பல்லவி அப்படியே மயங்கி தான் போனாள்...

'சிரிச்சா என்னமா அழகாயிருக்கான் என் செல்ல மாமா...' மனதிற்குள் ஜொள்ளியபடி வெளியில் அப்பாவியாய் அவனைப் பார்த்து வைத்தாள் அவள்...

"சரிங்க மேடம்... உங்களோட எதிர்பார்ப்பு என்னன்னு சொன்னால் நானும் அதன் படி நடப்பேன் இல்லையா...?"

அதற்கு அவள் சிறிதும் யோசிக்கவில்லை... உடனே அந்த வார்த்தைகளை உதிர்த்தாள்...

"விக்ரம் மாமா மாதிரி... என்ன ஒரு ஹேண்ட்சம்மேன்... அவரை மாதிரி எல்லாவற்றிலும் நீங்க இருந்தால் நல்லா இருக்கும்..." என்றவளை கண்டு அவன் திகைத்துப் போய்ப் பார்த்தான்...

அவளது விழிகளில் மயக்கம் தெரியவில்லை... மாறாக அதில் பிரமிப்பு இருந்தது கண்டு அவன் நிம்மதியுற்றவனாய்,

"அண்ணா மாதிரி முழுமையா மாற முடியலைன்னாலும் ஏதோ கொஞ்சம் மாற நான் முயற்சிக்கிறேன்..." என்றவனைக் கண்டு முகம் மலர்ந்த பல்லவி,

"உண்மையாவா...?" என்க...

'ஆமாம்' என்று தலையை ஆட்டி ஆமோதித்தவன், "அது மாதிரி என்னோட எதிர்பார்ப்பை நான் சொல்லலாம் இல்லையா...?"

"நிச்சயமாய்..." என்றவளை பார்த்து புன்னகைத்தவன்,

"இனி இது மாதிரி இடங்களுக்கு நீ வர கூடாது... சமுதாயத்தில் நம் குடும்பத்துக்கு என்று தனி மரியாதை இருக்கிறது..."

"தாத்தாவும் இதையே தான் சொல்வார்... எனக்கு இது மாதிரி அட்வைஸ் பண்ணினால் பிடிக்கவே பிடிக்காது..." என்று முகத்தைச் சுளித்தவளை கண்டு அவன் முகம் மாறாது,

"என் மனைவியின் பெயர் தேவையில்லாது செய்தித்தாளில் அடிபடுவதை நான் விரும்பவில்லை... நான் உனக்கு அட்வைஸ் பண்ணலை... ஏன்னா நானும் ஒழுங்கு கிடையாது... ஆனா என் மனைவி நல்ல பெண்ணாக இருக்க வேண்டும் என்பது மட்டுமே என் எதிர்பார்ப்பு..."

"ம்... சரி..." அவன் தனது பேச்சிற்கு ஒத்து கொண்டதால் அவளும் அவனின் பேச்சிற்கு உடனே ஒத்து கொண்டாள்...

"குட்..." என்றவன் காரை கிளப்பினான்...

"மாமா..." என்று இழுத்தவளை கண்டு முகம் மலர அவன் திரும்பி பார்த்தான்...

"என்ன சொன்ன...?"

"மாமா... நீங்க எனக்கு மாமா தானே... அண்ணன் இல்லையே..." என்று நக்கலாய் கேட்டவளை கண்டு,

"உன் கழுத்தில் இருக்கும் தாலியை கேட்டு பார்... அது நான் யார்ன்னு சொல்லும்..."

நெஞ்சோடு உறவாடி கொண்டிருந்த தாலியின் உரிமை, உறவை உணர்ந்தவளாய் அவளின் முகம் சிவந்து போனது...

"என்ன சொல்ல வந்த...? அதைச் சொல்லு..."

"என்னோட கார்..."

"அதைக் காலையில் எடுத்துக்கலாம்..." என்று கூறியவன் காரை சாலை போக்குவரத்தில் நிதானமாய்ச் செலுத்தினான்...

"ஆமாம்... நம் வீட்டுக் கெடுபிடியில் இருந்து எப்படி வெளியில் வந்த...?"

"இது எல்லாம் என்ன பெரிய கெடுபிடி... எங்க தாத்தா போடுகின்ற கெடுபிடிகளை விடவா...? அதையே எளிதில் உடைத்துக் கொண்டு வருபவள் நான்..." என்று பெருமையாக அவள் கூற...

"அப்போ நீ ஒரு ஜெகஜ்ஜால கில்லாடின்னு சொல்லு..." என்றவன் வாய் விட்டுச் சிரித்தான்...

பல்லவி ஒன்றும் கெட்டவள் இல்லை... அடக்குமுறையை எதிர்க்கும் இளைய தலைமுறையைச் சேர்ந்தவள்...அதாவது அவனைப் போன்று... அதனால் தான் அவனுக்கு அவளை நிரம்பப் பிடித்துப் போனது...

வீடு வந்ததும் எங்கே சென்றீர்கள் என்று கேட்ட பெரியவர்களிடம் இருவரும் சேர்ந்து வெளியில் சென்றதாய் வினோத் கூறிவிட யாரும் மேலே கேள்விகள் கேட்டு பல்லவியைத் தொந்திரவு செய்யவில்லை...

"ரொம்பத் தேங்க்ஸ் மாமா..." அறைக்குள் வந்ததும் பல்லவி அவனுக்கு நன்றி கூற...

"உன் தேங்க்ஸ் தேவையில்லை... அதற்குப் பதில் இன்னையில் இருந்து நீ கட்டிலில் படு..."

"அது எப்படி உங்களுக்குத் தெரியும்..."

வரவேற்பு விழா அன்று இரவு தான் கண்ட காட்சியை அவன் கூற, அவளுக்கோ மிகுந்த வெட்கமாய்ப் போய் விட்டது...

"அது வந்து மாமா... நீங்க கட்டிலில் படுக்காததால் எனக்கும் அதில் படுக்க ஒரு மாதிரியாக இருந்தது... அதான்..."

"அப்போ நான் அதில் படுத்தால் நீயும் கூடச் சேர்ந்து படுப்பியா...?"

"மாமா..." அவள் திகைத்துப் போய்க் கணவனைப் பார்த்தாள்...

"எதுக்கு இத்தனை அதிர்ச்சி... என்றாவது ஒரு நாள் நாம் நம் வாழ்க்கையை ஆரம்பித்துத் தான் ஆகவேண்டும்... இப்படியே ஓடி ஒளிஞ்சு கிட்டு வாழ முடியாது... அதனால் இன்றிலிருந்து சில விசயங்களை இயல்பாக ஏற்றுக் கொள்ள ஆரம்பிக்கலாம்..."

கணவனது கூற்று சரியென்று தோன்றியது அவளுக்கும்... அதனால் அன்றிரவு இருவரும் ஒரே கட்டிலில் படுத்தனர்... ஆனால் மிகவும் கவனத்துடன் தள்ளி தள்ளி...

மறுநாள் காலையில் பொறுப்பாய் அலுவலகம் கிளம்பிய கணவனை ஆச்சிரியத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தாள் பல்லவி...

"நீ தானே சொன்ன விக்ரம் மாதிரி இருக்கணும்ன்னு... இன்னையில் இருந்து அது மாதிரி இருக்கலாம்ன்னு முடிவு பண்ணிட்டேன்..."

அவனது வார்த்தைகள் பனிச்சாரலாய் அவளது மனதினை தீண்டி சென்றது... அவள் கூறிய ஒரு வார்த்தைக்காகத் தன்னை மாற்றிக் கொள்ளும் கணவனைக் கண்டு அவளது இதயம் விரும்பியே அவனிடத்தில் சரணடைந்தது... அவனுக்காக அவனுக்குப் பிடித்த விதத்தில் தன்னை மாற்றிக் கொள்ள அவளும் விரும்பினாள்...

"எல்லாம் சரி... நீ எப்போ உங்கக்கா மாதிரி கம்பெனியை நிர்வாகம் பண்ண போற...?"

அதைக் கேட்டதும் அவள், "உவ்வே..." என்று அருவருப்புடன் முகத்தைச் சுளித்தாள்...

"ஏன்...? என்னாச்சு...?" அவன் பதட்டத்துடன் அவளைப் பார்த்தான்...

"கம்பெனி நிர்வாகம் பண்றது எல்லாம் அக்காவுக்குத் தான் சரியா வரும்... எனக்கு அது எல்லாம் செட்டாகாது..."

அவளது வார்த்தையில் அவன் பதற்றம் குறைந்தவனாய், "அப்போ மேடத்துக்கு எது செட்டாகுமோ...?" என்று கேட்டவனின் குரலில் கேலி நிரம்பி வழிந்தது...

"எனக்குக் கல்யாணம் பண்ணிக்கிட்டு கணவனைக் கவனிச்சிட்டு, அப்புறம் பத்து, பதினைந்து குழந்தைகள் பெத்துக்கிட்டு வீட்டில் சந்தோசமா இருக்கணும்..." என்றவளை கண்டு மனம் மகிழ்ச்சியுற அவள் அருகில் வந்தவன்,

"உன் விருப்பப்படி கல்யாணம் முடிஞ்சிருச்சு... அடுத்து கணவனைக் கவனிப்பது எப்போங்க மேடம்...?" ஒற்றைப் புருவத்தை உயர்த்திக் கேட்டவனின் அருகாமையில் அவளது இதயம் தாளம் தப்பி ஒலித்தது...

"ம்... சொல்லுங்க மேடம்..." என்றவனது குரலில் இருந்த உல்லாசம் அவளை வெட்கத்தில் இருந்து மீட்க வைத்தது...

"நீங்க உங்க மனைவியைக் கவனிக்கும் போது..." குறும்பாய் கூறியவளின் வார்த்தையில் அவனது விழிகளிலும் குறும்பு தோன்றியது...

"மனைவி பேச்சு தட்டாது கேட்க வேண்டுமாமே..." என்றவன் அவளது இடையில் கரம் கொடுத்து அவளை இன்னமும் அருகில் இழுத்து அவள் முகம் நோக்கி குனிந்தான்...

"மாமா..." பயத்தில் அலறியபடி அவள் கண்களை இறுக மூடி கொள்ள...

அதில் அவனுக்குச் சிரிப்புப் பொங்கியது... அதை அடக்கியவன் மெல்ல தனது உதட்டினை அவளது நெற்றியில் பதித்து நிமிர்ந்தான்...

"இதற்கே இப்படிப் பயந்தால் எப்படி ஹனி...?" கணவனது செல்ல அழைப்பில் அவள் விழிகளை வியப்பாய் திறந்தாள்...

அவனது வார்த்தையில் பயம் தெளிந்தவள் அவனைக் கண்டு மிதப்பாய்,

"என்னது பயமா...? எனக்கா...? எனக்கு என்ன பயம்...?" என்றவள் அவனது கன்னத்தில் தனது இதழை வேகமாய்ப் பதித்து எடுத்தவள்,

"நானும் என் கணவனை நல்லா கவனிப்பேன்..."

"ம்... ரொம்ப நல்லா..." என்று வார்த்தைகளை அழுத்தி கூறிய வினோத்தின் குரலில் லஜ்ஜையுற்றவளாய் அவனின் கரத்தில் இருந்து விடுபட்டு அவள் வெளியில் ஓடினாள்... அவனும் சிரித்தபடி அவளைப் பின் தொடர்ந்தான்...

அலுவலகம் கிளம்பிய பவித்ரா பல்லவியிடம், "நீ இங்கே இருந்து என்ன பண்ண போகிற...? என் கூடக் கம்பெனிக்கு வா..." என்று கூற...

"அக்கா... நீயே பார்... என்னைத் தொந்திரவு செய்யாதே..." என்று கூறி விட்டுப் பல்லவி உள்ளே செல்ல முனைய...

அதைக் கண்டு சௌந்தர்யா மருமகளை எரிச்சலுடன் பார்த்தார்... 'இந்தப் பெண் புத்தியுடன் பிழைக்க மாட்டேங்குதே... வினோத்தை மாதிரியே இதுவும் உருப்படாதது...' என்று அவருக்கு எரிச்சலாக வந்தது...

"பல்லவி... இது உன்னுடைய கம்பெனி... உனக்குத் தான் பொறுப்பு அதிகம் இருக்க வேண்டும்..."

பவித்ரா சொன்னதைக் கேட்டு அவரது முகம் பூவாய் மலர்ந்து போனது...

"உண்மையாவா சொல்ற பவித்ரா..." இடையில் புகுந்தவரை கண்டு பவித்ராவிற்குக் கடுப்பாக இருந்த போதும் அமைதியான குரலில்,

"ஆமாம்... உங்க மருமக சாதாரணப் பெண் இல்லை... பெரிய நிறுவனத்தின் எம்டி... அதனால் இனிமேல் அடுப்படி வேலை கொடுக்காது அவளுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையைக் கொடுங்க..."

"இனி அப்படி எல்லாம் சொல்வேனா...? பல்லவி இனி நீ கம்பெனியை பொறுப்பாய் பார்த்துக்கோ..." என்று மருமகளிடம் பல்லை காட்டியவர் பவித்ராவிடம்,

"அதுக்குத் தான் நீ இருக்கியே பவித்ரா..." என்று வாழை பழத்தில் ஊசி ஏற்றுவது போல் அவளைக் குத்தி காட்டி கேலி செய்தார்...

பவித்ராவிற்குக் கோபம் வந்தது... இருந்தாலும் அடக்கி கொண்டு அமைதியாக இருந்தாள்... அந்த அவசியம் அங்கு வரவேற்பறையில் அமர்ந்திருந்த விக்ரமிற்கு இல்லை போலும்...

"பெரியம்மா... அங்குத் தான் கம்பெனி நிர்வாகம் கை மாறியிருக்கிறது... இங்கே நிலவரம் அப்படியே தான் இருக்கிறது..." என்று கடுமையான குரலில் கூறியவன் தம்பியிடம்,

"சாரி வினோத்... நான் பேசியது தவறு என்றால் என்னை மன்னித்துக் கொள்... ஆனால் பெரியம்மா என் மனைவியைப் பேசியது தவறு..." என்க...

பவித்ரா கணவனை ஆச்சிரியமாகப் பார்த்தாள்... வினோத் தனது அன்னையைக் கோபமாய்ப் பார்த்தான்...

"அம்மா... எதுக்குத் தேவையில்லாம இதில் தலையிடுறீங்க...? பேசாம போய்ச் சமையல் வேலை இருந்தா அதைப் போய்ப் பாருங்க..." எரிச்சலுடன் கூறியவன் அண்ணனிடம்,

“அண்ணா, நீ எப்பவுமே சரியா தான் பேசுவ... அம்மாவுக்காக நான் உன் கிட்ட மன்னிப்பு கேட்டுகிறேன்...”

அதைக் கேட்டு சௌந்தர்யா, "உங்க ரெண்டு பேரை மாதிரி உங்கப்பா இல்லாம போயிட்டாரே... அவர் அப்படி இருந்திருந்தால் இந்நேரம் நீங்க எல்லாம் இப்படி என்னைக் கேள்வி கேட்பீங்களா...?" என்று அழுது ஆர்ப்பாட்டம் செய்தார்...

அவர் அருகில் வந்த விக்ரம், "உங்களைச் சொல்லும் போது உங்களுக்கு எவ்வளவு கோபம், வருத்தம் வருகிறது... அது போல் தான் பவிக்கும் இருக்கும்... ஒரு பெரிய தொழில் சாம்ராஜ்யத்தை நிர்வாகம் செய்தவளை போய் அடுப்படியில் அடைந்து கிடன்னு சொல்வது அபத்தம் பெரியம்மா... வீட்டு வேலைக்கு ஆட்கள் இருக்கிறாங்க... அப்புறம் என்ன...?"

"இந்த வீட்டு மருமகள்களுக்குன்னு கடமை இருக்கு விக்கி..." தான் கூறியது தான் சரி என்று அவர் வாதிட்டார்...

"நிச்சயம் உங்க மருமகள்கள் அந்தக் கடமையைச் செய்யத் தவற மாட்டாங்க... தவறவும் நான் விட மாட்டேன்..." கடைசி வரியை சொல்லும் போது அவனது விழிகள் மனைவியைப் பார்த்தது...

'அதானே இவனாவது திருந்துவதாவது...' என்று எரிச்சலுடன் பவித்ரா அவனை முறைத்து பார்த்தாள்...

சௌந்தர்யா சமாதானமாகி உள்ளே சென்று விட, பவித்ரா வினோத்தை பார்த்து,

"தம்பி நீங்களாவது அவளுக்கு எடுத்து சொல்ல கூடாதா...?" என்று ஆயாசமான குரலில் கேட்க...

"அவள் உங்களுடன் வருவாள் அண்ணி... என் மனைவி எப்படி இருந்தால் எனக்குப் பெருமை என்பது அவளுக்குத் தெரியும்..." என்ற வினோத் விழிகளால் மனைவிக்குத் தன் விருப்பத்தினைக் கூறினான்...

அடுத்த நொடி பல்லவி, "வா அக்கா, போகலாம்..." என்றபடி சமத்தாய் அலுவலகத்திற்குச் செல்ல தயாரானாள்...

இருவரையும் அதிசயமாய்ப் பார்த்தபடி பவித்ரா தங்கையை உடன் அழைத்துச் சென்றாள்... அதே நேரம் விக்ரம் தம்பியிடம்,

"பொண்டாட்டிக்கு அடங்கிப் போகக் கூடாதுன்னு ஆயிரம் அட்வைஸ் பண்ணுவ... இப்போ உனக்கு என்னவானது...?" என்றான் சீண்டும் குரலில் கேலியாய்...

"அண்ணா... அடுத்தவனுக்கு ஆயிரம் அட்வைஸ் பண்ணலாம்... இதே இது நமக்குன்னு வரும் போது அடங்கிப் போகத் தான் மனசு விரும்புது... என்ன செய்ய...? அடக்கி ஆளுவதை விட, அடங்கி ஆளுவது தான் சுகம்ன்னு எனக்குத் தோன்றுகிறது... அப்புறம் ஒரு ரகசியம்... உங்க மைத்துனியை அடக்கி ஆள்வது என்பது அவ்வளவு சுலபமல்ல... அதனால் பேசாமல் பொண்டாட்டி சரணம் என்று சரணடைந்து விடுவது தான் எனக்குப் பாதுகாப்பு..." என்று கூறி சிரித்த தம்பியை விக்ரம் ஆச்சிரியமாகப் பார்த்தான்...

தான் வாழ்க்கையில் கற்க வேண்டிய விசயங்கள் நிறைய இருக்கிறதோ என்கிற எண்ணம் அவனுக்குத் தோன்ற ஆரம்பித்தது...

மொழி பேசும்...!!!

## விழி : 15

நட்சத்திர விடுதியில் இருந்த அந்தப் பெரிய 'ஹால்'இல் தொழிலதிபர்களின் கூட்டம் நடைப்பெற்றுக் கொண்டிருந்தது.. அதற்கு விக்ரம், வினோத் அவர்களது நிறுவனம் சார்பாகவும், பவித்ரா, பல்லவி தங்களது நிறுவனம் சார்பாகவும் அங்கு வந்திருந்தனர்... அங்கு வந்ததில் இருந்து விக்ரமும், பவித்ராவும் ஒருவரை ஒருவர் கண்டு கொள்ளாது யாரோ என்பது போல் அமர்ந்து இருந்தனர்...

ஆனால் பல்லவியால் அப்படிச் சும்மாயிருக்க முடியவில்லை... அவள் குறும்பாகத் தனது கணவனைப் பார்த்து கண்சிமிட்டினாள்... வினோத் மனைவியின் செயலில் உள்ளுக்குள் மயங்கினாலும் வெளியில் எதையும் காட்டி கொள்ளாது 'அமைதியாயிரு' என்று பார்வையால் அவளை மிரட்டினான்...

அதற்கு எல்லாம் அசரும் ஆளா அவள்...? மீண்டும் அவள் கண்சிமிட்டி கணவனைக் கலவரப்படுத்தினாள்... இப்போது அரண்டு போன வினோத் அருகில் இருந்த சகோதரனை சுட்டிக்காட்டி மனைவியிடம் கையெடுத்து கும்பிட்டுக் கெஞ்சினான்... 'அது' என்பது போல் மிதப்பாய் பார்த்த பல்லவி தனது குறும்புத்தனத்தைக் கைவிட்டு விட்டு அமைதியாக இருந்தாள்...

"அண்ணா... அண்ணி வந்திருக்காங்க...?" ஒருவேளை அண்ணன் அண்ணியைப் பார்க்கவில்லையோ என்ற சந்தேகத்தில் வினோத் கூற...

"கூடவே உன் மனைவியும் வந்திருக்கிறாள்... அதுக்கு என்ன இப்போ...?" என்று சிறிதும் அலட்டி கொள்ளாது கூறியவனைக் கண்டு சற்று கடுப்பாகி போனான் லட்சுமணனை போன்று அண்ணனை பின்பற்றும் அந்த நல்ல தம்பி...

"எப்படிண்ணா உன்னால் இப்படி இருக்க முடியுது...? அவங்க நம் எதிரி இல்லை..."

"எதிரி இல்லாம வேறு என்னவாம்...? கணவன், மனைவி என்பது எல்லாம் வீட்டில் தான் இங்கே இல்லை... என்ன புரிந்ததா...?"

வினோத்திற்குப் புரியவில்லை என்றாலும் அண்ணனுக்காகத் தலையாட்டி வைத்தான்... 'என்ன கொடுமை வினோத்...?' என்று மனதிற்குள் புலம்பவும் அவன் தவறவில்லை...

கூட்டம் நல்லபடியாக முடிந்ததும் சிறு விருந்து நடைப்பெற்றது... விக்ரம் மது கோப்பையைக் கையில் எடுப்பதைக் கண்டு திகைத்து போனவளாய் பவித்ரா அவனைப் பார்த்தாள்... அவளின் திகைப்பு அவனுக்கு உற்சாகத்தை அளித்ததோ... வேண்டும் என்றே மது கோப்பையை வாய் அருகில் கொண்டு சென்று குடிப்பது போல் அவன் பாவனைச் செய்ய, அதில் அவள் முற்றிலும் அரண்டு போனாள்... பயத்தில் விழிகள் அகல தன்னைப் பார்த்த மனைவியின் விழி வீச்சில் அவன் தன்னை முழுவதுமாய்த் தொலைத்தான்...

'சண்டிராணி இவளை பயமுறுத்துவதுக்காகவே குடிக்கணும் போல் தோணுதே...' மனதில் சீண்டலாக நினைத்தவன் அவளைக் கேலியாய் பார்த்து வைத்தான்... அதைக் கண்டு அவனை முறைத்தவள் வேறு பக்கம் திரும்பி நின்று கொண்டாள்... ஆனால் அவளது மனதில் இருந்த அச்சம் இன்னமும் தெளியவில்லை...

நல்ல கணவனாகத் தான் அவன் நடந்து கொள்ளவில்லை... நல்ல மனிதனாக நடந்து கொள்ளக் கூடாதா என்று அவளுக்கு ஆயாசமாக இருந்தது... எந்தவொரு விசயத்திலும் தான் கொடுத்து வைக்கவில்லை என்று அவளுக்குச் சிறிது வருத்தமாக இருந்தது...

'குடிகாரன்... குடிகாரன்...' என்று மனதில் கணவனைத் திட்டி கொண்டவள் தன்னுடன் வாழ்ந்த இந்த இடைப்பட்ட காலத்தில் ஒரு நாள் கூட அவன் குடித்து விட்டு வந்தது இல்லை என்பதை அவள் தனக்குச் சாதகமாய் மறந்து தான் போனாள்...

"அக்கா... ஷாம்பெயின் டேஸ்ட் பண்ணி பார்க்கவா...?" பல்லவி சகோதரி காதை கடித்தாள்...

"பல்லவி..." கணவனிடம் காட்டாத முடியாத கோபத்தைப் பவித்ரா தங்கையிடம் காட்டினாள்...

வினோத் மறந்தும் கூட மது கோப்பையைக் கையில் எடுக்கவில்லை... அதைக் கண்டு விக்ரம் ஆச்சிரியமாகத் தம்பியை பார்த்தான்...

"என்னடா இது நீ தானா...?"

"அட, நீ வேற... நான் ஒயின் க்ளாஸ் எடுத்தால் பல்லவியும் ஒயின் எடுத்து குடிப்பாள்... இதே இது நான் விஸ்கி எடுத்தால் அவளும் அப்படியே... கேட்டால் ஆணும், பெண்ணும் சமம்ன்னு லெக்சர் அடிப்பாள்... எனக்கு இது தேவையாண்ணா... நல்ல விசயத்தில் சரிக்கு சமமாய் இருப்பதில் தப்பு இல்லை... ஆனால் இது மாதிரி கெட்ட விசயத்தில்...? வேண்டாம் அண்ணா, குடும்பம் சீர்க்குலைந்து போயிரும்..."

வினோத் பேசி முடிப்பதற்குள் விக்ரமிற்கு மூச்சு வாங்கியது... சற்று முன் சீண்ட தோன்றிய விசயம் இப்போது மனதில் உதறலை கொடுத்தது... பவித்ராவும் இது போல் செய்தால்...? 'ச்சேச்சே, அவள் நல்ல பெண்... இப்படி எல்லாம் செய்ய மாட்டாள்...' என்று மனதை சமதானப்படுத்திக் கொண்டவன் அங்கிருந்து கிளம்பும் வரை அடிக்கடி மனைவியைத் திரும்பி பார்த்து அவள் குடிக்காததை உறுதி செய்து கொண்டான்...

கிளம்பும் போது வினோத் அண்ணனிடம் வந்து நின்று தலையைச் சொரிந்தான்...

"அண்ணா... நானும் பல்லவியும் வெளியில் போயிட்டு வரலாம்ன்னு இருக்கோம்... நீ அண்ணியை உன் கூடக் கூட்டிட்டு போறியா...?"

புதிதாய் திருமணமான தம்பியை கடிய மனம் இல்லாது, "உன் அண்ணியை என் காரில் வர சொல்... நீ அவங்க

காரில் போ..." என்றுரைத்து விட்டு விக்ரம் முன்னே சென்று விட்டான்...

நட்சத்திர விடுதியின் வாசலில் வந்து நின்ற விக்ரம் மனைவி வருகிறாளா என்று உள்ளே திரும்பி பார்த்தான்... மேடிட்ட வயிற்றுடன் மிகவும் கவனமாக அடி மேல் அடி வைத்து நடந்து வந்து கொண்டிருந்த பவித்ராவை கண்டவன் என்ன நினைத்தானோ வேகமாய் அவள் அருகில் சென்றான்...

அந்தக் கணம் அவளும் அவனைத் தான் பார்த்தாள்... இருவரும் இணைந்து நடந்து வந்த போதும் ஒன்றும் பேசாது அமைதியாக வந்தனர்... இருவருக்கும் மற்றவரின் அருகாமையே போதுமானதாய் இருந்தது...

காரில் ஏறியதும் ஏசியை உயிர்ப்பித்த விக்ரமிடம், "ஏசி வேண்டாம்... கண்ணாடியை இறக்கி விடு..." என்று பவித்ரா முகத்தைச் சுளித்துக் கொண்டு கூற...

"இந்த வெயில் காலத்தில் ஏசி இல்லாது போனால் வியர்க்கும்..." என்று அவன் மறுத்தான்...

"என்னால் மது வாடையைச் சகித்துக் கொள்ள முடியாது..." என்று கூறியவளை கண்டு அவனது விழிகள் மின்னியது... அவளைச் சீண்டி பார்க்க அவனது மனம் விழைந்தது...

"உனக்கு மது வாடை பிடிக்காதா... ரொம்ப நல்லதா போச்சு..." என்று நக்கலாய் சிரித்தவன் அவளது முகம் நோக்கி குனிய...

"வேண்டாம் விக்ரமா... கிட்ட வராதே..." என்று கூறியபடி அவள் பின்னால் நகர்ந்தாள்...

அவனோ மனைவியவளின் வார்த்தைகளைக் கண்டு கொள்ளாது மிகவும் அருகில் நெருங்கி வர அவள் பயத்தில் கண்களை மூடி கொண்டாள்... ஒரு நிமிடம் வரை அவன் எதுவும் செய்யாதது கண்டு அவள் ஆச்சரியத்துடன் கண்களைத் திறந்து பார்த்த போது விக்ரமின் புன்னகை முகம் அவள் முகத்தருகில் இருந்தது... அவளது காதல்

மனம் அவனது புன்னகை முகத்தை மனதில் பத்திரமாகச் சேமித்து வைத்துக் கொண்டது...

அந்தக் கணம் கணவனது நெஞ்சில் ஆறுதலாய் தலை சாய்ந்து கொண்டு ஆயிரம் கதை பேச அவளது காதல் மனம் ஆசை கொண்டது... எண்ணியதை எல்லாம் நடத்தி காட்ட கூடிய வரத்தை பெற்று அவள் பிறவி எடுக்கவில்லையே... கண்களில் கண்ணீர் மல்கியதில் அதைக் கணவனுக்குக் காட்டாது மறைக்க எண்ணி விழிகளை மூடி கொண்டாள் அவள்...

அந்தக் கணம் அவளது மனதின் வெம்மையைத் தீர்ப்பது போல் கணவனது வெப்ப மூச்சுக்காற்று அவளது முகத்தின் மீது தென்றல் போல் மென்மையாய் வருடி சென்றது... அதில் அவள் மீண்டும் விழிகளைத் திறந்து பார்த்த போது கணவன் உதடுகள் குவித்துக் காற்றை அவளது முகத்தில் ஊதி கொண்டிருந்தான்... அவனது செயலை கண்டு அவள் புரியாமல் விழித்தாள்...

"நான் ஊதிய காற்றில் மது வாடை வந்ததா...?" அவன் கேட்டதும் தான் அவளுக்கு அது உறைத்தது...

'இல்லை' என்பது போல் அவள் தலையாட்டினாள்... ஏனோ அவளது மனதில் இனம் புரியாத நிம்மதி...

"அதையே தான் நானும் சொல்கிறேன்... எனக்குக் குடி பழக்கம் கிடையாதுன்னு..."

அவன் கூறியதை அவள் அப்படியே நம்பினாலும் சிறு சந்தேகத்துடன் அவனைப் பார்த்தவள், "அன்னைக்கு ஹோட்டலில் ரெட் ஒயின் ஆர்டர் பண்ணியே... அது யாருக்கு...?"

"அது உன்னைச் சும்மா சீண்டுவதுக்காக..."

"அப்போ இன்னைக்கும் வெட்டி சீன் போட்டது என்னைச் சீண்டுவதுக்காகத் தானா...?"

அவள் கேட்டதும் அவன் வாய்விட்டு சிரித்ததைக் கண்டு கோபம் கொண்டு அவனின் நெஞ்சில் கை வைத்து தள்ளினாள்...

"போடா..." என்று...

தனது நெஞ்சை தழுவிய மனைவியின் மலர் கரத்தில் இருந்து அவனது உடலில் மின்சாரம் பாய்ந்தது போல் ஒரு தோற்றம் அவனுள்... சட்டென்று அவன் விலகி அமர்ந்தான்... அன்று அவளது வயிற்றில் கை வைத்து பார்த்தானே அப்போது தோன்றிய உணர்வு போல் ஒரு பரவசமான நிலை... ஏன் என்று தெரியாத உணர்வில் தலையைக் கோதி கொடுத்தபடி பரபரப்பாய் அலைபாயும் மனதுடன் அவன் அமர்ந்து இருந்தான்...

பவித்ராவோ கணவனது விலகலில் மனம் வெதும்பி போய் அமர்ந்து இருந்தாள்... அவன் அருகாமை வேண்டும் என்று ஏங்கி தவிக்கும் மனம் அவன் அருகில் வந்தால் புறக்கணிப்பது ஏன் என்று தெரியாது அவள் தனக்குள் தவித்தாள்...

விக்ரம் தன்னைச் சமாளித்துக் கொண்டு காரை எடுத்தான்... அதன் பின் இருவரிடையே மௌனமே ஆட்சி செய்தது...

மறுநாள் காலையில் விக்ரம் அலுவலகத்திற்குக் கிளம்பும் போது ரேவதி அவனிடம் வந்து நின்றார்... அவரைக் கண்டதும் புன்னகை முகமாய்,

"என்னம்மா...?" என்று கேட்க...

"பவிக்கு இது ஏழாவது மாசம்... வளைகாப்பு பண்ணணும்..."

வளைகாப்பு என்றால் என்னவென்று தெரியாத அளவுக்கு அவன் அறியாமையில் இருக்கவில்லை...

"பண்ணுங்கம்மா... அதுக்கென்ன...?"

அவனது தந்தையைப் போன்று ஒட்டாது பேசிய மகனை கண்டு அவரது மனம் துணுக்குற்றது... எடுத்துக் கூறினால் மகன் கேட்டு கொள்வான் என்கிற நம்பிக்கையில் அவர் அவனிடத்தில் பேசினார்...

"பவியைக் கூட்டிட்டு போய் அவளுக்குப் பிடித்த மாதிரி புடவை, கண்ணாடி வளையல்கள் எல்லாம் வாங்கிக் கொடு... சம்பிரதாயப்படி பார்த்தால் இது எல்லாம் பவி வீட்டில் தான் செய்யணும்... ஆனால் ஒரு பெண்ணுக்கு புருசன் எடுத்துக் கொடுத்தால் தான் சந்தோசம்... அதை நீ உன் மனைவிக்குக் கொடுப்பாய் என்று நம்புகிறேன்..." என்று கூறியவரின் முகத்தில் துயரம் மண்டியிருந்தது...

விக்ரமிற்கு அவர் மனதில் இருப்பது என்னவென்று புரியவில்லை என்றாலும் அவரது முகம் வாடி இருப்பது கண்டு மனம் வருந்தினான்...

"அம்மா... உங்க மனசில் எந்தக் கவலை இருந்தாலும் என்னிடம் சொல்லுங்க... உங்களுக்காக நான் இருக்கிறேன்ம்மா..." என்று ஆறுதல் அளித்த மகனை கண்டு அவர் புன்னகைத்தார்...

அன்று கூறியது போல் அவருக்காக விக்ரம் வீட்டில் நிறைய விசயங்களைச் சரி கட்டி மாற்றி இருந்தான்... இப்போது எல்லாம் அவருக்கு வேலைகள் அதிகம் இருப்பது இல்லை... அவரை மாதர் சங்கத்தில் சேர்த்து விட்டுச் சமுதாயத் தொண்டில் ஈடுபடுத்தி இருந்தான்... 'விக்ரமின் அன்னையா...?' என்று எல்லோரும் ஆச்சிரியத்துடன், மரியாதையுடன் பார்க்கும் போது அவருக்கு இத்தனை நாள் உயிருடன் வாழ்ந்ததற்கான அர்த்தம் கிடைத்து விட்டது போலிருக்கும்... அத்தனை சந்தோசம், நெகிழ்ச்சி அவரது மனதில்...

கணவன் அவருக்கு அளிக்காத பெருமையை அவரது மகன் அவருக்குப் பெற்று தந்து விட்டான்... அதிலும் மருமகள் பவித்ரா என்னும் போது அந்த மரியாதை இன்னமும் இரட்டிப்பாய் அதிகரித்தது... இருவருமே தொழிலில் இரு

ஜாம்பவான்கள்... அந்த இருவரையும் தன் மக்களாய் பெற்ற அவருக்கு அதை விட வேறு என்ன பேறு வேண்டும்...!

"எனக்கு எந்தக் குறையும் இல்லை விக்ரம்... இப்போ நான் சந்தோசமாக இருக்கிறேன்... இனி என் பேர குழந்தைகளைத் தூக்கி கொஞ்ச வேண்டியது தான் பாக்கி..." என்று புன்னகைத்தவரின் முகத்தை உற்றுக் கவனித்தான் மகன்... சற்று முன் காணப்பட்ட வருத்தத்தின் சுவடு இப்போது அவரிடத்தில் இல்லை...

"என்னமோ என் கிட்ட இருந்து மறைக்கிறீங்கம்மா..." என்றான் அவன் அவரது முகத்தை ஆராய்ந்தவாறு...

"அடப்போடா... உன் மனைவி முகத்தைப் பார்த்து ஆராய்ச்சி செய்றதை விட்டுட்டு என் முகத்தைப் பார்த்துட்டு இருக்க..." என்று அவர் கிண்டல் செய்தார் மகனை...

அந்நேரம் அங்கு வந்த பவித்ராவை அழைத்துத் தன் முன் நிறுத்தியவன் அவளது முகத்தை இமைக்காது பார்த்தான்... கணவனது செயலில் முதலில் புரியாது திகைத்தவள் பின் அவனது பார்வையில் மெல்ல மெல்ல அவளது முகம் செவ்வானமாய்ச் சிவந்து போனது நாணத்தில்...

'என்னவானது இவனுக்கு...? அதுவும் அத்தையை வைத்துக் கொண்டு...' என்று தனக்குள் முனங்கியவள்,

"விக்ரமா..." என்று அவஸ்தையுடன் அவனை அழைக்க... அதில் அவன் குபீரென்று சிரித்து விட்டான்...

"என்ன...?" என்று எரிச்சலுடன் கேட்டவளை கண்டு அன்னையைச் சுட்டிக்காட்டியவன்,

"அம்மா சொன்னாங்க உன் முகத்தைப் பார்க்க சொல்லி அதான்..." என்றவன் அன்னையிடம்,

"பவி முகம் எப்போதும் மாதிரி தான் இருக்கிறது... உங்க முகம் தான் அப்பப்போ டல்லடிக்கிறது..."

"அதெல்லாம் ஒண்ணும் இல்லை விக்ரம்... நான் எப்போதும் போல் தான் இருக்கிறேன்..." என்று மறுத்து பேசிய

ரேவதியிடம் பவித்ரா,

"அத்தை... நீங்க யோகா கிளாஸ் சேர்வதற்கு நான் கேட்டு விட்டேன்... இன்னையில் இருந்து ஆரம்பிக்கலாம்ன்னு சொல்லிட்டாங்க... வீட்டில் இருந்து கத்துக்கிறீங்களா...? இல்லை வெளியில் போய்க் கத்துக்கிறீங்களா...? அவள் என்னோட பிரெண்ட் தான்... அதனால் எந்தப் பிரச்சினையும் இல்லை..."

"வெளியில் போய்க் கத்துக்கிறேன் பவி... வீட்டில் இருப்பதை விட வெளியில் சென்று வந்தால் சற்று ரிலாக்சாக இருக்கலாம்..." என்று வாஞ்சையுடன் கூறிய மாமியாரை கண்டு வலக்கை கட்டை விரலை தூக்கி காட்டியவள்,

"டன் அத்தை..." என்க...

மனைவியின் இந்தப் பரிமாணத்தை விக்ரம் ஆச்சிரியத்துடன் பார்த்திருந்தான்... தன்னை விடத் தன் அன்னையிடம் அவள் இயற்கையாகப் பாசத்துடன் ஒட்டி கொள்வது அவனுக்குப் பெருமையாக, நிம்மதியாக இருந்தது... ஆனாலும் அவனது வாய் சும்மா இருக்காது அவளிடத்தில் அந்தக் கேள்வியைக் கேட்டு வைத்தது... இதைத் தான் நாக்கில் சனி என்று சொல்வார்களா...

"பவி... உன் பிரெண்ட் அழகாயிருப்பாளா...?" என்று ஆர்வமாய்க் கேட்டவனை முறைத்து பார்த்தாள் அவள்...

"பவிம்மா... என் மகன்னு எல்லாம் பார்க்காதே... உன் புருசன் கேட்ட கேள்விக்கு எத்தனை அடி போட்டாலும் தகும்..." என்று சிரித்தபடி மருமகளுக்கு எடுத்து கொடுத்தார் ரேவதி...

"அம்மா... சும்மாவே உங்க மருமகள் சாமியாடுவாள்... இதில் நீங்க வேற எடுத்து கொடுக்கிறீங்களா...?"

"நான் எதுக்கு எடுத்து கொடுக்கணும் விக்ரம்... அதான் உன் வாய் நன்றாக எடுத்து கொடுக்கிறதே..."

"விடுங்க அத்தை... அந்தளவுக்கு எல்லாம் உங்க மகன் வொர்த் இல்லை... இவனுக்கு வெளியில் ஒரு பெயர் இருக்குது... என்னன்னு தெரியுமா...?" ரகசியம் பேசுவது போல் குரலை தாழ்த்தியவள்,

"சாமியார்..." என்று கூற...

அதைக் கேட்டு ரேவதி சிரித்து விட... விக்ரம் மனைவியை முறைத்துப் பார்த்தான்...

"அதனால் இவனை முழுசாய் நம்பலாம் அத்தை..." என்று கேலி போல் அவள் கூறினாலும் அதில் பெருமிதமே நிரம்பி வழிந்தது... பின்னே சந்தர்ப்பம் அமைந்தும் அவளை விடுத்து வேறு பெண்ணை மணக்காத கணவன் வேறு யாருக்கு கிடைக்கும்...

"இந்தப் புரிதல் இருக்கும் வரை உங்களை யாரும் பிரிக்க முடியாது பவி... உங்க ரெண்டு பேரை நினைச்சு என் மனசுக்குள் கொஞ்சம் வருத்தம் இருந்துக்கிட்டே இருக்கும்... ஆனால் இப்போது அந்த வருத்தம் சுத்தமாய் இல்லை... நிம்மதியாய் இருக்கு... இது போல் வாழ்க்கை முழுவதும் ஒற்றுமையா இருங்க..." என்று கூறிய ரேவதி அங்கிருந்து அகன்று செல்ல...

அவரைத் தொடர்ந்து பவித்ராவும் அங்கிருந்து நகர்ந்து செல்ல முயற்சித்தாள்... ஆனால் முடியவில்லை... ஆம், விக்ரம் அவளது கையைப் பிடித்துத் தடுத்திருந்தான்...

"தேங்க்ஸ்..." என்று அவன் உரைக்க...

"எதுக்கு...? சாமியார்ன்னு சொன்னதுக்கா...?" என்று நக்கலாய் கேட்டவளை கண்டு அவள் அருகில் நெருங்கி வந்தவன்,

"வாய் கொழுப்பு கொஞ்சமும் குறைவதாய் இல்லை..." என்று கூறியபடி தாடையைத் தடவி கொண்டு மனைவியை வில்லன் பார்வை பார்த்து வைத்தான் அவன்...

"ப்ளீஸ் விக்ரமா... கையை விடு..."

அவளது அழைப்பில் முகம் மலர்ந்தவன், "அம்மாவின் முகத்தில் சந்தோசத்தை வரவழைத்ததற்காக... அம்மாவுக்காகப் பார்த்து பார்த்து செய்வதற்காக..." என்றான்...

"அவங்க எனக்கு அத்தை..." என்று அவள் முறுக்கி கொண்டு கூற...

"அந்த அத்தை எப்படி வந்தாங்களாம்... உன் புருசனை வைத்து தானே..." என்று அவன் கிடுக்கிப்பிடி போட...

"போடா... உன்னிடம் பேசி ஜெயிக்க முடியாது..." வெட்கத்தில் சிவந்த முகத்தை அவனிடத்தில் காட்டாது அவனைத் தள்ளி விட்டு அவள் சென்று விட்டாள்...

விக்ரமோ முகத்தில் நிறைந்த புன்னகையுடன் மனைவியைப் பார்த்திருந்தான்... மனதில் ஏனோ மகிழ்ச்சி தாண்டவமாடியது... அவள் தனது தோல்வியை ஒத்து கொண்டதாலோ...???

**********************

வளைகாப்பிற்கு ஒரு வாரத்திற்கு முன்னர் விக்ரம் மனைவியைக் கடைவீதிக்கு அழைத்தான்... அவளோ முறுக்கி கொண்டாள்...

"எனக்கு யாரும் எடுத்து கொடுக்க வேண்டாம்..."

"உனக்கு எடுத்துக் கொடுக்கக் கூப்பிடலை... என் மகனுக்கு..."

"மகளுக்கு..."

"சரி மகளுக்கு... போதுமா...?"

"உன் மகள் இப்பவே பட்டு புடவை எல்லாம் கட்ட ஆசைப்படுகிறாளா...? இது எனக்குத் தெரியாது போயிற்றே..." என்று கேலி செய்த மனைவியவளை கண்டு அவனது முகம் மாறியது...

"இங்கே பார் பவித்ரா... நீ மறுத்தாலும் உன் வயிற்றில் வளரும் குழந்தைக்கு நான் தான் அப்பா... அதை நீ மறைக்க முடியாது... குழந்தை மேல் உனக்கு எந்தளவுக்கு உரிமை இருக்கிறதோ... அதே அளவு உரிமை எனக்கும் இருக்கிறது... குழந்தைக்கு உண்டான விழாவில் என்னுடைய பங்கும் இருக்கணும்ன்னு நான் நினைக்கிறேன்... அதை மீறி தடுக்கணும்ன்னு நீ நினைச்ச அப்புறம் நான் மனுசனா இருக்க மாட்டேன்..." என்று கர்ஜித்தவனை வெறுமையாய் பார்த்தவள்,

"நான் வரலை... நீயே வாங்கிட்டு வா..."

"ஏன்...?"

"எனக்கு அலைய முடியலை விக்ரமா... டயர்டா இருக்கு..." என்று கூறிவிட்டு மூச்சு வாங்க கட்டிலில் அமர்ந்தவளை கண்டு அவன் என்ன நினைத்தானோ உடனே சரியென்று அதற்குச் சம்மதித்தான்...

வளைகாப்பு அன்று கணவன் வாங்கிக் கொடுத்த பட்டு புடவையில் அழகுற நாற்காலியில் அமர்ந்திருந்தாள் பவித்ரா... விக்ரமிற்கு இந்த விழா எல்லாம் புதிதாக இருக்கப் புன்னகையுடன் தள்ளி நின்று வேடிக்கை பார்த்துக் கொண்டிருந்தான்...

"செய்றது எல்லாம் செய்துட்டு ஒண்ணும் தெரியாத அப்பாவி போல் மாமா இருப்பதைப் பாருக்கா..." என்று பல்லவி அக்காவின் காதை கடித்தாள்...

"விக்ரம் அப்படி என்னடி பண்ணினான்...?"

"உனக்குக் குழந்தை கொடுத்ததைத் தான் சொன்னேன்..." என்றவளை பவித்ரா முறைத்து பார்க்கவும்,

"மீ எஸ்கேப்..." என்று அவள் ஓடி விட்டாள்...

ஏழு மாத கர்ப்பிணியாய் பவித்ரா அமர்ந்திருக்க அவள் அருகில் புன்னகை முகத்துடன் நின்றிருந்த தங்கையைக் காண காண சௌந்தர்யாவிற்கு பற்றிக் கொண்டு வந்தது...

விக்ரமின் திருமணம் மீதான நாட்டமின்மையைப் பயன்படுத்தி அவர் அவரது மகன் வினோத்திற்கு முதலில் திருமணம் செய்து வைத்து அவரது பேர குழந்தைகளை முதலில் பார்த்து விடத் துடித்தார்... ஏனெனில் அவரால் தான் இந்த வீட்டிற்கு முதல் வாரிசை பெற்று கொடுக்க முடியவில்லை... அதனால் பேரன் மூலம் தான் இழந்த வாரிசு உரிமையைத் திரும்பப் பெற விரும்பினார்...

ஆனால் இப்போது எல்லாம் தலைகீழாய் மாறி போய் விட்டது... அதே சமயம் திருமணமாகி இத்தனை மாதங்களாகியும் இன்னமும் குழந்தை உண்டாகாத மருமகளை நினைத்து கடுப்பாக இருந்தது... இதைப் பற்றிச் சாடைமாடையாக மகனிடத்தில் பேசிய போது,

"அம்மா... உங்க மருமகள் காதுபடச் சத்தம் போட்டு பேசிராதீங்க... அப்புறம் எனக்குத் தான் குறை இருக்குதுன்னு நினைச்சிட்டு என்னை டிவோர்ஸ் பண்ணிட்டு வேறு ஒருத்தனை கல்யாணம் பண்ணிக்கப் போகிறாள்..."

"அது எப்படிடா முடியும்...? நீ ஆண்... அவள் பெண்..."

"குறைக்கு ஆண், பெண் பேதமில்லை... அதனால் அசிங்கப்படாம நீங்க அமைதியாய் இருங்க... இது எங்க பிரச்சினை... நாங்க பார்த்துக்கிறோம்..." என்று அழுத்தம் திருத்தமாய்க் கூறிவிட்டு அவன் சென்றுவிட... சௌந்தர்யா தான் திக்பிரம்மை பிடித்து நின்றார்...

அண்ணியின் அலங்காரத்தைப் பார்த்தபடி நின்றிருந்த வினோத்தின் மனதில் அன்று அன்னை அவனிடத்தில் பேசிய நாள் நினைவிலாடியது... ஏனெனில் அன்று தான் அவர்களது வாழ்வும் மலர்ந்த நாள்... அதனால் அந்த நாளை அவனால் மறக்க முடியாது...

மாமியாருடன் கணவன் பேசியதை பல்லவி கேட்டு விட்டாள்... அறைக்குள் வந்த கணவனை அவள் கண்ணீர் மல்க ஏறிட்டு பார்த்தாள்... இன்னமும் வாழ்க்கை ஆரம்பிக்காத அவளுக்கு மாமியாரின் வார்த்தைகளைத்

தாங்கி கொள்ள முடியவில்லை... அதே சமயம் கணவனது வார்த்தை அவளுக்குப் பெருத்த ஆறுதலாக இருந்தது... அடுத்த நொடி,

"மாமா..." என்று கூவியபடி அவனை இறுக அணைத்து கொண்டாள்...

மனைவியின் எதிர்பாராத செயலில் திகைத்து போன வினோத் பின் சிரித்தபடி அவளை அணைத்துக் கொண்டான்...

"தேங்க்ஸ் மாமா..."

"தேங்க்ஸ் எல்லாம் வேண்டாம் ஹனி... எப்போ இந்த மாமனை தனியா கவனிக்கப் போகிற...?" என்று மனைவியின் காதுகளில் கிசுகிசுத்தவனிடம் அன்றே அவள் சரணாகதி அடைந்தாள்...

புரிதலுடன் கூடிய தாம்பத்தியம் அங்கு இனிதாய், அழகாய் மலர்ந்தது... அதன் பின் தெளிந்த ஓடையாக அவர்களது வாழ்க்கை செல்கிறது...

"விக்ரம்... இங்கே வாப்பா..." சித்தியின் குரலில் தன்னுணர்வு பெற்ற வினோத் விழாவை வேடிக்கை பார்க்கலானான்...

அருகில் வந்து நின்ற கணவனைக் கண்டதும் அவர்களது நிச்சயம் அன்று நடந்த நிகழ்வு நினைவில் எழுந்து பவித்ரா அவனைத் திகிலுடன் பார்த்தாள்... ஆனால் அவனோ புன்னகையுடன் நாசுக்காய் இரு விரல்களில் லேசாகச் சந்தனத்தை எடுத்து அவளது இரு கன்னத்திலும் தடவி விட்டான்... அப்போது மனைவியவளை பார்த்த போது அவனுள்ளும் அன்றைய நாளின் தாக்கமே...

"நான் சாமியார் இல்லைன்னு நிரூபிச்சிட்டேன் பார்த்தியா...?" என்று அவன் கேலி குரலில் கேட்க...

"இந்தக் காலத்தில் சாமியார்கள் தான் அதிகத் தப்புகள் செய்றாங்க..." என்று அடங்காது பதில் கூறிய

மனைவியவளை கண்டு,

"உன் வாயை அடைத்தால் தான் நீ சரிப்பட்டு வருவாய்..." என்று கூறியபடி அவள் முகம் நோக்கி குனிந்தான் அவன்...

அவள் பயத்தில் விழிகளை மூடி கொள்ள அவனோ சிரித்தபடி அவளது நெற்றியில் இதழ் பதித்து விட்டு நிமிர்ந்தான்... அன்று போல் இன்றும் பவித்ரா கணவனது செயலில் பனிக்கட்டியாய் உறைந்து போய் அமர்ந்திருந்தாள்... ஆனால் இன்று கணவனது செய்கை அவளது மனதிற்கு இதமாக இருந்தது என்னவோ உண்மை...

நாட்கள் அமைதியாக நகர்ந்து செல்ல பவித்ராவின் பிரசவ நேரம் நெருங்கி கொண்டு இருந்தது... இப்போது அவள் தனது அன்னை வீட்டில் இருந்து நிறுவனத்திற்குச் சென்று கொண்டிருந்தாள்... வீட்டில் இருக்கும் அனைவரிடமும் முகத்தைச் சுளிக்காது இன்முகத்துடன் பேசினாள்... மனதின் மூலையில் கணவனைக் காணாத தவிப்பு இருக்கும் ஆனாலும் அதை வெளிக்காட்டி கொள்ள மாட்டாள்...

விக்ரமும் அபூர்வமாய் அங்கு வருகை புரிவான்... அப்படியே வந்தாலும் பெரியவர்களிடம் சிறிது நேரம் பேசுவான்... பின்பு அவளிடம் ஓரிரு வார்த்தைகள் பேசுவான்... அதற்கு மேல் அங்கு இருக்காது கிளம்பி சென்று விடுவான்... மன்னவன் நெஞ்சில் சாய்ந்து கொண்டு மகவின் ஒவ்வொரு அசைவையும் கூறி சந்தோசம் கொள்ளப் பெண்ணவள் மனம் துடிக்கும்... ஆனால் அதை வாய் விட்டு அவனிடத்தில் கூற மாட்டாள்... அழுத்தமாய் உணர்விலாது அவனைப் பார்த்தபடி நின்றிருப்பாள்... அவனும் அவளது முகத்தை அழுத்தமாய்ப் பார்த்தபடி ஒன்றும் பேசாது கிளம்பி சென்று விடுவான்...

என்ன வாழ்க்கை இது...? என்று சில சமயம் அவளுக்கு அலுப்பாக இருக்கும் போது அவளது வயிற்றில் இருக்கும் மகவு 'நான் இருக்கிறேன் உனக்கு' என்பது போல் ஓங்கி

உதை கொடுக்கும்... அதில் அவள் கவலை அகன்று வயிற்றை மகிழ்ச்சியுடன் தடவி கொடுப்பாள்...

இதோ அன்னைக்கு ஆறுதலாக அவர்களது மகவு வெளிவர துடித்தது... காலையில் வலி வந்து பவித்ரா மருத்துவமனையில் அனுமதிக்கப்பட்ட போது விக்ரம் தொழில் சம்பந்தமாக வெளியூர் சென்றிருந்தான்... விசயம் கேள்விப்பட்டுப் பவித்ரா அத்தனை வேதனை அடைந்தாள்... இந்தச் சமயம் கூட அருகில் இல்லாத கணவனை நினைத்து அவளுக்குக் கோபம் வருவதை விடுத்து வருத்தம் தான் அதிகரித்தது... தன்னிலையை எண்ணி கழிவிரக்கத்தில் அழுகை வந்தது அவளுக்கு...

பிரசவ வலியை கூடத் தாங்கி கொண்டு தைரியமாய் இருந்தவள் காதலில் கோழை போல் கண்ணீர் வடித்தாள்...

பவித்ரா நினைத்தது போல் மகள் தான் மண்ணில் அவதரித்தாள்... ஆனால் உருவத்தில் தந்தையைக் கொண்டு குட்டி தேவதை போல் அழகாய் இருந்தாள் அந்தச் சின்னச் சிட்டு... தன்னைப் போன்று இருந்த மகளைப் பார்ப்பதற்குக் கூட அந்தத் தந்தையவன் அங்கு வரவே இல்லை...

தொடர்ந்து மூன்று நாட்களாகத் தன்னைப் பார்க்க வராத கணவனை நினைத்து பவித்ராவின் வெறுப்பு வளர்ந்து கொண்டே போனது... அவனுக்குப் பிடிக்காத மகள் பிறந்து இருப்பதினால் தான் அவன் வரவில்லை என்று அவளாக நினைத்து கொண்டாள்... கணவன் மீதான அவளது வெறுப்பு நாளுக்கு நாள் அதிகரித்துக் கொண்டே போனது...

மூன்றாவது நாள் தன்னைக் காண வந்த மாமியாரிடம் பவித்ரா கோபத்தில் வெடித்தாள்...

"இதுக்கு மேலும் உங்க மகனோடு என்னால் வாழ முடியாது அத்தை... பெத்த மகளைக் கூடப் பார்க்க வர முடியாதபடி அவன் அப்படி என்னத்தை வெட்டி முறிக்கிறான்...? அவன் மாறுவான், மாறுவான்னு நான் எதிர்பார்த்துக்

காத்திருந்தேன்... ஆனா அவன் கொஞ்சமும் மாறலை... மாறவும் மாட்டான்... எனக்கு அவன் வேண்டாம் அத்தை... வேண்டாம்..." என்று அழுது கொண்டே ஆவேசமாய்ப் பெருங்குரலெடுத்து கத்தியவளை பரிதாபமாகப் பார்த்தார் ரேவதி...

மருமகளிடத்தில் உண்மையை எப்படிச் சொல்வது என்று தெரியாது அவர் தவித்துப் போய் நின்றிருந்தார்...

மொழி பேசும்...!!!

## விழி : 16

பவித்ரா பேசிய வார்த்தைகளுக்கு வேறு ஒருவராக இருந்திருந்தால் கோபப்பட்டு இருப்பார்கள்...ஆனால் ரேவதியால் அப்படிக் கோபப்பட முடியவில்லை... ஏனெனில் அவரும் பவித்ரா போன்று இது போல் எதிர்பார்த்து ஏமாந்து அதன் பின் அந்த ஏமாற்றத்தை விழுங்கி கொண்டு இன்று வரை கசப்புடன் வாழ்பவர் ஆயிற்றே... அதற்காக மகன் தந்தையைப் போன்று பாசம் இல்லாதவன் இல்லையே... அவரால் மகனையும் குறை கூற முடியவில்லை... மருமகளையும் குறை கூற முடியவில்லை... அந்த விதியை தான் மனதில் சபித்தார்...

"பவிம்மா... விக்ரம் நல்லா இருந்தால் உன்னைப் பார்க்க வந்திருக்க மாட்டானா...?"

அவரது வார்த்தையில் அவளது ஆவேசம் அப்படியே அடங்கியது... பரபரப்புடன் அவர் அருகில் வந்தாள்...

"அத்தை என்ன சொல்றீங்க...? விக்ரமுக்கு என்னாச்சு...?"

அவளது குரலில் அத்தனை பதற்றம்... மேனியில் அத்தனை நடுக்கம்... சற்று முன் கோபம் கொண்டு கத்தியது அவள் தானா என்பது போல் இருந்தது அவளது இந்தத் திடீர் மாற்றம்... இதைத் தான் மஞ்சள் கயிறு மகிமை என்று சொல்வார்களோ...

"பவிம்மா..." மேலே சொல்ல முடியாது ரேவதியின் கண்களில் கண்ணீர் வழிந்தது...

"எதுவாக இருந்தாலும் சொல்லுங்கத்தை..." என்று அவள் அவரிடத்தில் கெஞ்சினாள்...

"நம்ம விக்ரமுக்கு ஆக்சிடெண்ட் ஆகிருச்சும்மா..." என்றார் அவர் வேதனையுடன்...

அதைக் கேள்வியுற்றதும் பவித்ரா அதிர்ச்சியில் சிலையாகச் சமைந்தாள்... ரேவதி பயந்து போனவராய்,

"பவி... பவிம்மா..." என்று அவளைப் பிடித்து உலுக்கினார்... அவளது அன்னை கல்பனாவும் அவள் அருகில் விரைந்து வந்தார்...

இருவரும் சேர்ந்து அவளை உலுக்கியதில் அவள் சுயவுணர்வு பெற்றவளாய் அவர்கள் இருவரையும் பாவமாய்ப் பார்த்தாள்...

"இப்போ விக்ரம் எப்படி இருக்கான்...?"

"ஆபத்துக் கட்டத்தைத் தாண்டிட்டான்... இப்போ தான் கண் முழிச்சு பார்த்தான்..." என்று புடவை முந்தானையால் கண்களைத் துடைத்துக் கொண்டு ரேவதி கூறினார்...

"அம்மா... நீங்க கூட இந்த விசயத்தை என் கிட்ட இருந்து மறைச்சிட்டீங்களே..."

"இந்த நிலைமையில் உன் கிட்ட எப்படிச் சொல்வேன் பவி...?" அவருக்கும் வேதனையாக இருந்தது...

"அத்தை... நான் அவனைப் பார்க்கணுமே..." என்று பரிதாபமாய்க் கெஞ்சிய மருமகளைக் காண சகிக்காது அன்போடு அணைத்துக் கொண்ட ரேவதி,

"விக்ரமை இங்கே தான் அட்மிட் பண்ணியிருக்கு... ஆனா இப்போ நீ பார்க்க போக வேண்டாம் பவிம்மா... குழந்தை பெத்த பச்சை உடம்பு... உன் உடல் தேறியதும் அவனைப் போய்ப் பார்க்கலாம்... விக்ரமை நான் பார்த்துக்கிறேன்... நீ பேத்தியை கவனி..." என்று புரிதலோடு அவர் கூறினார்...

"இல்லை அத்தை... நான் அவனைப் பார்த்தே ஆகணும்..." என்று பிடிவாதமாய் உறுதியுடன் கூறியவளை வேறுவழி இல்லாது ரேவதி உடன் அழைத்துச் சென்றார்...

அறை வாயில் வரை சென்றவள் பின் ஏதோ நினைத்தவளாய் திரும்பி வந்து தொட்டிலில் உறங்கி கொண்டிருந்த மகளைக் கைகளில் அள்ளி எடுத்துக் கொண்டு கணவனைக் காண கிளம்பினாள்...

சுக பிரசவம் என்ற போதும் குழந்தை பிறந்து மூன்று நாளான நிலையில் அவளால் சகஜமாக நடக்க முடியவில்லை... மெதுவே நடந்தவளிடம் இருந்து குழந்தையை வாங்க கைகளை நீட்டினார் ரேவதி...

"வேண்டாம் அத்தை..." என்றவள் மகளை நெஞ்சோடு அணைத்து கொண்டாள்... கணவனுக்கும் அவளுக்குமான உறவு பாலம் இவள் அல்லவா...

விக்ரமிற்கு விபத்து என்ற செய்தியை பவித்ராவால் இன்னமும் நம்ப முடியவில்லை... ஐந்து நாட்களுக்கு முன் தன்னை வந்து பார்த்து விட்டு போன கணவனின் முகமே மனதில் தோன்றி அவளை வதைத்தது...

மின்தூக்கி மூலம் மேலே மூன்று தளம் சென்று அந்த நீண்ட வராந்தாவில் சிறிது தூரம் நடந்த பிறகு ஒரு அறையைச் சுட்டிக்காட்டிய ரேவதி, "இந்த ரூம் தான் பவி... உள்ளே வாம்மா..." என்று கூறியபடி அறை கதவை திறந்து கொண்டு உள்ளே செல்ல...

அச்சத்தில் பதறும் மனதுடன் குழந்தையை இறுக்கி அணைத்துக் கொண்டு பவித்ரா அறையினுள் சென்றாள்... அவளின் பின்னே கல்பனா வந்தார்...

அங்குக் கட்டிலில் படுத்திருந்த விக்ரமின் நிலை கண்டு பவித்ரா அப்படியே உறைந்து போய் நின்றாள்... அவனின் வலதுகை, வலதுகால் முழுவதும் பெரிய கட்டு போடப்பட்டு இருந்தது... அது போல் உடலில் பல பாகங்களிலும் அங்காங்கே கட்டு போடப்பட்டு இருந்தது...

கண்ணீர் மல்க அவன் அருகில் சென்று அமர்ந்தவள் இடது கையால் மகளைத் தாங்கி கொண்டு, வலது கையால் அவனது அடிப்படாத கையைப் பிடித்துக் கொண்டு,

"விக்ரமா..." என்று அழைத்தாள்...

கணவன், மனைவி இருவருக்கும் தனிமை கொடுக்க எண்ணி ரேவதி, கல்பனா இருவரும் அறையை விட்டு வெளியில் வந்தனர்...

அவளது ஒற்றை அழைப்பு அவனது செவியைத் தீண்டி உள்ளத்தைத் தீண்டியதோ... அவ்வளவு நேரம் விழித்து இருந்தவன் அப்போது தான் மருந்தின் வீரியத்தில் உறங்க முற்பட்டான்... அந்தக் கணம் மனைவியின் அழைப்பு அவனது காதில் விழ சட்டென்று விழிகளைத் திறந்தான்... எதிரே கண்ணீர் மல்க கையில் குழந்தையுடன் அமர்ந்திருந்த மனைவியவளை கண்டு அவனது மனதில் மலர்ந்த மகிழ்ச்சியில் உதடுகளில் புன்னகை பூத்தது...

விபத்து நடந்த கணம் அவனது மனக்கண்ணில் வலம் வந்தது மனையாளின் மதி முகமும், முகமறியா அவனது மகவின் நினைவும் தானே... அவர்களைக் காணாது மடிந்து விடுவோமோ என்று மனம் மருகியபடி தானே அவனின் நினைவு தப்பியது... அவர்கள் இருவரும் தன் வாழ்வில் எந்தளவிற்கு முக்கியமானவர்கள் என்பதை அவன் உணர்ந்த கணமும் அது தான்... மீண்டும் அவர்களைக் கண்டதும் அவனுக்கு அத்தனை சந்தோசமாய் இருந்தது...

மெல்ல அவனது கரம் உயர்ந்து மகளின் தலையை மென்மையாய் வருடி விட்டது... மகளின் பட்டு போன்ற சருமம் கடின மனம் கொண்ட தந்தையவனைப் பாகாய் இளக்கியது... 'என் மகள்... என் இரத்தம்...' என்று அவனது மனம் பெருமிதம் கொண்டது...

"நீ நினைத்தது போல் மகள் தான் பிறந்திருக்கிறாள் போலும்..."

கணவன் அப்படிக் கேட்டதும் பதிலுக்குப் பதில் வாயடிக்கும் பவித்ரா இன்று பேச்சு மறந்தவளாய் மௌனமாய் ஆம் என்பது போல் தலையசைத்தாள்...

"என்னைப் போல் மகன் பிறப்பான் என்று நம்பிக்கையுடன் இருந்தேனே..."

மனைவியவளின் கவலை தோய்ந்த முகத்தைக் கண்டு அவளது மனநிலையை மாற்ற வேண்டி அந்நிலையிலும் அவன் அவளிடம் வம்பிழுத்தான்...

"மகளும் உன்னைப் போல் தான் இருக்கிறாள்..." என்று ரோசத்துடன் சொன்னவளை கண்டு அவனது புன்னகை இன்னமும் விரிந்தது... அதில் அவனது அடிப்பட்ட தாடை பகுதியில் சுருக்கென்று வலித்தது... அவளுக்காக அதைத் தாங்கி கொண்டான்... அழும் பவித்ரா அவனது மனைவி அல்லவே...

"மகனாக இருந்தால் இன்னமும் சந்தோசமாக இருந்திருக்கும்..."

"அதுக்கு வழியே இல்லை..." என்று முறுக்கி கொண்டு கூறியவளின் வார்த்தைகளின் அர்த்தம் புரியாதவனா அவன்...?

"மகன் பிறக்கும் வரை நான் உன்னை விடுவதாய் இல்லை..." என்று வெளியில் திமிராய் அவன் கூறிய போதும், 'கடவுளே... அடுத்தடுத்துப் பெண் குழந்தைகளையே கொடு... பவித்ரா என் வாழ்க்கை முழுவதும் எனக்கு வேண்டும்' என்று அவசரமாக மனதில் கடவுளுக்குக் கோரிக்கை வைத்தான்...

"இவ்வளவு அடிப்பட்டும் உன் லொள்ளு குறைய மாட்டேங்குது விக்ரமா..." என்று கூறி முறைத்தவளை கண்டு குறும்பாக,

"அடி உடம்புக்கு தான்... மனசுக்கு இல்லையே... அது அப்படியே தான் இருக்கிறது..." என்று கேலி பேசியவன்,

"நான் பேபிக்கு முத்தம் கொடுக்கலாமா...?" என்று ஆசையுடன் கேட்க...

கணவனது இந்த வார்த்தையில் அவள் சற்று முன் அவன் பேசிய வார்த்தைகளை மறந்தவளாய் மகளை அவன் முகத்தருகே கொண்டு சென்றாள்...

"இதை எல்லாமா கேட்டுட்டு இருப்ப...?" என்று கடிந்த மனைவியைப் புன்னகையுடன் பார்த்தபடி மகளின் நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டான்... அந்தக் கணம் அவன் மனதில் அப்படி ஒரு உவகைப் பொங்கியது...

நிம்மதியான உறக்கத்தில் இருந்த சின்னச் சிட்டு தந்தையின் முத்தத்தில் லேசாகச் சிணுங்க துவங்கியது...

"உன்னை மாதிரியே இருக்கிறாள்..." என்றவனைப் புரியாது பார்த்தாள் பவித்ரா...

"இல்லை நான் தொட்டால் நீயும் இப்படித் தானே சிணுங்குவ... அதைச் சொன்னேன்..."

அதைச் சொல்லும் போது அவன் மனதில் இருந்த ஏக்கம் அப்படியே வார்த்தையில் பிரதிபலித்தது... அவன் கூறியதை கேட்டு அவள் உறைந்தாள்... என்ன தான் பெண் என்று அவன் மகளைக் கிண்டலடித்தாலும் அவனது வார்த்தையில், செயலில் தெரிந்த வாஞ்சையில் அப்பட்டமாய் வெளிப்பட்டது அவனது பாசம்... அது போல் தான் தன்னிடமும் அவன் நடந்து இருப்பானோ என்று அவளுக்கு ஒரு எண்ணம் தோன்றியது...

அதே சமயம் விருப்பம் இல்லாது உறவு கொண்ட அவனது செயலும் நினைவில் எழுந்தது... அதனால் அதைப் பற்றிப் பேச மனம் இல்லாது அமைதியாகி போனாள் அவள்... மகளின் சிணுங்கல் அழுகையாக மாறத் துவங்கியது...

"ஏன் அழுகிறாள்...?"

"பசியாக இருக்கும்..." என்றவள் பக்கத்தில் இருந்த மற்றொரு கட்டிலில் அமர்ந்து கொண்டு மகளைச் சமாதானப்படுத்திக் கொண்டு பால் புகட்ட நினைக்கும் போது மனதினை ஏதோ உந்த நிமிர்ந்து பார்த்தாள்...

விக்ரம் தன்னைப் பார்த்துக் கொண்டு இருப்பதை உணர்ந்து அவனைப் பார்த்து முறைத்தாள்...

"போடா பொறுக்கி..." என்று அவனைத் திட்டியபடி மறுபக்கம் திரும்பி அமர்ந்து கொண்டு மகளுக்குப் பாலூட்ட துவங்கினாள்... திட்டியதற்கு நேர்மாறாய் அவளது உதடுகளில் புன்னகை தவழ்ந்தது...

"பொண்டாட்டி கிட்ட எல்லாக் கணவனும் பொறுக்கி தான்ம்மா..." மெல்லிய குரலில் கூறிய கணவனது வார்த்தைகள் அவளது இதழ்களை மேலும் விரிய செய்தது...

மகளுக்குப் பாலூட்டி முடித்ததும் அவளைத் தோளில் போட்டு தட்டி கொடுத்து ஏப்பம் விடச் செய்தவள் அவளைக் கைகளில் எடுத்துக் கொண்டு கணவனிடம் வந்தாள்...

"கொஞ்சம் இரு... பாப்பாவை அத்தை கிட்ட கொடுத்துட்டு வர்றேன்..." என்றவள் அவனின் பதிலை வேண்டாது அறையை விட்டு வெளியில் சென்றாள்...

இணக்கமாகப் பேசும் மனைவியைக் கண்டு விக்ரமிற்கு அத்தனை சந்தோசமாக இருந்தது... மகிழ்வான மனநிலையில் மெல்ல விழிகளை மூடி கொண்டான்...

"அத்தை... பக்கத்து ரூமை பாப்பாவுக்கு அரேன்ஜ் பண்ணி தர சொல்லுங்க... இல்லைன்னா இந்த ப்ளோரில் வேறு ஏதேனும் ரூமை அரேன்ஜ் பண்ணி கொடுக்கச் சொல்லுங்க... நீங்களும் அம்மாவும் பாப்பா கூட இருங்க... நான் விக்ரமுக்கு துணையா இங்கே இருக்கேன்..."

"நீ எப்படிம்மா...? அதுவும் இந்த மாதிரி நேரத்தில்..." ரேவதி மிகவும் தயங்கினார்...

"எனக்காக, ப்ளீஸ் அத்தை..." அவள் கெஞ்சி கேட்கவும் அவர் சம்மதித்தார்...

நல்லவேளையாகப் பக்கத்து அறையே அவர்களுக்குக் கிடைத்தது... மகள் தகப்பனுக்கு அருகில் குடி வந்தாள் அவனின் நலன் பொருட்டு...

மீண்டும் பவித்ரா அறைக்குள் வந்த போது விக்ரம் உறங்கி கொண்டு இருந்தான்... அவன் அருகில் நாற்காலியை போட்டுக் கொண்டு அமர்ந்தவளுக்கு அத்தனை நேரம் எழாத துக்கம் ஒட்டுமொத்தமாய் எழுந்து அவளைச் சுனாமியாய் தாக்கியதில் அவள் அவனது கையைப்

பிடித்துக் கொண்டு அதில் முகம் புதைத்து தேம்பி தேம்பி அழ ஆரம்பித்தாள்...

எவ்வளவு நேரம் அழுதாளோ தெரியாது... பிறகு விழிகளைத் துடைத்துக் கொண்டு நிமிர்ந்தவள் கணவனது முகத்தை இமைக்காது பார்த்தாள்... அந்தக் கணம் அவன் மீதான காதலில் அவளது வைராக்கியம், பிடிவாதம், சுயமரியாதை எல்லாம் பொடி பொடியாய்த் தகர்ந்தது...

இந்த விபத்தில் மட்டும் அவனுக்கு ஏதேனும் ஒன்றாகி இருந்தால் அவள் மனதில் இத்தனை காதலை சுமந்து கொண்டிருந்து என்ன பயன்...? சொல்லாத காதல் கடைசி வரை சொல்லாமல் போயிருக்குமே... இனியாவது வறட்டுக் கௌரவத்தை விட்டு விட்டுக் கணவனிடத்தில் நல்ல முறையில் நடந்து கொள்ள வேண்டும் என்று உறுதி கொண்டாள்...

அந்தக் கணம் ஒன்று மட்டும் அவளுக்குப் புரிந்தது... வாழும் காலம் கொஞ்சம்... அதை மகிழ்ச்சியுடன் வாழ வேண்டும் என்று... அதே போல் விக்ரமையும் மகிழ்ச்சியுடன் வைத்துக் கொள்ள வேண்டும் என்று... அவனுக்கு ஆபத்து என்றதும் அவனால் அவள் அடைந்த கசப்பு கூட மறைந்து விட்டது... காதல் மனம் எல்லாவற்றையும் மறந்தது, மன்னித்தது...

அன்று முழுவதும் கணவன் அருகில் இருந்து கவனித்துக் கொண்டாள்... எல்லோரும் அவளது உடல்நிலையைப் பற்றிக் கவலை கொண்டனர்... ஆனால் அவளது கருத்தில் நின்றது எல்லாம் கணவனது உடல்நிலை மட்டும் தான்...

"பவி... நீ குழந்தையைப் பாரும்மா... நாங்க விக்ரமை பார்த்துக்கிறோம்..." ரேவதி கூறிய போதும் அவள் மறுத்து விட்டாள்...

"பாப்பாவுக்குத் தான் நீங்க இருக்கீங்களே அத்தை... நீங்க உங்க பேத்தியை பார்த்துக்க மாட்டீங்களா...?"

"இதை விட எனக்கு வேறு வேலை என்ன இருக்கு...? ஆனால் உன் உடம்பு...?" என்று தயங்கிய மாமியாரிடம்

உறுதியாய் மறுத்தவள் கணவனுடன் தங்கி கொண்டாள்...

இரவு விக்ரம் உறங்கியதும் அவன் அருகில் நாற்காலியில் அமர்ந்தவள் அவனது கரத்தை எடுத்துக் கன்னத்தில் வைத்தபடி வெகுநேரம் பார்த்துக் கொண்டு இருந்தாள்... அவளது விழிகளில் இருந்து வழிந்த கண்ணீர் அவனது உள்ளங்கையை நனைத்துக் கரத்தில் வழிந்தோடியது...

திடுமெனக் கண் விழித்த விக்ரம் மனைவியிடம், "தண்ணி..." என்று கேட்டான்...

"தண்ணி கொடுக்கலாமான்னு கேட்டுட்டு வர்றேன்..." என்று அவள் அறையை விட்டு வெளியேற...

அப்போது தான் விக்ரம் தனது கையின் ஈரத்தை உணர்ந்தான்... அவன் எழும் போது மனைவியின் கன்னத்தில் தன் கரம் இருந்ததை உணர்ந்தவனுக்கு அது அவளது கண்ணீர் என்று தெரிந்து போனது... அதில் அவனது இதயம் ஒரு நொடி நின்று துடித்தது... கல்லில் இருந்து ஈரம் கசிந்ததில் அவனது கற்பாறை மனம் மெழுகு பாறையாய் இளக துவங்கியது...

"தண்ணி குடிக்கலாமாம்... ஆனா கொஞ்சமா..." என்றுரைத்தபடி தன் முன் வந்து நின்ற மனைவியை ஏனோ முதன்முறையாய்ப் பார்ப்பது போல் இமைக்காது அவன் பார்த்து வைத்தான்...

"என்ன விக்ரமா...?"

அவளது கேள்வியில் அவன் ஒன்றும் இல்லை என்று தலையசைத்தான்...

"தண்ணி குடி..." என்று கூறியவள் சிறு குழந்தைக்குப் புகட்டுவது போல் நீரை அவனுக்குப் புகட்டி விட்டாள்...

அவளது செயலை ஆச்சிரியமாய்ப் பார்த்தபடி நீரை அருந்தியவனின் மனம் அந்தக் கணம் குளிர்ந்து தான் போனது...

"போதுமா...?" என்று அவனிடம் கேட்டு உறுதிப்படுத்திக் கொண்டவள்,

"தூங்கு விக்ரமா..." என்று கூற...

"ம்... ம்..." என்று மெதுவே முனங்கியவன் விழிகளை மூடி கொண்டாலும் உடனே உறங்கவில்லை... மனைவியின் பணிவிடைகளே அவனது மனதில் படமாய் ஓடி கொண்டு இருந்தது...

விக்ரமின் அருகில் அமர்ந்திருந்த பவித்ரா அசதியில் தன்னையும் அறியாது கட்டிலில் தலை வைத்து உறங்கி விட்டாள்... அதை உணர்ந்தவனாய் அவன் தன் கை கொண்டு அவளது தலையை மெல்ல வருடி கொடுத்தான்... இத்தனை நாளாய் அவன் இது போல் செய்ததும் இல்லை... இது போல் உணர்ந்ததும் இல்லை... மனைவியவளை காண காண அவனுள் ஏதோ ஒன்று பொங்கி பிரவாகம் எடுத்து ஓடியது...

அந்நேரம் ரேவதி கதவை திறந்து கொண்டு உள்ளே வந்தார்... அவரது கையில் சிணுங்கியபடி உடலை நெளித்துக் கொண்டு இருந்தாள் அவனது செல்ல மகள்...

"இப்போது தான்ம்மா பவி தூங்கினாள்... ஆனாலும் இந்தப் பேபி ரொம்பத் தான் அவளைப் படுத்துது..."

மகனது வார்த்தையில் அவருக்குச் சிரிப்பு வந்தது...

"நீயும் இப்படித் தான்டா என்னைப் படுத்தின... பின்னே உன் மகள் மட்டும் எப்படி இருப்பாள்...? உன்னைப் போல் தானே..." அதைக் கேட்டு அவனது முகம் மலர்ந்தது...

அதற்குள் மகளின் அழுகை சத்தம் கேட்டு பவித்ராவே எழுந்து விட்டாள்...

"அச்சோ பாப்பா எதுக்கு அழுறாங்க...?" என்று கேட்டபடி அவள் மகள் அருகே செல்ல...

அன்னையின் சத்தத்தில் சின்னவளின் அழுகை சிறு தேம்பலானது...

"பாரேன்.... இப்பவே அவளுக்குத் தன்னோட அம்மா குரல் தெரிந்து தானே இருக்கு..." ரேவதி அதிசயப்பட...

அதைக் கேட்டு பெற்றோர் இருவரின் முகத்திலும் அத்தனை பெருமிதம்... பவித்ரா மகளை வாங்கிக் கொண்டு பாலூட்ட துவங்க, ரேவதி மகன் அருகில் அமர்ந்தார்...

"வலிக்குதா விக்ரம்..."

"இல்லைம்மா..." வலி நிவாரண மருந்து உட்கொண்டும் அவனுக்கு வலிக்கத் தான் செய்தது... அதை அன்னையிடம் சொல்லி அவரை வருந்த செய்ய அவனுக்கு மனம் வரவில்லை...

"சரியா போயிரும் விக்ரம்..."

வயிறு நிரம்பியதும் சின்னவள் உறங்கி விட ரேவதி பேத்தியை தூக்கி கொண்டு சென்று விட்டார்... அவர் சென்றதும் பவித்ரா கணவன் அருகில் அமர்ந்து அவனது தலையை வருடி விட்டு,

"வலிக்குதா விக்ரமா...?"

அன்னை கேட்ட அதே கேள்வி தான்... ஆனால் அவரிடம் வலியை மறைத்துக் கொண்டு பொய் கூறியது போல் மனைவியிடம் பொய்யுரைக்க அவனால் முடியவில்லை...

"ம்...ரொம்பவே..." என்றான் வேதனையுடன்...

அவனது வேதனையில் அவளுக்குக் கண்ணீர் வந்தது... அந்தக் கணம் அவனுக்குப் பிடித்தமான ஒன்றை செய்ய அவளது மனம் விழைந்தது... அதனால் அவனுக்கு வலி குறைந்தால் நல்லது தானே... அடுத்தக் கணம் யோசிக்காது அவனது இதழ்களில் மென்மையாய் அவள் முத்தமிட்டாள்... உணர்வு பெருக்கில் அவள் கொடுத்த இதழொற்றல் அவன் உயிர் வரை தீண்டி சென்றது...

இதை, இதைத் தானே அவன் அவளிடம் இருந்து எதிர்பார்த்தான்... அன்று அவளிடம் எதிர்பார்த்து ஏமாந்ததை இன்று அவன் எதிர்பார்க்காத போது வாரி

வழங்கினாள் அவனது மனைவியவள்... தன்னை விட்டு விலகியவளிடம்,

"இன்னும் வலிக்குது பவி..." என்க...

அதை உண்மை என்று நம்பி அவள் அவனது இதழில் இதழ் பதிக்க, மீண்டும் மீண்டும் அவன் இதையே சொன்ன போது மனங்கவர் கள்வனின் கள்ளத்தனத்தைக் கண்டு கொண்டவளாய்,

"டேய் ப்ராடு... பொய்யாடா சொல்ற..." என்று அவனது வாய் மீது மெல்ல அடித்தாள்...

"கிடைக்கும் போது அனுபவிச்சக்கணும்... இல்லைன்னா சண்டிராணி நீ என் கிட்டே கூட வர மாட்டியே..." என்றவனது குரலில் ஏக்கம் இழையோடியது...

"உடம்பு சரியானதும் கிட்டே வர்றதை பத்தி பக்கம் பக்கமாய்ப் பேசலாம்... இப்போ நீ ரெஸ்ட்..." என்று கூறிவிட்டு எழுந்தவளின் கையைப் பிடித்துத் தடுத்தவன்,

"நீயும் ரொம்பக் கஷ்டப்பட்டியா...?"

விக்ரம் இப்படிக் கேட்டதைக் கண்டு இமை சிமிட்ட மறந்தவளாய் அவள் அவனைப் பார்த்தாள்... அவள் அறிந்த கணவனுக்கு இது போன்று எல்லாம் பேச தெரியாதே...

"இல்லை... ரொம்பக் குளுகுளுன்னு இருந்தது..." அந்நேரம் அவன் அருகில் இல்லாது போனது குறித்து எழுந்த கடுப்பில் அவள் அவ்வாறு கூறினாள்...

"த்ச்சு... உண்மையைச் சொல்லுடி சண்டிராணி..."

வம்பிழுக்கும் வார்த்தை கொண்டு அவன் கேட்ட போதும் அதுவே அவனது அக்கறையாகத் தோன்றியதில் பாவையவளுக்குக் கண்களைக் கரித்துக் கொண்டு வந்தது...

"ரொம்பக் கஷ்டப்பட்டேன்... நீ வருவேன்னு எதிர்பார்த்துக்கிட்டே இருந்தேன்..." அவனைக் காணாது

விளைந்த ஏமாற்றத்தை இப்போதும் அவளது வார்த்தைகள் அப்படியே பிரதிபலித்தது...

"நீ என்னை எதிர்பார்த்தியா...? இதை நான் நம்பணுமா...?"

"நீ நம்பணும்ங்கிறதுக்காகப் பொய் சொல்ல வேண்டிய அவசியம் எனக்கில்லை..." என்று அவள் முறுக்கி கொள்ள...

"சரி சரி... உன்னை நம்பறேன் தாயே..." என்று கேலியாய் கூறியவன் பின்,

"அதே போல் நான் செல்வதையும் நீ நம்பணும்..."

"அது நீ சொல்லும் கதையைப் பொறுத்து இருக்கிறது விக்ரமா..."

அவளது அழைப்பில் என்றும் போல் இன்றும் அவனது மனம் மயங்கியது...

"உன்னை ஹாஸ்பிட்டலில் சேர்த்து இருக்காங்கன்னு தெரிஞ்சதும் உடனே பிசினஸ் டீலை முடிச்சிட்டு கிளம்பிட்டேன்..." என்றவனை அவள் நம்பாது பார்த்தாள்...

"இதுக்குத் தான் நான் முதலிலேயே சொன்னேன்... என்னை நம்பணும்ன்னு..."

"டெலிவரி டேட் உனக்குத் தெரியும்... அப்படி இருந்தும் நீ ஏன் போன விக்ரமா...?" என்றவளது குரலில் அத்தனை ஆதங்கம் இருந்தது... காதல் கணவனாய் அதைச் சரியாக உணர்ந்த விக்ரம் மனைவி கையை ஆறுதலாய் பிடித்துக் கொண்டான்...

"நான் போகாம வேறு யார் போவாங்க...? திடீர்ன்னு கிடைத்த வாய்ப்பு இது... இதை இழக்க எனக்கு விருப்பம் இல்லை... இதை டீல் பண்ணும் அளவுக்கு அப்பாவுக்கோ, வினோத்துக்கோ சாமர்த்தியம் போதாது..." என்றவனது கூற்றில் இருந்த உண்மை அவளுக்குப் புரியவும் அமைதியானாள்...

"இன்னும் என்னை நீ நம்பலையா..." என்று ஆதங்கமாய்க் கேட்டவன்,

"அந்தச் சைனாக்காரன் உன் டெலிவரி டேட்க்கு முதல் நாள் தான் பிசினஸ் கான்ட்ராக்ட்டில் சைன் போட கூப்பிட்டு இருந்தான்... அவன் கிட்ட ஸ்ட்ரிக்ட்டா சொல்லிட்டேன்... என் மகள் பிறந்த பிறகு தான் நான் எங்கும் அசைவேன்னு... இப்போதாவது என்னை நம்புறியா...?"

அவளுக்கும் அவனது அந்த ப்ராஜெக்ட் பத்தி நன்கு தெரியும்... அதனால் அவன் மீது நம்பிக்கை கொண்டவளாய் அமைதியாக இருந்தாள்... அப்போது தான் அவளுக்கு அது உறைத்தது...

"டேய் விக்ரமா... அப்போ நீயும் மகள் தான் பிறப்பாள்ன்னு நினைச்சியா...?"

தனது கள்ளத்தனத்தை மனைவி கண்டு கொண்டாளே என்று எண்ணி அசடு வழிந்தான் அவன்...

"மகன்னு சொன்னது சும்மா உன்னைச் சீண்டி பார்க்க தான்... மத்தபடி ஆண் என்ன, பெண் என்ன எல்லாம் ஒண்ணு தான்..."

"அடேங்கப்பா... அதுவும் உன் வாயில் இருந்து இந்த முத்தான வார்த்தைகள் வருது என்றால் உலக அதிசயம் தான்..." என்று அவள் அவனைக் கிண்டலடித்தாள்...

"இது கணவனிடம் இருந்து வரும் வார்த்தைகள் அல்ல... அப்பாவிடம் இருந்து வரும் வார்த்தைகள்..."

"ம்... இது ஒத்துக் கொள்ள வேண்டிய விசயம் தான்..." என்று கூறி சிரித்தவளை அவன் ஆதூரத்துடன் பார்த்துக் கொண்டு இருந்தான்...

"பிறகு எப்படி ஆக்சிடெண்ட் ஆச்சு...?"

"உன்னைப் பார்க்க வரும் அவசரத்தில் காரை வேகமாய் ஓட்டிக்கிட்டு வந்தேன்... அப்போ பக்கவாட்டில் இருந்து ஒரு லாரிக்காரன் எதிர்பாராமல் வந்து காரை அடிச்சு

தூக்கிட்டான்... பிறகு என்ன நடந்ததுன்னு எனக்குத் தெரியாது..."

"ஐயோ..." அச்சத்தில் வாய் மீது கை வைத்து விழி விரித்தவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"அப்படி இருந்தும் இவனுக்கு ஒண்ணும் ஆகலையேன்னு கவலைப்படுறியா...?" அதில் பயம் களைந்தவளாய் அவனைப் பார்த்து முறைத்தாள்...

"இப்போ தான் என் மனைவி பவி மாதிரி இருக்கு... நீ இப்படி வித்தியாசமான ரியாக்சன் கொடுத்ததும் நான் கன்ஃப்யூஸ் ஆகிட்டேன்ல..." என்று கேலி செய்தவனைக் கண்டு,

"விக்ரமா..." என்று அவள் சிணுங்கினாள்... மனைவியாய் உரிமை கொண்டு செல்லமாய்ச் சிணுங்கியவளின் சிணுங்கல் மொழி கூட அவனது காதுகளில் இன்னிசையாய் ஒலித்தது...

இதுநாள் வரை மனம் விட்டுப் பேசாதவர்கள் துன்பத்தில் மனம் விட்டு பேசினர்... சிறிது நேரத்தில் அவனுக்குத் தூக்கம் கண்களைச் சுழற்றியது...

"நீ தூங்கு விக்ரமா..."

"அது போல் தான் நீயும்..." என்றவன் அவளை அருகில் இருந்த மற்றொரு கட்டிலில் படுக்கச் சொன்னான்... இருவருக்கும் நிம்மதியான உறக்கம் வந்தது...

காலை ஆறு மணிக்கு இளம் பெண் ட்யூட்டி டாக்டர் வந்து அவனைப் பரிசோதனை செய்தாள்... அவள் பார்ப்பதற்கு மிகவும் அழகாக இருந்தாள்...

"விக்ரமுக்கு பயப்படும்படி ஒண்ணும் இல்லையே டாக்டர்..." என்று பதற்றத்துடன் கேட்ட பவித்ராவை கண்டு கணவனது மனம் உருகி போனது... இவ்வளவு அன்பை இவள் இத்தனை நாளாய் எங்கே வைத்திருந்தாள் என்று அவன் வியப்பாய் அவளைப் பார்த்துக் கொண்டிருந்தான்...

"வலதுகை, கால்ல இருக்கிற ஃப்ராக்சர் மட்டும் குணமாக நாளாகும்... மத்தபடி பயமில்லை..." என்று கூறிவிட்டு மருத்துவர் சென்றுவிட...

பவித்ரா கண்கள் கலங்க அவனது கை, கால் கட்டை தடவி கொடுத்தாள்... அதைக் கண்டு அவனுக்கு இரக்கமாக இருந்தது... கண்ணீர் என்றால் என்னவென்று தெரியாத மனைவி தன்னைத் திருமணம் செய்ததில் இருந்து கண்ணீர் விடுவதைக் கண்டு அவனது மனம் பாரமானது... அவளது மனதினை மாற்ற எண்ணினான் அந்த நல்ல கணவன்...

"பவி... அந்த லேடி டாக்டர் ரொம்ப அழகா இருக்கிறாள் இல்லையா...?"

கணவனது வார்த்தையில் கலங்கிய கண்களுடன் ஏறிட்டவள் அவனை முறைத்து பார்த்தாள்...

"இந்த நிலைமையிலும் உன் வாய் அடங்குவதாய் இல்லை..."

"ஹா ஹா... அது கூடப் பிறந்த பிறப்பும்மா..." என்று கூறி சிரித்தவனுக்கு மனைவியின் மனநிலையை மாற்றி விட்ட திருப்தி மனதினை நிறைத்தது...

"கை, கால்ல அடிப்பட்டதுக்குப் பதில் உன் வாயில் அடி விழுந்து இருக்கணும்..."

"நல்லவேளை வாய் பிழைத்துக் கொண்டது... இல்லை என்றால் அதற்கு இப்படி ஒரு விருந்து கிடைத்திருக்குமா...?" அவள் முத்தமிட்டதை அவன் சுட்டிக்காட்டி கூற...

"அடுத்து முத்தம் கொடுக்கும் போது உன் வாயை கடிச்சு வைக்கிறேன்டா..." என்று அவள் மிரட்டலாய் கூற...

"ஐயோ..." என்று அவன் போலியாய் அலற... அவள் வாய் விட்டு சிரித்து விட்டாள்...

அடுத்து சிறிது நேரத்தில் மகள் அங்கு வந்துவிடச் சுமார் ஒரு மணி நேரம் மகளுடன் பொழுது கழிந்தது... ரேவதி

சின்னவளை தூங்க வைக்கக் கொண்டு சென்றதும் விக்ரமிற்கு இயற்கை உபாதை எழுந்ததில் அவன் மனைவியிடத்தில் மெல்லமாய்,

"பவி... ஜென்ட்ஸ் நர்ஸ் யாரையாவது கூப்பிடேன்..." என்று அவஸ்தையுடன் முனங்கினான்...

"என்னன்னு சொல் விக்ரமா... நான் ஹெல்ப் பண்றேன்..."

"இது எல்லாம் உன்னால் பண்ண முடியாது பவி... ப்ளீஸ் நான் சொல்றதை கேள்..."

அவனைக் கூர்ந்து பார்த்தவள் அடுத்த நொடி அவனின் தேவையைப் புரிந்து கொண்டு அவனுக்கு வேண்டியதை எடுத்து வைத்தாள்... அதில் அவனது உடலும் உள்ளமும் கூனி குறுகி போய் விட்டது... கம்பீரமான ஆண்மகனான அவனுக்கு அவனது இன்றைய நிலை அப்படி ஒரு தலை இறக்கத்தைக் கொடுத்தது... மனதிற்குள் மிகவும் வெட்கி போனான்...

இயல்பு போல் எல்லாவற்றையும் சுத்தம் செய்து விட்டு வந்த மனைவியைக் கண்டு அவனது உள்ளமும், விழிகளும் கசிந்தது...

"பவி..." என்று அவளது கைகளைப் பிடித்துக் கொண்டவனின் விழிகளில் கண்ணீர் விடாது வழிந்தது...

"கணவன், மனைவி உறவுக்கு என்னடா அர்த்தம்...? கட்டிலில் சுகமாய்க் கட்டி புரள்வது மட்டும்ன்னு நினைச்சியா...? இது மாதிரி துன்பத்திலும் ஆறுதலாய் இருப்பது தான் நல்ல கணவன், மனைவிக்கு அழகு..." என்று கூறியபடி அவள் அவனது கண்ணீரை துடைத்து விட...

மனைவியின் செயலில் ஆணாதிக்க விக்ரமின் தன்னகங்காரம், திமிர் எல்லாம் சுக்குநூறாய் சிதறிப் போனது... அவன் மனதில் இருந்த ஆதிக்க மனப்பான்மை முற்றிலும் விலகி அதில் அன்பு மட்டுமே நிறைந்திருந்தது...

அன்பை விதைக்கும் போது அங்கு அன்பு மட்டுமே அறுவடை செய்யப்படுகிறது...!

ஆனால் அவன் விதைத்த வினைக்கான எதிர்வினை எப்படிப்பட்ட வினையாய் மாறி பிரதிபலிக்கப் போகிறதோ...???

மொழி பேசும்...!!!

## விழி : 17

இன்றோடு விக்ரமிற்கு விபத்து நடந்து ஒரு மாதமாகி விட்டது... இப்போது அவனது உடல்நலம் ஓரளவிற்குத் தேறி விட்டது... அதனால் மருத்துவர்கள் அவனை வீட்டிற்கு அழைத்துச் செல்லலாம் என்று கூறிவிட்டனர்... அதற்கான ஆயத்தங்களில் சுறுசுறுப்பாய் ஈடுபட்டுக் கொண்டிருந்த மனைவியை அவன் கண் இமைக்காது பார்த்துக் கொண்டு இருந்தான்...

இந்த ஒரு மாத காலமாகத் தன்னை ஒரு குழந்தையைப் போல் பார்த்துக் கொண்ட மனைவியைக் கண்டு அவனது நேசம் இன்னமும் அதிகரித்தது... அவள் இல்லாத ஒரு வாழ்வை நினைத்து கூடப் பார்க்க முடியாத அளவிற்கு அவள் அவனுள் நீக்கமற நிறைந்து விட்டாள்... இத்தனை நாள் தாரமாய்ப் போகப் பொருளாய் சுகித்து வந்த மனைவியவளை இப்போது தாயாக எண்ணி கை கூப்பி வணங்க விழைந்தது அவனது காதல் மனம்...

ஆம், அவளது பணிவிடைகள் அனைத்தும் ஒரு தாயை போன்று அவனைப் பாராட்டி சீராட்டியது... சொல்ல போனால் அவன் தாயின் அன்பை கூடக் குறிப்பிட்ட வயதிற்கு மேல் அனுபவிக்கவில்லை... அவனையும், அன்னையையும் படிப்பை காரணம் காட்டி விலக்கி வைத்து விட்டார்கள்... அதனால் ஒட்டு மொத்த தாயன்பையும் அவன் தன் மனைவியிடம் தான் கண்டான்...

குழந்தையையும் கவனித்துக் கொண்டு, அவனையும் ஒரு குழந்தை போல் கவனித்துக் கொண்டு அப்பப்பா இந்த ஒரு மாத காலமாகப் பவித்ரா பட்ட கஷ்டங்கள் தான் எத்தனை... அத்தனையும் ஒரு புன்னகையில் அமைதியாய் கடந்த அவளின் பொறுமை குணம் அவனே சற்றும் எதிர்பார்க்காதது... வேறு ஒரு பெண்ணாக இருந்திருந்தால் மலைத்துப் போய்த் தடுமாறி இருப்பாள்... கோபம் கொண்டு எரிச்சலில் கத்தி இருப்பாள்... ஆனால் பவித்ரா தொழிலை எப்படி நிதானமாகக் கையாண்டாளோ அது

போல் தான் இந்த இக்கட்டான சூழ்நிலையையும் லாவகமாய்க் கையாண்டாள்...

"எதுவும் வேணுமா விக்ரமா...?" கணவன் தன்னைப் பார்ப்பதை உணர்ந்த பவித்ரா அவன் புறம் திரும்பி வினவினாள்...

'இங்கே வா...' என்பது போல் அவன் இடக்கை ஆள்காட்டி விரலசைத்து அவளை அருகில் அழைத்தான்...

"என்ன விக்ரமா...?" என்று புரியாது கேட்டுக் கொண்டே அவன் அருகில் வந்தவளின் உதட்டின் மீது ஆள்காட்டி வரலை வைத்துப் பின் அதை எடுத்து தனது உதட்டின் மீது வைத்தவன்,

"ஒரு முத்தம் வேணும்..." என்று கண் சிமிட்டி குறும்பாய் கேட்க...

"இவ்வளவு அடிப்பட்டும் நீ அடங்க மாட்டேங்கிறியே... உன்னை என்ன செய்யலாம்...?" என்று போலி கோபத்துடன் கேட்டவளை கண்டு,

"என்ன வேணும்ன்னாலும் செய்யலாம்...?" என்று கண்களை மூடி கொண்டு தன்னை முழுமையாய் ஒப்பு கொடுத்தபடி எதிர்பார்ப்புடன் அவன் காத்திருக்க...

"அடி கொடுக்கலாம்ன்னு நினைக்கிறேன்..." என்று செல்லமாய் அவனது வாயில் அடி வைத்தவள்,

"இது ஹாஸ்பிட்டல் என்பது ஞாபகத்தில் இருக்கட்டும் மிஸ்டர். விக்ரம்..." அவளது பேச்சில் விழிகளைத் திறந்தவன்,

"அன்னைக்கு மட்டும் இது ஹாஸ்பிட்டல்ன்னு உனக்கு நினைவில்லையா மிஸஸ். விக்ரம்..." என்றவனது கை விரல் அருகிலிருந்த அவளது முகவடிவை நிதானமாய் அளவெடுத்தது... அதில் அவளும் மதி மயங்கி நின்றிருந்தாள்... அன்றைய நாளின் நினைவு ஊர்வலம் இருவரின் நெஞ்சங்களில் இனிமையாய்...

"ஒரு முத்தம் என்ன லட்ச முத்தங்கள் கொடுக்கலாம்..." என்றவளை அவன் ஆவலுடன் பார்த்த போது,

"எல்லாம் வீட்டுக்கு போனதுக்குப் பிறகு..."

"ஏமாத்த மாட்டியே...?"

"இந்தப் பவித்ரா சொன்னால் சொன்ன சொல்லை காப்பாத்துவாள்..." என்றவளை கண்டு அவனுக்கு மகிழ்ச்சியாக இருந்தது...

அடுத்தச் சில மணி நேரங்களில் விக்ரம் தனது மனைவி, மகள் சகிதமாக வீட்டிற்கு வந்து சேர்ந்தான்... பேத்தியை வரவேற்கும் பொருட்டு ரேவதி அவர்களுக்கு ஆரத்தி சுற்றி வரவேற்றார்...

"பிறந்ததுமே அப்பன் கை, காலை உடைச்சு ஹாஸ்பிட்டலில் படுக்க வச்சாச்சு... இப்போ வீட்டுக்குள்ளேயே வந்தாச்சா... விளங்கிரும்... இனி இந்த வீட்டில் என்னென்ன நடக்கப் போகுதோ...?" என்று வேண்டுமென்றே சின்னவளை தூற்றினார் சௌந்தர்யா...

அவரது பேச்சில் எல்லோரும் திகைத்து போயினர்... விக்ரமும், பவித்ராவும் கோபமாய்ப் பதில் பேசுவதற்காக வாய் திறந்த போது எதிர்பாராத விதமாக ரேவதி கோபத்தில் வெடித்தார்...

"அக்கா... என் பேத்தி இந்த வீட்டு மகாலெட்சுமி... இதுக்கு மேலே ஒரு வார்த்தை பேசினீங்க உங்க மரியாதை கெட்டு போயிரும்... கூடப்பிறந்தவள் என்கிற ஒரே காரணத்துக்காக நான் உங்க கிட்ட அடங்கிப் போகலாம்... அதுக்காக என் மகன், மருமகள், பேத்தி எல்லோரும் உங்க கிட்ட அடங்கிப் போகணும்ன்னு எதிர்பார்க்காதீங்க... அப்புறம் உங்களுக்குத் தான் இந்த வீட்டில் இருக்க இடம் இருக்காது..." ஆணித்தரமாய் அழுத்தி கூறியவர் பின்பு மகன், மருமகளிடம்,

"நீங்க உள்ளே வாங்க..." என்று கூறியவர் பேத்தியை தனது கைகளில் ஆசையாய் வாங்கிக் கொண்டார்...

தங்கையின் திடீர் ருத்ரதாண்டவத்தில் கோபம் பொங்க சௌந்தர்யா மாமனாரிடம் புகார் வாசித்தார்...

"பாருங்க மாமா எப்படிப் பேசிட்டு போகிறாள்ன்னு...?"

"அவளாக இருக்கப் போய் இப்படிப் பேசுவதோடு நிறுத்திக்கிட்டாள்... இதே இது அவள் இடத்தில் நீ இருந்திருந்தால் இதை எப்போதோ செய்திருப்ப... இனியாவது வாயை கொஞ்சம் அடக்கப் பார்..." என்று கூறிய இராமநாதன் உள்ளே சென்று விட்டார்...

வினோத் அன்னையைக் கடிந்தான்... "அம்மா... வாயை மூடிட்டு சும்மா இருக்க மாட்டீங்களா...? எப்போ பாரு எதையாவது சொல்லி சண்டை போட்டுக்கிட்டு இருக்கணுமா உங்களுக்கு...?" என்று அவரிடம் காய்ந்தவன் அவனும் உள்ளே சென்று விட்டான்...

"அவங்க கிடக்கிறாங்க சௌ..." என்று கொஞ்சியபடி அருகில் வந்த கணவரை துச்சமாகப் பார்த்தார் சௌந்தர்யா...

"இப்படி ஒரு இழிநிலைக்கு என்னைத் தள்ளியது நீ தான்... ச்சீ நீ எல்லாம் மனுசனே இல்லை..." என்று எல்லாக் கோபத்தையும் கணவரிடம் காட்டி விட்டு அவர் உள்ளே சென்று விட... விஸ்வநாதன் பேந்த பேந்த முழித்தபடி தனியே நின்றிருந்தார்... அவருக்குக் கிடைக்க வேண்டிய மாமூல் இனி கிடைக்காது போய் விடுமோ என்று பயந்தார்... அவரது கவலை அவருக்கு...

மகளை மாமியாரிடம் விட்டு விட்டு கணவனுக்கு வேண்டிய வசதிகளைச் செய்து கொடுத்து அவனைக் கட்டிலில் சாய்வாக அமர்த்தி வைத்த பவித்ரா அவனிடம்,

"எல்லாம் சௌகரியமாக இருக்குதா விக்ரமா...?"

"எல்லாம் சரியாகத் தான் இருக்கிறது... நீ தான் சரியில்லை... சொன்ன சொல்லை காப்பாற்றுவதாக இல்லை..." என்று குறைப்பட்டுக் கொண்டவனைக் கண்டு

சிரித்தபடி அவன் அருகில் அமர்ந்தவள் அவனது முன்னுச்சி சிகையைக் கலைத்தபடி,

"எப்ப பாரு உனக்கு இதே நினைப்பு தானாடா...?" என்று கேட்டவளை தனது இடது கரம் கொண்டு அணைத்து கொண்டவன் அவளது விழிகளுக்குள் தனது விழியைக் கலந்தபடி,

"இப்போ தான்டி நீ எனக்குச் சொர்க்கத்தைக் காட்டுகிறாய்..."

"விக்ரமா... டி போட்டு பேசினா எனக்குப் பிடிக்காது..."

"அப்படியா மேடம்... ஓகேங்க மேடம்... எனக்கு ஒரு முத்தம் கொடுக்கிறீங்களா மேடம்...?" என்று வார்த்தைக்கு வார்த்தைக்கு மரியாதை கொடுத்து பேசிய கணவனது பேச்சில் தாங்க முடியாது காதை மூடி கொண்டாள் அவள்...

"அச்சோ முடியலைடா..."

"இப்போ புரியுதா...? இடத்துக்குத் தகுந்த மாதிரி மரியாதை மாறணும்... வெளியில் கொடுக்கும் மரியாதையைப் படுக்கையறையில் கொடுக்க முடியாது... என்னை மட்டும் சொல்ற...? அங்கே மட்டும் என்ன வாழுதாம்...? என்னை டா போட்டு பேசலைன்னா உனக்குத் தூக்கம் வராதே..."

"போடா... பேச விட்டால் ஒரேடியாய் பேசிட்டு போகிற..." என்றவள் அவனது இதழ் மீது இதழ் வைத்து அவனது வாயை அடைத்தாள்...

முதலில் மனைவியின் இதழொற்றலில் மெய் மறந்து இருந்தவன் பின் அவளது செயலை தனதாக்கி கொண்டான்... கள்ளுண்ட வண்டு போல் மதி மயங்கி மேலும் மேலும் அவளுள் மூழ்கினான் அவன்... ஒற்றை இதழொற்றலில் அடங்கி விடக் கூடிய தாபமா அந்த ஆண்மகனின் தாபம்... இத்தனை நாள் மனைவியைச் சுகிக்காது இருந்த ஏக்கம் எல்லாம் சேர்ந்து அவனை உணர்ச்சிப்பிழம்பாய் மாற்றி இருந்தது...

அந்தோ பரிதாபம்... அவனது மனதின் வேகத்திற்கு அவனது உடல் ஒத்துழைக்கவில்லை... அடுத்த நொடி இயலாமையில் அவளை உதறித் தள்ளினான்...

"ச்சீ போடி... இங்கிருந்து வெளியில் போடி... என் முகத்தில் முழிக்காதே..." என்று பெருங்குரல் எடுத்து கத்திய கணவனைக் கண்டு அரண்டு போனாள் பவித்ரா...

முன்பு கண்ட விக்ரமாகக் கோபத்தில் மூச்சு வாங்கியபடி இருந்தவனைக் கண்டு அவள் பயந்து போய்க் கட்டிலில் இருந்து எழுந்து விட்டாள்... அதற்கும் அவன் அவளிடத்தில் கோபம் கொண்டு கத்தினான்...

"நான் சொன்னா உடனே என்னை விட்டு போயிருவியா...? என்னை விட்டு ஓடுறதில் தான் நீ குறியா இருக்க..." என்று கோபமும் ஆதங்கமுமாய்க் கத்தியவனைக் கண்டு நிதானித்தவளாய் மீண்டும் அவன் அருகில் அமர்ந்தாள்...

"ஏன் விக்ரமா இப்படிக் கோபப்படுற...? இப்போ என்ன நடந்து போச்சு..."

"இன்னும் என்ன நடக்கணும்...? இப்படிக் கையாலாகாதவனாய்ப் படுத்திருக்கிறது போதாதா...?" என்று மீண்டும் அவளிடம் கோபத்தில் காய்ந்தான் அவன்...

"எல்லாம் சரியாய் போகும் விக்ரமா...?"

"எப்போது...?" என்று ஆதங்கமாய்க் கேள்வி கேட்டவன் அடுத்த நொடி அவளை இடது கையால் அணைத்துக் கொண்டு அவளது கழுத்து வளைவில் முகம் புதைத்துக் கொண்டான்... சில நொடிகள் அவனிடம் இருந்து சத்தம் வரவில்லை... ஆனால் அவனது கண்ணீரை அவள் உணர்ந்தாள்...

"விக்ரமா..."

கணவனது கண்ணீரில் அவளுக்கும் அழுகை வந்தது... அவனை ஆறுதல் படுத்துவது போல் பதிலுக்கு அணைத்து கொண்டாள்... இல்லை அவனின் அருகாமையில் அவள்

ஆறுதல் அடைந்தாளோ என்னமோ... அவளின் அணைப்பு இறுகி கொண்டே போனது... அதில் அவன் முற்றிலும் உடைந்தான்...

"என்னால் முடியலை பவி... இந்த இடைப்பட்ட காலத்தில் எத்தனை நாள் இரவு உனக்காக நான் ஏங்கி இருப்பேன் தெரியுமா...? முன்னாடி எல்லாம் நான் உன் விருப்பம் இல்லாமல் தொட்டவன் தான்... ஆனா அன்னைக்கு முத்தமிட்டப்போ நீ நெகிழ்ந்தியே அதுக்குப் பிறகு தான் தாம்பத்திய வாழ்க்கையில் பெண்ணோட விருப்பமும் தேவைன்னு எனக்குப் புரிஞ்சது... நீயா என்னைத் தேடி வரணும்ன்னு நான் நினைச்சேன்... ஆனா நீ வரவே இல்லை... ஆனால் இப்போ நீயாக வரும் போது என்னால்... என்னால்..."

அதற்கு மேல் பேச முடியாதபடி அவனுக்குத் துக்கத்தில் தொண்டை அடைத்தது... அதற்குப் பதில் ஒற்றைக் கையால் அவளை இறுக்கமாய் அணைத்துக் கொண்டான்... அப்போது தான் அவளுக்குமே கணவனது அழுகையின் காரணம் புரிந்தது... கம்பீரமான ஆண்மகனான அவன் தனது இயலாமையினால் தான் சற்று முன் அவளிடத்தில் கோபத்தில் வெடித்தது... அவனது அழுகை, கோபம் எல்லாம் அவளை மிகவும் வருத்தியது...

அதே சமயம் தன்னைத் தேடியதாக அவன் கூறிய தேடலின் அர்த்தம் புரிந்தவளின் மனதில் சிலீரென்று ஒரு உணர்வு ஊடுருவி சென்றது... விக்ரம் மாதிரியான குணமுடைய ஆணாதிக்க ஆணின் இயல்பிற்கு மனைவி சரி வரவில்லை என்றால் வேறு பெண்ணை நாடுவது தான் வழக்கமான ஒன்று... ஆனால் அப்போதும் அவன் மன கட்டுப்பாடுடன் தன்னை மட்டும் தேடியதை நினைத்து அந்தத் துன்பமான நேரத்திலும் அவளின் மனதிற்குள் அத்தனை சந்தோசமாக இருந்தது...

"முடியலையடி... செத்து போகணும் போலிருக்கு... அத்தனை அவமானமா, வெட்கமா இருக்கு... நீயெல்லாம் ஒரு ஆம்பளையான்னு எனக்கு நானே காறி துப்பிக்கணும்

போலிருக்கு..." என்று ஆதங்கத்துடன் இயலாமையில் குமுறியவனைக் கண்டு அவளுக்குமே வருத்தமாக இருந்தது...

இருவரும் மாறி மாறி வருந்தி கொண்டிருப்பதால் கணவனின் இந்த உணர்வு மாறப் போவதில்லை என்பதை உணர்ந்தவளாய் அவனது முகத்தை நிமிர்த்தியவள் அவனைக் கண்டு போலியாய் முறைத்து பார்த்தாள்...

"பவி... இப்போ எதுக்கு இப்படி முறைக்கிற...?" என்று பாவம் போல் கேட்டவனின் வாயில் ஒரு அடி வைத்தவள்,

"இப்போ என்ன நடந்து போச்சுன்னு இப்படி ஒப்பாரி வைக்கிற...? கை, கால்ல ப்ராக்சர் தானே ஆகியிருக்கு... என்னமோ செயலிழந்து போய்ப் படுத்த படுக்கையா விழுந்துட்ட மாதிரி புலம்பற... எண்ணி இன்னும் ரெண்டு அல்லது மூணு மாசம் தான்... அப்புறம் ஜம்முன்னு எந்திரிச்சு நடக்கப் போகிற... இதுக்கு எதுக்கு இத்தனை கண்ணீர், ஆர்ப்பாட்டம்...? ம்...?" என்று அதட்டுவது போல் அவனிடம் பேசினாலும் அதில் அவன் மீதான அக்கறையே முழுவதுமாய் இருந்தது...

"சரியாகிருமா பவி...?" நிராசையுடன் கேட்டவனை அழுத்தமாய்ப் பார்த்தவள்,

"சரியாகலைன்னாலும் சரியாக்கணும் விக்ரமா... எப்போதும் நிமிர்வுடன் இருக்கும் அந்த விக்ரம் எங்கே...? நிச்சயமா இன்னும் ரெண்டு மாசத்தில் நீ எழுந்து நடக்க ஆரம்பிச்சிருவ பாரு... எனக்கு நம்பிக்கை இருக்கு..."

மனைவியின் வார்த்தையில் அவனது மனதில் நம்பிக்கையோடு சேர்ந்து காதலும் அதிகரித்தது...

"எனக்காக இல்லைன்னாலும் உனக்காகவாவது நிச்சயம் நான் நடப்பேன்ங்கிற நம்பிக்கை எனக்கு இருக்கு..."

"தட்ஸ் த ஸ்பிரிட்..." என்று சந்தோசமாய்க் கூறியவள் பின் சந்தேகமாய் அவனைப் பார்த்தவாறு,

"ஏன் உன் தேடலுக்கான விடையைக் கண்டுபிடிப்பதற்காகவா...?"

அவள் கூறியது அவனுக்கு முதலில் புரியவில்லை... பின் புரிந்ததும் அவன் வாய் விட்டு சிரித்து விட்டான்...

"விடையைக் கண்டுபிடித்து நாளாகி விட்டது... ஆனால் கண்டுபிடித்த விடை தவறுன்னு இப்போ தான் புரியுது... சரியான விடையைத் தேடி கண்டுபிடிக்கும் வரை என்னோட தேடல் தொடரும்..." என்று விசமமாய்க் கூறியபடி கண் சிமிட்டி சிரித்தவனைக் கண்டு அவளும் சிரித்து விட்டாள்...

அன்றே பவித்ரா வினோத்தை அழைத்துத் திட்டவட்டமாய்க் கூறிவிட்டாள்...

"தம்பி... உங்கண்ணாவுக்கு உடம்பு சரியாகும் வரை நான் உங்க கம்பெனியை நிர்வாகம் பண்ணலாம்னு இருக்கேன்... நீங்க பல்லவிக்குத் துணையா எங்க கம்பெனிக்கு போங்க..." என்று கூறியவளை கண்டு விக்ரம், வினோத் திகைப்பாய் பார்த்தனர்... ஏனெனில் தொழில் மீதான அவளது ஈடுபாடு அவர்களுக்குத் தெரியும்...

"அது எல்லாம் வேண்டாம் அண்ணி... நீங்களும், அண்ணாவும் என்னை வழி நடத்தினால் போதும் நான் கம்பெனியை பார்த்துக்குவேன்..." என்று தயக்கத்துடன் கூறினான் வினோத்...

"ஆமாம் பவி... வினோத் சொல்றது தான் சரி... நானும் வீட்டில் இருந்தபடியே அவனுக்குக் கைட் பண்ணுகிறேன்... நீயும் அவனுக்கு ஹெல்ப் பண்ணு..."

இருவரையும் மாறி மாறி பார்த்தவள் அழுத்தம் திருத்தமாய் அந்த வார்த்தைகளைக் கூறினாள்...

"நம்ம ரெண்டு பேரோடதும் போட்டி கம்பெனிகள்... இதில் நான் உங்க கம்பெனி சீக்ரெட்ஸ் எல்லாம் தெரிஞ்சுக்கிட்டு எனக்குச் சாதகமா பயன்படுத்திக்கிட்டால்...?" இரு

புருவங்களை உயர்த்தியபடி கேள்வி கேட்டவளை கண்டு பேச வார்த்தைகளற்று திகைத்து போயினர் இருவரும்...

"நிச்சயம் ஒரு தொழிலதிபராய் நான் அதைத் தான் செய்வேன்... எனக்கு வேண்டியது வெற்றி... அதுக்காக நான் எதை வேணும்ன்னாலும் செய்வேன்... அதனால் தான் சொல்கிறேன்... விக்ரமின் மனைவியா நான் தொழிலை கையில் எடுக்கிறேன்னு... ஏன்னா விக்ரமின் இடத்தில் நான் இருக்கும் போது அவனுக்குத் துரோகம் பண்ண என்னால் முடியாது... அப்படி நான் துரோகம் பண்ணினால் அது எனக்கு நானே துரோகம் பண்ணி கொள்வதற்குச் சமம்... இப்போ விக்ரமா மாறி தான் அவனிடத்தில் நானிருக்கப் போகிறேன்..." என்றவள் கணவனிடத்தில் திரும்பி,

"என் மீது நம்பிக்கை இருந்தால் கம்பெனி பொறுப்பை என்னிடத்தில் கொடு விக்ரமா..." என்று கூறியவளின் கையை நம்பிக்கையுடன் பற்றிக் கொண்ட விக்ரம்,

"உன் மேல் எனக்கு நம்பிக்கை இருக்கிறது பவி..." என்று மனைவியிடம் கூறியவன் தம்பியிடம்,

"உன் அண்ணி சொன்ன மாதிரி செஞ்சிரு வினோத்..." என்று கூற...

அண்ணன், அண்ணி இணக்க நிலையைக் குலைக்க விரும்பாத அந்தத் தம்பியும் அதற்கு உடனே சம்மதித்தான்... விசயம் கேள்விப்பட்டுப் பல்லவி உற்சாகத்தில் துள்ளி குதித்தாள்...

"மாமா... இனி கூடவே இருந்து உங்களைச் சைட் அடிக்கலாமா...?"

"அடிப்பாவி... கம்பெனி நிர்வாகம் பண்ண தான் நான் அங்கு வருகிறேன்... உன்னையல்ல..." என்று வினோத் அலறினான்...

சௌந்தர்யாவோ இதைக் கேள்விப்பட்டு முகத்தைச் சுளித்தார்... உருப்படாதது இரண்டும் சேர்ந்து இன்னமும்

உருப்படாது போகப் போகிறது என்று தனது மகன் மற்றும் மருமகளை நினைத்துக் கொண்டார்... இராமநாதனுக்கு இப்போது தான் மகிழ்ச்சியாக இருந்தது... தொழிலில் புலியான விக்ரம், பவித்ரா இருவரும் இணைந்து நடத்த போகும் தங்களது தொழில் இன்னமும் முன்னேறுவதற்கான வாய்ப்புப் பிரகாசமாக இருக்கிறது என்று... திருவேங்கடத்திற்குச் சற்று வருத்தம் தான்... ஆனால் பேத்தி இந்த நிலை சில மாதங்கள் தான் என்று கூறியிருப்பதால் தன்னை அமைதிப்படுத்திக் கொண்டார்...

விக்ரமின் நிர்வாகப் பொறுப்பைக் கையில் எடுத்ததில் இருந்து பவித்ராவின் வேலைப்பளு இன்னமும் அதிகரித்துக் கொண்டே போனது... அவளது முழுநேர வேலை கணவனைக் கவனிப்பது மட்டும் தான் என்றாலும் சில சமயங்களில் வேலை விசயமாக அவள் வெளியில் சென்று வர நேரிடும்... அந்த நேரம் அவள் மிகவும் தவித்துப் போவாள்...

ஒரு பக்கம் கைக்குழந்தையைப் பற்றிய கவலை என்றால், மறுபக்கம் கைக்குழந்தை போன்று எதற்கு எடுத்தாலும் தன்னை நாடும் கணவனின் தேவைகள் அவளைப் பெரிதும் அலைக்கழிக்கும்... வீட்டில் இருக்கும் நேரம் தொழிலில் கணவனது ஆலோசனைகளைக் கேட்டு அதன் படி செய்வாள்... அந்தச் சமயம் தான் அவளுக்குப் புரிந்தது கணவனது ஆழ்ந்த தொழில் பக்தி...

"ம்ப்ச்... சான்சே இல்லை விக்ரமா... நீ இவ்வளவு திறமையானவன்னு எனக்குத் தெரியாம போச்சே..." என்று அவள் அவனை மனமார பாராட்டினாள்...

"அதே போல் தான் நீயும் பவி... உன் அனுபவ அறிவு முன்னால் நான் எல்லாம் தூசி தான்..." என்றவனைக் கண்டு அவள் பக்கென்று சிரித்து விட்டாள்...

"அது எல்லாம் சும்மாடா... உன்னைப் போல் எல்லாவற்றிலும் எனக்குத் திறமை கிடையாது... டிகிரி கூடச் சுமாரா படிச்சு தான் பாஸ் பண்ணினேன்... உன்னை மாதிரி கோல்ட் மெடலிஸ்ட் எல்லாம் நான் கிடையாது...

அப்புறம் உன்னை மாதிரி எல்லாம் எனக்குப் பாட தெரியாது..."

அவனை விட மனைவி திறமைகள் குறைந்தவளாகவே இருக்கலாம்... ஆனால் அவளது அன்பு முன் அத்தனையும் அடிப்பட்டுப் போனதே... அவளை உள்ளத்து அன்போடு உண்மையாய் நேசிக்கச் சொல்லி அவனது மனம் துடிக்கிறதே...

"சுட்டும் விழிச்சுடர்தான் கண்ணம்மா சூரிய சந்திரரோ
வட்டக் கரியவிழி கண்ணம்மா வானக் கருமை கொள்ளோ
பட்டுக் கருநீலப் புடவை படித்த நல் வைரம்
நட்ட நடு நிசியில் தெரியும் நட்சத்திரங்களடி"

மனைவியின் முகத்தை இடது கையில் தாங்கியபடி முழுவதுமாய்ப் பாடி முடித்தவன் இறுதியில் அவளது கன்னத்தில் முத்தமிட்டு,

"இத்தனை நாள் இந்தப் பாடலை பாடும் போது நான் உணர்ந்து பாடியது இல்லை... ஆனால் இப்போ நான் உணர்ந்து பாடினேன் பவி..."

அவனது குரலில் மனம் மயங்கியவள், "உனக்கு அருமையான வாய்ஸ் விக்ரமா... நம் மகளுக்கும் இது மாதிரி பாட சொல்லி கொடு..."

எத்தனையோ பேர் அவனது குரலை பாராட்டி கூறிய போது வராத சந்தோசம் இப்போது அவனுள் எழுந்தது...

"நிச்சயம் பவி... அப்படியே உனக்கும்..."

"ஐயோ... பாட்டா எனக்கா...?" என்று அலறியவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"பாட்டுன்னு நான் சொல்லலையே... மகளுக்குப் பாட்டு... மகளோட அம்மாவுக்கு வேறு ஒரு பாட்டு சொல்லி கொடுக்கணும்..." என்று கண் சிமிட்டி சிரித்தவனைக் கண்டு நாணம் கொண்டு அவள் எழுந்து சென்று விட்டாள்... மனைவியின் வெட்கம் அவனது மனதில் பல இனிய

கனவுகளை விதைத்தது... அவனும் முகம் சிவந்தவனாய் தலையைக் கோதி கொண்டான்...

அன்று வேலை விசயமாய் வெளியில் சென்றிருந்த பவித்ரா வந்ததும் வராததுமாய் மகளைக் கைகளில் அள்ளியெடுத்துக் கொண்டு அவசரமாய் அவளுக்குப் பாலூட்ட ஆரம்பித்தாள்... அதைக் கண்ட விக்ரம்,

"நீ வெளியில் போயிருக்கும் போது பேபி என்ன பண்ணுவாள்...?"

"ஃபிரிஞ்சில் பாலை எடுத்து வச்சிட்டு போவேன்..."

அவள் கூறியது கேட்டு அவன் திகைத்துப் போனான்... அதை விட அவளது குரல் அழுகையுடன் ஒலித்தது கண்டு அதிர்ந்து போய் அவளைப் பார்த்தான்... மகள் உறங்கும் வரை பொறுத்திருந்தவன் மனைவியை அருகில் அழைத்தான்...

"பவி இங்கே வா..."

"என்ன விக்ரமா...?" என்று கேட்டபடி அவன் அருகே வந்தமர்ந்தாள் அவள்... அவளது முகத்தைப் பார்த்ததுமே அவனுக்குத் தெரிந்து போனது அவள் அழுது இருக்கிறாள் என்று...

"அழுதியா பவி...?" கணவனது அக்கறையில் அவளுக்குக் கண்கள் கரித்துக் கொண்டு வந்தது...

"ம்... ம்..." என்றவள் அவனது தோளில் ஆறுதல் தேடி சாய்ந்து கொண்டாள்... அதை உணர்ந்தவனாய் அவனது கை அவளை அணைத்துக் கொண்டது...

"தொழில்ல எதுவும் பிரச்சினையா...?" அதற்கு இல்லை என்று தலையாட்டியவளை கண்டு,

"பெரியம்மா எதுவும் சொன்னாங்களா...?"

"ஆமாம், உன் பெரியம்மா எல்லாம் ஒரு ஆள்ன்னு அவங்க பேச்சை கேட்டு நான் அழுகிறேனாக்கும்... குட் ஜோக்..."

என்று மெல்லியதாய் அவள் சிரித்த போதும் அவளது புன்னகை அவளது கண்களை எட்டவில்லை...

"அப்புறம் வேறு என்ன பிரச்சினை... அதுவும் நீ அழும் அளவுக்கு... இதுவரை நீ அழுததற்கான முழுக் காரணம் நான் மட்டுமே... இப்போதைக்கு நானும் எதுவும் செய்யவில்லையே... அப்புறம் ஏன் இந்த அழுகை...?" என்று அவன் யோசிக்க...

"இது வேறு விக்ரமா...?"

"அதைத் தான் நானும் கேட்கிறேன் என்னவென்று...?"

"இன்னைக்கு நான் வெளியில் போயிட்டு வர ரொம்ப லேட்டாகிருச்சு இல்லையா..."

"ஆமாம், அதுக்கென்ன..." என்று புரியாது பார்த்தவனைக் கண்டு தயங்கியவள் பின் மெதுவே,

"பால் கட்டிருச்சு விக்ரமா... பாப்பா குடிக்கும் போது கொஞ்சம் வலிச்சது... அதான் அழுதேன்..."

அவளது வலியை தனது வலியாக உணர்ந்தவனின் விழிகள் கலங்கியது...

"வேண்டாம் பவி... இந்தத் தொழில் எதுவும் வேண்டாம்... அது எப்படியோ போகட்டும்... நீ பேபியை மட்டும் கவனி... அது போதும்..."

"நீ திரும்ப வரும் வரை இந்த இரண்டு மாசமா தொழிலை கவனிக்கலைன்னா அது அதளபாதாளத்திற்குப் போயிரும் விக்ரமா..."

"போகட்டும்... தொழிலில் நல்ல பெயர் எனக்கு வேண்டாம்... எனக்கு நீ சந்தோசமா இருக்கணும்... அது போல் நீ நம் மகளை மட்டும் பார்த்துக்கிட்டா போதும்..."

கணவனின் தொழில் பக்தி அவளுக்குத் தெரியும்... அப்படிப்பட்டவன் தனக்காக எதுவும் வேண்டாம் என்று முடிவு எடுப்பது கண்டு அவளுக்கு அத்தனை சந்தோசமாக

இருந்தது... அவனைப் பார்த்து ஆறுதலாகப் புன்னகைத்தவள்,

"உனக்கு வலிப்பதை விட இது ஒண்ணும் பெரிய வலி இல்லை... நான் இருக்கும் வரை உன்னைத் தோத்து போக விட மாட்டேன் விக்ரமா..." என்று கூறிய மனைவியின் மாண்பில் அவன் முற்றிலும் கரைந்து தான் போனான்...

"பவி..." என்று கண் கலங்கியவனைக் கண்டு கலகலவென்று சிரித்தவள்,

"நீ எப்போது தொழிலை கையில் எடுக்கிறாயோ அப்போது இந்தப் பவித்ரா தான் உனது முதல் எதிரி... அதை நீ ஞாபகத்தில் வைத்து கொள்..." என்றவளை பார்த்து அவனுக்கும் சிரிப்பு வந்தது... தன்னைப் போலவே அவளும் பேச்சு மாற்றுவது கண்டு அவனுக்கு உவகையாக இருந்தது...

"நீ என் மனைவி என்பதும் என்னுடைய ஞாபகத்தில் எப்போதும் இருக்கும்..."

"ம்... பார்க்கலாம், பார்க்கலாம்... இருவரும் நேருக்கு நேர் மோதி கொள்ளும் போது பூகம்பம் வெடிக்கப் போகிறது..."

"நிச்சயம்... இந்தப் பூவுக்குள் எத்தகைய பூகம்பம் இருக்கிறது என்று பார்க்க தானே போகிறேன்..." என்றவனது பார்வை மையலுடன் அவளது மேனியை மொய்த்தது...

"போடா... எப்போ பார் உனக்கே இதே நினைப்பு தான்..." செல்லமாய் அவனது தோளில் அடித்து விட்டு அவள் எழுந்து சென்று விட...

தன்னருகில் படுத்து அழகிய மொட்டு போல் உறங்கி கொண்டிருந்த மகளை விக்ரம் ஆசையுடன் பார்த்தான்... கொள்ளை அழகுடன் இருந்த சின்னச் சிட்டு அவனது மனதை முற்றிலும் கொள்ளை அடித்தாள்... அவள் பிறந்த பிறகு தான் வாழ்க்கைக்கான முழு அர்த்தத்தையும் அவன் உணர்ந்து இருக்கிறான்... வாழ்க்கையை அனுபவித்து

வாழவும் பழகியிருக்கிறான்... மகள் பிறந்து தான் அவனது அக கண்ணை முழுவதுமாய்த் திறந்திருக்கிறாள்...

பிறந்து ஒன்றரை மாதங்களான போதும் இன்னமும் சின்னவளுக்குப் பெயர் சூட்டவில்லை... அதற்குக் காரணம் தான் தான் என்பதும் அவனுக்குத் தெரியும்... முதலில் மகளுக்கு நல்ல பெயரை தேர்ந்தெடுக்க வேண்டும் என்று நினைத்து கொண்டிருந்தவன் மனதில் அந்தப் பெயர் உதயமானது... அடுத்தக் கணம் அவனது முகம் மலர்ந்தது... மிகவும் பொருத்தமான பெயர் என்று மனதில் நினைத்துக் கொண்டான்...

************************

"நான் எப்படி இருக்கிறேன்...?"

தன் முன் வந்து நின்று முன்னும் பின்னும் திரும்பி மாடல் போல் நடந்து காட்டிய கணவனை இமைக்காது பார்த்த பவித்ராவின் விழிகளில் விழிநீர் அரும்பியது... வெள்ளை நிறத்தில் சாம்பல் வண்ண கோடுகள் நெருக்கமாய்ப் போட்டப்பட்ட முழுக்கை சட்டையும், சாம்பல் வண்ண பேண்ட்டும், அதே நிறத்தில் டையும் அவனுக்கு அத்தனை கம்பீரமாய்ப் பொருந்தியிருந்தது... கணவனது அழகை கண்களில் நிறைத்துக் கொண்டு சராசரி மனைவியாய் காதலில் உறைந்து நின்றாள் பவித்ரா...

விக்ரம் உடல் தேறுவதற்காக இந்த மூன்று மாதங்களாக அவள் பட்ட துன்பங்கள் தான் எத்தனை... நிச்சயம் அது எல்லாம் சுகமான துன்பங்கள் தான்... அவனது கம்பீர நடையை மீண்டும் கண்ட போது அவள் பட்ட அத்தனை கஷ்டங்களும் பனி போல் விலகி ஓடி போனது... இப்போது அவளுக்கு மிகவும் சந்தோசமாய் இருந்தது...

"உனக்கு என்னடா ராஜா மாதிரி இருக்கிற...?" அவளது ஆழ்மனதில் இருந்து அந்த வார்த்தைகள் வந்தது...

"இதை இந்த ராணி சொல்லி கேட்கும் போது அப்படியே ஜிவ்வுன்னு வானத்தில் பறப்பது போல் சந்தோசமாக

இருக்கிறது..." என்றபடி தன் அருகில் வந்து புன்னகையுடன் நின்றவனின் கழுத்தில் தனது கரங்களை மாலையாகக் கோர்த்து அவனது முகத்தை அருகில் இழுத்தாள் அவள்...

மனைவியின் செயலை உணர்ந்தவனாய் அவன் தானாகத் தனது தலையைக் குனிந்து அவளது முகத்தை எதிர்பார்ப்புடன் பார்த்திருந்தான்... யாருக்கும் தலைவணங்காதவன் தன்னிடத்தில் தலைவணங்கியது கண்டு மனதில் காதில் பெருக்கெடுத்து ஓட பவித்ரா அவனது நெற்றியில் மென்மையாய் முத்தமிட்டாள்... முத்தத்தின் இனிமையைக் கண் மூடி ஒரு நொடி அனுபவித்தவன் பின் விழிகளைத் திறந்து அவளது விழிகளுக்குள் ஊடுருவி நோக்கியபடி,

"இது எல்லாம் உன்னால் மட்டுமே சாத்தியம் பவி... நீ இல்லைன்னா நான் என்னாகிருப்பேனோ...?" என்று கண்கள் கலங்க கூறியவனை அவள் உள்ளம் உருக பார்த்திருந்தாள்...

"பவி..."

"ம்... ம்..." உணர்ச்சிவசப்பட்டதில் அவளுக்கு வார்த்தை வரவில்லை...

"ஐ லவ் யூ பவி..."

இத்தனை நாள் கணவனிடத்தில் அவள் எதிர்பார்த்துக் காத்திருந்த காதல்... இப்போது எதிர்பாராத தருணத்தில் கிடைத்ததை நினைத்து அவளால் சந்தோசப்பட முடியவில்லை... மாறாகத் துக்கம் தொண்டையை அடைத்தது...

"இது காதல் தானா விக்ரமா...?" என்று கேட்டவளை அவன் புரியாமல் பார்த்தான்...

"உனக்குத் தோன்றிய உணர்வுக்குப் பெயர் காதல் இல்லை விக்ரமா... இரக்கம்... நான் உனக்கு உதவியதால் தோன்றிய இரக்கம்... இதற்குக் காதல் என்னும் சாயம் பூச வேண்டாம்... நீ நீயாக இரு விக்ரமா... அது தான் உனக்கு அழகு..."

என்றுரைத்தவள் அவனது பதிலை எதிர்பாராது சென்று விட்டாள்...

தனது காதலை எப்படி அவளுக்குப் புரிய வைப்பது என்று தெரியாது விக்ரம் விழித்து நின்றான்... அன்று அவன் அறிந்து செய்த தவறு இன்று அவனையும் அறியாது அவன் முன் பூதகரமாய் வந்து நின்றது, அவனின் காதலுக்குத் தடையாக...

காதல் என்பது வெறும் வாய் வார்த்தை அல்ல... அது செயல் மூலம் உணர்த்துவது... விக்ரம் தனது மனைவிக்குச் செயல் மூலம் காதலை உணர்த்துவானா...???

மொழி பேசும்...!!!

## விழி : 18

அலுவலகத்தில் வந்தமர்ந்த விக்ரமிற்கு வேலை அவ்வளவு இலகுவாக இருந்தது... இத்தனை நாள் அவன் இங்கு வருகை தராதது போன்ற ஒரு உணர்வை அங்கிருந்த சூழ்நிலை கொஞ்சமும் ஏற்படுத்தவில்லை... அவன் இருந்தால் எப்படிக் கவனித்து இருப்பானோ அது போல் எல்லாமே மிகச் சரியாக இருந்தது... இன்னும் சொல்ல போனால் அவனை விடச் சிரத்தை எடுத்து ஒவ்வொரு விசயமும் செய்யப்பட்டு இருந்தது...

அதிலும் இந்த மூன்று மாத காலத்தில் அவனது தொழில் ஏறுமுகமாக இருந்தது கண்டு அவனுக்குப் பெருத்த ஆச்சிரியம்... இந்த இடைப்பட்ட காலத்தில் பவித்ராவின் நிறுவனம் எந்தவொரு புதிய தொழிலிலும் ஒப்பந்தம் செய்யவில்லை... எல்லாம் அவனது நிறுவனத்திற்கே வந்திருந்தது... மனைவி அந்தளவிற்கு அவள் செய்யும் தொழிலில் நேர்மையுடன் இருந்திருக்கிறாள்...

அவளது நிறுவனத்தின் வெற்றியை அவளே முறியடித்து அதில் அவனுக்கான வெற்றியை நிலைநாட்டி இருக்கிறாள்... இது எல்லாம் பவித்ரமான பவித்ராவால் மட்டுமே சாத்தியம்... வேறு எந்தப் பெண்ணாலும் இது செய்ய முடியாது என்றே அவனுக்குத் தோன்றியது...

அதே சமயம் அலுவலகம் கிளம்பும் போது மனைவி கூறிய வார்த்தைகளும் அவனது நினைவில் எழுந்தது... தனது நேசத்தை இரக்கத்தினால் வந்த காதல் என்று கூறியவளின் வார்த்தையில் அவனுக்குக் கோபம் வரவில்லை... மாறாகக் குழப்பம் தான் மிஞ்சியது... எப்படி வந்தால் என்ன...? காதல் எப்போதும் காதல் தானே... இந்தக் கணம் அவள் இல்லாத ஒரு வாழ்க்கையை அவனால் நினைத்து கூடப் பார்க்க முடியவில்லையே... இதைத் தானே எல்லோரும் காதல் என்கிறார்கள்... இதை ஏன் பவித்ரா புரிந்து கொள்ள மறுக்கிறாள்? என்று அவனுக்குப் பெருத்த யோசனையாக இருந்தது...

அந்நேரம் அவனது அலைப்பேசி அழைத்தது... திரையில் ஒளிர்ந்த மனைவியின் எண்ணை கண்டதும் அவனது முகத்தில் புன்னகை நிறைந்தது... உடனே அதை உயிர்ப்பித்துக் காதில் வைத்தான்...

"சொல்லுங்க மிஸஸ். பவித்ரா விக்ரம்..." என்று சீண்டலாய் ஒலித்தது அவனது குரல்... அதில் அவள் பல்லை கடித்தாள்...

"கொழுப்புடா உனக்கு..."

"ஹலோ... நான் ஒரு கம்பெனிக்கு எம்டி... மரியாதை கொடுத்து பேசணும்..." விறைப்பாய் பேசினாலும் அவனது உதட்டின் புன்னகை மாறவில்லை...

"கட்டின பொண்டாட்டி கிட்ட இப்படித் தான் பேசுவியா...? லூசு விக்ரமா..."

அவள் திட்டியது கேட்டு ஏதோ விருது கொடுத்தது போல் அவனது புன்னகை இன்னமும் விரிந்தது...

"என்னோட வொய்ப் வீட்டில் இருக்கிறாள்... நீங்க யாருங்க மேடம்...?" மீண்டும் வம்பிழுத்தவனைக் கண்டு அவள் தான் சரணடைந்தாள்...

"அடேய் விக்ரமா... உன் லொள்ளை என்னால் தாங்க முடியலைடா... ஒழுங்கா பேச போறியா இல்லை நான் ஃபோனை வைக்கவா...?" என்று மிரட்டவும் தான் அவன் அடங்கினான்...

"ஐயோ பவி ஃபோனை வச்சிராதே..." என்று அவன் அலறினான்...

'அப்படி வழிக்கு வாடா என் செல்ல புருசா...' என்று அவள் மனதிற்குள் அவனைச் செல்லமாய் வைது கொண்டே கொஞ்சி கொண்டாள்...

"ஆர் யூ ஓகே விக்ரமா...?"

இத்தனை நேரம் இருந்த கம்பீரம் காணாமல் போய்க் குழைவுடன் ஒலித்தது அவளது குரல்... அதில் கணவன் மீதான அக்கறை கொண்ட மனைவியின் வாஞ்சையே அதிகம் தெரிந்தது...

"வீட்டில் இருந்து வந்து ஒரு மணி நேரம் தானாகுது... அதுக்குள் எனக்கு என்ன வந்துவிடப் போகுது... ஐயம் ஆல்ரைட் பவி..."

"ம்... ஓகே, ஓகே... ரொம்ப ஸ்ட்ரெயின் பண்ணிக்காதே... முடிஞ்சளவு வேலை பார்... இல்லைன்னா வீட்டுக்கு போய் ரெஸ்ட் எடு..."

"ரெஸ்ட் எல்லாம் தேவையில்லை..."

"அப்படின்னா சரி... நீ வேலையைப் பார்... நான் இன்னும் ஒரு மணி நேரத்தில் வீட்டுக்கு போயிருவேன்..."

"ஏன்...?"

"பாப்பாவை பார்க்கணும் இல்லையா...? இங்கே பல்லவியும், உன் தம்பியும் எல்லாத்தையும் சொதப்பி வைச்சிருக்காங்க... அதைச் சரி பார்க்க தான் இன்று நான் இங்கு வந்தேன்..."

அவளது வேலைப்பளுவை நினைத்து அவனுக்குப் பாவமாக இருந்தது... அதே சமயம் தம்பி, தம்பி மனைவி மீது கோபம் வந்தது...

"இவங்க ரெண்டு பேரும் என்ன நினைச்சிக்கிட்டு இருக்காங்க... வாழ்க்கை முழுவதும் இப்படியே விளையாடிட்டு இருக்கப் போறாங்களா...? இன்னைக்கே வினோத்தை கூப்பிட்டுச் சத்தம் போடுறேன் பார்..."

"ஐயோ விக்ரமா... அப்படி எதுவும் செஞ்சிராதே..." என்று அவசரமாய்க் குறிக்கிட்டவள்,

"அவங்களாவது வாழ்க்கையை என்ஜாய் பண்ணட்டும் விக்ரமா..." இதைச் சொல்லும் போது அவளது குரல் கமறியது... அதைக் கேட்டு அவனது மனம் துணுக்குற்றது...

ஆனாலும் அவளிடத்தில் வாய் விட்டு கேட்கவில்லை... அமைதியாக இருந்தான்...

"சரி விக்ரமா... நீ உன் வேலையைப் பார்..." என்று அலைப்பேசியை வைக்கப் போனவளிடம்,

"இன்னும் அரை மணி நேரத்தில் நான் வீட்டுக்கு வருகிறேன்..." என்று மொட்டையாகக் கூறியவனின் வார்த்தையில் அவள் புரியாது விழித்தவள் பின் பதறிக் கொண்டு,

"என்னாச்சு விக்ரமா...?"

"நானும் என் வாழ்க்கையை என்ஜாய் பண்ண வேண்டாமா...?" கணவனது குரலில் வழிந்த குறும்பில் அவளது மனம் அமைதியுற்றது... இதழ்களில் குறுநகை நெளிந்தோட,

"அடேங்கப்பா... உனக்கு என்ஜாய் எல்லாம் பண்ண தெரியுமா...? இது இவ்வளவு நாளா எனக்குத் தெரியாம போச்சே...?"

சற்று முன் அவளது குரலில் இருந்த விரக்தி இப்போது இல்லை... மாறாக அதில் சந்தோசம் நிறைந்திருந்தது... அதில் அவனது மனம் திருப்தியுற்றது...

"எனக்கு என்னவெல்லாம் தெரியும் என்பதை இனி தானே நீ பார்க்க போகிறாய்..." இருபொருள்படப் பேசிய கணவனது பேச்சில் பாவையவளின் முகம் சிவந்து போனது...

"நீ ரொம்ப மோசம் விக்ரமா..."

"நான் எவ்வளவு மோசமானவன் என்பதை வீட்டிற்கு வந்து காட்டுகிறேன்..."

"ஐயோ போதும்... ஆளை விடு..." என்று அலறியபடி அலைப்பேசியை அணைத்த மனைவியின் குரலில் அவனுள் குதூகலம் நிரம்பியது... ஆனாலும்

பெண்ணவளின் மனதின் எதிர்பார்ப்பு அவனது மனதில் பெருத்த யோசனையாய்...

விக்ரம் வீட்டிற்கு வந்த போது அவனது செல்ல மகள் விழித்திருந்தாள்... அவளை அன்னையிடம் இருந்து தங்களது அறைக்கு அவன் தூக்கி செல்ல முயன்ற போது ரேவதி அவனைத் தடுத்தார்...

"உன்னால் தனியா அவளைப் பார்த்துக்க முடியாது விக்ரம்..."

"பவி இன்னும் கொஞ்ச நேரத்தில் வந்திர்றேன் சொன்னாள்ம்மா..." அவனது வார்த்தையில் சமாதானமாகிய ரேவதி பேத்தியை தானே தூக்கி வந்து மகனது அறையில் விட்டு விட்டு சென்றார்...

அவன் மகளின் மழலை மொழியில் மனதினை பறி கொடுத்தவனாய் அவளிடம் விளையாடி கொண்டிருக்கும் போது பவித்ரா அறையினுள் நுழைந்தாள்... வந்ததுமே அவனிடம் தான் நேரே வந்து நின்றாள்...

"காலில் வலி எதுவும் இருக்கிறதா...?" என்று அவனது வலது காலை பிடித்து ஆராய்ந்தவாறு...

"வலி எல்லாம் இல்லைங்க மேடம்... நீங்க இங்கே உட்காருங்க..." என்று அவளைத் தன்னருகில் அமர்த்தியவன் மகளைச் சுட்டிக்காட்டி,

"பேபி என்னைப் பார்த்து சிரிக்கிறாள்..." என்று மகிழ்ச்சியோடு கூற... அவளும் மகளைச் சந்தோசமாய்ப் பார்த்தாள்...

பெற்றோர் இருவரையும் சேர்ந்து கண்ட உற்சாகத்தில் மகள் கை, கால்களை உதைத்துக் கொண்டு மழலையில் விடாது மிழற்றினாள்... திடீரென்று அவள் 'ம்மா' என்று அழுத்தி சொல்ல அதைக் கேட்டு பவித்ராவின் மனதில் அப்படியொரு ஆனந்தம்...

"விக்ரமா... இங்கே பாரேன்... இப்பவே அம்மான்னு சொல்றதை..." அவனும் அந்த வார்த்தையைக் கேட்டுக் கொண்டு தான் இருந்தான்...

"ஆமாம் பவி..." என்று தந்தையாய் மனம் மகிழ்ந்தவன் மனைவியின் முகத்தில் தெரிந்த தாய்மை உணர்வினை கண்டு அவனது மனம் நெகிழ்ந்தது...

"பேபிக்கு மட்டும் நீ அம்மா இல்லை பவி... எனக்கும் நீ தான் அம்மா..."

கணவனின் வார்த்தையில் திகைப்புற்றவளாய் திரும்பி பார்த்த பவித்ராவை மகிழ்ச்சி, நெகிழ்ச்சி என்று இரண்டும் கலந்த உணர்வு ஆட்கொண்டது... இதை விடக் கணவன் அவளைச் சிறப்பித்து விட முடியுமா...? அந்தக் கணம் அவளது மனம் ஒரு தாயாய் மாறி கணவனைச் சேயாய் எண்ணி அவனது தவறுகளை எல்லாம் மன்னிக்கச் சொல்லியது... இது நாள் வரை நெருஞ்சி முள்ளாய் அவளது மனதினை உறுத்தி கொண்டிருந்த அவனது செயலை இப்போது அவளது தாயுள்ளம் மனமார மன்னித்தது... சும்மாவே கணவனை நேசிப்பவள் இப்போது இன்னமும் ஆழமாய் அவனை நேசிக்கத் துவங்கினாள்...

"விக்ரமா..." என்று மனம் நெகிழ்ந்து போய்த் தனது நெஞ்சில் சாய்ந்து கொண்டவளை அவனது கரங்கள் ஆரத்தழுவி கொண்டது...

"இப்போதாவது என்னைப் புரிந்து கொண்டாயா பவி...?" தவிப்புடன் வந்த அவனது வார்த்தைகளில் அவனை நிமிர்ந்து பார்த்தவள்,

"ம்... ம்..." ஆனந்தத்தில் கண்ணீர் மல்க தலையாட்டியவளை கண்டு,

"நான் உன்னை லவ் பண்றதை ஏற்றுக் கொள்கிறாயா...?" கணவன் இப்படிக் கேட்டதும் அவள் குபீரென்று சிரித்து விட்டாள்...

"விக்ரமா... நாம ரெண்டு பேரும் காதலர்கள் இல்லை... கணவன், மனைவி..." என்று அவள் கேலி செய்ய... அவன் எப்படித் தன் மனதினை அவளிடம் சொல்வது என்று தெரியாது விழித்து நிற்க...

"ங்கா..." என்று சின்னவள் சத்தம் எழுப்பித் தானும் இங்கே இருப்பதைப் பெற்றோருக்கு ஞாபகப்படுத்தினாள்...

"பாப்பாவுக்கு என்ன வேணும்...?" என்று மகள் புறம் திரும்பி சொடக்கு போட்டபடி குனிந்த மனைவியை விக்ரம் வெறித்துப் பார்த்துக் கொண்டு இருந்தான்... பிறகு என்ன நினைத்தானோ அவளின் பின்னால் இருந்து அணைத்துக் கொண்டு அவளது கன்னத்தோடு கன்னம் வைத்து இழைந்தபடி,

"நீ சொல்வது போல் கணவன், மனைவின்னே வைத்துக் கொள்வோம்... கணவன், மனைவி காதலிக்கக் கூடாதுன்னு எந்தச் சட்டமும் சொல்லலையே..."

"அது வந்து..." என்று பதில் சொல்ல தெரியாது திணறியவளை கண்டு,

"என்னுடையது காதலே இல்லை... இரக்கம்ன்னு சொல்ல போகிற... அது தானே... பரவாயில்லை சொல்வது நீ தானே தாராளமாகச் சொல்லிட்டு போ... ஆனால் நான் உன்னைக் காதலிப்பதை சொல்லிக்கிட்டே தான் இருப்பேன்... நீ எப்படி நினைத்தாலும் எனக்குக் கவலையில்லை..." என்று கூறியபடி அவளது கன்னத்தில் இதழொற்றி அவளது முகத்தைச் சிவக்க வைத்தான்...

"மகளின் அம்மாவை கவனித்தது போதும்... உன் மகளைக் கவனி விக்ரமா... நான் போய் உனக்கு ஜூஸ் எடுத்துட்டு வர்றேன்..." என்று மகளைக் கணவனது கைகளில் கொடுத்து விட்டு அறையை விட்டு வெளியில் வந்த பவித்ராவின் முகத்தில் அத்தனை வெட்கம் நிறைந்திருந்தது...

*******************

அலுவலகம் முடிந்து வந்த விக்ரமின் கைகள் இரண்டிலும் பெரிய பெரிய கவர்கள் இருந்தது... மகளின் பெயர் சூட்டும் வைபவம் இன்னும் சில நாட்களில் நடக்கவிருப்பதால் அவன் இப்படித் தான் ஒவ்வொரு நாளும் வீட்டிற்கு வரும் போது எதையாவது வாங்கி வருவது... இன்றும் அது போல் மகிழ்வோடு வந்தவனை முறைப்போடு எதிர் கொண்டாள் அவனது மனையாள்...

"இன்னைக்குமா...? நீ வாங்கிட்டு வர பொருளை வைக்கிறதுக்கு ரூமில் இடமில்லை..." என்று சலிப்புடன் ஒலித்த மனைவியின் குரலை கண்டு கொள்ளாது மகளிடம் சென்றவன்,

"பேபி... உன் அம்மாவுக்குப் பொறாமை... அவளுக்கு ஒண்ணும் வாங்கிட்டு வரலைன்னு கடுப்பு... அந்தக் கோபம் தான் அவளுக்கு... எனக்கு என் பேபி தான் முக்கியம்ன்னு அவளுக்குத் தெரியலை போலிருக்கு... ரூமில் இடமில்லை என்றால் என்ன...? என் பேபிக்காக அப்பா பெரிய வீடா கட்டி கொடுக்கிறேன்... அது நிறையப் பேபியோட திங்க்ஸ் மட்டும் தான்..."

"ஆமாம், ஆமாம்... அப்படியே உன் பேபியும், நீயும் மட்டும் தனியே அந்த வீட்டுக்கு குடி போங்க... நான் இங்கேயே இருந்துக்கிறேன்..." என்று கோபித்துக் கொண்டு முகத்தைத் தூக்கி வைத்துக் கொண்டு அமர்ந்த மனைவியைக் கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

இரவு உணவு முடிந்து மகள் உறங்கும் வரை காத்திருந்த அந்தக் கள்வன் அதன் பின்னரே மனைவியிடம் இழைந்தான்...

"பேபியோட அம்மா இப்படிப் பேபி மாதிரி கோபப்படுறது நியாயமா...?"

"அய்யே... நான் கோபப்படலையே..." என்று வலுக்கட்டாயமாய்ச் சிரிப்பது போல் பற்கள் அத்தனையையும் ஈயென்று இளித்துக் காட்டிய மனைவியவளை கண்டு,

"இதுக்கு நீ சிரிக்காமல் இருந்திருக்கலாம்... ரொம்பப் பயமாயிருக்கு..." என்று சிரியாமல் அவன் கேலி செய்ய...

"விக்ரமா..." என்று சிணுங்கியவளின் சிணுங்கலில் மனம் பறி கொடுத்தவனாய் மேலே வம்பிழுக்காது அவளது கையில் தன்னிடம் இருந்த கவரை கொடுத்தான்...

ஆர்வத்துடன் பிரித்துப் பார்த்தவளின் விழிகள் இரண்டும் ஆச்சிரியத்தில் அகல விரிந்தது...

"அட பார்ரா... சாமியாருக்குள் இருக்கிற ரசனையை..." என்றவளின் விழிகள் அழகுற வேலைப்பாடு செய்திருந்த அந்தப் பட்டு புடவையை ரசனையுடன் மொய்த்தது...

"இதையும் பார்த்துட்டு சொல்லு..." என்று கூறியபடி மற்றொரு கவரை பிரித்து நகைப்பெட்டியை எடுத்து அவளிடம் நீட்டினான்...

அதைத் திறந்து பார்த்தவளின் விழிகள் இன்னமும் அகல விரிந்தது... அதில் நுணுக்கமான வேலைப்பாடுடன் கூடிய வைர நகைகள் இருந்தது... கழுத்தணி, காதணி, வளையல்கள், மோதிரம் என்று எல்லாம் ஒரே அமைப்பில் அழகுற இருந்தது...

"உண்மையில் நல்லா இருக்கு விக்ரமா... உனக்குள் இப்படி ஒரு ரசனை இருப்பது எனக்குத் தெரியாம போச்சே..."

"அப்படி எல்லாம் இல்லை பவி... நேற்று கம்பெனி விளம்பரத்திற்கு மாடலாக யாரை நடிக்க வைக்கலாம்ன்னு நடிகைகள் ஃபோட்டோஸ் பார்த்துக்கிட்டு இருந்தேன்... அதில் இருந்த ஃபோட்டோவில் ஒரு நடிகை இது போல் போட்டு இருந்தாள்... அதைப் பார்த்ததும் உனக்கு வாங்கணும்ன்னு தோணுச்சு... பேபியோட பெயர் வைக்கும் விழா வேறு இருப்பதால் அதுக்காக வாங்கிட்டு வந்துட்டேன்..."

"ஓஹோ... அந்த நடிகை ரொம்ப அழகா இருந்தாளாக்கும்..."

"ம்... அழகா தான் இருந்தாள்..." என்று பேச்சு வாக்கில் கூறிக் கொண்டே போனவன் தான் கூறியதன் அர்த்தம் புரிந்து திகிலோடு மனைவியை ஏறிட்டுப் பார்த்தான்... அந்நேரம் அவளும் அவனைத் தான் கனல் பார்வை பார்த்து கொண்டிருந்தாள்...

'எவ்வளவோ சமாளிச்சிட்ட... இதைச் சமாளிக்க மாட்டியா விக்ரம்...' என்று தன்னைத் தானே தேற்றி கொண்டவன்,

"அது வந்து பவி... அழகை ஆராதிக்கணும்ன்னு சொல்வாங்கல்ல... அது மாதிரி நான் அழகை ஆராதிக்கிறேன்... இப்ப தானே நீ சொன்ன நான் ரசனைக்காரன்னு... அப்போ ரசனையோடு அழகை ரசிக்க வேண்டாமோ..."

தவறாகப் பேசி விட்டு அதைச் சமாளிக்க அழகாக விளக்கம் கொடுக்கும் கணவனிடம் ஏனோ அவளுக்குக் கோபம் வர மறுத்தது... மாறாகக் கண்ணனின் குறும்பை ரசிக்கும் யசோதையின் மனநிலை தான் அவளுக்கு இருந்தது...

"ப்ராடு... வாயை திறந்தால் பொய் தானா...?" என்று அவள் அவனது வாயிலேயே ஒரு அடி போட்டாள்...

"கண்டுபிடிச்சிட்டியா...?" என்று அசடு வழிந்தவனைக் கண்டு,

"உன்னை என்னைக்கோ கண்டுபிடிச்சிட்டேன்..." என்றவள் அவனை மேலும் கீழுமாய்ப் பார்த்து நக்கலாய்,

"நீ அதுக்கு எல்லாம் சரிப்பட்டு வர மாட்ட..." என்று கூறி விட்டுச் சிரிக்கத் துவங்கினாள்...

"அடியேய்... உன்னை இத்தனை நாள் விட்டு வச்சிருந்தது ரொம்பத் தப்பு... அதான் புருசன் மேல் பயம் விட்டு போச்சு..." என்றபடி மனைவியைத் தனது கரங்களுக்குள் அடக்கியவன் தனது ஆதிக்கத்தை அவளிடம் நிலைநாட்ட துவங்கினான்...

இதற்கு முன் கணவன் கைகளில் இரும்பாய் இளகாது விறைத்துக் கொண்டிருந்த பவியின் மேனி இப்போது அவளது மனதினை போன்று பாகாய் இளக துவங்கியது... காதல் கடந்து காமத்தை நோக்கி பயணிக்கும் வேளையில் விக்ரம் விலகி அமர்ந்தான்...

"ஏன் விக்ரமா...?" அவனது கைகளைப் பிடித்துத் தடுத்தவளை கண்டு,

"நீ என் காதலை ஏற்றுக் கொள்ளும் போது தான் நான் உன்னைத் தொடுவேன்..."

"இப்போ தொட்டதுக்குப் பெயர் என்னவாம்... சும்மா சும்மா எதையாவது பேசிக்கிட்டு இருக்காதே..." என்றவளை கண்டு அவனுக்குச் சிரிப்பு வந்தது...

"சிரிக்காதே விக்ரமா... நீயும், நானும் கணவன், மனைவி அதை நினைவில் வச்சுக்கோ..."

"ஹா ஹா, அந்த நினைவு இல்லாமலா உன்னை என் ரூமில் தங்க அனுமதிச்சு இருக்கேன்..." என்றவன் வாய் விட்டுச் சிரித்தான்...

"இது உன் ரூமா...? அப்போ நீயே வச்சுக்கோ... நான் போகிறேன்..." என்று கோபித்துக் கொண்டு எழுந்தவளை பிடித்து அமர்த்தியவன்,

"நமக்குள் காதல்ங்கிற வார்த்தையே வேண்டாம்... ஆனால் இந்த உலகத்தில் எனக்குப் பிடிச்ச ஒரே பொண்ணு நீ மட்டும் தான் என்பதை நீ நம்பும் வரைக்கும் நான் தள்ளி தான் இருப்பேன்..."

"அப்போ நம் மகள்..." என்று கிடுக்கிப்பிடி போட்டுக் கேள்வி கேட்டவளை கண்டு அவன் பரிதாபமாக விழித்தான்...

"இப்படி எல்லாம் கேள்வி கேட்டால் நான் என்ன பதில் சொல்வது...? மகள் மீதான பிடித்தம் வேறு... மனைவி மீதான பிடித்தம் வேறு... இரண்டுமே வேறு வேறு..."

கணவன் சொல்வது அவளுக்குப் புரியாமல் இல்லை... இதே காதலை அவன் விபத்திற்கு முன் கூறியிருந்தால் அவள் கண்ணை மூடி கொண்டு ஏற்று இருந்திருப்பாள்... ஆனால் இப்போது அதை ஏற்றுக் கொள்வதற்கு அவளுக்கு ஏனோ ஒரு மாதிரியாக இருந்தது... பவித்ரா என்னும் பெண்ணைக் கணவன் அப்படியே நிறை குறைகளோடு ஏற்றுக் கொள்ள வேண்டும் என்று அவளது பெண் மனம் தவித்தது... தான் அவனை அப்படி நிறை குறைகளோடு ஏற்றுக் கொள்ளவில்லையா அது போல்...

"என்னமோ போ விக்ரமா... எனக்கு ஒண்ணும் புரிய மாட்டேங்குது... எனக்கு உன்னைப் பிடிக்கும்... உனக்கும் அப்படியே... பிறகு ஏன் இவ்வளவு யோசிக்கிறாய்...?"

"இவ்வளவு நாள் யோசிக்காமல் விட்டதன் தவறு இப்போது தானே புரிகிறது..." என்று வருத்தத்துடன் கூறிய கணவனின் முகத்தை நிமிர்த்திய பவித்ரா,

"நீ ரொம்ப யோசிக்கிற விக்ரமா..." என்று அவள் அவன் உதட்டின் மீது முத்தமிட வந்த போது அவன் சட்டென்று விலகினான்...

"உனக்கு வேண்டாம்ன்னா போ... எனக்கென்ன...? அருமையான சான்சை மிஸ் பண்ணிட்ட விக்ரமா..." என்று நொடித்துக் கொண்டு எழுந்த மனைவியிடம்,

"இதை விட அருமையான சான்ஸக்காக வெய்ட்டிங் பவி..." என்று கண் சிமிட்டி சிரித்தான் அந்தக் கள்வன்...

"சான்ஸ் வரும், வரும்... இப்படியே கனவு கண்டுக்கிட்டு இரு..." என்றவளின் கைப்பிடித்துத் தடுத்து தனது மடியில் அமர்த்திக் கொண்டு அவளது காதோரமாய் மெல்லமாய்ப் பாடினான்...

"ஏனோ வானிலை மாறுதே
மணித்துளி போகுதே
மார்பின் வேகம் கூடுதே
மனமோ ஏதோ சொல்ல

வார்த்தை தேடுதே

கண்ணெல்லாம்... நீயேதான்...
நிற்கின்றாய்... விழியின் மேல்
நான் கோபம் கொண்டேன்...
இமை மூடிடு என்றேன்...

நகரும் நொடிகள்
கசையடிப் போலே
முதுகின் மேலே
விழுவதினாலே
வரி வரிக் கவிதை..
எழுதும் வலிகள்
எழுதா மொழிகள்
எனது.. !! "

அவனது குரலிலா இல்லை பாடல் வரிகளிலா ஏதோ ஒன்றில் உயிர் உருகியவளாய் அவள் கண் மூடியபடி அவனது நெஞ்சில் சாய்ந்தாள்...

"இன்னைக்குக் காரில் வரும் போது இந்தப் பாட்டுக் கேட்டேன்... கேட்டப்போ எனக்கு உன் ஞாபகம் தான்..." கணவனது இளகிய குரலில் அவள் மெல்ல விழி மலர்த்தினாள்... அவனின் மாற்றம் அவளுக்கு நன்றாகப் புரிந்தது... ஆனாலும்...???

அந்நேரம் அவர்களது மகள் அழ ஆரம்பித்தாள்... தாய்மை உணர்வு மேலோங்க பதறி போய்க் கணவனை விட்டு விலகியவள் மகளை அள்ளி அணைத்துக் கொண்டு சமாதானப்படுத்த துவங்கினாள்... தன் பெண்ணவளின் பல பரிமாணங்களை ஆச்சிரியமாய்ப் பார்த்தவனின் மனதில் பெருமையே நிறைந்திருந்தது...

மகளின் பெயர் சூட்டும் விழாவை உறவினர்கள், நண்பர்கள், தொழில் ரீதியான நண்பர்கள் என எல்லோரையும் அழைத்துப் பெரிதாக நடத்தினான் விக்ரம்... அழகான, அன்பான மனைவி, குட்டி தேவதையாய் மகள்

என வாழ்க்கை வண்ணமயமாய் மாறியது போல் ஒரு தோற்றம் அவனுள்... அத்தனை மகிழ்ச்சியாக இருந்தது...

விழாவிற்கு வந்திருந்த வர்மா கூடத் தம்பதியினரின் இணக்க நிலையைக் கண்டு கலவரம் அடைந்தார்... இருவரும் இணைந்தால் அவரது கதி அதோ கதி அல்லவா... ஆனாலும் மகிழ்வாய் இருக்கும் அந்தத் தம்பதியினரை கண்டு அவருக்கும் சந்தோசமாக இருந்தது...

மகளுக்குப் பெயர் வைக்கும் போது விக்ரம், "பவதாரிணி..." என்று கூற... அவ்வளவு நேரம் பூஜையில் லயித்திருந்த பவித்ரா வியப்பாய் கணவனைப் பார்த்தாள்...

அவள் மகளின் பெயரை பற்றிச் சிறிதும் சிந்திக்கவில்லை... அவனது பொறுப்பில் விட்டு விட்டாள்... விபத்தில் இருந்து அவளது மனம் முழுமையாய் அவனிடத்தில் சரணாகதி அடைந்து இருந்தது... 'நல்லதோ, கெட்டதோ நீயே பார்த்து கொள்' என்பது போல்...

"பவித்ராவின் பொண்ணு பவதாரிணி தானே..." ஒற்றைப் புருவத்தைத் தூக்கியபடி வசீகரமாய்க் கேட்ட கணவனைக் கண்டு அவள் மகிழ்ச்சி மேலோங்க மிக வேகமாய்த் தலையசைத்தாள்...

"நீ இப்படி ஆமாம் சாமி போடும் போது எனக்கு எப்படி இருக்கிறது தெரியுமா...?"

"எப்படி இருக்கிறதாம்...?"

"எனக்கு ஒரு அடிமை வலிய வந்து சிக்கிட்டாள்ன்னு தோணுது..." என்று கூறி சிரித்தவனைக் கண்டு அவளுக்குமே சிரிப்பு வந்தது...

"உண்மை தான் விக்ரமா... இப்போது எல்லாம் உன் அன்பால் என்னை அடிமையாக்கிற..." என்றவளை ஆச்சிரியமாய்ப் பார்த்தான் அவன்... அந்தக் கணம் அதிகாரமாய்ப் பெண்ணவளை ஆக்கிரமித்த தனது தவறு

அவனுக்குப் புரிந்ததோ என்னமோ அவளது கையை அழுத்தி பிடித்துக் கொண்டவன்,

"இது எனக்குப் புரிய இத்தனை நாளாகிருச்சுப் பவி... சாரி..."

கணவனது மன்னிப்பில் அவளது மனம் பாகாய் உருகி விட்டது... அவனது மனதினை மாற்றும் பொருட்டு,

"நமக்கு மகன் பிறந்தால் என்ன பெயர் வைப்பாய்...?"

"விக்ரமின் மகன் வேதாளம்..." என்று சிரியாமல் சொன்னவனைக் கண்டு போலியாக முறைத்தவள்,

"என் மகன் உனக்கு வேதாளமா...?" என்று கேட்டு மிரட்ட...

"அடேங்கப்பா... எப்போதும் மகளுக்குத் தான் சப்போர்ட் பண்ணுவ... இப்போ என்ன புதுசா மகனுக்குச் சப்போர்ட் பண்ற...?"

"ம்... நம் மகள் உன் மகளானதில் இருந்து... உனக்கு மகள்... எனக்கு மகன்... டீல் ஓகேவா..." என்று ஒப்பந்தம் போட்ட மனைவியைக் கண்டு,

"டீல் ஓகே தான்... ஆனால் நீ மட்டும் எப்போதும் எனக்கு மனைவியாய், அம்மாவாய் இருக்க வேண்டும்... எனக்கு அப்புறம் தான் உனக்குப் பிள்ளைகள் எல்லாம்..." என்று காதலோடு கூற... அதில் அவளது மனம் காதலாய்க் கனிந்தது...

"மாமா... போதும் போதும், கடலை போட்டது... தரு குட்டி பாவம்... அவளைக் கொஞ்சம் கவனிங்க..." என்று பல்லவி கேலி குரல் கொடுக்க... அதில் தம்பதி இருவரின் கவனமும் மகளிடம் திரும்பியது...

******************************

நாட்கள் மெதுவே நகர்ந்து சென்றது... விக்ரமிற்கு அந்த வருடத்திற்கான சிறந்த தொழிலதிபர் விருது கொடுக்கவிருந்தனர்... அதைக் கேள்விப்பட்டு அவன்

சந்தோசத்துடன் வீட்டிற்கு வந்து அந்த விசயத்தை மனைவியிடம் பகிர்ந்து கொண்டான்...

"இது எல்லாம் உன்னால் தான் பவி..." என்று அவன் அவளை வித விதமாய்க் கொஞ்சி மகிழ... அவளும் அவனது அன்பில் கட்டுண்டு அமைதியாக இருந்தாள்... பின் அவனிடம் இருந்து விலகியவள்,

"இது நீ வாங்கிய அவார்ட்... இதுக்கு நான் எப்படிக் காரணமாவேன்...? இது உன் திறமைக்குக் கிடைத்த அங்கீகாரம் விக்ரமா..." என்று கூறியவளை அவன் இயலாமையுடன் பார்த்தான்...

அவனுக்கு நிச்சயம் தெரியும் இது அவளுக்குக் கிடைக்க வேண்டிய விருது என்று... ஏனெனில் இந்த வருடம் அவனை விட அதிக வெற்றிகளைக் குவித்தது அவள் தான் என்று அவன் நன்கு அறிவான்... அவனுக்கு மட்டும் விபத்து நடக்காது இருந்திருந்தால் அவன் சார்பாக அவள் அவனுக்குப் பெற்று தந்த வெற்றி அனைத்தும் அவளுக்கே போய்ச் சேர்ந்திருக்கும்... இந்த விருதையும் அவள் தான் வென்றிருப்பாள்...

தனக்காக அனைத்தையும் விட்டு கொடுத்த அவளின் தியாகத்தின் முன் அவனது காதல் எல்லாம் ஒன்றும் இல்லலாததாய் போய் விட்டது... உயிர் மூச்சான தொழிலை தனக்காக விட்டு கொடுத்த மனைவிக்காகத் தன் உயிர் மூச்சை தியாகம் செய்ய அவன் மனம் விரும்பியே ஆசை கொண்டது...!!!

மொழி பேசும்...!!!

## விழி : 19

"இந்த ஆண்டு இந்த விருதை நான் வாங்கியிருக்கிறேன் என்றால் அதுக்கு முழுக்க முழுக்கக் காரணம் என் மனைவி பவித்ரா மட்டுமே... சில மாதங்களுக்கு முன் விபத்து நடந்து முற்றிலும் செயலிழந்த நிலையில் நான் இருந்த போது என்னை ஒரு தாயாகத் தாங்கிய என் மனைவிக்கு இந்த விருதை சமர்ப்பிக்கிறேன்..."

அந்தப் பெரிய அரங்கில் சமுதாயத்தில் மிகப் பெரிய அந்தஸ்தில் வாழும் பெரிய மனிதர்களின் முன்னிலையில் விக்ரம் இந்த வார்த்தைகளைக் கூறிய போது அரங்கமே கைத்தட்டல்களினால் அதிர்ந்தது... வியப்பில் அகன்ற விழிகளில் நீர் திரள, கன்னத்தில் இரு கைகளையும் வைத்தபடி, ஆச்சிரியத்தில் உதடுகளைக் குவித்தபடி நெகிழ்ச்சியுடன் கணவனைப் பார்த்து கொண்டிருந்தாள் பவித்ரா... அவளுக்கான மிகப் பெரிய அங்கீகாரத்தைக் கணவன் அவளுக்கு வழங்கி விட்டான்... மகிழ்ச்சியில் மனம் நிறையக் கணவனையே இமைக்காது பார்த்திருந்தாள்...

அவளின் நிறுவனத்தின் பெயரை கூறிய விக்ரம், "அதன் எம்டி திருமதி. பவித்ரா விக்ரம் மேடைக்கு வரவும்..." என்று அவன் மனைவியை மேடைக்கு அழைத்த போது அவள் வார்த்தைகளற்று மறுப்பாய் தலையசைத்தாள்... இது அவனுக்கான அங்கீகாரம்... அவன் மட்டுமே பிரதானமாகத் தெரிய வேண்டும் என்று எண்ணியவளாய் அவள் அசையாது அமர்ந்திருந்தாள்... அதைக் கண்டு அவன் ஒன்றும் அசந்து போய் விடவில்லை... மாறாக விழிகளில் காதலை தேக்கியபடி அவளைப் பார்த்தவன்,

"என்னுடைய காதல் மனைவியாய் என்னுடைய சந்தோசத்தில் பங்கு கொள்ள மேடைக்கு வா பவி..."

இப்போது அவளால் கணவனது வார்த்தைகளை மறுக்க முடியவில்லை... ரேவதி அவளைப் பார்த்து,

"விக்ரம் கூப்பிடுகிறான் இல்லையா... நீ போம்மா... நான் தரு குட்டியை வச்சிக்கிறேன்..." என்று அவர் கூற...

"பாப்பா என் கூடவே இருக்கட்டும் அத்தை... இவள் இல்லாமல் நாங்கள் இல்லை..." என்றவள் ஒரு அன்னையாய் மகளைக் கைகளில் ஏந்தி கொண்டு ஒரு மனைவியாய் கணவனது மகிழ்ச்சியில் பங்கு கொள்வதற்காக மேடையை நோக்கி சென்றாள்...

மகளுடன் மனைவி நடந்து வரும் அழகினை மேடையில் இருந்து ரசித்துப் பார்த்திருந்தான் அந்தக் காதல் கணவன்... மேடையேறி மனைவி தன்னருகில் வந்ததும் தனது கையிலிருந்த விருதை அவளிடம் நீட்டியவன்,

"இது உனக்கானது பவி..."

கண்ணீர் மல்க அவள் அதை வாங்கிய போது அவன் அவளது கையிலிருந்த மகளைத் தனது கைகளில் வாங்கிக் கொண்டான்... இடது கையில் மகளை ஏந்தி கொண்டவன் வலது கையால் மனைவியை அணைத்துக் கொண்டான் பெருமையாக... கணவனது செய்கையில் அவள் மனம் நெகிழ அவனை ஏறிட்டு பார்த்த போது,

"விருது மட்டுமல்ல பவி... நானுமே உனக்கானவன் தான்..." என்று கண் சிமிட்டி வசீகரமாய்ப் புன்னகைத்து அவளது மனதினை கவர்ந்தான் அவளது உள்ளங்கவர் கள்வன்... அதில் அவளது முகத்தில் அப்படியொரு நிறைவான புன்னகை... வாழ்க்கையை வசப்படுத்தியது போன்று ஒரு சந்தோசம்...

மூவருமே இளஞ்சிவப்பு நிறத்தில் உடை அணிந்து இருந்தனர்... விக்ரம் இளஞ்சிவப்பு சட்டையும், இளம் பழுப்பு வண்ண கோட் மற்றும் பேண்ட் அணிந்திருந்தான்... பவித்ரா இளஞ்சிவப்பு நிறத்தில் மணிகள் கோர்க்கப்பட்டு, வண்ண கற்கள் பதிக்கப்பட்ட புடவை அணிந்து அழகுற நின்றிருந்தாள்... குட்டி தேவதையோ அதே நிறத்தில் 'ஃப்ரில்' வைத்த 'ஃப்ராக்' அணிந்து குட்டி தேவதையாகக் காட்சி அளித்தாள்...

சந்தோசமாய் இணைந்து நின்ற மூவரையும் அங்கிருந்த புகைப்படக் கருவிகள் அத்தனையும் சந்தோசமாய் உள்வாங்கிக் கொண்டது... ரேவதி பெருமையும், மகிழ்ச்சியுமாய் மகனது குடும்பத்தைப் பார்த்து ஆனந்த கண்ணீர் வடித்தார்... இதை விடச் சந்தோசம் அவருக்கு வேறு என்ன வேண்டும்...

பார்வைகள் கவ்வி நிற்க அசையாது சிலையாய் நின்றிருந்த பெற்றோரை சின்னவள் 'ம்மா' என்றழைப்பில் தன் பக்கம் திரும்ப வைத்தாள்... இருவரும் சிரிப்புடன் மகளைத் திரும்பி பார்த்தனர்...

இரவு வீட்டிற்கு வந்த பிறகு மகள் உறங்கியதும் தன்னை நெருங்கிய மனைவியின் அணைப்பில் கட்டுண்டு இருந்த விக்ரம் அப்படியே அமைதியாக இருந்தான்... அவனது அமைதியில் யோசனையாய் கணவனது முகத்தைப் பார்த்தாள் அவள்...

"என்னோட விக்ரமாவுக்கு என்னாச்சு...?" என்று தன்னைக் கொஞ்சிய மனைவியைப் பார்த்தவன்,

"காலையில் இருந்து ஆபிஸ் பக்கமே போகலை பவி... இனி தான் எல்லா வேலைகளையும் பார்க்கணும்..."

அது அவளுக்கும் தெரியுமே... காலையில் இருந்து அவனுக்கு விருது கொடுக்கவிருப்பதை அறிந்து ஒவ்வொரு சங்கத்தில் இருந்தும் பாராட்டு விழா என்று கூறி அவனது பெரும்பான்மை நேரத்தை அவர்கள் களவாடி கொண்டனர்...

"நான் வேணும்ன்னா ஹெல்ப் பண்ணவா...?" உண்மையான கவலையுடன் கேட்டவளை கண்டு ஆறுதலாய் புன்னகைத்தவன்,

"இல்லை வேண்டாம்... நீ பேபியை கவனிச்சு டயர்டாகி இருப்ப... நீ தூங்கு..." என்றவன் மடிகணினியை எடுத்துக் கொண்டு அமர்ந்து விட்டான்...

வேறுவழியின்றி அவளும் படுத்து உறங்கி விட்டாள்... மனைவி ஆழ்ந்த உறக்கத்திற்குச் சென்ற பின்னரே விக்ரம் மடிகணினியை அணைத்து விட்டு அவள் அருகில் வந்தான்... முதலிரவு அன்று அவள் உறங்கி கொண்டிருந்த போது அவளைத் தன்வசப்படுத்திய நிகழ்வு அவன் கண்முன் வலம் வந்தது... அப்போது மனைவியை அடக்கி வென்று விடத் துடித்த அவனது செயல் இப்போது அவனை வெட்கி தலைக்குனிய வைத்தது...

இதோ இப்போது அவன் அவளை அடக்கி ஆள வேண்டிய தேவையே இல்லை... அவளே தானாக முன் வருகிறாள்... ஆனாலும் அவளை ஆட்கொள்ள அவனுக்கு அத்தனை தயக்கமாக இருந்தது... இத்தனை நாள் அவளைப் புரிந்து கொள்ளாது அவன் நடந்து இருக்கலாம்... ஆனால் இன்று அவளைப் பற்றிப் புரிந்து கொண்ட பின் அப்படி நடப்பதற்கு அவனுக்குப் பெருத்தத் தயக்கமாக இருந்தது...

தான் அவளைக் காதலிப்பதை அறிந்தும் அவள் அவனிடத்தில் இருந்து வேறு எதையோ எதிர்பார்க்கிறாள்... ஆனால் அது என்னவென்று அவனுக்குத் தெரியவில்லை... அது தெரியும் வரை அவன் அவளைத் தொடுவதாய் இல்லை...

அந்நேரம் மகள் படுக்கையை நனைத்துக் கொண்டு சிணுங்க ஆரம்பித்தாள்... பவித்ராவின் தூக்கம் கெடாதவாறு மகளைத் தனது கைகளில் அள்ளி கொண்டவன் அவளது உடைகளை மாற்றி விட்டான்... தந்தையின் செயல்களில் மகள் நன்கு விழித்துக் கொண்டாள்...

"ங்கா..." என்று அவள் மழலை மொழியில் பேசியது கேட்டு அவள் கவிதை பாடியது போல் மகிழ்ந்து போனான் அந்தத் தகப்பன்... அவனும் அவளது மழலை மொழியைப் பின்பற்றிப் பேசி சிரிப்பு காட்ட மகள் பொக்கை வாயை திறந்து சிரித்தாள்...

இருவரது சத்தம் கேட்டுப் பவித்ரா தூக்க கலக்கத்தில் எழுந்து அமர்ந்தாள்...

"பாப்பாவுக்குப் பசிக்குதா...?"

"இல்லை, இல்லை... சும்மா விளையாடிக்கிட்டு இருக்கிறாள்... நீ தூங்கு..." என்று அவசரமாய்ப் பதிலளித்த கணவனைக் கண்டு மந்தகாசமாய்ப் புன்னகைத்தவள் அவன் பக்கம் உருண்டு வந்து அவனது மடியில் படுத்து கொண்டாள்...

"தூக்கம் வரலையா...?" என்று பரிவுடன் கேட்டவனைக் கண்டு,

"ம்... ம்..." என்று ஆமோதித்தவள்,

"ஏனோ இன்னைக்கு ரொம்பச் சந்தோசமாயிருக்கு..."

"ஏனாம்...?"

"தெரியலை..." என்று தன் மடியில் முகம் புதைத்து கொண்டவளின் தலையை மென்மையாக வருடி கொடுத்தான் விக்ரம்...

மகள் தன் கரம் அருகிலிருந்த அன்னையின் முடியை பிடித்திழுத்து வம்பு செய்தாள்... விக்ரம் அவளது கரத்தை பிரித்து எடுத்து,

"பேபி... அம்மா பாவம்டா... வலிக்கும் இல்லையா..." என்று கூற...

அதில் அவனை நிமிர்ந்து பார்த்த பவித்ராவினுள் பழைய நினைவுகளின் தாக்கம்... அன்று மட்டும் அவன் ஏன் தன் வலியை உணராது போனான்... உடல் வலி இல்லை என்றாலும் மனதால் அவள் பட்ட காயம்...? விக்ரம் அவளது முகமாறுதலை கண்டு மனம் சுணங்கியவனாய்,

"பவி..." என்று கவலையுடன் அவளைப் பார்த்தான்...

"என்ன விக்ரமா...?" என்று அவசரமாய்த் தன்னைச் சமாளித்துக் கொண்டு கணவனைப் பார்த்து புன்னகைத்தாள்...

தன்னைப் பார்த்து பூவாய் மலர்ந்து புன்னகைத்த மனைவியைக் கண்டதும் தான் அவனுக்கு நிம்மதி... ஆனாலும் அவளது எதிர்பார்ப்பு என்ன என்கிற கேள்வி அவனது மனதினை உறுத்தி கொண்டே இருந்தது...

இருவரது யோசனைகளையும் பவதாரிணி தனது மழலை மொழியால் கலைத்தாள்... அதில் இருவரது கவனமும் மகள் புறம் திரும்பியது...

************************

அந்தத் திருமண மண்டபம் விழா கோலம் பூண்டது போல் ஜெகஜ்ஜோதியாகக் காட்சியளித்தது... விக்ரம், வினோத்தின் தங்கை மதுமதியின் வரவேற்பு நிகழ்ச்சி தான் அங்குக் கோலாகலமாக நடந்து கொண்டிருந்தது... இன்று வரவேற்பு, நாளை காலை திருமணம்... ஒரு அண்ணனாக விக்ரம் தங்கைக்கு ஏற்ற மணவாளனை தேடி தந்து விட்டான்... அவளுக்குமே மணமகனை மிகவும் பிடித்திருந்தது...

எப்போதும் எதிர்ப்பு தெரிவிக்கும் சௌந்தர்யா மணமகன் விசயத்தில் வாயெல்லாம் பல்லாகக் காட்சியளித்தார்... ஏனெனில் மணமகன் வீட்டார் மிகுந்த வசதி உடையவர்கள்... அதுவும் அவர்களை விடவும்... அதனால் அவர் விக்ரமை எதிர்க்கவில்லை...

ஐந்து நிமிடத்திற்கு முன்பு வரை சந்தோசமாக ஓடியாடி வேலை செய்து கொண்டிருந்த விக்ரமால் இப்போது சந்தோசமாக வேலை செய்ய முடியவில்லை... மனதிற்கு மிகவும் கஷ்டமாக இருந்த அதே சமயம் கோபமாகவும் வந்தது அவனுக்கு... ஏனெனில் விஸ்வநாதன் தனது முதல் மனைவி சௌந்தர்யாவுடன் தம்பதி சமேதராய் நின்று கொண்டு எல்லோரையும் வரவேற்றவர் மறந்தும் இரண்டாவது மனைவி ரேவதியை திரும்பியும் பார்க்கவில்லை... அது போல் வந்திருந்தவர்களிடம் சௌந்தர்யாவை அறிமுகப்படுத்தியது போல் ரேவதியை அறிமுகப்படுத்தவில்லை...

இது எப்போதும் நடக்கும் ஒரு விசயம் என்பது போல் ரேவதி அதைக் கண்டு கொள்ளாது சகஜமாக இருந்தார்.. அமைதியாக வரவேற்பு நிகழ்ச்சியைப் பார்த்தபடி இருந்தவரின் கைகளில் அவரது செல்ல பேத்தி பவதாரிணி அமர்ந்திருந்தாள்...

இதுநாள் வரை இந்தக் கொடுமையை விக்ரம் கூர்ந்து கவனிக்கவில்லை... இப்போது தான் அவன் இந்த அவலத்தைக் கவனித்துப் பார்க்கிறான்... அவன் அறிந்து அவனது வீட்டில் நடந்த முதல் விசேசம் அவனது திருமணம்... அப்போது தான் பெரியம்மாவின் குணம் அவனுக்குத் தெரிய வந்தது... அந்தச் சமயம் அவனுக்கு இருந்த மனவுளைச்சலில் அதைப் பெரிதாகக் கண்டு கொள்ளவில்லை... அது போல் தான் தம்பியின் திருமணத்திலும்...

ஆனால் இன்று தங்கையின் திருமணத்தில் இந்த நிகழ்வு மிகவும் வித்தியாசமாகத் தெரிந்தது... எல்லோரும் வயது வித்தியாசமின்றி அவரவர் கணவனுடன் சந்தோசமாய் நின்று கொண்டிருக்க அவனது அன்னை மட்டும் தனித்து நின்றது அவனது மனதில் பெருத்த வலியை தோற்றுவித்தது... நேரே அன்னையின் அருகில் வந்தவன் மகளைத் தனது கைகளில் வாங்கிக் கொண்டு,

"நீங்க அப்பா கூடப் போய் நில்லுங்கம்மா..." என்க...

அவனது திடீர் செயலில் புரியாது விழித்தவர் பின் புரிந்ததும், "அதான் அக்கா இருக்காங்களே... நான் வேறு எதுக்கு விக்ரம்...?" என்று அவர் மறுத்தார்...

"அவருக்கு நீங்களும் மனைவி தான்ம்மா..." சற்று கோபத்துடன் வந்தது அவனது வார்த்தைகள்...

"யார் இல்லைன்னு சொன்னது...? அது போல் அக்காவும் அவரது மனைவி... அதுவும் அதிக உரிமையுள்ள முதல் மனைவி..." இதை ரேவதி சிரித்த முகமாய்க் கூறிய போதும் அவரது விழிகளில் ஒருவித சோகம் வந்து கவ்வி கொண்டது...

அதை உணர்ந்தவனுக்கு என்ன செய்து அவரது சோகத்தை நீக்குவது என்று தெரியவில்லை… ஒரு நொடி யோசித்தவன் பின் மகளை அன்னையிடம் கொடுத்து விட்டு கடகடவென மேடை ஏறினான்… தனக்கு மறுஜென்மம் அளித்த இன்னொரு தாயான மனைவி பவித்ராவின் மூலம் தனது தாயின் மன துன்பத்தை இந்தக் கணம் அவன் உணர்ந்தான்…

தனக்கு உயிர் கொடுத்த அன்னையின் அகத்தில் இருக்கும் துயரை துடைக்க எண்ணினான் அந்த நல்ல மகன்… அந்தக் கணம் அவனுக்கு மிகவும் பிடித்த பாடல், அவனது நண்பர்கள் அடிக்கடி பாட சொல்லி கேட்கும் அந்தப் பாடலை அவன் தனது அன்னையைப் பார்த்துப் பாடினான்…

"உயிரும் நீயே
உடலும் நீயே
உறவும் நீயே தாயே …
தன் உடலில் சுமந்து
உயிரை பகிர்ந்து
உருவம் தருவாய் நீயே
உன் கண்ணில் வழியும்
ஒரு துளி போதும்
கடலும் உருகும் தாயே…
உன் காலடி மட்டும்
தருவாய்… தாயே
சொர்க்கம் என்பது பொய்யே!!!
விண்ணைப் படைத்தான்
மண்ணைப் படைத்தான்
காற்றும் மழையும்
ஒளியும் படைத்தான்
பூமிக்கு அதனால்
நிம்மதி இல்லை
சாமி தவிர்த்தான்…
தாயை படைத்தான்…
உன் கண்ணில் வழியும்
ஒரு துளி போதும்

கடலும் உருகும் தாயே
உன் காலடி மட்டும்
தருவாய்... தாயே
சொர்க்கம் என்பது பொய்யே!!!
உயிரும் நீயே
உடலும் நீயே
உறவும் நீயே தாயே"

தந்தை தாய்க்கு கொடுக்காத முக்கியத்துவத்தை, மரியாதையை மகன் அவருக்கு அளித்தான்... பாடல் கேட்டு ரேவதியின் விழிகளில் விழிநீர் நிறைந்தது... அந்நேரம் பவித்ரா அவரது அருகில் வந்தமர்ந்து ஆறுதலாய் அவரது கையைப் பிடித்துக் கொண்டாள்... அதை உணர்ந்து திரும்பி பார்த்த ரேவதி மருமகளிடம்,

"விக்ரம்..." என்று மகனை நோக்கி கையை நீட்டியவர் மேலே பேச முடியாது சந்தோசத்தில் வார்த்தைகள் திணற அவளைப் பார்த்து புன்னகைத்தார்... அதற்கு நேர்மாறாய் அவரது விழிகளில் கண்ணீர் நிறைந்தது...

"விக்ரமுக்கு உங்க மேல் ரொம்பப் பாசம் அத்தை... என்ன ஒண்ணு அவனுக்கு அதை வெளிப்படுத்த தெரியாது..." மருமகள் கூற்றை அவர் விழிகள் கசிய ஆமோதித்தார்...

அப்போது விக்ரமின் கணீர் குரல் ஒலித்தது...

"இது என்னோட அம்மாவுக்காக நான் பாடிய பாடல்... அவங்க என்னோட அம்மான்னு சொல்வதில் எனக்கு ரொம்பவும் பெருமை..." என்றவன் அன்னையை நோக்கி,

"அம்மா வாங்கம்மா..." என்றழைக்க...

"நான் எதுக்கு விக்ரம்...?" என்று அவர் மறுக்க...

"அத்தை நீங்க கட்டாயம் போயே ஆகணும்..." என்று பவித்ரா அவரை மேடை நோக்கி அழைத்துச் சென்றாள்...

அவர் மேடை ஏறும் போது பவித்ரா மகளைத் தனது கைகளில் வாங்கிக் கொண்டு, "இது உங்களுக்கும் உங்க

மகனுக்குமான நேரம்..." என்று கீழேயே நின்று கொண்டாள்...

ரேவதி மேலே ஏறியதும் விக்ரம் அவரை அணைத்துக் கொண்டு அங்குக் கூடியிருந்தவர்களைப் பார்த்து, "என் அம்மாவின் பெயரில் ஒரு தொண்டு நிறுவனம் ஆரம்பித்து இருக்கிறேன்... இனி இதன் மூலம் பல நல்ல காரியங்கள் நடக்கவிருக்கிறது... அதன் முழுப் பொறுப்பும் இனி அவங்க தான் பார்த்துக்கப் போறாங்க... என்னோட அம்மாவின் அன்புக்கு நான் கொடுக்கும் சிறு அன்பு பரிசு இது..." என்று கூறியவன் அன்னையிடம் கண்கள் பனிக்க,

"சந்தோசம் தானேம்மா...?" என்று கேட்க...

"ரொம்ப ரொம்பச் சந்தோசம்ப்பா..." என்று அவர் ஆனந்த கண்ணீரோடு ஆனந்தமாய் மகனை அணைத்துக் கொண்டார்...

இதையெல்லாம் கீழே இருந்து பார்த்துக் கொண்டிருந்த சௌந்தர்யாவிற்கு அப்படி ஒரு எரிச்சல் வந்தது... தனக்கு வாய்த்த பிள்ளைகள் இரண்டும் இது போல் இல்லையே என்கிற ஆதங்கம், கோபம் எல்லாம் சேர்ந்து தங்கை மீது பொறாமை கொள்ள வைத்தது... அந்தக் கோபம் கணவரிடம் வெடித்தது...

"எல்லாம் உங்களால் தான்..." குற்றம் சாட்டிய மனைவியைக் கண்டு மெதுவே அங்கிருந்து நழுவினார் விஸ்வநாதன்... இனியும் அங்கிருந்தால் திட்டு விழுமே...

வரவேற்பு முடிந்து எல்லோரும் வீட்டிற்குள் நுழைந்ததும் விக்ரம் நேரே தாத்தாவின் முன் வந்து நின்றான்...

"என்ன விக்ரம்...?" இராமநாதன் பேரனிடம் சாதாரணமாகக் கேட்டார்... அடுத்த நொடி அவன் ஆத்திரத்தில் வெடித்தான்...

"உங்க மகனுக்கு எதுக்கு ரெண்டாவது கல்யாணம் பண்ணி வச்சீங்க...? என் அம்மா வாழ்க்கையை நாசமாக்குவதற்காகவா...?"

ஆவேசத்துடன் அவன் பெருங்குரலெடுத்து கத்தியதை கண்டு அனைவரும் அதிர்ந்து போய் நின்று விட்டனர்... இதுவரை விக்ரம் யாரையும் இப்படிப் பிரித்துப் பார்த்ததும் இல்லை, பேசியதும் இல்லை... ரேவதி திகைத்து போய் மகனை பார்த்தார் என்றால், சௌந்தர்யா எரிச்சலுடன் அவனைப் பார்த்தார்...

"விக்ரம்... அப்படி எல்லாம் இல்லைப்பா... உங்கம்மாவுக்கு இங்கே என்ன குறை...? நல்லா தானே இருக்கா..."

"தாத்தா நீங்க பேசுறது உங்களுக்கே அபத்தமா தெரியலை... அதுவும் இறந்து போன பாட்டியை இன்னமும் நேசிக்கிற நீங்க இது போல் பேசுறது உங்களுக்கே சரியா தோணுதா...? சாப்பாடும், போட்டுக்கத் துணிமணியும் கொடுக்கிறது தான் நல்ல வாழ்க்கையா...? இதோ இந்தாள் கூடச் சேர்ந்து ஒரு நாள் சந்தோசமா கோவிலுக்குப் போயிருப்பாங்களா...? இல்லை கல்யாணம், இழவு வீட்டுக்கு தான் போயிருப்பாங்களா...?"

சாட்டையடியாய் வந்து விழுந்த விக்ரமின் வார்த்தையில் தாத்தா தலை குனிந்தார் என்றால், அப்பா விஸ்வநாதனோ மாட்டி கொண்ட தினுசில் திருதிருவென முழித்தார்...

"இப்போ எதுக்கு இதைப் பத்தி பேசுற விக்ரம்...? ரொம்பத் தப்புப்பா... எல்லோரும் டயர்டா இருக்காங்க பார்... தூங்க போகட்டும்... நாளைக்கு விடியற்காலையில் முகூர்த்தம் வேறு..." என்று ரேவதி மகனை கண்டித்தார்...

"பேச வேண்டிய கட்டாயம் நான் பேசுறேன்ம்மா... இப்போ பேசலைன்னா அதுக்கு அப்புறம் என்னால் எப்பவும் பேச முடியாது... எனக்குப் பதில் சொல்லாம யாரும் தூங்க போக முடியாது..." என்று அனைவரையும் பார்த்தபடி அவன் கர்ஜித்தான்... அத்தனை கோபம் அவனுக்கு...

"இப்போ என்ன நடந்து போச்சுன்னு இந்தக் குதி குதிக்கிற...? உன் அம்மா வாழ்க்கை அப்படி என்னப்பா நாசமா போச்சு... அப்படிப் பார்த்தால் உன் அம்மாவால் என் வாழ்க்கை தான் நாசமா போச்சு... கூடப் பிறந்தவளே

எனக்கு எதிரியா வந்ததில் என் வாழ்க்கை தான் கெட்டு போச்சு..." என்று சௌந்தர்யா நீளமாய்ப் புலம்ப...

"பொய் பேசாதீங்க பெரியம்மா..." விக்ரம் கத்தியதில் வீடு அதிர்ந்தது... இவ்வளவு ஏன் சௌந்தர்யா கூடப் பயந்து போய் அவனைப் பார்த்தார்...

"இவ்வளவு நாள் என் அம்மாவை எப்படி நடத்தினீங்களோ எனக்குத் தெரியாது... ஆனால் நாளைக்கு என் அம்மாவுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதையை நீங்க எல்லாரும் கொடுக்கணும்... அதாவது நாளைக்குக் கல்யாணத்தில் இந்தாளுக்குப் பக்கத்தில் மனைவியா அவங்க நிக்கணும்... ஒரு மனைவிக்குக் கிடைக்க வேண்டிய எல்லா மரியாதையும் என் அம்மாவுக்குக் கிடைக்கணும்..."

"இல்லைன்னா..." அப்படியும் அடங்காது சௌந்தர்யா எதிர் கேள்வி கேட்க...

"நான் இந்தக் கல்யாணத்தில் கலந்துக்க மாட்டேன்..." என்று உறுதியாய் கூறியவனைக் கண்டு எல்லோரும் திகைப்புடன் பார்த்தனர்...

"அண்ணா..." வினோத், மதுமதி இருவரும் அவனைக் கண்கள் கலங்க பார்த்தனர்...

தாத்தா பெருத்த அதிர்ச்சி அடைந்தார்... விக்ரம் இல்லையென்றால் இந்தக் குடும்பத்திற்கு என்ன சிறப்பு இருக்கிறது...? சமுதாயத்தில் என்ன மரியாதை இருக்கிறது...? அதற்காகவே அவனைத் தக்க வைத்துக் கொள்ள அவர் விரும்பினார்...

"நீ சொன்னபடி நடக்கும் விக்ரம்... அதுக்காக நீ இப்படி எல்லாம் பேசாதே..." என்று அவர் அவனைக் கண்டிக்கும் குரலில் பேச...

"என் மகள் கல்யாணத்தில் எனக்கு மரியாதை கிடையாது... ஆனால் இவளுக்கு மரியாதை உண்டாமா...? இது என்ன

அநியாயம்...? மதுவை பெத்தவள் நான்... உன் அம்மா இல்லை..." சௌந்தர்யா ஆங்காரம் கொண்டு ஆடினார்...

"ஓ... அப்படியா...? உங்க மகள் கல்யாணத்துக்கு நான் கோடிக்கணக்கில் பணம் செலவழிச்சு இருக்கேன்... அதை நான் ஏன் செய்ய வேண்டும்...? அந்தப் பணத்தை எல்லாம் நீங்க திருப்பிக் கொடுத்துட்டு இப்போ பேசுனதை விட இன்னும் அதிகமாய்ப் பேசுங்க..."

"விக்ரம்..." ரேவதி மற்றும் தாத்தாவின் குரல்கள் கண்டிப்புடன் வந்தது...

"அவங்க இப்படிப் பிரிச்சுப் பேசினால் நானும் இப்படித் தான் பேசுவேன்... எனக்கு நீங்க முக்கியம்... உங்களுக்கு மரியாதை கொடுக்கலைன்னா யாரா இருந்தாலும் நான் இப்படித் தான் எதிர்த்து நிற்பேன்... என்னை அடுத்தவனா பார்க்கிறவங்க மகளுக்கு நான் ஏன்ம்மா செலவு செய்யணும்...?" அவனின் கேள்வியில் இருந்த நியாயத்தில் ரேவதி அமைதியாகி விட்டார்...

"என்னமோ நீ சம்பாதிச்ச சொத்து மாதிரி பேசுற... இது எல்லாம் மாமா சம்பாதிச்சது... அதுக்கு அப்புறம் என் புருசனுக்கு... அதுக்குப் பிறகு தான் உனக்கு... என்ன புரிந்ததா...?"

"ஏன் புரியாம...? நல்லாவே புரிந்தது... ஆனால் உங்க புருசன் வெளியில் வாங்கி வைத்த கடனை எல்லாம் யார் அடைத்தது...? நஷ்டத்தில் நடந்து கொண்டிருந்த கம்பெனியை யார் இந்தளவுக்குக் கொண்டு வந்தது...? இதுக்கு எல்லாம் கிடைக்கும் ஒரே பதில் நான் மட்டுமே... அப்போ இதைப் பத்தி பேச எனக்குத் தான் அதிக உரிமை இருக்கிறது..." திமிராய், தெனாவெட்டாய் பேசிய விக்ரமின் வார்த்தையில் எல்லோரும் அரண்டு போய் விட்டனர்...

"வினோத்... நீ ஒழுங்கா இருந்திருந்தா இந்தப் பேச்சுக்கு எல்லாம் அவசியம் வந்திருக்குமா...? நீ உங்கப்பனை மாதிரி பிறந்து என் உயிரை எடுக்கிற..." என்று சௌந்தர்யா

விக்ரம் மீது காட்ட முடியாத கோபத்தை மகனிடத்தில் காட்டினார்...

"அம்மா... அப்பா மாதிரி நான் ஒண்ணும் இல்லை... அண்ணா பேசுறதில் என்ன தப்பு இருக்கு... இது எல்லாம் அவன் சம்பாதிச்சது... நான் இல்லை... அது போல் அவன் கேட்கிறதும் சரி தானே... சித்திக்கு கொடுக்க வேண்டிய மரியாதையை நீங்க ஏன் கொடுக்க மறுக்கிறீங்க...? நான் எப்போதும் சித்தி பக்கம் தான்..." என்றுரைத்த வினோத் ரேவதி அருகில் வந்து நின்று கொண்டான்...

"நானும் சித்திக்கு தான் சப்போர்ட்..." மதுமதியும் சித்திக்கு பரிந்து பேசியபடி அவரின் மற்றொரு பக்கம் வந்து நின்று கொண்டாள்...

அதைக் கண்டு ரேவதியின் முகத்தில் மகிழ்ச்சி மீண்டது... அவர் அன்பு பாராட்டி வளர்த்த வளர்ப்பு வீண் போகலை... அவர் இருவரையும் பாசத்துடன் அணைத்துக் கொண்டார்...

"விக்ரம், நீ சொன்ன மாதிரி உன் அம்மாவுக்குக் கொடுக்க வேண்டிய மரியாதை நாளை கொடுக்கப்படும்..." என்று பேரனிடம் உறுதியளித்த இராமநாதன் எல்லோரிடமும்,

"எல்லோரும் தூங்க போங்க..." என்று கூறி விட்டு சென்று விட... எல்லோரும் அவரவர் அறைக்குச் சென்றனர்... கையாலாகாதவராய் சௌந்தர்யா கணவனை முறைத்து விட்டு தனது அறைக்குச் சென்றார்... அதில் பயந்து போன விஸ்வநாதன் கோழை போல் விருந்தினர் அறையினுள் புகுந்து கொண்டார்...

"விக்ரம்..." ரேவதி மனம் நெகிழ்ந்து போய் மகனது நெஞ்சில் சாய்ந்து கொண்டார்...

அவரை ஆறுதலாய் அணைத்துக் கொண்ட விக்ரம், "நான் இருக்கும் வரை நீங்க கவலைப்படக் கூடாதும்மா..." அவனது வார்த்தையில் மனம் நெகிழ்ந்து போய் அவர் புன்னகைத்தார்...

படுக்கச் செல்லும் முன் விக்ரம் பவித்ராவிடம், "நீ இன்னைக்கு அம்மா கூடப் படுத்துக்கோ... அவங்க ரொம்ப எமோசனலா இருக்காங்க..."

"நான் அவங்களைப் பார்த்துக்கிறேன்... நீ கவலைப்படாதே விக்ரமா..." ஆறுதல் கூறிய மனைவியவளை பார்த்து புன்னகைத்தவன்,

"இந்த மாற்றத்தை என்னுள் கொண்டு வந்தது நீ தான் பவி... உனக்குத் தான் நான் தேங்க்ஸ் சொல்லணும்..." என்றவனைப் புரிதலுடன் பார்த்தாள் அந்த நல்ல மனைவி...

விக்ரம் மகள், மனைவியுடன் அன்னையின் அறைக்கு வந்தான்... அங்குத் தனிமையில் கண்ணீர் விட்டுக் கொண்டிருந்த அன்னையைக் கண்டதும் அவனது மனம் உருகி விட்டது...

"பேபி... பாட்டியை பார்..." என்று மகளிடம் கூறியபடி அவன் உள்ளே வர... மகனது சத்தத்தில் தனது கண்ணீரை அவசரமாய்த் துடைத்துக் கொண்டு பேத்தியை வரவேற்றார் அவர்...

அப்படியிருந்தும் அவரது முகத்தில் மலர்ச்சியைக் காணாது சின்னவள் அழுகையில் உதட்டை பிதுக்கினாள்... அதைக் கண்டதும் ரேவதி கஷ்டப்பட்டுச் சிரிக்க முயல சின்னவள் அதைக் கண்டு புரியாது விழித்தாள்... அதில் அவருக்கு உண்மையில் சிரிப்பு வந்தது...

"தரு குட்டி காணோம்..." என்று அவர் முகத்தை மூடி கொண்டு சொல்ல... அதில் கை, கால்களை உதைத்துக் கொண்டு குஷியான சின்னவள் உடனே அவரது கைகளை விலக்கி எட்டி பார்த்தாள்...

"தரு குட்டி இந்தா இருக்கிறாள்..." என்று அவரும் சிறு பிள்ளையாய் குதூகலித்துக் குரல் கொடுத்தார்...

அதில் சின்னவளும் கிளுக்கி கொண்டு விடாது சிரித்தாள்... ரேவதி பேத்தியின் சிரிப்பில் மனம் மயங்கியவராய் அவளுடன் மழலையில் பேசி மகிழ்ந்தார்...

பாட்டி, பேத்தி இருவரும் தங்களுக்கான தனி உலகில் சஞ்சரித்தனர்... அதை மகிழ்வுடன் பார்த்திருந்தனர் விக்ரம், பவித்ரா தம்பதியினர்...

மறுநாள் திருமணத்தில் இராமநாதனின் வற்புறுத்தலின் பேரில் ரேவதிக்கு சகல மரியாதை கொடுக்கப்பட்டது... அதை எல்லாம் பார்த்துப் பொறாமையில் வெந்தபடி கோபத்துடன் நின்றிருந்தார் சௌந்தர்யா...

கணவனுடன் இணைந்து தம்பதி சமேதராய் மகளை ஆசிர்வாதம் செய்த போது ரேவதியின் கண்கள் பனித்தது.... அவரது கண்கள் நன்றியுடன் மகனை பார்த்தது... அவனோ திருப்தி புன்னகையுடன் அவரைப் பார்த்தான்...

மறுவீடு முடிந்து மதுமதியை கணவன் வீட்டிற்கு அனுப்பிய பிறகு எல்லோரும் ரிலாக்சாக இருந்த போது விக்ரம் அடுத்த அணுகுண்டை போட்டான்...

"நான் தனிக்குடித்தனம் போகப் போறேன்..." என்று... தாத்தா ஜீரணிக்க முடியாது அவனைப் பார்த்தார்...

"விக்ரம்... என்னப்பா சொல்ற...?"

"ஆமாம் தாத்தா... இதுநாள் வரை இந்த வீட்டில் என் அம்மா வேலைக்காரியா இருந்தது போதும்... இனி எனது வீட்டின் எஜமானியாக அவங்க இருப்பதற்காகத் தான் இந்த முடிவு..." அவனோ தான் எடுத்த முடிவில் உறுதியாய் இருந்தான்...

"அண்ணா... நீங்க இங்கேயே இருங்க... நீங்க, சித்தி இல்லாம நாங்க மட்டும் இங்கே எப்படி...?" வினோத் கவலை குரலில் கேட்டான்...

"அக்கா... நீ சொன்னால் மாமா கேட்பார் தானே... நீ சொல்லுக்கா... நீயும், நானும் ஒண்ணா இருக்கலாம்ன்னு எவ்வளவு சந்தோசமா இந்த வீட்டுக்கு வந்தேன்... இப்போ நீ போனால் நான் எப்படி இங்கே தனியா இருப்பேன்..." பல்லவி சோகமாய் அக்காவின் காதில் முணுமுணுத்தாள்...

"அத்தையை நாம் பார்க்கணும் பல்லவி... இனியாவது அவங்க நிம்மதியா இருக்கணும்..."

இத்தனை களேபரத்திலும் சௌந்தர்யா நிம்மதியாய் சந்தோசமாய் இருந்தார்... 'சனியன் தொலைந்தது' என்று நினைத்தாரோ... விஸ்வநாதனோ யாருக்கு வந்த விருந்தோ என்று செய்தித்தாளில் முகத்தைப் புதைத்தபடி காதை மட்டும் தீட்டி கொண்டு அமர்ந்திருந்தார்...

"அம்மா... என்னுடன் வர சம்மதமா...?" விக்ரம் அன்னையிடம் நேரிடையாகக் கேட்டான்...

இப்படியொரு விடுதலைக்காகத் தானே அவர் இத்தனை நாளாய்க் காத்திருந்தது... உடனே மகிழ்ச்சியாய் சம்மதித்தார்...

"சம்மதம் விக்ரம்... என் மகனுடன் வர எனக்கு முழுச் சம்மதம்..."

இரண்டாவது மனைவியின் இந்த வார்த்தைகளில் விஸ்வநாதன் தன்னையும் அறியாது திகைத்து போனவராய் செய்தித்தாளை கீழே இறக்கி ரேவதியை பார்த்தார்... திருமணமாகி அவரோடு இவர் வாழ்ந்தது ஒரே ஒரு நாள் தான்... அந்த ஒரு நாளும் அவருக்குச் சொர்க்கத்தை, நிம்மதியை காண்பித்தவர் ரேவதி... அதை அவரால் உயிர் இருக்கும் வரை மறக்க முடியாது... இதை எல்லாம் மீறி அவர் ரேவதியிடம் இணக்கம் காட்டாத நிலைக்குக் காரணம் சௌந்தர்யாவின் மிரட்டல் தான்...

"நீங்க அவள் பின்னாடி போனீங்க... நான் விசம் குடிச்சு தற்கொலை பண்ணிக்குவேன்..."

பல கனவுகளுடன் காதலாய் கைப்பிடித்த முதல் மனைவியின் வார்த்தைகளை அவரால் மீற முடியவில்லை... சௌந்தர்யாவின் மிரட்டலில் அவர் கோழையாகி போனார்... இதைத் தனக்குச் சாதகமாகப் பயன்படுத்திக் கொண்ட சௌந்தர்யா நாய்க்கு எலும்பு துண்டு போடுவது போல் அவரது ஆடம்பர செலவுகள்,

சூதாட்ட செலவுகள் என்று அனைத்திற்கும் பணத்தை வாரியிறைத்தார்... அந்தப் பணத்தை வீட்டிற்குச் செலவு செய்ததாகப் பொய் கணக்கு காட்டி தப்பித்துக் கொண்டார்... இது எல்லாம் ரேவதிக்கு தெரிந்த போதும் அமைதியாக இருந்தார்...

இதோ இப்போதும் விஸ்வநாதன் முதல் மனைவிக்குப் பயந்து தனது மனசாட்சியை அடகு வைத்தவராய் மௌனத்தின் பின்னே மறைந்து கொண்டார்...

அன்றிரவு தனது அக்காவை தனிமையில் சந்தித்தார் ரேவதி... அவர் அறையினுள் வருவதை அறிந்தும் எதுவும் பேசாது அமைதியாக இருந்தார் சௌந்தர்யா...

"அக்கா..." ரேவதி அழைத்த போதும் அவர் திரும்பி பார்க்கவில்லை...

"உங்க வாழ்க்கையை உங்க கிட்டேயே கொடுத்துட்டு போறேன்... இனி நீங்க அதைப் பத்தி கவலைப்படாம சந்தோசமா இருங்க..."

தங்கை கூறியது கேட்டு திடுக்கிட்டு போனவராய் சௌந்தர்யா ரேவதியை திரும்பி பார்த்தார்...

"ஒரு பொண்ணா உங்களோட உணர்வுகளை என்னால் புரிஞ்சிக்க முடியுதுக்கா... அன்னைக்கு நீங்க வேறுவழி இல்லாமல் தான் மாமாவுக்கு இரண்டாம் கல்யாணம் பண்ணி வைக்கச் சம்மதிச்சீங்கன்னு எனக்குத் தெரியும்... அதுவும் வேறு பெண் வந்தால் உங்களுக்கான முக்கியத்துவம் குறைஞ்சிரும்ன்னு அப்பா, அம்மா மனசை கரைச்சி என்னைப் பேசி முடிச்சீங்க..."

அந்த நாள் நினைவில் சௌந்தர்யாவிற்குத் துக்கம் தொண்டையை அடைத்தது... எவ்வளவு துயரமான நாட்கள் அவை...

"நான் மாமா கூட வாழ்ந்தது ஒரு நாள் வாழ்க்கை தான்..."

அதைத் தங்கை கூறிய போது அவர் உள்ளுக்குள் துடிதுடித்துப் போனார்... ஏனெனில் தங்கையுடன் கணவனை முதலிரவு அறைக்கு அனுப்பி வைத்து விட்டு அவர் அழுதது அவருக்கு மட்டும் தான் தெரியும்... எந்தப் பெண்ணுக்கும் அத்தகைய கொடுமை வர கூடாது... தகப்பனை எதிர்த்து பேசாத கணவனைக் கண்டு அப்படியொரு கோபம் வந்தது அவருக்கு... அப்போது மட்டுமல்ல, இப்போதும் அதே கோபம் உள்ளது...

"அதற்கு மேல் நான் அவரோடு வாழ ஆசைப்படவில்லை... ஏனெனில் அந்த ஒரு நாளை கடப்பதற்குள் நான் மனசுக்குள் முழுவதுமாய்ச் செத்து போய் விட்டேன்... நல்லவேளை அந்த ஒரு நாள் வாழ்க்கையில் விக்ரம் என்னுள் உதித்தான்..." என்ற தங்கையைத் திகைப்புடன் பார்த்தார் சௌந்தர்யா...

"ஆமாம்க்கா... மாமாவை உங்களோட கணவரா தான் நான் பார்க்கிறேன்... இப்போ வரை அப்படியே... அதனால் தான் என்னால் எதையும் எளிதாகக் கடக்க முடிந்தது... நீங்க என்னை அதிகாரம் பண்ணும் போது கூட உங்களோட மனசு நோக கூடாதே என்பதற்காகத் தான் நான் அமைதியா போயிருவேன்... இதோ இப்போ உங்களோட வீடு, உங்க கணவர் எல்லாத்தையும் எந்த மாற்றமும் இல்லாமல் அப்படியே கொடுத்துட்டுப் போகிறேன்... இனியும் என்னை விரோதியை போல் பார்க்காதீங்கக்கா... நான் எப்போதும் உங்க அன்பு தங்கை தான்... நீங்க என்னோட பாசமிகு அக்கா தான்... இந்த உறவு எந்தக் காரணத்துக்காகவும் மாறாது... அது போல் விக்ரமையும் விரோதியா பார்க்காதீங்க... அவன் உங்களுக்கும் மகன் தான்..."

"நீங்க என்னை மன்னிப்பதாக இருந்தால் நம் மகனது வீடு பால் காய்ச்சிக்குக் கட்டாயம் வரணும்..." என்று கூறிய தங்கையை அணைத்துக் கொண்டு அழுதார் சௌந்தர்யா...

தான் ஒன்றுக்கும் பிரயோஜனம் இல்லாதவள் ஆகிவிடுவோமோ என்று தானே சௌந்தர்யா பயத்தில்

இத்தனை நாளாய் தங்கை மீது வெறுப்பைக் கக்கியது... அந்தக் கசடு கூடத் தங்கையின் தியாகத்தின் முன் காணாமல் போயிற்று...

"ரதிம்மா... என்னை மன்னிச்சிரும்மா..." என்று அவர் அழுதார்...

"உங்க பயம் நியாயமானது தான்... உங்க இடத்தில் நான் இருந்து இருந்தால் நானும் இப்படித் தான் நடந்து இருப்பேன்..." என்ற தங்கையை வாஞ்சையுடன் பார்த்த சௌந்தர்யா,

"உனக்குன்னு தனிப்பட்ட ஆசைகள் எதுவும் கிடையாதா ரதி..."

"இருந்தது... அது எல்லாம் ஒரு காலத்தில்... இப்போ அப்படி எதுவும் இல்லைக்கா... இப்போ என்னுடைய சந்தோசம், உலகம் எல்லாம் என் பேத்தி தரு குட்டி மட்டுமே..." என்றவரது பேச்சில் மனைவி என்கிற ஸ்தானத்தைக் கடந்து பாட்டி என்கிற முதிர்ச்சியே பெரிதாக இருந்தது... அந்தளவிற்கு அவரது மனம் பக்குவம் அடைந்து இருந்தது...

"என்னை மன்னிச்சிரு ரதி..."

"இதில் உங்க தப்பு எதுவும் இல்லைக்கா... எல்லாம் விதி... வேறு என்ன சொல்ல... சரி நான் உங்களை மன்னிக்கணும்ன்னா நீங்க பால் காய்ச்சி விழாவில் கலந்துக்கணும்..."

"என் மகன் வீட்டு பால் காய்ச்சி விழா நான் இல்லாமலா..." என்று சௌந்தர்யா புன்னகையுடன் கூற... அதைக் கண்டு ரேவதியின் மனம் நிம்மதியுற்றது...

அன்னை சம்மதம் தெரிவித்த பின்னர் விக்ரம் சிறிதும் தாமதிக்கவில்லை... உடனே செயலில் இறங்கி விட்டான்... இரு நாட்களில் புது வீடு பால் காய்ச்சி தனது வாழ்வில் வந்த முக்கியமான மூன்று பெண்கள் அன்னை, மனைவி, மகளுடன் அந்த வீட்டிற்குக் குடி புகுந்தான்...

புது மனை புகுவிழாவிற்கு வருகை தந்த சௌந்தர்யாவை ஆச்சிரியமாய்ப் பார்த்தான் விக்ரம்...

"என்னடா அப்படிப் பார்க்கிற...? நான் இல்லாம நீ பால் காய்ச்சிருவியா என்ன...?" சண்டை போடுவது போல் அவர் கேட்ட போதும் அந்த வார்த்தைகள் பின்னால் அவரது பாசமே வெளிப்பட்டது...

கிளம்பும் போது விக்ரமிடம் வந்த சௌந்தர்யா, "இந்தப் பெரியம்மாவை மன்னிச்சிரு விக்கி..." என்க... அவனோ கைகளைக் கட்டி கொண்டு அமைதியாக இருந்தான்... என்ன இருந்தாலும் அவர் தனது அன்னையை நடத்திய விதம் அவனுக்குச் சுத்தமாய்ப் பிடிக்கவில்லை...

"எனக்கு உங்கம்மா மேலோ இல்லை உன் மேலோ கோபம் இருந்தது கிடையாது... உங்கப்பா மேல் தான் அவ்வளவு கோபம் இருக்கிறது... உன்னை மாதிரி அன்று அவர் ஏன் மாமாவை எதிர்த்து பேசலைன்னு எனக்குக் கோபம்... என் வாழ்க்கை பறி போயிருமோன்னு பயந்து போய் ரதியை அடக்கி எனக்குக் கீழே வச்சிக்கிட்டேன்... அவள் நல்லவள்... அதனால் அடங்கிப் போனாள்... இதே இது வேறு ஒருத்தியா இருந்திருந்தால்...? என் நிலைமை...?" இதைச் சொல்லும் போதே அவரது கண்களில் கண்ணீர் வழிந்தது...

"பெரியம்மா..."

அவரது கண்ணீரை கண்ட பின்னும் அவனால் அமைதியாக வேடிக்கை பார்த்துக் கொண்டு இருக்க முடியவில்லை... அவரது கண்ணீரை துடைத்து விட்டு ஆறுதலாக அணைத்துக் கொண்டான்... என்ன இருந்தாலும் அவரும் அவனுக்கு இன்னொரு அன்னை தானே... அதில் அவர் உடைந்து போய் அழுதார்...

"என்னை மன்னிச்சிரு விக்கி..."

"நமக்குள் மன்னிப்புக்கு அவசியமே இல்லை பெரியம்மா..." என்று அவன் சமாதானம் செய்ததும் அவர் நிம்மதி அடைந்தார்...

விஸ்வநாதன் ரேவதியிடம் தனியே பேச சந்தர்ப்பம் எதிர்பார்த்துக் காத்திருந்தார்... பேத்தியின் உடையை மாற்ற தனியே வந்த ரேவதி பின்னேயே விஸ்வநாதன் வந்தார்... ரேவதியோ கணவரை சிறிதும் கண்டு கொள்ளாது பேத்தியிடம் பேசியபடி அவளுக்கு உடை மாற்றிக் கொண்டிருந்தார்...

"ரதி..." விஸ்வநாதன் அவரை அழைத்த போது பேத்திக்கு உடை மாற்றிக் கொண்டிருந்த அவரது கைகளின் இயக்கம் ஒரு நொடி நின்று பின் மறுபடியும் தனது வேலையைச் செவ்வனே செய்தது...

"என் கிட்ட பேச மாட்டியா...?"

"நமக்குள் பேச ஒன்றும் இல்லை..." நறுக்கென்று பதில் வந்தது அவரிடம் இருந்து...

"நான் உன் கணவன்..."

"நீங்க என் அக்காவோட கணவன்... அந்த உறவு முறையில் தாராளமா என் கிட்ட பேசலாம்..." 'மத்தபடி உனக்கும் எனக்கும் எந்த உறவும் இல்லை...' என்பதை நாசுக்காக உணர்த்தி விட்டார் ரேவதி... அதில் பேயறைந்தார் போலானார் விஸ்வநாதன்...

பேத்தியை தூக்கி கொண்டு ரேவதி வெளியில் சென்று விட வேறுவழியின்றி விஸ்வநாதனும் அறையை விட்டு வெளியில் வந்தார்...

அதன் பின் அவர் கிளம்பும் வரை அம்மா, மகன் இருவரும் அவரிடம் முகம் கொடுத்து பேசவில்லை... சௌந்தர்யாவை மன்னித்த இருவரால் அவரை மன்னிக்க முடியவில்லை... சில காயங்கள் உயிருள்ள வரை ஆறாது...

எல்லோரும் கிளம்பி சென்றதும் பவித்ரா நன்கு விஸ்தாரமாய்ப் பெரிதாய் இருந்த வீட்டை சுத்தி பார்த்தவள் பின் கணவனை மெச்சி கொண்டாள்...

"வீடு ரொம்பப் பெரிசா இருக்கு விக்ரமா..."

"உனக்குப் பிடிச்சியிருக்கா...?"

"ம்... ரொம்ப... ரொம்ப..."

"என்னை விடவா...?" என்று விழிகளில் விசமம் தெறிக்கப் பார்த்த கணவனின் பார்வையில் நாணம் கொண்டவளாய்,

"உன்னை இதை விட அதிகம் பிடிக்கும் விக்ரமா..." என்று அவனது கழுத்தில் தனது கரங்களை மாலையாகக் கோர்த்தபடி அவள் கூற...

"அது தான் அம்மணியோட செயலில் தெரியுதே..." என்றவன் மனைவியின் செயலில் கிறங்கி போய் நின்றான்...

"ஆனா ஒரு சந்தேகம் விக்ரமா...?"

"சந்தேகமா... இன்னும் நான் உன்னை ஒண்ணுமே பண்ணலையேடி... அதுக்குள்ள என்ன சந்தேகம் உனக்கு...?"

"இது வேறு விக்ரமா...?" என்று சிணுங்கியவள்,

அன்று மகளிடம் பெரிய வீடு என்று சொன்னானே அதை ஞாபகப்படுத்தியவள், "அன்னைக்குப் பாப்பா கிட்ட சொன்னது இதைத் தானா...?"

"ஆமாம் பவி... அதுக்கு முன்னாடியே வீட்டு வேலையை ஆரம்பிச்சிட்டேன்... என்னைக்குப் பெரியம்மா பேபியை அப்படிச் சொன்னாங்களோ அப்பவே தனியா போகணும்ன்னு முடிவு பண்ணிட்டேன்... முதலில் அம்மாவுக்காகத் தனிக்குடித்தனம் போகணும்ன்னு நினைச்சேன்... அப்புறம் பேபிக்காகத் தனியா வந்தே ஆகணும்ன்னு முடிவு பண்ணினேன்..."

"விக்ரமா... நீ எல்லாத்திலேயும் தனித் தான்டா... ஒவ்வொரு செயலிலும் அப்படியே மனசை அள்ளுறடா..." என்று நெகிழ்ந்து கூறியபடி அவள் அவனது முகத்தை அருகில் இழுத்து பரிசுகளை வாரியிறைத்தாள்... அதில் அவனும்

கிறங்கி போய் மனைவிக்கு இசைந்து கொடுத்தபடி நின்றிருந்தான்...

"ஆமாம்... இவ்வளவு பெரிய வீட்டில் எனக்கான இடம் எங்கே...?" என்று கேட்டவளை பார்த்து யோசித்தவனாய்,

"என் அலமாரியில் ஒரு மூலையில்..." என்று சிரியாமல் சொன்னவனை அவள் அடி மொத்த நினைத்து கையை ஓங்கிய போது அதை வளைத்து பிடித்து அவளைப் பின்புறமாய் அணைத்தவன் அவளது காதருகில் குனிந்து,

"என் இதயம் முழுவதும் உனக்காகத் தானடி பெண்ணே... அதிலிருக்கும் இடம் முழுவதும் உனக்கு மட்டுமே..." என்று காதலோடு சொன்னவனை ஏறிட்டு பார்த்தவள்,

"உண்மையாவா விக்ரமா...?" என்றவளின் விழிகளுக்குள் உற்று நோக்கியவன்,

"உன் விசயத்தில் நான் பொய் சொல்ல மாட்டேன் பவி..." என்றவனைப் புரிதலுடன் அணைத்து கொண்டாள் அந்தக் காதல் மனைவி... கணவன் இந்தளவிற்கு மாறியதே அதிசயம் அல்லவா...

******************

நாட்கள் இனிமையாகக் கடந்து சென்றது... அன்று பவதாரிணிக்கு காய்ச்சல் என்பதால் பவித்ரா அலுவலகம் செல்லவில்லை... மகள் கூடவே இருந்தவள் இப்போது தான் சின்னவளுக்கு மருந்து கொடுத்து மாமியாரிடம் விட்டு விட்டு வந்தாள்... சும்மாயிருக்காது கொண்டு வந்த உடமைகளை அடுக்கி வைப்போம் என்று எண்ணி எல்லாவற்றையும் எடுத்து வைக்கத் துவங்கினாள்...

முதலில் அவளுடைய பொருட்கள் மற்றும் மகளின் பொருட்களை அலமாரியில் எடுத்து வைத்தவள் அடுத்து கணவனது உடமைகளை எடுத்து அடுக்கி வைக்கத் துவங்கினாள்... அப்போது அதில் இருந்து கீழே விழுந்த ஒரு கோப்பில் இருந்து சிதறிய காகிதங்களை மீண்டும் உள்ளே எடுத்து வைக்கப் போனவள் கண்ணில் அதில் எழுதி

இருந்த விசயம் தென்பட்டது... மறுநொடி அவளது விழிகள் வியப்பில் விரிந்தது...

கணவனிடத்தில் எந்தக் காதலை இத்தனை நாளாய் தேடினாளோ அது அவள் கண்முன் காகித சாட்சியாய் மௌனமாய்...!!!

மொழி பேசும்...!!!

## விழி : 20

பவித்ரா அந்தக் காகிதத்தைத் தனியே எடுத்துக் கொண்டு தனது பொருட்களில் இருந்த அந்தக் குறிப்பிட்ட கோப்பை கையில் எடுத்தவள் அவசரமாய் அதைப் புரட்டி பார்த்தாள்... இரண்டிலும் இருந்த தேதியை ஒப்பிட்டு பார்த்தவள் அப்படியே தொய்ந்து போய்த் தரையில் அமர்ந்தாள்... கண்கள் இரண்டிலும் அருவியாய் கண்ணீர் பெருகி வழிய நெஞ்சோடு அந்தக் காகிதத்தை அணைத்து கொண்டவள் உதடுகள் 'விக்ரமா' என்று கணவனது பெயரை விடாது உச்சரித்தது...

விக்ரம் மாதிரியான ஒருவன் இத்தகைய முடிவிற்கு வர வேண்டும் என்றால் அவன் எத்தனை பரந்த மனம் உடையவனாக இருக்க வேண்டும்... இத்தகைய நல்லவனை வெறுத்து ஒதுக்கி தனக்குத் தானே திருமண வாழ்விற்கு இறுதி அத்தியாயம் எழுதி கொண்டு அவனைப் பிரிந்து சென்ற தனது மடமையை எண்ணி இப்போது அவள் குற்றவுணர்வில் தவித்தாள்...

'விக்ரமா... நீ நல்லவன் தான்டா... ரொம்ப ரொம்ப நல்லவன்... நான் தான் அவசரப்பட்டு ஏதேதோ நினைத்துக் கொண்டு உன்னைப் பிரிந்து சென்று விட்டேன்... என்னை மன்னித்து விடு...' என்று மானசீகமாகக் கணவனிடம் மன்னிப்பு கேட்டாள் அவள்...

பின்னே எந்தவொரு ஆணும் செய்யத் துணியாத ஒரு காரியத்தை அவளது கணவன் அவளுக்காக அசால்ட்டாகச் செய்திருப்பதை எண்ணி எண்ணி அவள் உவகை அடைந்தாள்... 'இவன் என்னவன்' என்கிற பெருமை அவளது மனதில் நிறைந்திருந்தது... அந்தக் கணம் அவனைப் பார்க்க வேண்டும் போல் தோன்ற உடனே அவனுக்கு அழைத்தாள்... மறுபக்கம் அவன் எடுத்ததும்,

"விக்ரமா... நீ உடனே வீட்டுக்கு வா..." என்று அழுகையுடன் ஒலித்தது அவளது குரல்...

"பேபிக்கு காய்ச்சல் அதிகமா இருக்கா பவி...?" அவளது அழுகை குரலில் அவனுள் பதற்றம் வந்து தொற்றிக் கொண்டது...

"இல்லை... எனக்குத் தான்..."

"உனக்கு என்ன...?" அவனது பதற்றம் இன்னமும் அதிகரித்தது... மகளுக்காவது அவள் இருக்கிறாள்... அவளுக்கு அவன் தானே இருக்கிறான்... அதனால் விளைந்த பதற்றம் இது...

"முதலில் நீ கிளம்பி வா விக்ரமா..."

ஏக்கமும் தவிப்புமாய் ஒலித்த மனைவியின் குரலில் அதற்கு மேல் அவனால் அலுவலகத்தில் இருக்க முடியவில்லை... பவித்ரா எப்போதும் இது போல் எல்லாம் அழைப்பவள் அல்லவே... அவளைப் பற்றி நன்கு அறிந்தவனாய் அவன் காரை வேகமாய் விரட்டினான்...

வீட்டிற்கு வந்தவன் அங்கு வரவேற்பறையில் அமர்ந்திருந்த அன்னையையும், மகளையும் கண்டதும் தேங்கி நின்றான்...

"பேபிக்கு இப்போ எப்படி இருக்கு...?" தந்தையாய் அக்கறை கொண்டவனாய் கேட்டபடி மகளை நோக்கி சென்றான்...

"மருந்து கொடுத்திருக்கு விக்ரம்... காய்ச்சல் குறைந்து இப்போது தான் கண் அசந்தாள்... உன் சத்தம் கேட்டால் எழுந்து விடப் போகிறாள்..." மெல்லிய குரலில் அன்னை கூறியதும் வாயில் விரல் வைத்து அமைதி காத்தான் அந்தத் தகப்பன்...

"நீ இந்த நேரத்தில் வீட்டுக்கு எதுக்கு வந்திருக்க...?"

"அது வந்தும்மா..." 'மனைவி அழைத்தாள் அதான் வந்தேன்' என்று கூற இயலாது தர்மசங்கடத்துடன் அவன் நின்றிருந்தான்...

"ஃபைல் எதுவும் மறந்து வச்சிட்டு போயிட்டியா...?"

"ஆமாம்மா..." என்றுரைத்தவன் தனது அறைக்குச் செல்ல முயல...

"அப்படியே இருந்து மதியம் சாப்பிட்டு விட்டு போ விக்ரம்... மதிய சாப்பாட்டுக்கு இன்னும் கொஞ்ச நேரம் தான் இருக்கு..."

"சரிம்மா..." என்று சமத்தாய் கூறியபடி மாடிப்படியில் கால் வைத்த விக்ரமின் மனதினுள் பவித்ராவின் அழுகை குரல் பலவாறு குடைந்தது...

அறை கதவை திறந்து கொண்டு அவன் உள்ளே சென்ற போது பவித்ரா கட்டிலில் முழங்காலில் முகம் புதைத்து அமர்ந்திருந்தாள்... இவனைக் கண்டதும் நிமிர்ந்து பார்த்தவளின் விழிகளில் கண்ணீர் வழிந்தோடியது... அதைக் கண்டு அவனது பதற்றம் இன்னமும் அதிகரித்தது...

"ஹேய் பவி..." இரண்டே எட்டில் கட்டிலை அடைந்தவன் அவள் அருகில் அமர்ந்து அவளது விழிகளைத் துடைத்தான்...

"விக்ரமா..."

"உன் விக்ரமா தான்... என்னன்னு சொல்லுடி...? நீ அழுறதை பார்த்தா எனக்குப் பயமாயிருக்கு..." அவளது முகத்தைக் கைகளில் ஏந்தியபடி கூறியவன் அவளது விழிகள் பேசிய காதல் மொழியில் வார்த்தைகளற்று அப்படியே உறைந்தான்...

இத்தனை நாட்களில் அவளது விழிகளில் திமிர், அகம்பாவம், கோபம், தவிப்பு இப்படிப் பல உணர்வுகளை அவன் கண்டு இருக்கிறான்... ஆனால் பார்வையால் இப்படி அவனை வசியம் செய்து அவனது உயிரை உருக்கும் விழி வீச்சை இதுவரை அவளது விழிகளில் அவன் கண்டதில்லை... இதுவரை காதல் மொழி பேசாத அவளது விழி மொழிந்த காதலில் மனம் நெகிழ்ந்தவனாய்,

"பவி..." மேலே பேச முடியாது உணர்ச்சிவசப்பட்டவனாய் அவன் அவளைப் பார்த்திருக்க...

அடுத்த நொடி தாமதியாது அவனை அணைத்து அவனது முகம் முழுவதும் இதழொற்றிய பவித்ரா இறுதியில் அவனது இதழில் வந்து இளைப்பாறினாள்... அன்று ஒரு நாள் அவன் அவளை முத்தமிட்ட போது அவனது கைகளில் நெகிழ்ந்த பவித்ரா, அதன் பின் மருத்துவமனையில் அவனை முத்தமிட்ட பவித்ரா, அந்த இரு பவித்ராவின் முழு அர்ப்பணிப்பை இன்று அவன் உணர்ந்தான்...

இதுநாள் வரை அவன் எதிர்பார்த்த காதல் மனைவியாய் இப்போது மாறியிருந்த பவித்ராவின் செயலில் முழு மனதுடன் தன்னை ஒப்பு கொடுத்தவனாய் அவன் அமர்ந்திருந்தான்... வெகுநேரம் கழித்து விலகியவள்,

"மாமா..." என்ற விளிப்போடு அவனது நெஞ்சில் அடைக்கலம் புகுந்தாள்... அவளது நெகிழ்வு, அவளது மாமா என்றழைப்பு எல்லாம் அவனை மேலும் மனம் நெகிழ செய்தது...

"இன்னைக்குப் பவிக்கு என்னாச்சு...? ரொம்பப் புதுசா தெரிகிறாளே..."

"இல்லையே... அதே உன் வொய்ப் பவி தான்..." என்றவளை கண்டு அவன் தனது உதட்டை பிதுக்கி காட்டி,

"என்னோட வொய்ப் பவி இப்படி எல்லாம் கடிச்சு வைக்க மாட்டாளே..." என்று கேலியாய் குறும்பு பேச...

"ம்... ம்... மாமா..." என்று சிணுங்கியவளை அள்ளி அணைத்து மேலே முன்னேற சொல்லி அவனது இளமை உணர்வுகள் துடித்த போதும் என்ன காரணம் என்று அறியாது அப்படி நடந்து கொள்ள விருப்பம் இல்லாதவனாய் அவளை அணைத்து கொண்டவன்,

"என்ன விசயம் பவி...?" என்று கேட்க...

அவள் அருகிலிருந்த அந்தக் காகிதத்தை அவன் முன் நீட்டினாள்... அதை வாங்கிப் பார்த்தவன் முகம் மாறியது,

"இது அப்போ இருந்த சூழ்நிலையில் எடுத்த முடிவு... இப்போ இதுக்கான அவசியம் இல்லை பவி..."

"அப்பவே இத்தனை அன்பை வச்சிக்கிட்டு ஏன்டா என்னை விட்டு விலகி போன...?"

"அப்போ எனக்கு அது அன்பா, காதலான்னு எல்லாம் தெரியாது... ஆனால் உன்னோட ரிப்போர்ட்டை பார்த்த மறுநாளே இதுக்கான வேலையில் இறங்கிட்டேன்..." என்றவனை நெகிழ்ச்சியுடன் பார்த்தாள் பவித்ரா...

அவர்களுக்குத் திருமணமாகி ஒரு மாதத்தில் அவள் குழந்தை உண்டாகவில்லை என்று சௌந்தர்யா ஆர்ப்பாட்டம் பண்ணிய அன்றே அவள் மருத்துவமனையில் தன்னைப் பரிசோதனை செய்து கொண்டாள்... அவளுக்குமே விருப்பம் இல்லாது தன்னைத் தொடும் கணவனது தொடுகையில் இருந்து தப்பிக்க வேண்டும்... அதற்கு அவளுக்கு ஒரு வாரிசு வேண்டும்... அப்படி அவள் குழந்தை உண்டானால் கணவன் அவளைத் தொடாது இருப்பதாய் சொல்லி இருக்கிறான் அல்லவா... அதனால் தான் அவள் பரிசோதனைக்குச் சென்றது...

அந்தோ பரிதாபம்... அவளால் ஒரு குழந்தைக்குத் தாயாக முடியாது என்று பரிசோதனை முடிவு வந்த போது அவள் மனம் உடைந்து போனாள்... அதுவும் அவளது குடும்ப மருத்துவரே இவ்வாறு கூறிய போது அவள் மிகவும் வருத்தமுற்றாள்... ஆனாலும் மனம் தளராது மருத்துவ ரீதியாய் இதற்கு வேறு எதுவும் சிகிச்சை இருக்கிறதா என்று அவரிடம் கேட்ட போது அவர் விசாரித்துச் சொல்கிறேன் என்று கூறினார்... அது போல் மேலை நாடுகளில் விசாரித்து அவளைப் போன்று அரிதான பெண்களுக்கு அளித்த சிகிச்சையின் விவரத்தை திரட்டி அதன் படி அவளுக்குச் சிகிச்சை அளித்தார்...

ஒவ்வொரு மாதமும் ஏமாற்றம் ஏற்படும் போது அவளுக்கு அத்தனை வேதனையாக இருக்கும்... அதை விட ஒவ்வொரு இரவும் கணவன் அவளை நாடும் போது மிகவும் கொடுமையாக இருக்கும்... அவள் சந்தோசமாக இருக்கும்

நாட்கள் அந்த மூன்று நாட்கள் மட்டுமே... அன்று மட்டும் தானே கணவன் அருகில் வர மாட்டான்... அந்தளவிற்குத் தாம்பத்திய வாழ்க்கை அவளுக்குக் கசக்க ஆரம்பித்தது...

அதனால் கணவனை விட்டு நிரந்தரமாய்ப் பிரிய முடிவு செய்தாள்... அவன் தன்னை வெறுத்து ஒதுக்க வேண்டும் என்று நினைத்து தான் அவள் அந்தக் காரியத்தைச் செய்ய நினைத்தது... வாழ்க்கையில் மட்டும் இல்லாது தொழில் ரீதியாகவும் கணவனை வெற்றிக் கொள்ள அவள் நினைத்தாள்... அதனால் தான் அவனைக் கடத்தி சென்று அவனது தொழில் ஒப்பந்தத்தை அவள் கைப்பற்றினாள்... அதன் விளைவு அவள் எதிர்பார்த்த மாதிரி அமைந்தது...

அவள் எதிர்பார்க்காத ஒன்று அவனது இரண்டாவது திருமணம்... அதை விட அவன் அதற்குச் சம்மதித்ததை அவளால் தாங்க முடியாது போனது எல்லாமே அதிசயமான ஒன்று... அதன் பின்னரே அதற்கான காரணங்கள் அவளுக்கு முழுமையாகத் தெரிய ஆரம்பித்தது...

ஆனால் அவளைப் போன்று விக்ரம் யோசிக்கவில்லையே... அவளுக்குக் குறை இருப்பது தெரிந்து மறுநாளே அவன் குழந்தையைத் தத்து எடுப்பதற்கான ஆயத்தங்களில் இறங்கி விட்டதை இதோ இப்போது மௌன சாட்சியாய் அந்தக் காகிதம் உணர்த்திக் கொண்டிருந்தது... அவனது விண்ணப்பத்தைப் பரிசீலனை செய்து குழந்தையைத் தத்துக் கொடுக்கச் சம்மதம் என்று அரசாங்கத்தில் இருந்து வந்த கடிதம் தான் இது...

"அன்னைக்கு நீ ரிப்போர்ட்டை டேபிள் மேல் போட்டு வச்சிருந்த... என்ன அதுன்னு ஆர்வத்தில் எடுத்துப் பார்த்தேன்... அப்போது தான் இந்த விசயம் எனக்குத் தெரிய வந்தது... இந்த ஒரு காரணத்துக்காக உன்னை விலக்கி வச்சிட்டு இன்னொரு கல்யாணம் பண்ணிக்கணும்ன்னு நான் நினைச்சது இல்லை... ஏன்னா அப்போது தான் நான் அம்மாவோட கஷ்டத்தைக் கொஞ்சம் புரிஞ்சிக்கிட்ட நேரம்... அப்படிப்பட்ட நான் அதே மாதிரியான

ஒரு கஷ்டத்தை உனக்குக் கொடுக்க நினைப்பேனா பவி..." என்றவனை ஆச்சிரியமாய்ப் பார்த்தாள் அவள்...

"இந்தக் கல்யாணம் விருப்பம் இல்லாம நடந்த கல்யாணமா இருந்தாலும் இந்தக் கல்யாணத்துக்குரிய மரியாதையை நான் கொடுத்தேன்... உன்னைத் தவிர வேறு எந்தப் பெண்ணுக்கும் என் வாழ்வில் இடமில்லை என்பதில் உறுதியாய் இருந்தேன்... அதனால் தான் ஒரு குழந்தையைத் தத்து எடுக்கலாம்ன்னு முடிவுக்கு வந்தேன்..."

"மாமா..." என்று தாங்க முடியாது அவனை அணைத்துக் கொண்டு அழுதாள் அவள்...

"நீ சரியா தான் இருந்திருக்க விக்ரமா... நான் தான் ரொம்ப யோசித்துத் தேவையில்லாமல் குழம்பி உன்னையும் படுத்தி எடுத்துட்டேன்... உன்னை ரொம்ப அவமானப்படுத்தி விட்டேன்..." என்று அன்று அவனைக் கடத்தியதை கூறி அவள் அழ...

அது ஆண்மகனான அவனுக்கு மிகுந்த அவமானத்தைக் கொடுத்தது தான்... இல்லை என்று கூறிவிட முடியாது... அதனால் தான் அவன் அவளை வீட்டை விட்டுப் போகச் சொன்ன அன்று அன்னை வந்து அவனிடம் பேசிய போது அவன் வேதனையும் அடைந்தான்... கோபமும் கொண்டான்... தன்னைப் புரிந்து கொள்ளாமல் பிரிந்து சென்றவளை எண்ணி... ஆனால் இப்போது பெண்ணவளின் மனத்துயர் முன் அவனின் அவமானம் ஒன்றும் இல்லாததாய் போய் விட்டது...

"இல்லை பவி... இதற்கு எல்லாம் மூலக்காரணம் என்னுடைய காட்டுமிராண்டித்தனமான செயல் தான்... நான் உன்னைப் புரிந்து கொண்டு நெருங்கி இருந்தால் இந்தப் பிரச்சினையே வந்திருக்காது... நான் செய்ததும் தவறு தான்... அதை விடக் குழந்தை உண்டாகி இருந்த உன்னைப் பார்த்து மலடின்னு சொல்லி வீட்டை விட்டுப் போகச் சொல்லியது அதை விட மிகப் பெரிய தவறு... என்னை மன்னித்து விடு பவி... எல்லாத் தவறுகளின்

ஆரம்பமும் நான் தான்..." என்று உண்மையில் அவன் அவளிடம் மன்னிப்பு கேட்டான்...

"நீ என்ன சொன்னாலும் ஆண் பிள்ளையான உன்னைக் கடத்தியது என் தவறு தான்... நீ தான் என்னை மன்னிக்கணும்..." என்று அவளும் மன்னிப்பு கேட்டாள்...

"தவறுக்குத் தவறு சரியாகப் போய் விட்டது பவி..." என்று அவன் ஆறுதல் கூறி தேற்ற...

"ம்... ம்..." என்று ஏற்றுக் கொண்டவள்,

"வீட்டை விட்டு போகும் போது குழந்தை உண்டாகி இருப்பது எனக்குத் தெரியாது விக்ரமா... அதனால் தான் எங்க பேமிலி டாக்டர் தாத்தா கிட்ட இவ்வளவு சிகிச்சை செய்தும் பலனில்லை... எனக்குக் குழந்தை பிறக்க வாய்ப்பில்லைன்னு சொல்லிட்டாங்க... அதை உண்மைன்னு நம்பி தாத்தா உனக்கும், பல்லவிக்கும் கல்யாண ஏற்பாடு பண்ணினார்... அதுக்கு நீ சம்மதிச்சதா அவர் சொன்னப்போ அப்படியே செத்துப் போயிரலாம் போலிருந்தது விக்ரமா..." என்றவளை அவன் இறுக அணைத்துக் கொண்டான் ஆறுதல் கூறும் பொருட்டு...

"உன் கிட்ட வாழ்க்கை பிச்சை கேட்டு வர கூடாது, அப்புறம் உன்னோட கல்யாணத்தைப் பார்க்கும் சக்தி எனக்கு இல்லை... இந்த இரண்டு காரணத்துக்காகவும் தான் நான் வீட்டை விட்டு போனேன்... அங்கே காமாட்சி அம்மா வீட்டுக்கு போன பிறகு தான் அவங்க தான் என்னுடைய செயல்பாடுகளை வச்சு நான் குழந்தை உண்டாகி இருப்பதைச் சொன்னாங்க... அப்போ இன்னமும் வைராக்கியம் பிறந்தது... யாரோட தயவும் இல்லாம நானும், குழந்தையும் வாழ்ந்து காட்டணும், சாதிச்சு காட்டணுன்னு..."

"நிச்சயம் நீ சாதிச்சிருப்ப..." என்று அவளது விழிகள் மீது முத்தமிட்டவனைக் கண்டு மலர்ந்து சிரித்தவள்,

"உன்னோட மாற்றம் இன்னமும் என்னால் நம்ப முடியலை விக்ரமா..."

"உனக்கு ஒண்ணு தெரியுமா... இங்கே வந்ததுக்கு அப்புறம் தான் இந்தத் திருமண ஏற்பாடு விசயமே எனக்குத் தெரியும்... முடியாதுன்னு மறுத்த என்னிடம் 'உனக்குச் சொத்துக்கள் கிடையாது'ன்னு தாத்தா மிரட்டினார்... அதுக்கு நான் பயப்படாம எதிர்த்து நின்றேன்... அப்போது தான் அந்த விசயமே எனக்கு உறைத்தது... அது என்னன்னா... நம்ம கல்யாணம் பேசிய போதும் இதே வார்த்தைகள் சொல்லி தான் அவர் என்னை அடக்கினார்... அப்போ பயந்து போய்ச் சரின்னு சம்மதிச்சேன்... அப்படித் தான் நினைச்சிக்கிட்டு இருந்தேன் மீண்டும் அவரை எதிர்த்து பேசும் வரை... அந்தக் கணம் உணர்ந்தேன் பவி, கல்யாணத்துக்கு முந்தியே நீ என்னுள் ஏதோ ஒரு பாதிப்பை ஏற்படுத்தி இருந்தாய்ன்னு... ஏதோ ஒரு விதத்தில் உன்னை எனக்குப் பிடிச்சியிருக்கணும்... இல்லைன்னா என் மனதை அவ்வளவு சீக்கிரம் யாராலும் மாத்த முடியாது... என்னைக் கட்டுப்படுத்தவும் முடியாது..."

"உன் அளவுக்கு எல்லாம் நான் யோசிச்சது இல்லை விக்ரமா... தாத்தா சொன்னதுக்காகக் கல்யாணம் பண்ணி குடும்பக் கௌரவத்திற்காகக் குடும்பம் நடத்தியவள்... ஆனால் காமாட்சியம்மா வீட்டில் வைத்து என்னுடைய வயித்தை நீ தொட்ட பாரு... அப்போ தான் என்னுள் ஒரு மாற்றம் வந்தது..."

"உனக்குமா...? எனக்குமே அப்போது தான் ஏதோ ஒரு இனம் புரியாத உணர்வு... என்னுடைய தொடுகைக்குப் பதில் உணர்வை பிரதிபலித்த உன்னோட செயல் என்னை ரொம்பச் சந்தோசத்தில் ஆழ்த்தியது... அதனால் தான் நீ வர மாட்டேன்னு முரண்டு பிடிச்ச போது கூட வலுக்கட்டாயமா உன்னை இங்கே கூட்டிட்டு வந்தேன்..."

"நானும் அப்படி நினைச்சு தான் உன் கூட வந்தேன் விக்ரமா... அதுக்கு அப்புறம் அத்தை, பல்லவி சொன்னதைக் கேட்டு உன் மேலிருந்த வெறுப்பு மறைந்து

விருப்பம் தோன்ற ஆரம்பித்தது... நீ வினோத், பல்லவி ரிசப்சன் அன்னைக்குப் பாடிய போது தான் உன் மீதான என் காதலை நான் உணர்ந்தேன்..."

"ஓ... அன்னைக்கு அதுக்குத் தான் நீ அழுதியா... நீ உங்க குடும்பத்தினருக்காக அழுகிறாயோன்னு நான் நினைச்சேன்..."

"அவங்களுக்காக நான் ஏன் அழணும்...?" என்று புரியாது கேட்டவளை கண்டு,

"இல்லை நீ நிறுவனத்தின் பொறுப்பை விட்டு கொடுத்ததால் வீட்டை விட்டு போனதாய்...?" என்று சொல்லி கொண்டே வந்தவன்,

"நீ எனக்காகத் தான் போனதாய் சொன்னாய் இல்லையா... இது தெரியாமல் உன் தாத்தாவை போட்டு படுத்தி எடுத்து விட்டேன்..."

"அவரை நீ எதுக்குப் படுத்தி எடுத்த...?"

"பின்னே கம்பீரமாய்த் தொழிலில் அரசியாய் வலம் வந்தவளை இப்படி வீட்டை விட்டு ஓடும் அளவுக்கு ஆக்கிட்டாரேன்னு எனக்கு ஒரே கோபம்... அதனால் தான் உன்னைக் கண்டுபிடிக்கும் முன் அவரைத் தேடி போய்ச் சத்தம் போட்டுச் சபதம் போட்டு விட்டு வந்தேன்..." என்றவன் அன்றைய நிகழ்வை அவளிடம் கூறினான்...

"அடப்பாவி விக்ரமா... அதற்காகத் தான் அவரைப் படுத்தி எடுத்து மீண்டும் என்னிடம் வர செய்தாயா...? உன்னை...?" என்று கோபம் போல் பார்த்தவள் பின் சிரித்து விட்டாள்...

"இப்பவும் நான் நிறுவனத்தின் பொறுப்புகளைத் தான் எடுத்து இருக்கேன்... பதவியை அல்ல... எனக்கு அது வேண்டவும் வேண்டாம் விக்ரமா... எனக்கு என்னுடைய தொழில் போதும்... அதில் சாதிப்பேன்னு எனக்கு நம்பிக்கை இருக்கு..."

"நிச்சயம் நீ சாதிப்ப பவி... அதனால் தான் அன்று நான் பேங்க் மூலம் உனக்கு உதவி பண்ணினேன்..."

"நீயா பணம் கொடுத்து உதவியது...?" அவள் வியப்பும், நெகிழ்வுமாய் அவனைப் பார்த்தாள்... இது அவளுக்குப் புதிய செய்தி... அவள் முன்னேற கணவன் உதவி புரிந்திருக்கிறானா...? அவளுக்கு மிகவும் சந்தோசமாக இருந்தது...

"ஆமாம் பவி... உன்னை இப்படிக் காண சகிக்கவில்லை... பழையபடி கம்பீரமான பவித்ராவா வலம் வரணும்ன்னு விரும்பினேன்... அதற்காகத் தான் நான் இதைச் செய்தேன்..."

"மாமா..." என்று கண்கள் கலங்க அவள் அவனது நெஞ்சில் முகம் புதைத்து கொண்டாள்...

எல்லாவற்றிலும் அவன் சரியாகத் தான் நடந்து இருக்கிறான்... அவள் தான் தேவையில்லாது குழம்பி ஈகோ கொண்டு வாழ்க்கையை மேலும் மேலும் சிக்கலாக்கி கொண்டாள்... மீண்டும் கணவன் அவளைத் தேடி வராவிட்டால் அவளது வாழ்க்கை என்னவாகியிருக்குமோ...? திகிலுடன் அதை அவனிடம் பகிர்ந்த போது,

"எப்படியும் நான் உன்னைத் தேடி வந்திருப்பேன்... அப்படியே நீ வரலைன்னு சொன்னால் நானும் காமாட்சியம்மா வீட்டில் செட்டிலாகி இருப்பேன்... எவ்வளவு அமைதியான சூழ்நிலை... முற்றத்து நிலா, ஓட்டு வீடு செம்ம ரொமான்ட்டிக் ப்ளேஸ்..." கிறக்கத்துடன் கூறியவனின் கைகள் தாபத்துடன் அவளது மேனியில் கண்டபடி தடம் பதிக்க... அவனைக் கேலியாய் பார்த்து சிரித்தவள்,

"மாமா... இது நீ தானா...? உனக்கு இப்படி எல்லாம் பேச தெரியுமா...?"

"நான் இப்படி மாறியதுக்குக் காரணம் நீ தான் பவி..." என்று உருக்கமாய்க் கூறியவனை அவள் கனிவுடன் பார்த்தாள்...

"எப்போ நீ என்னைக் குழந்தை போல் கவனிச்சிக்கிட்டியோ அப்பவே என்னோட ஈகோ எல்லாம் தவிடு பொடியாகி உன்னிடத்தில் அப்படியே சரண்டராகிட்டேன்... நீ தான் நான்... நான் தான் நீ... எனக்கு எல்லாமும் நீ என்று நான் உணர்ந்த நாட்கள் அவை பவி..."

அவன் விபத்து பற்றிக் கூறிய போது அவளுள்ளும் அதே நிகழ்வு, நெகிழ்வு... அது தானே அவளது ஈகோவையும் தகர்த்து எறிந்தது...

"நானும் தான் விக்ரமா..."

இருவரும் பேசி கொண்டிருக்கும் போது கதவு தட்டும் சத்தம் கேட்டது... விக்ரம் போய்க் கதவை திறந்தான்... அவனது அன்னை அங்கு நின்றிருந்தார்... அவரது கைகளில் மயக்கும் சிரிப்புடன் அவனது மகள்...

"பேபிக்கு இப்போ காய்ச்சல் எப்படி இருக்கு...?" என்று கேட்டபடி அவன் மகளைத் தூக்க முற்படும் முன்,

"ப்பா..." என்று அவனை முந்தி கொண்டு கைகளை உயர்த்தியபடி சின்னவள் அவனிடம் தாவினாள்... அவனும் ஆசையுடன் அவளைத் தூக்கி கொண்டான்...

"சாப்பிட வா விக்ரம்... பவியையும் கூட்டிட்டு வா..." என்று கூறி விட்டு ரேவதி சென்றுவிட... அவன் மகளோடு அறைக்குள் நுழைந்தான்...

அவர்களது வாழ்க்கையை வண்ணமயமாக மாற்றிய வரமல்லவா மகள்... இருவரும் அவளைக் கொஞ்சி மகிழ்ந்தனர்...

மதிய உணவு முடிந்து கிளம்பும் போது மனைவி அருகில் வந்தவன், "இன்றிரவு நான் பழைய விக்ரமா மாறலாம்ன்னு இருக்கேன்..." என்று கூற... அவள் புரியாது விழித்தாள்...

"அதான் காட்டுமிராண்டி விக்ரமா..." என்று அவன் எடுத்து கொடுக்க...

"நீ காட்டுமிராண்டியா மாறினால் நான் காட்டேரியா மாறி உன் உயிரை உறிஞ்ச போகிறேன் பார்..." என்று சளைக்காது பதில் கூறியவளின் விழிகளில் கணவனுக்குக் குறையாத வேட்கை தெரிந்தது...

"பார்க்கலாம், பார்க்கலாம்... யார் யார் உயிரை உறிஞ்ச போறாங்கன்னு..." கிறங்கும் குரலில் விடைப்பெற்று சென்றவனின் ஞாபகமே அன்று முழுவதும் அவளை ஆக்கிரமித்து இருந்தது...

அன்றிரவு தன்னை அணைத்துக் கொண்டு அமர்ந்திருந்த கணவனிடம் பவித்ரா, "என்னை மன்னிச்சிட்டியா மாமா..." என்று உருகும் குரலில் மன்னிப்பு வேண்ட... அவனைக் கடத்தியதை தான் அவள் கூறுகிறாள் என்பதைப் புரிந்தவனாய்,

"அப்படிப் பார்த்தால் முதல் தவறே என்னிடம் இருந்து தான் ஆரம்பித்தது..." என்றவனின் நினைவில் அன்றைய நாளின் ஞாபக துளிகள்... விருப்பம் இல்லாது அவள் கண்ணீர் வடித்தும் இரங்காது அவளை ஆட்கொண்டது அவனது மனதில் பாரமாய்...

"மாமா..." என்றழைத்து அவனது நினைவை கலைத்தவளை அவன் என்னவென்று பார்த்தான்...

"அந்தத் தவறை திரும்பச் செய்யும் எண்ணம் இல்லையா...?" என்று கிசுகிசுப்பாய் கூறியவளை அவன் போலியாக முறைத்துப் பார்த்தான்...

"பூவுக்குள் பூகம்பத்தைக் காண விருப்பம் இல்லையா மாமோய்..." என்று அவள் கேலி செய்து அவனை உசுப்பி விட...

"நீயாடி பூ... நீயே ஒரு பூகம்பம் தான்..." என்றவன் அவளை மேலே பேச விடாதபடி அவளது இதழை தன் இதழ் கொண்டு அடைத்தான்...

அவசரம் காட்டாது பெண்ணவளின் உணர்வுகளைச் சரியாகப் புரிந்து கொண்டு அவன் அவளை மென்மையாகக் கையாண்டான் என்றால், இதுநாள் வரை கணவனின் தொடுகையை உணர்வற்றவளாய் மரக்கட்டை போல் எதிர் கொண்டவள் இன்று அவனது தொடுகையில் பூவாய் மலர்ந்து மணம் பரப்பி அவனை மீண்டும் மீண்டும் தன்னை நாடி வர செய்தாள்... தாம்பத்திய வாழ்க்கையில் பெண்ணவளின் சம்மதம் எந்தளவிற்கு முக்கியம் என்பதை அவன் அந்தக் கணம் உணர்ந்தான்... இனி வாழ்நாள் முழுவதும் அதை அவன் உணர்வான்...

அடுத்த இரு நாட்களில் பவித்ரா கணவனுக்காக அந்தக் காரியத்தைச் செய்திருந்தாள்... ஆம், அவனது விருப்பப்படி ஆசிரமத்தில் இருந்த குழந்தைகள் அனைத்தையும் தத்து எடுத்திருந்தாள்... அதைக் கேள்வியுற்ற விக்ரம் மனம் நெகிழ்ந்து போய் அவளைப் பார்த்தான்...

"நான் ஒரு குழந்தையைத் தான் தத்து எடுக்கணும்ன்னு நினைச்சேன்... ஆனால் நீ இத்தனை குழந்தைகளை..." மேலே பேச முடியாதபடி அவனது மனம் நெகிழ்ந்திருந்தது...

"எனக்காக நீ எவ்வளவோ யோசிச்சிருக்க விக்ரமா... ஆனால் நான் உனக்காக எதையும் செய்தது இல்லையே... இப்போ கூடப் பிசினஸ்வுமனா பவித்ராவுக்கு இதைச் செய்யப் பிடிக்கலை தான்... வேஸ்ட் ஆஃப் மணின்னு தோணுது... ஆனா உன்னோட காதல் மனைவியா உனக்காக இதைச் செய்யணும்ன்னு என் மனசு துடிக்குது... உனக்காக மட்டுமே..." என்று கூறியவளின் கண்கள் கலங்கியது...

தனக்குக் குழந்தை பிறக்காது என்று தெரிந்திருந்தும் தன்னை வெறுத்து ஒதுக்காது அதுக்கு மாற்று வழி கண்டு பிடித்த கணவன் அவளைப் பொருத்தவரையில் தெய்வத்திற்குச் சமமானவன் அல்லவா... அவனுக்குச் செலுத்த வேண்டிய காணிக்கையாக இதை அவள் எண்ணினாள்...

விக்ரம் மனம் நெகிழ மனைவியவளை அணைத்துக் கொண்டான்... இருவரிடமும் குறை இருக்கிறது... இருவருமே மற்றவர்களுக்காக அதைக் களைய பாடுபட்டனர்... இனிமேல் அவர்கள் தங்களது இணைக்காகவே குறை களைந்து நிறைவாய் வாழ்வார்கள்...

மொழி பேசும்...!!!

## விழி : 21

காலையில் அந்த 'மீட்டிங் ஹாலில்' கூடியிருந்த பத்து பேருக்கும் பயத்தில் வியர்த்து வழிந்தது... அனைவரும் சொல்லி வைத்தார் போன்று ஒன்று போல் கைக்குட்டையை எடுத்து தங்களது நெற்றியில் வழிந்த வியர்வையைத் துடைத்து கொண்டனர்... அன்று போல் அதிலிருந்த ஒருவன் தனது கழுத்தில் கட்டியிருந்த டையை எடுத்து துடைத்துக் கொண்டான்... இந்த நிறுவனத்தில் வேலை பார்ப்பதற்கு வேறு எங்கேயாவது போய்க் கழுதை மேய்த்துச் சம்பாதிக்கலாம் என்று எப்போதும் போல் அவன் உள்ளுக்குள் நொந்து நூலாகி போனான்...

'கழுதை மேய்ச்சா உன்னால் இப்படி விலையுயர்ந்த காரில் போக முடியுமா...? இந்தக் காலத்தில் யார் இப்படி உனக்கு அள்ளி அள்ளி சம்பளம் கொடுக்கிறாங்க...' என்று அவனது மனசாட்சி என்றும் போல் இன்றும் அவனை அடக்கியது...

அவனுக்கு இருந்த பல 'கமிண்ட்மென்ட்'களை நினைத்து பார்த்தவன் அடுத்த நொடி எரிச்சலை தூக்கி எறிந்து விட்டு அமைதியானான்...

அந்நேரம் 'டக் டக் டக்' என்ற ஹைஹீல்ஸின் ஒலி அந்த இடத்தை நிறைத்தது... அந்த ஒலியே சொல்லாமல் சொல்லியது நிறுவனத்தின் தலைவி பவித்ரா விக்ரமின் வருகையை...

அன்று போல் இன்றும் இராணியின் கம்பீரத்துடன் அங்கு வந்தவள் முகத்தில் அப்படியொரு அடக்கப்பட்ட ஆத்திரம் தெரிந்தது... அதனால் அவளது வெண்ணிற முகம் செக்கச்செவேல் என்று சிவந்து காணப்பட்டது... கையிலிருந்த அலைப்பேசியைச் சுழற்றியபடி அங்கிருந்த இருக்கையில் அமர்ந்தவள் மற்றவர்களை அமரும்படி கையால் சைகை செய்தாள்...

அவளின் ஒற்றைக் கையசைவிற்கு அந்தக் கூட்டம் நொடியில் கட்டுப்பட்டு அடங்கி அமர்ந்தது... எல்லோரும்

அமர்ந்ததும் அவள் தனது கணீரென்ற குரலில் பேச ஆரம்பித்தாள்...

"இந்த டெண்டருக்கு நாம கோட் பண்ணின அமௌண்ட் மிக அதிகம்... அப்படி இருந்தும் இது நமக்குக் கிடைச்சு இருக்குதுன்னா..." அன்று பேசியதற்கு நேர்மாறாய் இன்று பேசியவள் அவர்கள் எல்லோரது முகத்திலும் பார்வையை அழுத்தமாய்ச் செலுத்தினாள்... பின்பு,

"இதற்கு யார் காரணமா இருந்தாலும் அவங்க என் தண்டனையில் இருந்து தப்ப முடியாது..." என்றாள் மிகவும் கடினமான குரலில்...

அதில் எல்லோருக்கும் தொண்டை உலர்ந்து போனது... எச்சிலை விழுங்கி கொண்டு அவளது முகத்தினைப் பயத்துடன் பார்த்தனர்...

"இது இப்போன்னு இல்லை... கொஞ்ச நாளாகவே இது தொடர்ந்து நடக்குது... இனியும் இப்படி நடக்க விட முடியாது... இப்போ நீங்க போகலாம்... இதற்கான விசாரணைக்கு நீங்க ஒத்துழைக்க வேண்டும்..." என்றவள் தனது கையை வாயிலை நோக்கி காண்பிக்க...

அடுத்த நொடி எல்லோரும் மளமளவென்று எழுந்து வெளியில் சென்றனர்... பவித்ரா குழப்பத்துடன் வெகுநேரம் யோசித்தபடி அப்படியே அமர்ந்திருந்தாள்... இன்றே இதற்கு ஒரு முடிவு கட்ட வேண்டும் என்று எண்ணி கொண்டாள் அவள்...

அன்றிரவு பவதாரிணி ரேவதியிடம் உறங்க சென்று விட இவள் மட்டும் கணவனின் வருகைக்காகக் காத்திருந்தாள்... வழக்கத்துக்கு மாறாகத் தாமதமாக விக்ரம் வந்த போதும் வெகு உற்சாகமாகக் காணப்பட்டான்...

"பவி செல்லம்... கங்கிராட்ஸ்டா குட்டி..." என்று அவன் விதவிதமாய் அவளைக் கொஞ்சி மகிழ்ந்தான்...

"விக்ரமா... நான் ஜெயிச்சதுக்கு எதிரியான நீ இப்படிச் சந்தோசப்படுறது கொஞ்சமும் சரியில்லையே... எங்கேயோ லாஜிக் இடிக்குதே...?" என்றவளை கண்டு திடுக்கிட்டு போன விக்ரம்,

"நீ ஜெயிச்சா என்ன...? நான் ஜெயிச்சா என்ன பவி...? இரண்டும் ஒன்று தான்..." என்று அவள் கழுத்தில் அவன் முகம் புதைக்க... அவள் வலுக்கட்டாயமாக அவனது தலையை நிமிர்த்தியவள்,

"உண்மையைச் சொல் விக்ரமா...?"

"ப்ச்... இது பேச்சுக்கான நேரம் இல்லை பவி செல்லம்..." என்றவன் அவள் இதழ் நோக்கி குனிய...

"ப்ளீஸ் மாமா... நான் கேட்ட கேள்விக்குப் பதில் சொல்லிட்டு..." என்றவளின் மீதி வார்த்தை அவனது வாய்க்குள் மறைந்து காணாமல் போனது...

மனைவியின் வெற்றியை அவன் கொண்டாடி மகிழ்ந்து விலகிய போது பவித்ராவின் மனதில் இருந்த கேள்வி கூடப் பின்னுக்குத் தள்ளப்பட்டுக் கணவன் மீதான கிறக்கமே முன்னுக்கு இருந்தது...

"மாமா..."

"மாமனுக்கு என்னடி வச்சியிருக்க..." என்று கிறங்கிய குரலில் கேட்டவனைக் கண்டு நமட்டு சிரிப்புடன்,

"இப்போ சொல்லு மாமா... எப்படி எல்லாத்திலேயும் என் கிட்ட சொல்லி வச்ச மாதிரி தோத்து போகிற...?"

"அப்படி எல்லாம் இல்லை பவி..."

"பொய் சொல்லாதே விக்ரமா..." என்று அவள் அவனது வாயில் ஒரு அடி அடிக்க...

"உன் கிட்ட பொய் சொல்வேனா பவி செல்லம்..."

"இந்த விசயத்தில் நீ எதையோ மறைக்கிற விக்ரமா... என் கிட்ட மட்டும் தான் நீ தோத்து போகிற... இதேது வர்மாவை எதிர்த்து ஜெயித்துக் காண்பிக்கிற... ஏன் விக்ரமா மனைவி என்கிற கரிசனமா என் மீது...?"

"நாம போட்ட ஒப்பந்தத்தை மறந்துட்டியா...? தொழிலில் தோத்து போகிறவங்க ஜெயிச்சவங்களைச் சந்தோசமா வச்சிக்கணும்ன்னு பேசி இருக்கோம் இல்லையா...?"

"ஆமாம், அதுக்கென்ன இப்போ...?"

"அதுக்கென்னவா...? நான் எப்போதும் உன்னைச் சந்தோசமா வச்சியிருக்கணும்... அதுக்காக நான் உன் கிட்ட தோத்து போகிறேன்..."

"இது நம்புகிற மாதிரி இல்லையே விக்ரமா..." என்றபடி அவனை ஒரு மாதிரியாய் பார்த்தவள் பின் கெஞ்ச ஆரம்பித்தாள்...

"நமக்குள் எந்த ஒளிவு மறைவும் கிடையாது தானே... ப்ளீஸ், சொல்லு விக்ரமா..."

"இந்த வருசம் சிறந்த தொழிலதிபருக்கான விருது உனக்குக் கிடைக்கணும்ங்கிறதுக்காகத் தான்..." மனைவியின் கெஞ்சலில் அவன் மனம் திறந்தான்...

"மாமா..." நெகிழ்ந்து போனவளாய் அவள் கணவனைப் பார்த்தாள்...

"நீ எனக்காகச் செஞ்ச பணிவிடைகள் எல்லாம் அன்பு, தாய்மை என்கிற சொல்லுக்குள் அடக்கி விட முடியாது பவி... இதுக்கு எல்லாம் மேலானது உன்னோட பாசம்... அதற்கு நான் பதிலுக்கு என்ன செஞ்சேன்...? ஒண்ணுமே இல்லை... உன்னை இன்னும் இன்னும் உயரத்தில் அமர வைத்து அழகு பார்க்கணும் பவி..." நெகிழ்ச்சியுடன் கூறியவன் அவளை அதே நெகிழ்ச்சியுடன் அணைத்துக் கொண்டான்...

அன்று ஆணாதிக்கம் கொண்டு 'பெண்கள் வீட்டில் இருந்து கொண்டு புருசனையும், குழந்தைகளையும் பார்த்துக் கொள்ளத் தான் லாயக்கு... நீயும் அப்படியே இரு...' என்று கூறிய கணவனின் மனமாற்றம் அவளுக்குப் பெருத்த வியப்பாய்... அதே சமயம் புரிந்து கொள்ளக் கூடியதாய்...

"இப்போ தான் மாமா உன்னை ரொம்ப ரொம்பப் பிடிக்குது..." என்று தன்னை அணைத்து கொண்டவளின் அன்பில் முற்றிலும் கரைந்தவனாய்,

"எல்லாம் உன்னால் தான் பவி..." என்று கூறியபடி புயலாய் அவளை ஆக்கிரமித்தவனைக் கண்டு திடுமென அவள் வாய் விட்டு சிரித்தாள்... அதில் விலகி அவளது முகம் பார்த்தவன்,

"சொல்லிட்டு சிரிடி..." என்று செல்லமாய்க் கடிய...

"இல்ல... உன்னைப் போய் எல்லோரும் சாமியார்ன்னு சொல்றாங்களே... அதை நினைச்சேன் சிரிச்சேன்..."

"கொழுப்புடி உனக்கு..." என்று கோபம் போல் அவள் முகம் நோக்கி குனிந்தவன் அருகாமையில் தெரிந்த மனைவியவளின் மதி முகத்தில் மனம் மயங்கியவனாய்,

"சாமியாரா இருக்கப் போய்த் தான் உன்னைத் தவிர வேறு எந்தப் பெண் பின்னாடியும் போகாமல் இருக்கிறேன்... அதை ஞாபகத்தில் வச்சிக்கோ..." என்று போலியாய் அவன் மிரட்ட...

"அதனால் தானே எனக்கு இந்தச் சாமியாரை ரொம்ப ரொம்பப் பிடிக்குது..." என்று காதலோடு சொன்னவள் அதே காதலோடு அவனை அணைத்து கொண்டாள்...

மறுநாள் மனைவி செய்த வேலையில் கோபமாய் அவள் முன் வந்து நின்றான் விக்ரம்... அலுவலக அறை கதவை திறந்து கொண்டு புயலாய் தன் முன் வந்து நின்றவனை எதிர்பார்த்தது போல் அவள் புன்னகைத்தாள்...

"வாங்க எம்டி சார்..."

"நான் எம்டியா...?"

"இப்போ இல்லைன்னாலும் இந்தக் கம்பெனியின் வருங்கால எம்டி நீ தானே..." இரு புருவங்களை உயர்த்தியபடி கேட்டவளை கண்டு ஆயாசத்துடன் நாற்காலியில் சரிந்தவன்,

"என்னடி இப்படிப் பண்ணி வச்சியிருக்க...?"

"என்ன, எப்படிப் பண்ணி வச்சியிருக்கேன்...? இப்பவே நீ இந்தக் கம்பெனிக்கு எம்டி மாதிரி தானே இங்கே வேலை செய்கிற எல்லோரையும் உன் கைக்குள் போட்டு வச்சியிருக்க..." என்று கூர்மையான பார்வையோடு அவன் அருகே வந்து மேசை மீது சாய்ந்து நின்றாள் அவள்...

"ஹி ஹி... கண்டுபிடிச்சிட்டியா பவி குட்டி..." என்று அசடு வழிந்தான் அந்தக் கம்பீரமான ஆண் மகன்...

அதனால் தானே அவனால் சுலபமாய் அவளுக்கு விட்டு கொடுக்க முடிந்தது... அவளிடம் விரும்பியே தோற்க முடிந்தது...

"அதான் நானும் ஒரு முடிவுக்கு வந்துட்டேன்... ஒரு கம்பெனிக்கு ஒரு எம்டி போதும்ன்னு... அது நீ மட்டும் தான்னு..."

ஆம், அவள் இரு தாத்தாக்களிடம் கலந்து பேசி இரண்டு நிறுவனங்களையும் ஒரே பெயரில் இணைக்க எல்லா ஏற்பாடுகளையும் செய்துவிட்டாள்... அதுவும் கணவனது பெயரில்... வினோத், பல்லவி பங்குதாரர்கள் என்றாலும் அனைத்தையும் செயல்படுத்தும் உரிமை விக்ரமிற்கு மட்டுமே கொடுக்கப்பட்டு இருந்தது...

"பவி... ஏன்டி இப்படிப் பண்ற...?"

"இல்லை விக்ரமா... நான் மனசு ஒட்டாம தாத்தாவுக்காகத் தான் இங்கே வந்தது... என்னுடைய கவனம் எல்லாம் என்னுடைய தொழிலில் மட்டும் தான்... எனக்குன்னு தனிப்பட்ட அடையாளம் வேணும் விக்ரமா... இது இல்லாமல்

தானே அன்னைக்கு என்னைத் தூக்கி எறிஞ்சாங்க... அதை என்னால் மறக்க முடியாது..."

"ப்ச்... பவி, இது எல்லாம் நீ உண்டாக்கியது... அவங்க போகச் சொன்னால் நீ போயிருவியா...? உனக்கான அடையாளம் இதுவும் தான்... எந்தக் காரணம் கொண்டும் நீ இதை விடக் கூடாது..." என்றபடி நாற்காலியில் இருந்து எழுந்து அவளது தோள்களை ஆதரவாய் பற்றிக் கொண்டான்...

"வேண்டாம் விக்ரமா... இது எதுவும் வேண்டாம்... எனக்கு நிம்மதி மட்டும் தான் வேணும்..." என்று கூறியபடி அவனது தோளில் சாய்ந்து கொண்டவளின் மனதை எப்படி மாற்றுவது என்று தெரியாது அவன் விழித்தான்... பின் முடிவு செய்தவனாய்,

"நீ என்னோடு சேர்ந்து இந்தப் பொறுப்பை எடுத்துக்கலைன்னா நானும் இதை எல்லாம் ஏத்துக்க முடியாது..."

"எனக்காக விக்ரமா... ப்ளீஸ்..." என்று கெஞ்சலாகக் கேட்டவளை கண்டு அவனும்,

"எனக்காகப் பவி செல்லம்... ப்ளீஸ்..." என்று கொஞ்சலாய் முடிக்க... வேறுவழியின்றி அவள் அவனிடத்தில் சரணடைந்தாள்...

"சரி நான் உன் கூடச் சேர்ந்து பொறுப்பு எடுத்துக்கிறேன்... ஆனா முதலில் நான் என் குடும்பத்தைப் பார்க்கணும், என் தொழிலை பார்க்கணும்... அதுக்குப் பிறகு தான் இங்கே வருவேன்..."

"உன்னை எப்படி வரவழைக்கணும்ன்னு எனக்குத் தெரியும்..."

"எப்படி...?"

"அம்மா தாயே, சரணம்ன்னு காலில் விழுந்து விட வேண்டியது தான்..." என்று கூறி சிரித்தவனைக் கண்டு

அவளால் கோபம் கொள்ள இயலாது சிரித்தாள்...

"நான் உன்னை ஏமாத்திருவேன்னு உனக்குப் பயமா இல்லையா...?" அவளை ஆழம் பார்க்க அவன் கேள்வி கேட்ட போது,

"எந்தக் குழந்தையாவது அம்மாவை ஏமாத்துமா...?"

அவள் வாஞ்சையுடன் கூறியதை கேட்டு அவன் உள்ளம் உருக நின்றிருந்தான்...

"ம்ஹூம்..." விழிகள் கலங்க மறுத்தவனைக் கண்டு அவள் பூவாய் மலர்ந்து புன்னகைத்தாள்...

இயந்திரம் போன்று எந்தவித ஆசாபாசத்திற்கும் கட்டுப்படாது உணர்விலாது இயங்கி வந்த இரும்பு மனிதன் விக்ரமை கண் கலங்க செய்யப் பவித்ரா என்னும் பெண்ணவளின் பவித்ரமான காதலால் மட்டுமே சாத்தியம்...

இரு நிறுவனங்களையும் ஒன்றிணைக்கும் விழாவில் இரு வீட்டு தாத்தாக்களும் மிக்க மகிழ்ச்சியுடன் கலந்து கொண்டனர்... இதைத் தானே அவர்கள் எதிர்பார்த்தது... அதை நிறைவேற்றி காட்டிய விக்ரம், பவித்ராவை கண்டு அவர்கள் பெருமை கொண்டனர்... விழா வெற்றிகரமாக நடந்து முடிந்து குடும்ப உறுப்பினர்கள் அனைவரும் அலுவலக அறையில் குழுமியிருந்தனர்...

அப்போது பல்லவிக்கு உமட்டி கொண்டு வர அவள் குளியலறை நோக்கி ஓடினாள்... பின்னாடியே வினோத்தும் விரைந்தான்...

"இதுக்குத் தான் ஸ்வீட்ஸ் அதிகம் சாப்பிடாதேன்னு சொன்னேன்..." என்று அவன் செல்லமாய் மனைவியைக் கடிய...

அவளோ அவனை முறைத்து பார்த்து, "எல்லாம் உங்களால் தான் மாமா..." என்று அவனைக் குற்றம் சாட்டினாள்...

"ஸ்வீட் சாப்பிடாதேன்னு சொன்னது ஒரு குற்றமா...?" என்று அவன் பயத்தில் அலற...

"ஐயோ இது அது இல்லை... நீங்க... நீங்க..." நாணம் கொண்டு பெண்ணவள் வெட்க...

"நான்..." அப்போதும் அவன் புரியாமல் அவளைப் பார்த்தான்...

"நீங்க அப்பாவாகப் போறீங்க..." என்று மெல்லிய குரலில் கூறியவளை அவன்,

"ஹூர்ரே..." என்று உற்சாகத்துடன் கத்தியபடி தனது கரங்களில் தூக்கி கொண்டவன் அப்படியே குளியலறையை விட்டு வெளியில் வந்தான்...

எல்லோரும் இவர்களை என்னவென்று திரும்பி பார்த்ததில் பல்லவி வெட்கம் கொண்டு கணவனது கைகளில் நெளிந்தாள்...

"மாமா கீழே இறக்கி விடுங்க..."

எல்லோரும் இருப்பதால் அவனும் வேறுவழியின்றி அவளைக் கீழே இறக்கி விட்டவன் விசயத்தைப் போட்டு உடைக்க அங்கே மகிழ்ச்சி தாண்டவமாடியது...

"பார்த்தியா மாமா... இதுக்குத் தான் சொன்னேன்... இவங்க ரெண்டு பேரும் எப்போதும் இது போல் சந்தோசமா இருக்கணும்ன்னு..." பவித்ரா கணவனது காதை கடித்தாள்...

இப்போதும் வினோத், பல்லவி விளையாட்டுப் பிள்ளைகள் தான்... சில சமயம் விக்ரமிற்குக் கோபம் வரும்... ஆனால் பவித்ரா அவன் கோபம் கொள்ளாதபடி தடுத்து விடுவாள்...

"நீ எப்போ இது மாதிரி குட் நியூஸ் சொல்ல போகிற செல்லம்..." தன்னிடம் இழைந்த கணவனை ஒரு மாதிரியாய் பார்த்தவள்,

"பாப்பாவுக்கு மூணு அல்லது ஐந்து வயதாகும் போது தான் அடுத்தப் பாப்பாவை பத்தி யோசிக்கணும்..."

"அடேங்கப்பா அதுக்கு இரண்டு அல்லது நான்கு வருடங்கள் இருக்குதா... ம்ஹூம்..." பெருமூச்சு விட்டவனைக் கண்டு நமட்டுச் சிரிப்பு சிரித்தவள்,

"உனக்கு என்னைத் தூக்கணும்ன்னா தூக்கிக்கோ... இதுக்காக எல்லாம் என்னால் குட் நியூஸ் சொல்ல முடியாது விக்ரமா..." என்று அவள் அவனைக் கேலி செய்ய...

அதற்காகக் காத்திருந்தார் போன்று விக்ரமின் கரங்கள் அடுத்த நொடி மனைவியைத் தூக்கி இருந்தது...

"அண்ணா நீயுமா...?", "அக்கா நீயுமா...?"

வினோத், பல்லவி இருவரும் உற்சாகக் குரல் கொடுக்க, பெரியவர்கள் ஆர்வமாய்ச் சின்னவர்களைப் பார்த்தனர்...

"ஐயோ... அப்படி எல்லாம் இல்லை..." என்று பவித்ரா அலற...

"மனைவியைத் தூக்குவதற்கு எல்லாம் ஒரு காரணம் வேணுமா...?" என்று குறும்பாய் கேள்வி கேட்ட விக்ரம் எல்லோருக்கும் புதிது...

"நீ நடத்து ராசா..." இராமநாதன் சம்மதம் தெரிவிக்க...

"ஐயோ விக்ரமா... தாத்தா என்ன நினைப்பார்..." என்று வெட்கத்துடன் தனது முகத்தைக் கணவனது தோளில் மறைத்து கொண்டாள் பவித்ரா...

பெற்றோர் ஏதோ விளையாடுவதாக எண்ணி கொண்டு பவதாரிணி 'ப்பா... ம்மா' என்று குரல் கொடுத்து குதூகலிக்க... அடுத்தக் கணம் இருவரது பார்வையும் மகளிடம் சென்றது...

"பாப்பாவை தூக்கு விக்ரமா..."

"நீ சொல்லி நான் கேட்காமல் இருப்பேனா..." என்று கூறியபடி வேகமாய் அவளைக் கீழே இறக்கி விட்டவன் அதே வேகத்துடன் மகளைத் தூக்கி கொண்டான்...

"ப்ராடு..." என்று முணுமுணுத்தாள் பவித்ரா... மகள் மீதான கணவனது பாசம் அவளுக்குத் தெரியாதா என்ன...?

"கண்டுபிடிச்சிட்டியா...?"

"உன்னைக் கண்டுபிடிச்சு ரொம்ப நாளாகுது விக்ரமா..."

"என்னன்னு...?"

"என் காதல் புருசன்னு..."

"ஹா ஹா..." என்று வாய் விட்டு சிரித்தவனின் அழகினை ரசித்துப் பார்த்தாள் அவள்...

********************

அதே விமானப் பயணம்... அன்று போல் எதிரி அல்லாது இன்று விக்ரம், பவித்ரா கணவன், மனைவியாய் அருகருகே... அவளது கையில் ஒரு வயது அவர்களது மகள்... குல தெய்வ கோவிலில் மகளுக்கு மொட்டை போடுவதற்காகச் சொந்த ஊருக்கு செல்கின்றனர்...

"விக்ரமா... பாப்பாவுக்குத் தண்ணி கொண்டு வர சொல்லேன்..."

அதற்கான பொத்தானை அழுத்தி அவன் விமானப் பணிப்பெண்ணை அழைக்க அன்று இரண்டரை வருடங்களுக்கு முன் பார்த்த அதே பெண் தான் இன்றும் வந்தாள்... இருவரையும் அவளால் மறக்க முடியுமா... அவளைப் பைத்தியம் பிடிக்க வைத்தவர்கள் இல்லையா...

விக்ரமிற்கோ அவளை அடையாளம் தெரியவில்லை... பவித்ராவிற்கு முதலில் அவளை அடையாளம் தெரியவில்லை... ஆனால் அந்தப் பெண் அவர்களை உற்று உற்று பார்த்ததை வைத்து யோசித்ததில் பவித்ரா அவளை அடையாளம் கண்டு கொண்டாள்... அடுத்த நொடி அவளை

முறைத்து பார்த்தாள்... ஏனெனில் அந்தப் பெண் விக்ரமை சைட் அடித்தவளாயிற்றே...

"அவள் தண்ணி தானே கொண்டு வந்து கொடுத்தாள்... இதுக்கு நீ ஏன் அவளை முறைச்சு பார்க்கிற...?"

"அன்னைக்கு அவள் உன்னைச் சைட் அடித்தாள்..." என்று பவித்ரா அன்றைய நிகழ்வை பகிர்ந்து கொள்ள...

"அப்படியா...? இது தெரியாம அவளைத் திட்டிட்டேனே..." என்றவன் சற்று தள்ளி நின்றிருந்த அந்தப் பெண்ணை மேலும் கீழுமாய்ப் பார்த்தவன்,

"ம்... பார்க்க அழகா தான் இருக்கிறாள்... ச்சே, மிஸ் பண்ணிட்டேன்னே..." என்று விசமத்துடன் அவன் அவளைச் சீண்டினான்... அதைக் கேட்டுப் பவித்ரா கோபம் கொண்டு அவனை முறைத்தாள்...

"இப்பவும் ஒண்ணும் கெட்டு போகலை... அவள் பின்னாடி போ... உனக்குத் தான் மாடர்ன் மங்கைகளை ரொம்ம்ம்ம்ம்பப் பிடிக்குமே..." என்று கோபத்தில் வெடித்தவள் வெளியே பார்ப்பது போல் ஜன்னல் பக்கமாய் முகத்தைத் திருப்பிக் கொண்டாள்... அவளது மடியில் மகள் சுகமாய் உறங்கி கொண்டிருந்தாள்...

அடுத்தக் கணம் அவளது கழுத்து வளைவு கணவனது சூடான மூச்சை உணர்ந்தது... இருந்தும் அவள் திரும்பவில்லை...

"அப்படின்னு யார் சொன்னது பவி செல்லம்... இப்பயெல்லாம் சேலை கட்டிய இந்தப் பெண்ணை மட்டும் தான் பிடிக்குது..."

"பொய்..."

"மெய்டி கண்ணம்மா..." அவனது கண்ணம்மா என்றழைப்பில் அவள் மனமுருக திரும்பி பார்த்தாள்...

"அவள் அழகா இருக்கிறாள்ன்னு சொன்ன...?"

"உன்னை விடவா...?"

"மிஸ் பண்ணிட்டேன்னு சொன்ன...?"

"உன்னை மிஸ் பண்ண விருப்பம் இல்லாமல் உன்னைத் தேடி வந்தவன் நான்... என்னைப் பார்த்து நீ இப்படிக் கேட்கலாமா கண்ணம்மா..."

"ம்... ம்... நம்பறேன்... இனி பேச்சுக்கு கூட நீ இப்படிப் பேச கூடாது..."

"அது மட்டும் முடியாதே பவி செல்லம்... உன்னைச் சீண்டாமல் எனக்குத் தூக்கம் வராதே..."

"என்னது...?" அவள் முறைக்க...

"ஆமாம் செல்லம்... மாமன் சீண்டி விளையாடினால் தான் நீ மாமனை செமத்தியா கவனிக்கிற... அதனால் தான்..."

"ஓஹோ அப்படியா...? இன்னைக்கு நைட் செமத்தியா கவனிச்சிர வேண்டியது தான்..."

"நான் ரெடி செல்லம்..." என்றான் அவன் விரிந்த புன்னகையுடன்...

"இனி என் கைகள் கவனிக்காது... உருட்டுக் கட்டை தான் கவனிக்கும்... ஏன்டா நீ அடுத்தப் பெண்ணைச் சைட் அடிப்ப... நான் சும்மா கையைக் கட்டிட்டு வேடிக்கை பார்ப்பேன்னு நினைச்சியா...? கொன்னுருவேன் கொன்னு..." என்று அடக்கப்பட்ட கோபத்தில் கத்தியவளை கண்டு கோபம் கொள்ளாது அவன் காதலாய் பார்த்தான்...

"எல்லாத்துக்கும் ஐயா ரெடி..." என்று கண்சிமிட்டி சிரித்தான் அந்தக் கள்வன்... அவளது கோபத்தை ஒன்றும் இல்லாது ஆக்குவது அவனுக்குத் தெரியாதா என்ன...

"விக்ரமா..." அதற்கு மேல் கோபத்தை இழுத்து பிடிக்க முடியாது அவள் சிரித்து விட்டாள்... அவனும் சிரித்தபடி அவளை அணைத்துக் கொண்டான்...

பவித்ரா கணவனது தோளில் சாய்ந்தபடி அவனை ஏறிட்டு பார்த்தாள்... அந்தக் கணம் விக்ரமும் அவளைத் தான் பார்த்துக் கொண்டு இருந்தான்... அவனது விழிகளில் அத்தனை காதல் நிரம்பி வழிந்தது... அவளது விழிகளும் சளைக்காது பதில் காதல் பார்வை பார்த்தது... அவளது விழி காதல் மொழி பேசுவதற்குத் தான் எத்தனை இடர்பாடுகள்...!

மனைவியின் விழி எழுதிய காதல் மொழியில் மனம் மயங்கி போனான் அந்தக் காதல் கணவன்...!!!

முற்றும்...!!!